திருவம்பலத்தின்னமுதம்பிள்ளை

இயற்றிய

அபிதானமணிமாலை

பதிப்பாசிரியர்

வித்துவான் சு. பாலசாரநாதன்

மகாமகோபாத்தியாய

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பெசன்ட் நகர், சென்னை-600 090,

P31:4k
N88.
127923

திருவம்பலத்தின்னமுதம்பிள்ளை

இயற்றிய

அபிதானமணிமாலை

பதிப்பாசிரியர்

வித்துவான் சு. பாலசாரநாதன்

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பெசன்ட் நகர், சென்னை - 600 090.

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலைய வெளியீடு எண் 102.

முதற்பதிப்பு 1988 - 1000 பிரதிகள்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை - 600 090.

விலை ரூ. 30

Published with the Financial Assistance of
National Archives, Govt. of India
New Delhi

Printed at :- Vijay Print Services.
Madras - 600 034.

இந்நூலில் அடங்கியவை

பதிப்பாசிரியர் குறிப்பு	v
முகவுரை	vii
நூல்	1 — 278
1. தெய்வப் பெயர்த் தொகுதி	1 — 25
2. மக்கட் பெயர்த்தொகுதி	26 — 71
3. விலங்கின் பெயர்த் தொகுதி	72 — 103
4. மரப்பெயர்த்தொகுதி	104 — 138
5. இடப்பெயர்த் தொகுதி	139 — 171
6. பொருட்பெயர்த்தொகுதி	172 — 185
7. செயற்கை வடிவின் பெயர்த்தொகுதி	186 — 221
8. *	
9. செயல் பற்றிய பெயர்த்தொகுதி	222 — 278
சொல்லகராதி	279 — 411
பிழையும் திருத்தமும்	412
அனுபந்தம்	
தொகை அகராதி	1 — 8

* மூலச் சுவடியில் 8- ஆம் தொகுதி இல்லை

பதிப்பாசிரியர் குறிப்பு

அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்குஉறுதிப்பொருள் களையும் அடைவதற்கு வடமொழியும் தென்மொழியும் வாயிலாக உள்ளன. இவ்விரண்டு மொழியும் தெய்வத்தன்மை உடையன வாய்த் தெய்வத்தன்மை உடைய முனிவர்களால் வளர்க்கப் பட்டன. இவற்றுள் தமிழ்மொழி அகத்திய முனிவரால் வளர்க்கப் பட்டது. இதனைக் கம்பநாடர் ''தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்'[1] (ஆரணியகாண்டம், அகத்தியப்படலம், செய் 41.) என்று கூறியுள்ளார்.

இத்தகைய தொன்மை வாய்ந்த மொழியிலுள்ள சங்கநூல் களையும், பிரபந்த நூல்களையும் தமிழ் உலகிற்குத் திருத்த முற அளித்தவர் தமிழ்த்தாத்தா என்று எல்லோராலும் போற்றப் படும் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே சாமிநாதையர் அவர்கள்.

> ''மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
> எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் — செவ்வி
> அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
> கருமமே கண்ணுயி னுர்''.

என்ற குமரகுருபர சுவாமிகன் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் ஐயரவர்கள். அவருடைய சுயசரிதத்தைப் படித்தால் நன்கு விளங்கும். அவருடைய வாழ்நாளில் அவரே அரும்பாடு பட்டுச் சேகரித்த சுவடிகள் 2350. அத்தகைய சுவடிகளிலி ருந்து ஐயரவர்களே பெரும்பாலனவற்றைப் பதிப்பித்து உள்ளார்கள்.

அவரது காலத்திற்குப்பிறகு அவரது பெயரால் திருமதி **ருக்மிணிதேவி** அவர்களால் ஏற்படுத்தப்பட்டுத் திருவான்மியூரில் இயங்கிக்கொண்டிருக்கும் நூல்நிலையம் மத்திய அரசின் உதவி கொண்டு பல நூல்களை வெளியிட்டுக்கொண்டு வருகின்றது.

அத்தகைய நூல்களில் இந்த **அபிதான மணிமாலை** என்னும் நூலும் ஒன்று. (சுவடிஎண் 47) இந்நூல் சுவடியில் எழுதப் பெற்ற காலம் 19-ஆம் நூற்றாண்டு என்று தெரிகிறது. சுவடியில் சில இடங்களில் இராமபாணப்பூச்சியால் உண்ணப்பட்டுப்புள்ளிகள் விழுந்துள்ளன. அவ்விடங்களில் உள்ள சொற்களின் உண்மை

உருவத்தைக் காண முடியவில்லை. அவ்விடங்களில் புள்ளி வைத்துள்ளோம் இச்சுவடியைப்பதிப்பிக்காமல் காலந்தாழ்த்தினால் பல இடங்கள் உருத்தெரியாமல் போய்விடுமே என்று மனத்துட்கொண்டு வெளியிட்டுள்ளோம். பிழைகள் இருக்கக்கூடும் கற்றோர்கள் சுட்டிக்காட்டினால் மறுபதிப்பில் திருத்திவெளியிடலாம். இந்நூல் வேறு எந்த நூல்நிலையத்திலும் இல்லை.

இந்நூல் பதிப்பாகும்போது உடன் இருந்து ஒப்பு நோக்குதல் முதலிய பணிகளைச் செய்தவர் நூல்நிலையத்தில் பணியாற்றி வரும் திரு. **எஸ். சாயிராமன்** என்பவர். அவருக்கு அன்பார்ந்த என் நன்றி நூலிலுள்ள சொற்களை எடுத்து எழுதி உதவியவர்கள் நூல்நிலையத்தில் பணியாற்றிவரும் திருமதி **பி. ரங்காபாய்** திரு. **தி. குணசேகரன்** திரு.K.M. நடராஜன் என்பவருமாவர்கள். இம்மூவருக்கும் அன்பார்ந்த நன்றி.

நூல்நிலைய வளர்ச்சிக்கு ஊக்கமளித்துவரும் திரு. கே. சங்கர மேனன் அவர்களுக்கும் நன்றி.

அகராதிச் சொற்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்தும், அகராதி சம்பந்தமான ப்ரூப்பைத் திருத்தியும் வழங்கியவர் ஐயரவர்கள் பேரரும் நூல்நிலையப் பொருளாளருமான திரு. **க. சுப்பிரமணிய** ஐயரவர்கள். அன்னாருக்கு உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

மத்திய அரசு இப்பதிப்பு வெளிவருவதற்கு ஓரளவு மானியம் அளித்தமைக்கு நன்றி.

இந்நூலை அச்சிட்டுக்கொடுத்த விஜய் பிரிண்ட் சர்வீஸ் உரிமையாளர் திரு. சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றி.

வித்துவான் **சு. பாலசாரநாதன்**
ஆராய்ச்சித்துறை
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம்

பெசன்ட் நகர் 90.
15-12-1988

முகவுரை

எந்தா யும்எனக் கருள்தந் தையும்நீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

(கந்தர் அநுபூதி)

தமிழ் நூல்களில் தொன்மையான இலக்கணநூல் தொல்காப்பியம். இந்நூலில் இடையியல், உரியியல், மரபியல், முதலிய பகுதிகளின் மூலமாகத் தொல்காப்பியர் அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளார். தொல்காப்பியத்தில் சொற்களுக்குப்பொருள் கூறும் முறையைப்பின்பற்றிப் பிற்காலத்தில் சொற்களுக்குப் பொருள் கூறும் தனி நூல்கள் தோன்றின. இந்நூல்கள் **நிகண்டு** என்ற பொதுப்பெயரால் வழங்கலாயின.

வேதம் அநாதி அதன் உறுப்பு, சிட்சை, வியாகாணம், சந்தசு, **நிருத்தம்**, சோதிடம், கற்பம் என்று அறுவகைப்படும். சிட்சை எழுத்துக்களின் உச்சரிப்பு முதலியவற்றைக் கூறும். வியாகரணம் என்பது இலக்கணம். சந்தசு என்பது யாப்பு. **நிருத்தம்** என்பது தான் நிகண்டு என்றாயிற்று. வடமொழியில் உள்ள அமரம் என்ற நூல் நிகண்டேயாகும். நிகண்டு என்ற சொல்லுக்கு ஒருபொருள் பலசொல் தொகுதியையும், பலபொருள் ஒருசொல் தொகுதியையும் செய்யுளில் அமைத்துக்கூறும் நூல் என்று இறையனுர் அகப்பொருள் களவியல் உரை கூறுகின்றது. வைதிகச் சொற்களின் ஒருபொருள் பல சொல் தொகுதியையும், பல பொருள் ஒரு சொல் தொகுதியையும் உணர்த்தும் நூல் என்று திவாகரம் கூறுகின்றது. நிகண்டு என்பது இடுகுறியால் பெயர் பெற்றது என்று **இறையனுர் களவியலுரை** கூறுகின்றது. நன்னூலின் உரை ஆசிரியர் மயிலைநாதர் இடுகுறி என்றே கூறியுள்ளார்.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரிச்சொல்லியலில் உரிச்சொல்லின் பொது இலக்கணம் கூறுமிடத்து,

''உரிச்சொல் கிளவி விரிக்குங்காலை''
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய்தடுமாறி

"ஒருசொற் பலபொருட் குரிமை தோன்றினும்
பலசொல் ஒருபொருட் குரிமை தோன்றினும்
பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்
தத்தம் மரபில் சென்று நிலை மருங்கின்
எச்சொல் லாயினும் பொருள்வேறு கிளத்தல்."

என்று முடிக்கின்றார் தொல்காப்பியர்.

மேலும் உரியியலில்

"கடியென் கிளவி
வரைவே கூர்மை காப்பே புதுமை
வரைவே விளக்கம் மிகுதி சிறப்பே
அச்சம் முன்தேற் றுயீ ரைந்தும்
மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே."

என்றும் கூறியுள்ளதால் பின்னர் தோன்றிய நிகண்டு நூல்களுக்கு முன்பே 'உரிச்சொல்' என்ற பெயரில் நிகண்டு இருந்தது என்பது நன்கு விளங்கும்.

நன்னூலுக்கு உரைகண்ட சங்கர நமச்சிவாயர் "இன்னது இன்னுழி இன்னண இயலும்" என்னும் உரியியல் புறனடைச் சூத்திர உரையில் "பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொல்லும் இன்னசொல் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடத்துள்ளும் வழக்கு, செய்யுள் என்னும் இரண்டிடத்துள்ளும் இவ்விடத்து இவ்விலக்கணத்ததாய் நடக்குமென்று சொல்லக் கடவதாகிய இந்நூலுள் அவ்விலக்கணம் காட்டுதற்கு வேண்டிய மாத்திரையே கூறுவதன்றி உரிச்சொல்லாகிய குணப்பெயரையும் ஏனைக்குணிப்பெயரையும் நிகண்டினாற் கூறினால்போல விரித்துக் கூறக் கடவமல்லம், விரிக்கின், மற்றொன்று விரித்தல் என்னும் குற்றம் வருமாதலின்; அவற்றினைக் கண்டறிய வேண்டினார் இவ்விலக்கணம் அறிதற்கு முன்னர் ஏனைப் புலவராற் கூறப்பட்ட **பிங்கலம், திவாகரம், சூடாமணி** முதலிய நூல்களுள் வகுக்கும் உரிச்சொற்றொகுதியுள் விரும்பிக் காண்க". என்று உரை எழுதியுள்ளார்.

மயிலைநாதரும் "**பிங்கலம்** முதலான புலவர்களால் சொல்லப்பட்ட 'உரிச்சொல் பனுவல்'களுள் விரும்பி அறிந்து கொள்க" என்று கூறியுள்ளார்.

கயாதர முனிவர் தமது பாயிரத்தின் இரண்டாவது செய்யுளில்

"பேதையர் பித்தர் அறியாத பாலர்சொல் பேதங்கொள்ளார்
ஓதினும் குற்றம் தெரியார் பெரியவர் ஓங்கிடப
கேதனன் பற்று மறவாத தேவைக் கெயாதரன்றொல்
வேதியன் சொற்ற **உரிச்சொல் பனுவலு** மேம்படுமே";

உரிச்சொல் பனுவல் என்றே கூறுகின்றார்.

மேலும் இவர் நான்காவது செய்யுளின் இரண்டாவது அடியிலும் 'உரிச்சொல் பனுவல்' என்றே கூறுகின்றார். எனவே கயாதரர் நிகண்டு நூலினை உரிச்சொல் பனுவல் என்றே கூறியுள்ளார்.

சூடாமணி உள்ளமுடையான் என்ற சோதிட நூலின் ஆசிரியர் தம் நூலில் 'நாள் உரிச்சொல்', 'கிழமை உரிச்சொல்' என்று குறிப்பிடுகின்றமையால் **நிகண்டு நூலை** உரிச்சொல் என்றே கூறுகின்றார்.

நிகண்டு நூல்கள்:- சேந்தன் திவாகரம்-

நிகண்டு நூல்களில் காலத்தால் முந்தியது சேந்தன் திவாகரம். இந்நூல் கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் அம்பர் என்னும் ஊரின் தலைவனான **சேந்தன்** என்பவன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, திவாகர முனிவரால் இயற்றப்பட்டது. தெய்வப் பெயர்த் தொகுதி முதல் பன்னிரண்டு தொகுதிகளையுடையது. பூர்த்தியாக உள்ள நிகண்டு நூல் ஆகும். இந்நூலில் கிட்டத்தட்ட 9500 சொற்கள் இடம் பெற்றுள்ளன என்று தெரிகிறது.

பிங்கல நிகண்டு:-

இந்நூல் பிங்கல முனிவர் என்பவரால் இயற்றப்பெற்றது. நூற்பா நடையில் அமைந்துள்ளது. இந்நிகண்டின் காலம் 8-ஆம் நூற்றாண்டு என்றும், ஒரு சிலர் 10-வது நூற்றாண்டு என்றும் கூறுகின்றனர். இந்நிகண்டு சூடாமணி நிகண்டுக்கு முந்திய நூல். திவாகரம் போன்று நூற்பா நடையில் இந்நிகண்டு 4121 நூற்பாக்களில் கிட்டத்தட்ட 15800 சொற்களுக்குப் பொருள் கூறுகின்றது. இந்நூலில் பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி இடம் பெறவில்லை. பத்து வகைகளாக அமைந்துள்ளது.

அவை:-வான்வகை, வானவர்வகை, ஐயர்வகை, அவனிவகை, ஆடவர்வகை, அநுபோகவகை, பண்பிற் செயலின் பகுதிவகை, மாப்

பெயர்வகை, மரப்பெயர் வகை, ஒருசொல் பல்பொருள் வகை. இந்தப் பத்து வகைகளுள் முதல் ஒன்பது வகைகளும் 'ஒரு பொருள் பல்பெயர்த்தொகுதி' என்னும் முதல் இனத்தில் சேர்ந்தன. பத்தாவது வகை 'ஒருசொல் பல்பொருள் பெயர்த்தொகுதி என்னும் இரண்டாவது இனத்தைச் சார்ந்தவை ஆகும்.

சூடாமணி நிகண்டு.

இதன் ஆசிரியர் **மண்டல புருடர்.** இவர் தொண்டைநாட்டில் உள்ள குன்றத்தூரில் பிறந்தார். இவரது மதம் சமணம். ஒருசிலர் தொண்டையைச்சார்ந்த பெருமண்டூர் என்னும் ஊரினர் என்று கூறுகின்றனர். ஆனால் ஆசிரியர் தமது ஊர் வீரை என்று சூடாமணி நிகண்டில் பலவிடங்களில் கூறியுள்ளார் குணபத்திரர் என்னும் சமணப்பெரியாரின் மாணவர். இவருடையது ஆசிரியர் குணபத்திரர் கட்டளையின் பேரிலும், வேறு சிலர் வேண்டிக்கொண்டதாலும் திவாகரத்தையும், பிங்கலத்தையும் தழுவி சூடாமணி நிகண்டினைச் செய்தார் என்பது தெரிகிறது.

சூடாமணி நிகண்டுதிவாகரம் போல, பன்னிரண்டு தொகுதி களையுடையது. அவை:-

தேவப்பெயர்த்தொகுதி, மக்கட்பெயர்த்தொகுதி: விலங்கின் பெயர்த்தொகுதி, மரப்பெயர்த்தொகுதி, இடப்பெயர்த்தொகுதி, பல் பொருள் பெயர்த்தொகுதி, செயற்கைவடிவப் பெயர்த்தொகுதி, பண்புபற்றிய பெயர்த்தொகுதி, செயல்பற்றிய பெயர்த்தொகுதி, ஒலிபற்றிய பெயர்த்தொகுதி, ஒருசொல் பல்பொருள் பெயர்த்தொகுதி பல்பெயர்க்கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதி.இதன் பன்னிரண்டு தொகுதிகளிலும் 1189 செய்யுட்கள் உள்ளன.

ஒவ்வொரு தொகுதியின் தொடக்கத்தில் அருகக்கடவுள் காப்புப் பாடலாக உள்ளமையால் ஆசிரியர் சைனர் என்பது நன்கு புலப்படும்.

அகராதி நிகண்டு:-

இந்நூலின் ' ஆசிரியர்இரே வணசித்தர். இவர் புலியூர்ச்சிதம்பர இரேவணசித்தர் என்றும்அழைக்கப்படுவர். இவரது ஊர்சிதம்பரம் சூத்திர நடையில் நூல் அமைந்துள்ளதால் இரேவண சூத்திரம் என்றும், சூத்திரநடையில் உள்ள அகராதியாகலின் இந்நூலுக்குச் **சூத்திர அகராதி** என்ற பெயர்களும் உண்டு. இந்நிகண்டு தோன்றிய காலம் 16-ஆம் நூற்றாண்டு என்று தெரிகிறது.

அகர வரிசையையொட்டி இந்நூல் பத்துத்தொகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை:

அகராதிப் பேர்த்தொகுதி, ககராதிப்பேர்த்தொகுதி, சகராதிப் பேர்த்தொகுதி, ஞகராதிப்பேர்த்தொகுதி, தகராதிப்பேர்த்தொகுதி நகராப்திபேர்த்தொகுதி, பகராதிப் பெயர்த்தொகுதி, மகராதிப் பேர்த்தொகுதி, யகராதிப்பேர்த்தொகுதி, வகராதிபேர்த் தொகுதி.

இந்நூலின் பாயிரப்பாடலின்மூலமாக அகராதி நிகண்டைப் பற்றி அறிந்து கொள்ள முடியும். இந்நூல் ஒருசொல் பல்பொருட் பெயர்ப்பிரிவைச் சார்ந்தது. அகரம் முதல் வகரம் ஈறாகப்பத்துத் தொகுதிகளை உடையது. அகராதி முறையில் உள்ளது, நூற்பா வினால் அமைந்தது; 3368 நூற்பாக்களை உடையது.

இந்நிகண்டில் சொற்கட்கு ஒரு பொருள் முதல் நாற்பத்தாறு பொருள் வரை கூறப்பட்டுள்ளன, 16-ஆம் நூற்றாண்டில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது என்று தெரிகிறது.

உரிச்சொல் நிகண்டு :-

இந்நிகண்டின் ஆசிரியர் காங்கேயர் என்னும் புலவர். தொண்டை நாட்டிலுள்ள செங்கற்பட்டு என்னும் ஊரினர். ஒரு சிலர் கொங்கு நாட்டைச் சார்ந்தவர் என்று கூறுகின்றனர். இவர் சைவ மதத்தினர் என்றும் துறவியாக வாழ்ந்தவர் என்றும் கருதப் படுகின்றார், காங்கேயன் என்ற பெயரை நோக்குமிடத்து இவர் சைவர் என்றே கருதலாம். காங்கேயன் என்ற சொல் முருகக் கடவுளைக் குறிக்கும். இவருடைய காலம் 17-ஆம் நூற்றாண்டு. ஒரு சிலர் 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்று கருதுகின்றனர்

இந்நிகண்டு வெண்பாவால் இயற்றப்பட்டது. இந்நூல் பத்துத் தொகுதிகளை உடையது; 220 வெண்பாக்களைக் கொண்டது.

கயாதர நிகண்டு :-

கயாதரர் என்னும் புலவரால் இயற்றப்பெற்றமையின் இந்நூல் **கயாதர நிகண்டு** என்று வழங்கப் பெறுகின்றது. இவர் தேவை என்று வழங்கப் பெறும் இராமேச்சுவரத்தில் வாழ்ந்தவர்; இவர் தம்மைத் தேவைக் கெயாதரன் என்றும் தேவையதிபன் என்றும் தேவை நன்னாடன் என்றும் கூறிக்கொள்கிறார். அந்தணர் மரபில்

தோன்றியவர் என்பதைத் தம் நூலில் தொல்வேதியன் என்றும், மறையவர் வேந்தன் எனவும், மறைபயில் நாவினன் எனவும் கூறிக்கொள்வதால் நன்கு விளங்கும். வடமொழி, தென்மொழி இரண்டையும் கசடறக் கற்றறிந்தவர். தமிழில் ஓர் அந்தாதி நூலும் இயற்றியிருப்பதாகத் தெரிகிறது. இராமேச்சுரக் கோவை என்ற ஒரு கோவைநூலும் பாடியிருப்பதாகத் தெரிய வருகிறது. இவரது காலம் 17-ஆம் நூற்றாண்டு. பத்துத் தொகுதிகளிலும்அமைந்துள்ளஅந்தாதித் தொடையைப்பின்பற்றியே பதினோராவது தொகுதியையும் உடையது. அவை :- தெய்வப் பெயரியல், இடப்பெயரியல், விலங்கின்பெயரியல், மரப்பெயரியல், மக்கட்பெயரியல், பல்பொருட்பெயரியல், செயற்கை வடிவிற் பெயரியல், பண்புப்பெயரியல், செயல்பற்றிய பெயரியல், ஒலிபற்றிய பெயரியல், ஒரு சொல் பல்பொருளியல்.

திவாகரம், சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு முதலிய நூல்களின் உட்பிரிவுகள் 'தொகுதி' என வழங்கப்பெறுகின்றன.

பிங்கல நிகண்டு **வகை** என வழங்கப்பெறுகின்றது. இந்நிகண்டில் ஒவ்வொரு பிரிவும் **இயல்** என வழங்கப் பெறுகின்றது. கற்பவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளு வதற்காக நூல்முழுவதையும் அந்தாதித்தொடையாக இயற்றி யுள்ளார்.

உண்மைச்சொற்கள் இன்ன என்று கயாதரத்தின் மூலம் அறியலாம். திவாகரத்தில் புத்தனுக்குரிய பெயர்களுள் பாரின்மிசையோன் என்று அச்சாகியுள்ளது, புத்தனுக்கு இப்பெயர் இல்லை. இப்பிழை ஏடு எழுதுவோரால் ஏற்பட்டிருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. இந்நிகண்டில் இப்பெயர் பாரமிதையவன் என்று சொல்லப்பட்டுள்ளது. இப்பெயர்தான் உண்மைப் பெயர். இந்நிகண்டின் ஒவ்வொரு இயலின் இறுதியிலும் ஆசிரியர் தம் வரலாறு, பெயர் முதலியவற்றைக் குறித்துள்ளார்.

பல்பொருள் 'சூடாமணி நிகண்டு :-

இந்நூலின் ஆசிரியர் ஈசுவர பாரதியார். இவர் வடமலை நிகண்டு என்னும் நூலினையும் இயற்றியுள்ளார். நெல்லை மாவட்டத்திலுள்ள மடசை என்னும் ஊரினர். சிதம்பரபாரதியின் மகனாவார். சைவ சமயத்தைச் சார்ந்தவர். இவரது காலம்

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியும், பதினெட்டாவது நூற்றாண்டின் முற்பகுதியுமாகும். ஆசிரியர் ஒருசொல் ஒரு பெயர்க் காண்டம், ஒரு சொல் பல்பொருள் காண்டம், பல்பெயர்க் கூட்டத்து ஒருபெயர்க்காண்டம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு நூல் யாத்துள்ளார். அகராதி நிகண்டினைப் போன்று இந்நூலும் அகரவரிசையில் இயற்றப்பெற்றுள்ளது.

வடமலை நிகண்டு ;-

இந்நிகண்டின் ஆசிரியர் ஈசுவரபாரதி. இந்நூல் மூன்று காண்டங்களைக் கொண்டது. வடமொழியில் உள்ள அமர கோசத்தைப் பின்பற்றி எழுதப்பட்டுள்ளது என்று தெரிகிறது முதற்காண்டம் மூன்றாம் காண்டம் ஆகிய இரண்டும் ஐயரவர்கள் சேகரித்து வைத்துள்ள சுவடியில் இல்லை. இரண்டாம் காண்டத்தை நூல் நிலையம் வெளியிட்டுள்ளது. எழுத்து வரிசை யாகப் பத்துத் தொகுதிகள் உள்ளன. சுவடியில் இரு ஓலைகள் இல்லாததால் பகர ஈகாரவருக்கம் முதல் பகர ஏகாரவருக்கம் முடிய இல்லை. காலம் கி. பி. 1700 என்று பாயிரத்தின் மூலம் தெரிய வருகிறது.

கைலாச நிகண்டு :-

இதன் ஆசிரியர் கைலாசர். தம் பெயரையே நூலுக்கு இட்டார் போலும்.

இவரது காலம் 17-ஆம் நூற்றாண்டு. நூற்பா நடையில் இயற்றப்பெற்றுள்ளது. இந்நிகண்டு பிங்கல நிகண்டையொட்டி எழுந்தது என்று தெரிகிறது. இதிலுள்ள 56 பிரிவுகளில் முதல் 49 பிரிவுகள் திவாகரத்தில் உள்ள முதல் பத்துத் தொகுதிகளின் வகைகள். இவற்றில் மட்டும் 15000 சொற்கள் இடம் பெற்றுள்ளன.

பாரதி தீபம் ;-

இந்நிகண்டு திருவேங்கடபாரதி என்பவரால் இயற்றப் பெற்ற தாதலின் பாரதி தீபம் என்னும் பெயர் பெற்றது. தீபம் போன்று சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருதலின் தம் பெயரையும் சேர்த்துப் பாரதி தீபம் என்று பெயர் வைத்தார் போலும். இவரைப் பரமானந்த பாரதி என்றும் அழைப்பர். தென்கடம்பை என்னும் ஊரினர்.

"மீன்ருவு வாவிக் கடம்பையில் வாழ்திரு வேங்கடவன்
ஏன்ருசு கூறும் கவிவேந்தன் பாரதி ஏற்றமலர்த்

தேன்றுழ் தொடைப்புயன் செப்பிய பாரதி தீபந்தன்னில்
மூன்றுவதுவிலங்கின் பேர்த் தொகுதி முடிந்ததுவே.''

இச்செய்யுள் விலங்கின் பெயர்த்தொகுதி இறுதிச் செய்யுளாக உள்ளது. இச்செய்யுளின் மூலம் ஆசிரியரைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. இந்நூல் 17-ஆம் நூற்றாண்டில் எழுந்தது என்று தெரிகிறது. ஒருசிலர் 15-ம் நூற்றாண்டு என்று கருது கின்றனர். இவர் அந்தணர்; துறவறத்தை மேற்கொண்டவர்.

கயாதரமும், பாரதிதீபமும் கட்டளைக்கலித்துறையால் அமைந்துள்ளன. இவ்விரண்டு நூல்களும் திவாகரத்தை அநுசரித்து எழுந்த நூல்கள். இந்நிகண்டு திவாகரத்தைப் போன்று 12 தொகுதி களை உடையது.

ஆசிரிய நிகண்டு :-.

இந்நிகண்டின் ஆசிரியர் ஆண்டிப் புலவர். இவர் தொண்டை நாட்டில் செஞ்சியையடுத்துள்ள ஊற்றங்கால் என்னும் ஊரினர். திவாகரம், பிங்கலம், உரிச்சொல் நிகண்டு, கயாதரம், அகராதி நிகண்டு முதலியவற்றின் கருத்துக்களைத் தொகுத்து ஆசிரிய நிகண்டைத் தாம் இயற்றியதாகப் பாயிரத்தில் கூறுகின்றார்.

''முந்துள திவாகரம் பிங்கல நிகண்டு சீர்
முந்து காங்கயன் உரிச்சொல்
முறைபெறு கயாகரம் பகரும் அகராதியிவை
முற்றும் ஒன்றாய்த் திரட்டி''.

என்பது பாயிரச் செய்யுள்.

இந்நிகண்டு ஆசிரியவிருத்தத்தால் ஆனது.

பதினொரு தொகுதிகளையுடையது. 260 செய்யுட்கள் இந் நிகண்டில் உள்ளன. இந்நூலின் காலம் 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருக்கலாம் என்று தோன்றுகிறது. ஒரு சிலர் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாக இருக்கலாம் என்று நினைக் கின்றனர்.

இந்நிகண்டினைத் தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தார் 1975-ஆம் ஆண்டில் திவாகரம், பிங்கலம், சூடாமணி, கயாதரம் ஆகிய நான்கு நூல்களையும் ஒப்புமைகாட்டிப் பதிப்பித்துள்ளனர்.

அரும்பொருள் விளக்க நிகண்டு :-

இந்நிகண்டின் ஆசிரியர் தில்லை அருமருந்து தேசிகர். இவரது ஊர் திருச்செந்தூர். சிவப்பிரகாசர் என்பவருடைய மகனாவார். இந்நிகண்டு தோன்றிய காலம் 18-ஆம் நூற்றாண்டு.

சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, அகராதி நிகண்டு, கயாதர நிகண்டு முதலிய நூல்களில் கூறியவற்றையெல்லாம் தொகுத்து **அரும்பொருள் விளக்க நிகண்டு** என்னும் இந்நூலினைத் தாம் இயற்றியதாக ஆசிரியர் பாயிரத்தில் கூறியுள் ளார். இந்நூல் விருத்தப்பாவால் ஆனது. 739 பாடல்கள் உள்ளன. சூடாமணி நிகண்டின் 11-வது தொகுதிபோல, சொற்களை 18 எதுகைகளாகப் பிரித்துக் கொண்டுள்ளார். ஆசிரியர் இந்நூலின் இறுதிச் செய்யுளில் இந்நூலைக் கற்பவர்கள் சிறந்த புலமையும் செல்வமும் பெற்றுப் பெருமையையடைவார்கள் என்று கூறி யுள்ளமை ஒரு புதுமை. வேறெந்த நிகண்டு நூலிலும் இவ்வாறு கூறப்படவில்லை.

தொகை நிகண்டு :-

இந்நிகண்டின் ஆசிரியர் சுப்பிரமணியக்கவிராயர் என்று தெரிகிறது. நாமதீப நிகண்டின் ஆசிரியர் தம் பாயிரத்தில்

''பன்னும் தொகை நிகண்டில் பார்க்கவிரி வாமவைகள்
இன்னசுருக் கத்தடங்காவே''.

என்று குறிப்பிட்டுள்ளமையால் இந்நூலைப்பற்றி ஓரளவு அறிய முடிகிறது. இதன் ஆசிரியர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கல்லிடைக்குறிச்சி என்னும் ஊரினர். இவரது காலம் 18-ஆம் நூற்றாண்டு என்று தெரிகிறது. திவாகரத்தில் உள்ள பல்பொருள் கூட்டத்து ஒருபெயர்த் தொகுதி என்னும் பிரிவை மட்டும் விளக்க மாகச் சொல்கிறது இத்தொகை நிகண்டு.

பொருள் தொகை நிகண்டு :-

இந்நூலின் பெயரிலிருந்தே பல்பொருள் கூட்டத்து ஒரு பெயர்த்தொகுதியின் விரிவு என்று தெரிகிறது. இதன் ஆசிரியர் சுப்பிரமணியபாரதி (மகாகவிபாரதியார் அல்லர்) புதுக்கோட்டையைச் சேர்ந்த குடுமியாமலை என்னும் ஊரினர்.

இந்நிகண்டு 18 ம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம் என்று தெரிகிறது. நிகண்டுகளின் முப்பெரும் பிரிவுகளுள் இது மூன்றா வது பிரிவை மட்டும் கொண்டுள்ளது. இந்நூலை மதுரைத் தமிழ்ச் சங்கம் 1920 இல் பதிப்பித்துள்ளது.

பொதிகை நிகண்டு:-

இந்நிகண்டின் ஆசிரியர் சாமிநாதக் கவிராயர். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கல்லிடைக்குறிச்சி என்னும் ஊரினர். இவர் சைவ வேளாள மரபைச் சார்ந்தவர். பூவைப் புராணம் நாமதீப நிகண்டு ஆகிய இவ்விரண்டு நூல்களை இயற்றிய சிவ சுப்பிரமணியக் கவிராயர் இவருடைய மகனாவார். இந்நூலாசிரியர் **சாமிநாதம்** என்னும் இலக்கண நூலையும் இயற்றியுள்ளார். இவரது காலம் 18ம் நூற்றாண்டு. இந்நூல் முதற்பகுதி, இரண்டாம் பகுதி என்று இரண்டு பிரிவுகளையுடையது. முதற்பகுதி, பத்துத் தொகுதிகளையுடையது. 500 செய்யுட்கள் உள்ளன. விருத்தப்பாவால் அமைந்துள்ளன. முதல் ஒன்பது தொகுதிகளில் 14,500 சொற்கள் கூறப்பட்டுள்ளன. பத்தாவது தொகுதியில் 1350 சொற்கள் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் சொற்களுக்குப் பல பொருள்கள் கூறப்பட்டுள்ளன. 2288 சொற்கள் உள்ளன. திருநெல்வேலி மாவட்டத்துச் சொற்கள் பல இடம் பெற்றுள்ளன.

அகராதி நிகண்டைப் போல அகரவரிசையில் அமைந்துள்ளது. இந்நூல் 1934 - இல் வையாபுரிப்பிள்ளை அவர்களால் அச்சிடப்பட்டுள்ளது.

உசிதசூடாமணி நிகண்டு:-

இந்நூலின் ஆசிரியர் சிதம்பரக் கவிராயர். காலம் 18ம் நூற்றாண்டு. விருத்தப்பாவால் யாக்கப்பட்டது. தேவசரித்திரத் தொகுப்பு முதல் உதாரண ஒழிபு என்ற உசிதப் பொருள் அலங்காரத் தொகுப்பு ஈறாகப் பதினெட்டுத் தொகுப்புகளைக் கொண்டு விளங்குகின்றது.

நாமதீப நிகண்டு :-

ஆசிரியர் சிவசுப்பிரமணியக் கவிராயர். கல்லிடைக்குறிச்சி என்னும் ஊரில் வாழ்ந்தவர். இதில் 808 வெண்பாக்களில் கிட்டத்தட்ட 1200 சொற்களுக்குப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. இந்நிகண்டில் அருகர், புத்தர், இவர்களைப் பற்றிக் கூற வில்லை. காரணம் யாது என்று புலப்படவில்லை. ஒருகால் மதாபிமானம் எழுந்திருக்கக்கூடுமோ? நூல்நான்கு படலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை: உயர்திணைப் படலம், அஃறிணை உயிர்ப்பொருள் படலம், அஃறிணை உயிரில் பொருள்

படலம், குணநாமப் படலம். நான்கு படலங்களும் 16 வருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

வேதகிரியார் சூடாமணிநிகண்டு:-

ஆசிரியர் களத்தூர் வேதகிரி முதலியார். சூடாமணி நிகண்டில் இல்லாத பல புதிய சொற்களைத் தொகுத்து, எதுகை மோனை முறையில் 290 விருத்தங்களைத்தாமே இயற்றிச் சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியில் இருந்த 310 விருத்தப்பாக்களின் இடையில் செருகி, 600 பாக்கள் உடைய தனி நூலாக இயற்றியுள்ளார். அதனால் இந்நூல் வேதகிரியார் சூடாமணி நிகண்டு என்று வழங்கலாயிற்று. இந்நூலில் 2526 சொற்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் காலம் 19ம் நூற்றாண்டு.

கந்தசுவாமியம்:

இந்நூலின் ஆசிரியர் கீழ்வேளூர் சுப்பிரமணியதேசிகர். ஆசிரியர் பழைய நிகண்டு நூல்களைத் தொகுத்து நூற்பா நடையில் இயற்றியுள்ளார், நிகண்டு நூல்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்று இருபத்துநான்கு விதிகள் கூறப்பட்டுள்ளன இந்நூலுள், முதல் இரு தொகுதிகள் 1844 - ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டுள்ளன. முதல் தொகுதியில் 1318 சொற்களும், இரண்டாம் தொகுதியில் 1425 சொற்களும் உள்ளன. ஆசிரியரது காலம் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று தெரிகிறது. ஆசிரியர் முருகனுக்குக் கந்தசுவாமி என்ற பெயரும் உண்டாதலால் நூலிற்குக் கந்தசுவாமியம் என்றபெயர்வைத்தார் போலும்.

தொகைப்பெயர்விளக்கம்:

இந்நூலின் ஆசிரியர் வேதகிரி முதலியார். 19 - ஆம் நூற்றாண்டினர். பல்பொருள் கூட்ட ஒரு பெயர்த் தொகுதி மட்டும் உடையது. 1849ல் இந்நூல் அச்சிடப்பெற்றுள்ளது.

நாநார்த்த தீபிகை நிகண்டு:-

இதன் ஆசிரியர் முத்துசாமிபிள்ளை. இவர் திருநெல்வேலியைச் சார்ந்தவர். இந்நூல் அரும்பொருள் விளக்க நிகண்டைப் போன்று அமைந்துள்ளது. விருத்தப்பாவினால் இயற்றப்பெற்றது. ஆசிரியர் வடமொழிப் புலமை நிரம்பியவர் என்பதற்கு நூலின் பெயரே சான்றாகும். மேலும் நூலில் பல வடமொழிச் சொற்களையும் கையாண்டுள்ளார். காலம் 19ம் நூற்றாண்டு.

சிந்தாமணி நிகண்டு :-

இந்நூலின் ஆசிரியர் வைத்தியலிங்கம்பிள்ளை. அரும் பொருள் விளக்கம், நாநார்த்த தீபிகை போன்று ஒருசொல் பல் பொருள் பெயர்த்தொகுதிக்கு மாத்திரம் பொருள் கூறுகின்றது இந்நூல். இந்நூலும் எதுகை முறையில் இயற்றப்பெற்றுள்ளது ஆனால் இந்நூலில் ஒரு பொருளையுடைய சொற்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. இந்நிகண்டிற்கு ஆசிரியரே உரையும் எழுதி அவரே பதிப்பித்துள்ளார்.

அபிதானத் தனிச்செய்யுள் சிந்தாமணி:

இதன் ஆசிரியர் கோபாலசாமி நாயகர். அபிதானம் பெயர் அபிதானம்: வடசொல். பல பொருள் பெயர்களும் இந்நூலில் கூறப்படுகின்றமையால் ஆசிரியர் அபிதானம் என்ற சொல்லை முன் வைத்தார் போலும். காலம் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்று தெரிகிறது.

அபிதான மணிமாலை:

இந்நூல் திவாகரத்தைப் போல் அமைந்துள்ளது. ஒன்பது தொகுதிகளாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. 8**ஆம்தொகுதி** சுவடியில் காணப்பெறவில்லை.

தெய்வப்பெயர்த் தொகுதி செய்யுள் 162, மக்கட்பெயர்த் தொகுதி 350. விலங்குப் பெயர்த்தொகுதி 275, மரப்பெயர்த் தொகுதி 355, இடப்பெயர்த் தொகுதி 378, பொருட்பெயர்த் தொகுதி 143, செயற்கை வடிவப் பெயர்த்தொகுதி 215, செயல்பற்றிய பெயர்த்தொகுதி 531. ஆகமொத்தம் செய்யுட்கள் 2404. நூற்பாவால் ஆனது. பெரும்பாலான நிகண்டுகளில் விலங்கின் பெயர்த்தொகுதியில் அஃறிணை என்ற முறையில் ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன சேர்க்கப்பட்டுள்ளன.'

நூல்நிலையச் சுவடிகளின் விளக்கம் முதல் தொகுதியில் 17 ஆம் எண்ணுள்ள சுவடியாகத் திகழ்கின்றது. இந்நூல் வேறு எந்த நூல் நிலையத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை. அபி தானம் என்ற சொலுக்குப் பெயர் என்று பொருள். இந்நூல் அபூர்த்தி. நிகண்டு நூலில் பன்னிரண்டு தொகுதிகள் இருக்க வேண்டும். இது 9 தொகுதிகளையுடையது. அதிலும் 8 ஆம் தொகுதி இல்லை.

நூலாசிரியர்:

இந்நூலின் ஆசிரியர் திருவம்பலத்து இன்னமுதம்பிள்ளை. இவர் திருச்சிற்றம்பலத்து இன்னமுதம்பிள்ளை என்றும் வழங்கப் பெறுவர். பிள்ளையவர்கள் காலத்தில் சென்னையில் இருந்த வித்துவான்களுள் இவரும் ஒருவர். மயிலாப்பூரிலுள்ள திருவண்ணாமலை மடத்தில் இருந்தவர். இவரிடம் பிள்ளையவர்கள் கல்லாடம், திருவசாகம், திருச்சிற்றம்பலக்கோவையார், திருக்குறள் பரிமேலழகருரை முதலியவற்றிலுள்ள ஐயங்களைக் கேட்டுத் தெளிந்தனர். இவர் திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயருடைய மாணாக்கர்களுள் ஒருவர். இவர் பிள்ளையவர்களுக்குத் தமிழ் நூல்களிலுள்ள வேட்கைப் பெருக்கத்தையும், இயற்கையறிவினையும், முன்னரே அவருக்கு அமைந்திருக்கும் அகன்ற நூலாராய்ச்சிப் பெருமையையும், ஞாபகசக்தியையும், அடக்கத்தையும், தருக்கின்மையையும், நட்புடைமை முதலியவற்றையும் குறித்து வியந்தவராவர்.

> ''கலைமுழு துணர்ந்த கவிஞர் குழாத்துள்
> தலைமை நடாத்தும் சைவ சிகாமணி
> நாச்சுவை அமுதினு மூங்குநனி சிறக்கும்
> பாச்சுவை அமுதைப் பற்பக றோறும்
> பெருவனாட்டுப் புலவரும் பெட்புறத்
> தருமீ னாட்சுந் தரநா வலவனே.''

என்று இவர் பிள்ளையவர்கள் இயற்றிய அகிலாண்டநாயகி பிள்ளைத் தமிழுக்குத் தாம் கொடுத்த சிறப்புப் பாயிரத்தில் அவரைப் பாராட்டியிருக்கின்றனர். இவர் காஞ்சீபுரம் சபாபதி முதலியார், எழும்பூர்த் திருவேங்கடாசலமுதலியார் ஆகிய மூவரும் ஒருவருடைய வீட்டிற்கு ஒருவர் போய் நூலாராய்ச்சியின் விஷயமாக ஒருவரோடொருவர் அளவளாவி இன்புறுவது வழக்கம். அநேக புத்தகங்கள் ஏட்டில் இவரால் எழுதப்பட்டுள்ளன. இவர் எழுதிய ஏடுகளின் இறுதியில் திருவம்பலத்தின்னமுதம் பிள்ளை என்ற கையெழுத்து இருக்கும். இவர் சங்கச் செய்யுட்களில் மிக்க பழக்கமுடையவர். இவரால் எழுதப்பட்ட புத்தகங்கள் இப்பொழுதும் இருக்கின்றன, அப்புத்தகங்களில் இவர் எழுதிய சுலோகத்தால் வடமொழியிலும் நல்ல பாண்டித்தியம் உடையவர். அபிதான மணிமாலை என்னும் நூலில் வடமொழி சொற்களைக் கையாண்டுள்ளமை கொண்டே வடமொழி பயிற்சியுடையவர் என்பதை அறியலாம். இவருடைய காலம் 19 ஆம் நூற்றாண்டு. இவரைப்பற்றி மேற்கொண்டு அறிய ஆதாரங்கள்

கிடைக்கவில்லை. இவர் எல்லாமதத்தையும் சமமாக எண்ணுபவர். நாமதீப நிகண்டில் அருகதேவனைப்பற்றியும், புத்தரைப்பற்றியும் கூறப்படவில்லை. ஆனால் இவர் எல்லாத் தெய்வங்களைப்பற்றியும் கூறியுள்ளார். அபிதானமணிமாலை என்னும் நூலை எளிய நடையில் இயற்றியுள்ளார். அபிதானம் என்ற சொல்லுக்குப் பெயர்க் கொடை என்று பொருள் கூறியிருக்கிறார். வான்மீகியையும் வியாசரையும் எந்த நிகண்டுக்காரரும் குறிப்பிடவில்லை. ஆனால் இவர் வான்மீகியை தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்'

"அசதுர்வதநோ ப்ரஹ்மா :த்விபாஹா ஹரி:
அபால லோசந: சம்பு: பகவான் பாதராயண:"

இச்சுலோகம் ஸ்ரீவேதவியாஸர் தோத்திரத்தில் உள்ளது, இச் சுலோகத்தைத்தமிழில் இவ்வாசிரியர் இந்நூலில்

"வியாதன் ஒருமுகவிதி இருதோள் விண்டு
எரிவிழி காட்டா இறை சுகன் தாதை
பராசரன் மைந்தன் பாதராயணன்"

என்று கூறியுள்ளார். இதிலிருந்து வியாச பாரதத்திலும், வான்மீகி ராமாயணத்திலும் இவருக்கு மிகுந்த ஈடுபாடும், வடமொழிப் புலமையும் உண்டு என்பது தெரிய வருகிறது.

"வான்மீகி பிராசே தசன் அளை யுறுமுனி
அருங்கவி கண்டோன் ஆதி காப்பியன்"

இவற்றிலிருந்து இவருக்கு வான்மீகி முனிவரிடத்திலும், வியாசரிடத்திலும் மிக்க ஈடுபாடுடையவர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. எல்லா நிகண்டுக்காரர்களும் இராமாயணம், பாரதப்பாத்திரங்களைக் கூறியுள்ளார்கள். நூல் படைப்புக்காரரைப்பற்றிச் சொல்லாமல் விட்டதை இவர் கூறியுள்ளார்.
பூனையின் பெயர்களைக்கூறும்போது

"பூனை பூஞை பூசை விடருகம்
அலவன் இற்புலி **ஆகூண்** வெருகு
பவனம் இந்தி பாக்கன் **பில்லி** .
மண்டலி ஓதி விலாளம் மார்ச்சாலம்."

ஆகூண் என்று கூறியுள்ளமை இந்நிகண்டிற்கு ஒரு சிறப்பு. மேலும் **பில்லி** என்ற இந்திமொழிச் சொல்லையும் இந்நூற்பாவில் காணலாம்.

"பூதியம் பொறிபுலன் கரணம் கலை
ஆதியின் அறிவுறும் ஆன்மா என்ப."

எஃறு அறிவுறும் ஆன்மாவைப் பற்றி விளக்கியுள்ளார். மற்ற நிகண்டுக்காரர்கள் விளக்கவேயில்லை.

ஞானேந்திரியம், ஞானேந்திரியச் செயல், கன்மேந்திரியம், கன்மேந்திரியச்செயல் முதலியவற்றைக் குறிப்பிட்டுள்ளது ஒரு தனிச்சிறப்பு.

ஒட்டகத்திற்கு **நெடுங்களம்** என்று ஒரு புதுச்சொல்லை இவ் வாசிரியர் தாமே படைத்துக்கொண்டிருப்பது ஒரு தனிச்சிறப்பு. இவர் இயற்றியுள்ள இந்நூலில் வடசொற்க நிரம்ப உள்ளன.

முற்காலத்தில் மாணவர்கள் முதன் முதலில் நிகண்டுநூல்களைக் கற்று மனப்பாடம் செய்து வந்தனர். தற்காலத்தில் தமிழ் நூல்கள் கற்கும் மாணவர்கள் நிகண்டு நூல்களைப்படிப்பதும் இல்லை. மனப்பாடம் செய்வதுமில்லை. சொற்களின் பொருட்களைத் தெரிந்து கொள்வதற்கு அகராதி ஒன்றே போதும் என்று நினைக்கின்றனர். ஆகவே நிகண்டு கற்போர் இல்லை.

நூல்நிலையத்தில் உள்ள நிகண்டு நூல்கள்:-

1. அகராதி நிகண்டு ஒரு சொல் பலபெயர்த்தொகுதி **அபூர்த்தி.** இந்நூல் அச்சாகவில்லை.
2. அகராதி நிகண்டு அபூர்த்தி.
3. அரும்பொருள் விளக்க நிகண்டு பூர்த்தி.
4. ஆசிரிய நிகண்டு அபூர்த்தி
5. உரிச்சொல் வெண்பா பூர்த்தி
6. கயாதர நிகண்டு அபூர்த்தி
7. சூடாமணி நிகண்டு மூலம் பூர்த்தி
8. சொற்சேவை பொருட்சேர்வை பூர்த்தி அச்சாகவில்லை
9. திவாகரம் பூர்த்தி
10. பாரதிதீபநிகண்டு பூர்த்தி.
11. பிங்கல நிகண்டு பூர்த்தி.
12. பெயரகராதி பூர்த்தி.
13. வடமலை நிகண்டு அபூர்த்தி,
14. வாகட அகராதி அபூர்த்தி.

அச்சாகாத நூல்களைப்பற்றிய சிறுகுறிப்பு:-

அகராதி நிகண்டு:-

இந்நூல் அகரவரிசையில் சொற்களுக்குப் பல பொருட்களை ஓசைவழுவாமல் ஓரடிச்செய்யுட்களில் அமைந்துள்ளது. 1312 வரிச் செய்யுட்கள் உள்ளன. வகர வரிசையில் 14 வரிகளே உள்ளன ஒவ்வொரு வரிச் செய்யுளின் இறுதியிலும் எண்ணிக்கை கொடுக்கப் பெற்றுள்ளது. இந்நூலுக்கு **அகராதி** நிகண்டுஒரு சொல்பலபெயர்த் தொகுதி என்று தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. முதல் ஏட்டில் பின்னுள்ள காப்புச்செய்யுள் காணப்படுகின்றது.

''கைக்குலவுஞ் ஞானக் களிறேமுக் கட்கடத்து
மெய்க்குலவும் சித்தி விநாயகா-பொய்க்குலவா
மட்டளவில் லாதசிவன் வாய்த்(த)திரு வாலவாய்க்
கட்டளைக்குள் பாதமே காப்பு''

(2) **சொற்சேர்வைபொருட்சேர்வை:-**

குறிப்பு:-இந்நூலில் கடவுளர் முதல் பாலை வரையுள்ள 10 தலைப்புக் களுள் அகராதி வரிசையில் சொற்றொடர்களால் ஆகிய 3441 ஒற்றை வரிகளும், சில பகுதிகளின் இறுதியில் சில விருத்தங்களும் உள்ளன. இத்துடன் நூல் முடிந்ததாகத் தோன்றுகிறது. அதற்கு மேல் ஏழு ஓலைகள் உள்ளன. அவ்வோலைகள் மிகவும் சிதைந்தி ருத்தலால் அவை இன்னவை எனத் தெளிவாக விளங்கவில்லை. ஆசிரியர் பெயர் முதலியன அறிய முடியவில்லை. நூல் முழுவதும் உள்ளது'

நூலின்தொடக்கம்—

(1)கடவுளர் (2)நெடுமால் (3)முனிவர் (4)இருபொழுது (5)உலகம் (6)நகர்(7)சோலை(8)முகில்(9)மகளிர் (10)ஆபரணம்(11) வேந்தன் (12)ஆயுதம் (13)தானை (14)களம் (15)நண்ணார்(19)மருதம் (17)குறிஞ்சி(18)முல்லை(19)கடல்(20)பாலை.

இருபதாம் நூற்றாண்டில் அபிதானகோசம், அபிதான சிந்தாமணி சிறப்புப்பெயர் அகராதி முதலிய நூல்கள் தோன்றின.

தொகைஅகராதி(உரைநடை)சுவடிஎண் **1261...A**

இந்நூல் நிகண்டுவகையைச் சார்ந்தது.கூட்டுப்பெயர்களை உணர்த்தும் தொகைச் சொற்களுக்கு வகை கூறுகின்றது. இஃது அகரவரிசைப்படி அமையவுல்லை. தொகை அகராதி எனப்பெயர் கொடுக்கப்பட்ட காரணமும் தெரியவில்லை. இயற்றியவர் பெயர் முதலிய குறிப்புக்களை அறிய முடியவில்லை. இப்பிரதி முழுவதும் இல்லை. தொகைகளில் 3.4 என்று 32,வரை இப்பிரதியில் உள்ளன. நூல் அபூர்த்தி.

இந்நூலாசிரியர் சில புதிய சொற்களைப் பல இடங்களில் பிரயோகம் செய்துள்ளார், ஆதாரம் இருக்கின்றமையால்தான் சொற்களைக்கையாண்டுள்ளார் என்று தெரிகிறது. இந்தச்சுவடி இராமபாணப்பூச்சிக்கு இரையாவதற்கு முந்தி இந்த நூலுடன் சேர்த்துப் பதிப்பித்துள்ளோம்.

நூலில் சில இடங்களில் விளங்கவில்லை, ஆயினும் சுவடியில் உள்ளவாறே ஐயரவர்கள் முறையைப்பின்பற்றிப் பதிப்பித்துள் ளோம். பிழையை நீக்கி நல்லனகொள்க.

வித்துவான் சு. **பாலசாரநாதன்**
ஆராய்ச்சித்துறைப்பிரிவு
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம்.

பெசன்ட்நகர் 90.
15—12—88

அபிதான மணிமாலை

முதலாவது

தெய்வப் பெயர்த்தொகுதி

1. சிவன்

சங்கரன் இறையோன் புங்கவன் புனிதன்
அங்கணன் அறுகுணன் எண்குணன் அநகன்
சயம்பு சம்பு சாமி சசிதரன்
அச்சுதன் அண்ணல் முச்சுடர்க் கண்ணன்
கங்கை வேணியன் காமாரி முத்தன்
வாம தேவன் மாதேவன் மகேச்சுரன்
சாம வேதன் சசிகண்டன் சீகண்டன்
அமலன் ஆனந்தன் ஐந்தொழிற் கடவுள்
விமலன் வித்தகன் நித்தன் விழுப்பொருள்
உருத்திரன் பசுபதி உமாபதி சோதி
சருவ தோமுகன் திருப்பொலி நீற்றோன்
மூவுல காளி மூவுல கேந்தி
சேவுயர் கொடியோன் செங்கணே றூர்ந்தோன்
வேதன் வேதாந்தன் விதிபர மேட்டி
ஆதி நாயகன் ஆதியந் தமிலான்
அப்பிர மேயன் ஒப்பிலி வள்ளல்
ஊழி முதல்வன் ஆயிரம் பெயரான்
அநாதி அத்தன் அருளாளன் சுத்தன்
புண்ணியன் புராதனன் பூரணன் காரணன்
விண்ணவர் தலைவன் விடைக்கொடி யுயர்த்தோன்
பூத நாதன் ஆதி பாண்டரங்கன்
வேத கீதன் வேதண்ட வில்லி
கடுக்கைக் கண்ணியன் கங்காளன் கருத்தன்
ஈசன் ஈசானன் ஈச்சுரன் ஈறிலான்
பாசுபதன் உத்தமன் பரதத்துவன் பகவான்
அருத்தன் நிருத்தன் அந்தி வண்ணன்
அந்த காரி அகாரி புராரி

மழுவா ளாளி மறைமுதல் யோகி
நக்கன் நம்பன் நாதன் தற்பரன்
முக்கணன் முதல்வன் முழுதொருங் குணர்ந்தோன்
பரம்பொருள் பதிசிவன் பார்ப்பதி பாகன்
நிரந்தரன் நிரம்பரன் திகம்பரன் நிமலன்
அருவன் உருவன் அம்பிகை மணாளன்
பெரியன் அரியன் பெருமான் பெம்மான்
ஆனிழ லமர்ந்தோன் மானிட மேந்தி
அழலேந்தி அங்கி பாடி அற்புதன்
பரசி வன்பரஞ் சோதி பரஞ்சுடர்
கால காலன் நீல கந்தரன்
பிஞ்ஞகன் பிறப்பிலி பிநாக பாணி
நஞ்சணி கண்டன் நாகா பரணன்
ஐமுகன் சதாசிவன் ஐம்புலற் கிறைவன்
மெய்தெரி பகவன் விரிசடைப் பண்ணவன்
கிரியை வளைத்தோன் கிரிசன் கிரீசன்
அரியயற் கரியோன் அந்தணன் அனந்தன்
அட்ட மூர்த்தி அருட்பெருங் குரவன்
அனந்த ஞானி அனந்த லோசனன்
பரமன் பரசு தரன்பி ரான்வரன்
அரனது நாம மனந்தம் மற்றும்மே.

௨. **திருமால்**

திருமால் மாதவன் மாயவன் சீதரன்
வாசு தேவன் வனமாலி வாமனன்
கராரி முராரி கரியவன் கண்ணன்
கொண்ட னிறத்தோன் கோவிந்தன் விண்டு
தாமரைக் கண்ணன் காவற் கடவுள்
நாற்புயன் பதும நாபன் கேசவன்
உந்தி பூத்தோன் உவண முயர்த்தோன்
திருமகள் கொழுநன் அறிதுயி லமர்ந்தோன்
உலக முண்டோன் உலக மளந்தோன்
சார்ங்க பாணி சங்க மேந்தி

தாமோ தரன்பீ தாம்பரன் சக்கிரி
ஐம்படைக் கடவுள் அரவணைச் செல்வன்
முந்நீர்த் துயின்றோன் முகுந்தன் நாரணனே.

3. **பிரமன்**

பிரமன் பாரதி கொழுநன் பிதாமகன்
எண்கணன் திசைமுகன் இரணிய கருப்பன்
நான்முகன் மால்மகன் நளின யோனி
மண்பொதுத் தந்தை மலரோன் போதன்
வாணி கேள்வன் மாலுந்தி வந்தோன்
அந்தணன் குரவன் அன்ன முயர்த்தோன்
தாதா வரன்இறை தமனிய வண்ணன்
வேதா விதாதா விச்சுவ சிருட்டி
அம்புயன் விரிஞ்சன் அன்ன வூர்தி
விதிபர மேட்டி வேதியன் அயனே.

4. **அருகன்**

அருகன் அசோகன் அருட்கொடி வேந்தன்
சாது சாந்தன் சமிசாத ரூபி
சித்தன் சினவரன் சினன் சினேந்திரன்
கமல வூர்தி காதி வென்றோன்
தரும ராசன் நிராயுதன் சைனன்
நீத்தவன் புத்தன் நிச்சிந்தன் வாமன்
விறலோன் வரதன் விநாயகன் வீரன்
ஆசான்அறவோன் அறிவன் ஆத்தன்
கொல்லா வேதன் குற்ற மில்லோன்
புங்கவன் புலவன் பூமிசை நடந்தோன்
முனிவன் முனிந்தோன் முக்குடைச் செல்வனே.

5. **புத்தன்**

புத்தன் புனிதன் புண்ணிய மூர்த்தி
அருங்கலை நாயகன் அனந்த லோசனன்
சாந்தன் சாக்கியன் உலகசயன் பிடகன்

சினவரன் அருணெறி சுரக்குஞ் செல்வன்
மாயா தேவி சுதன்மா ரசயன்
முனீந்திரன் சினன் வாமன் முக்குற்றங் கடிந்தோன்
அண்ணல் அறவன் அகளங்கன் ஆதி
பூமிசை நடந்தோன் போதி வேந்தனே.

6. **இந்திரன்**

இந்திரன் கரியவன் இமையவர்க் கரசன்
கௌசிகன் கோபதி காரி சக்கிரி
துச்ச வனன்சுநு சீரன் சுரேந்திரன்
பாக சாதனன் பலசூதனன் பலாரி
மேக வாகனன் விண்ணவர்க் கிறைவன்
பொன்னக ராளி புருகூதன் புரந்தரன்
சங்கி ரந்தனன் சதமகன் போகி
மருதத் தலைவன் வாசவன் வலாரி
வச்சிர பாணி வரைப்பகை மகவான்
வேள்வி முதல்வன் வெள்வா ரணத்தோன்
அயிரா வதப்பாகன் ஆயிரங் கண்ணன்
ஆகண் டலன்அரி அமரா வதியோன்
குலிச மேந்தி குன்றுசிறை யரிந்தோன்
நாகன் நான்மருப்பி யானை யூர்தி
சயந்தன் றாதை சசிம ணாளனே.

7. **இந்திரன் மனைவி**

இந்திரன் றேவி சசிபு லோமசை
சுந்தரி இந்தி ராணி அயிராணியே.

8. **இந்திராணி கூத்து**

இந்தி ராணி கூத்துக் கடையமே.

9. **இந்திரன் மைந்தன், இந்திரன் குதிரை, இந்திரன் நாடு, இந்திரன் மாளிகை, பண்டாரம், வனம்.**

இந்திரன் மைந்தன் சயந்தன், அச்சுவம்
உச்சைச் சிரவம்; ஒருத்தல் அயிராவதம்

நாடு வானம் நகர்அம ராவதி
மாளிகை வசந்தம் மண்டபம் சுதன்மம்
நந்தனம் கற்பக வனம்கொடி இடிபடை
பதிற்றுப் பத்தெனப் பகரப் படுமே.

10. **கணபதி**

கணபதி உமைமகன் விநாயகன் கயமுகன்
ஆகு வாகனன் அம்பிகை தனயன்
முன்னோன் முக்கணன் மும்மதன் மூத்தோன்
ஈசன் மைந்தன் ஏரம்பன் ஐங்கரன்
நெற்றிக் கண்ணன் ஒற்றை மருப்பனே.

11. **வீரபத்திரன்**

வீர பத்திரன் வெஞ்சிலைச் செல்வன்
ஆயிரந் தோளான் அழற்கண் உதித்தோன்
சிங்க வுரியினன் ஐங்கரர்க் கிளையோன்
உக்கிரன் உமைமகன் தக்கனை வென்றோன்
செக்கர் வானிறத்தோன் சிறுவிதி பகைவன்
சிம்பு ளானோன் உம்பரை வென்றோன்
பத்திரை கேள்வன் பல்படைக் கையன்
நச்சர வணியினன் எச்சஞ் சிதைத்தோன்.
குரோதன் மாசயன் கொற்ற வீரனே.

12. **முருகன்**

குமரன் அறுமுகன் குறிஞ்சி வேந்தன்
அமரர் சேனாபதி ஆண்டலைக் கொடியோன்
சேந்தன் உமைமகன் சேய்குகன் வள்ளி
காந்தன் தெய்வ யானைக் கணவன்
அரன்மகன் அறுமீன் காதலன் விசாகன்
சரவண பவன்வேள் தாருகற் செற்றோன்
முருகன் மஞ்ஞை யூர்தி முருகு மால்
மருகன் கடம்பன் மாரவேள் மைத்துனன்
கந்தன் துடியன் கலையுணர் புலவன்
தந்தனுக் கிளையோன் சண்முகன் சிலம்பன்
வாகு லேயன் வானகர் காத்தோன்

பாகு படவரை யெறிந்தோன் பாவகி
செவ்வேள் சூர்ப்பகை செட்டி சுரேசன்
வைவேற் கிறைவன் வாரணத் துவசனே.

13. **மன்மதன்**

மன்மதன் இரதி காதலன் மனேசன்
சித்தசன் மால்மகன் தென்றற் றேரோன்
அங்கசன் மனேபு மனேபவன் அனங்கன்
மதனன் இரதி பதிமதன் மாரன்
ஆழி முரசோன் ஐங்கணைக் கிழவன்
திங்கட் குடையோன் திருமகள் தனயன்
கந்தர்ப்பன் உருவிலி கருப்பு வில்லி
மதுசகன் மோகன் மகர கேதனன்
சம்ப ராரி தண்டலை யுறைவோன்
பஞ்ச பாணன் பாவையர் சேனையன்
பூவைப் பரியோன் பூவாளி காமன்
வில்லி வேள்வசந்தன் வேனி லாளியே.

14. **வயிரவன்**

வயிரவன் கேத்திர பாலன் வடுகன்
கரிய கஞ்சுகி கருங்குதிரை யாளி
முத்தன் முடுவற் பட்டியோன் வித்தகன்
சித்தன் பிள்ளை செந்தமிழ்க் குரியகோன்
காரி கபாலி ஞாளி யூர்தியே.

15. **ஐயனார்**

ஐயன் மாசாத்தன் அரிகர புத்திரன்
ஆரியன் சாத வாகனன் யோகி
பூரணை கேள்வன் புட்கலை மணாளன்
புறத்தவன் கோழிக் கொடியோன் காரி
அறத்தைக் காப்போன் அலைகடல் வண்ணன்
செண்டாயுதன் வெள்ளை யானை யூர்தியே.

16. **குபேரன்**

குபேரன் செல்வன் இயக்கர்கோன் தனபதி

அளகை யாளி தனதன் அரன்றோழன்
இருநிதிக் கிழவன் பிங்கலன் இயக்கன்
நரர்பிரான் கின்னரர் பிரான் நர வாகனன்
நிதிக்கிழவன் மந்திரி நிதியோன் மரகதன்
புட்பக விமானன் புருட வாகனன்
வடதிசைக் கிறைவன் வைச்சிர வணனே.

17. **இயமன்**

இயமன் காலன் எருமை யூர்தி
நமன்ஞமன் சண்டன் கூற்றன் நடுவன்
சவுரி செங்கோற் கடவுள் கால்சமன்
பாச கரன் அரி பானு மைந்தன்
வைவச்சு தன் மறம் மடங்கல் மறலி
அந்தகன் தருமன் தென்றிசைக் கிறையே.

18. **காலன்**

காலன் கூற்று பாசகரன் மறல்சண்டனே.

19. **பார்வதி**

பார்ப்பதி பரை அருள் வல்லி பவானி
உமைசிவை ஆரியை உமையவள் ஐயை
இமய மலைமகள் அமலை அந்தரி
உலக மாதா உருத்திரை கௌரி
சத்தி அம்பிகை சங்கரி சாம்பவி
நாயகி தேவி நாரி பகவதி
மரக தவல்லி முக்கண்ணி மலைமகள்
அருட்செல்வி ஆயிரம் பெயராள் அனங்கை
அயிராணி அன்னை அரனிடத் தவளே.

20. **இலக்குமி.**

திருமகள் இலக்குமி செய்யாள் செந்திரு
அலர்மகள் கமலை மாஅரிப் பிரியை
ஆக்கம் பொன்பொறி அம்பு யாதனை
பாற்கடற் பிறந்தாள் பார்க்கவி பதுமை

இந்திரை தாக்கணங் கிளையாள் பின்னை
செல்வி கோகனகை சிதேவி ஆமே.

21. பூமி தேவி

பூமி தேவி பூமகள் பூமின்
ஆமென வறைவ ரஞ்சொற் புலவர்.

22. சரசுவதி

சரச்சுவதி பாரதி வாணி சாவித்திரி
சதுமுகன் றேவி தண்டாச் சிறப்பினள்
கலைமகள் காயத்திரிஇசை மடந்தை
பாமகள் நாமகள் பனுவ லாட்டி
பூர வாகினி புத்தகக் கையாள்
நான்முகன் கிழத்தி ஞான மூர்த்தி
பிரமன் றேவி பிராமி பாமுதல்வி
வெள்ளை மேனியள் வெண்டா மரையாள்
வாக்காள் தூயாள் வனமேயவளே.

23. காடுகாள் (வனதுர்க்கை)

காடுகாள் கொற்றி சூரி மாரி
மோடி வடுகன் றுய்மூ தணங்கு
சூலி வடுகி எனச்சொற் றனரே.

24. காளி

காளி அலகைக் கொடியாள் கௌரி
ஐயை எண்டோளி ஆரணி குமரி
சண்டிகை குண்டலி சாமுண்டி சூரி
தாருக விநாசி தாருகற் செற்றோள்
பைரவி சூலி நீலி பத்திரி
மதுபதி பதுமை மாயை கங்காளி
மாயை யுற்றாள் மாதங்கி மாலினி

யாமளை மாதரி யாளி யூர்தி
வேதாளி வீரி வல்லணங்கு யோகினியே.

25. காளியின் ஏவல் மகளிர்

காளி யேவல் மகளிர் இடாகினி
மாயவள் வஞ்சனி வல்லவை என்ப.

26. துர்க்கை

துர்க்கை கொற்றவை சூலி எண்டோளி
மேதிச் சென்னி மிதித்தாள் விமலை
அமரி அம்பணத்தி அந்தரி ஐயை
கலையா னத்தி கன்னி காத்யாயனி
குமரி சுந்தரி கொற்றி பகவதி
சக்கரா யுதத்தி சமரி சண்டிகை
வாள்கைக் கொண்டாள் மாலினுக் கிளையாள்
நாரணி சக்கர பாணி நாராயணி
நீலி கார்த்திகை பாலைக் கிழத்தி
விந்தை மயிடற் செற்றாள் வீரி
ஆளி யூர்தி கலையூர்தி அரியூர்தி
விசயை சயமகள் வீரச் செல்வியே.

27. தருமதேவதை

தரும தேவதை மரகத வல்லி
அருகனை முடிதரித் தாள்அம் பாலிகை
புண்ணியச் செல்வி பூக நிழல் வஞ்சி
சீலி பரம சுந்தரி இயக்கி
அம்பிகை பகவதி அறத்தின் மூர்த்தியே.

28. தேவர்கள்

தேவர் வானோர் தேசினர் அண்டர்
கடவுளர் சுரர்வரர் கண்ணிமை யாதார்
அதிதர் அமரர் அமுதர் புங்கவர்
ஆதித்தர் இலேகர் ஐயர் புத்தேளிர்
பண்ணவர் விபுதர் பொன்னுடர் பட்டாரகர்

அதிதி மைந்தர் திதிமைந்தர் பகைவர்
விண்ணவர் சுவர்க்கத் தோர்விட் புலத்தோர்
உயர்நிலத் தோர்சுடர் மவுலியர் உம்பரே.

2? தேவமாதர்

தேவமாதர் அரம்பை அரம்பையர் அமரர்
மாதர் அரமகளிர் ஆகு மென்ப.

30. தெய்வப் பொதுப் பெயர்

தெய்வம் அணங்கு தே, சூர் கடவுள்
தெய்வ தம்புத் தேளிர்ஆ கும்மே..

31. தெய்வப் பெண்

தெய்வப்பெண் அணங்கு சூர்ஆ மென்ப.

32. அசுரர்

அசுரர் நிசாசரர் நிசிசரர் அவுணர்
தகுவர் தனுசர் தானவர் தைத்தியர்
தேவர் பகைவர் திதிமைந்தர் தாமே.

33. அரக்கர்

அரக்கர் நிருதர் அண்டர்ப் பகைவர்
யாது தானவர் சால கடங்கடர்
இடும்பர் பிசிதா சனர்இராக் கதரே.

34. விஞ்சையர்

விஞ்சையர் கேசரர் வித்தியா தரர்ஆம்.

35. கந்திருவர்

கந்திருவர் வீணை வல்லோர் கின்னரர்
காந்திருவர் தந்திரர் யாழ்வல் லோரே.

36. பேய்

பிசாசம் கழுது கிருத்திமம் கணம்பேய்
மயல், கடி பிரேதம் மண்ணை இதி பிணம்
வியந்தரம் சாவு சோகு சவம் வெறி

குணுங்கு பாசம் மருள்குண பாசி
அறிவழி கூளி அலகை பைசாசே.

37. பிசாச விசேடம்

வேதாளம் பூதம் பிசாச விசேடம்.

38. மூதேவி

மூதேவி முகடி இந்திரைக்கு மூத்தாள்
கேட்டை சேட்டை கெடலணங்கு தௌவை
ஏகவேணி இலம்பாடி கரடக் கொடியாள்
காக்கைக் கொடியாள் கழுதை வாகினி
சிறப்பி லாதாள் கலதி சீர்கேடியே.

39. ஆகாயம்

ஆகாயம் காயம் அந்தரம் நபம் கம்
மாகம் உலகம் மங்குல் அம்பரம்
குண்டலம் உம்பர் குடிலம் இடம்கோ
அண்டம் ககனம் அனந்தம் ஆசினிவிண்
வேணி சேண் தலை மீமேல் வெளிவான்
மாதிரம் நாகம் வானம் புட்கரம்
விண்டுபதம் விண்டலம் வியோமம் விசும்பே.

40. காற்று

காற்று அரிஊதை ஊதல்ஒலி காலசம்
வேற்றலம் நீலம்நீல் விண்டுவ ளிவாயு
கந்தவகன் உலவை கந்த வாகன்
மருத்து பிரபஞ்சனன் மாரு தம்மால்
பவமானன் சலனம் பவனம் உயிர்ப்புஉயிர்
அம்போதி கோதை அனிலம் ஆசுகம்கம்
வங்கூழ் சடுரம் சமீரணன் வாதம்

காலிலி நிழலி கால்சதா கதியே.

41. மேல்காற்று, கீழ்காற்று, வாடை

மேல் காற்றுக் கோடை, கீழ்காற்றுக் கொண்டல்,
வாடை வடந்தை, வடகாற்று என்ப.

42. தென்றல்

தென்றல் சிறுகால் தென்றி வசந்தம்
மலய பவனன் மலய சமீரன்
மலய மாருதம் மந்தமாருதம் மலயசம்
மந்தா நிலம்மல யாநிலம் தென்கால்
மலய மருத்து மலயக் காலே.

43. பனிக்காற்று, சுழல்காற்று

கூதிர்க்கால் ஊதை கூதிர் கூதை
சுழல்காற்றுச் சூறைசாரி சாரிகை விளியே.

44. தீ

தீஒளி சிகிசுசி சித்திர பானு
தேயு முளரி செஞ்சுடர் ஞெகிழி அங்கி
தகனன் தபனன் தழல்வசு எழுநா
சாத வேதா அங்காரகன் தனஞ்சயன்
சுடர்பா வகன்அரி தூம கேதுஎரி
அயவாகனன் உதாசனன் அழல் உதவகன்
தென்கீழ்த் திசையோன் சேர்ந்தார்க் கொல்லி
காற்றுத்துணை சூரன் ஆரல்அனல் காலவனம்
கருநெறி கனலி கனல் வன்னி நெருப்பே.

45. ஊழித்தீ

வடவா முகம்வட வானலம் மடங்கல்
கடையனல் வடவை கடைக்கனல் தீத்திரள்
உத்தரம் உற்கம் இறைஊழித் தீயே.

46. **தீத்திரள்**

அனற்றிரள் தீத்திரள் கனற்றிரள் உற்கம்ஆம்.

47. **எரிநா**

எரிநாச் சுவாலை சிகைஇந் தனம் கீலம்.

48. **தீப்பொறி**

தீப்பொறி கங்கம் ஞெகிழி புலிங்கமாம்.

49. **தீப்புகை**

அழற்புகை தூபம் அரிதூமம் ஆவி
நறும்புகை வெடிஇந் தனம்குயம் நறையே.

50. **தீக்கடை கோல்**

அழற்கடைகோல் அரணி ஞெலிகோல் ஆகும்.

51. **காட்டழல்**

காட்டழல் தாவம் கடற்றழல் என்ப.

52. **தீபம்**

தீபம் ஒளிசுடர் தீபிகை இராவணம்
அல்லொளி விளக்கின் அபிதானம்மே.

53. **நீர்**

நீர்சலம் அமுதம் நீரம் நாரம்
கார்அறல் உதகம் காண்டம் கவந்தம்
அம்பணம் அளகம் அயம் அப்பு அம்புதம்
கம்பயம் பயசு சம்பரம் கனரசம்
வயம் மழை வருணம் வார்பு வனம்வனம்
கயம் அலர் பிசிதம் கஞ்சம் சீவனம்
தோணி கீலாலம் அம் தோயம் புட்கரம்
பாணிஅம்பு ஆலம் பானியம் ஆருவம்
மாரி கனவிரதம் மைசலிலம்கோ
வாரி புனல்சிந்து சீதம் வாயம்குசம்
தீர்த்தம் திருத்தம் சீவனி யம்மே.

54. **நீர்ப்பெருக்கு**

வெள்ளம் பெருக்குப் பிரளாயம் நீத்தம்
ஓதம் வாரிஎன் றேதப் படுமே.

55. **தெய்வப்புனல்**

தீர்த்தம் காண்டம் புட்கரம் திருத்தம்.

56. **வருணன்**

வருணன் புனலிறை வன்மீ னூர்தி
பாசி பிராசே தசன் பெய ராமே.

57. **சூரியன்**

சூரியன் பதங்கன் சுடரோன் சோதி
ஆதித்தன் எல்லை அரியமா விகத்தன்
அருக்கன் திவாகரன் அலரி பனிப்பகை
பருக்கன் தினமணி பங்கயன் பகலோன்
ஞாயிறு சூரன் நபோமணி விண்மணி
ஆயிரஞ் சோதி பகல்அகில சாட்சி
கனலி இனன் உதயன் கதிரவன் பானு
அனலி தினகரன் அழலவன் வெஞ்சுடர்
ஏழ்பரியோன் ஒளியோன் மித்திரன் என்றாழ்
சவிதா விரோசனன் விரிச்சி கன்ஒளி
சண்டன் செங்கதிரோன் தரணி சர்ன்றேன்
அண்ட யோனி அரிகிரண மாலி
இரவி வெய்யோன் இருள்வலி தபனன்
அருணன் பருதி மார்த்தாண்டன் ஆதவன்
செங்கதிர் எல்வெயில் சித்திர பானுவே.

58. **பரிதி கிரணம்**

செங்கதிர்க் கிரணம் தீவி ரம்கதிர்
காத்தி பிரபை மயூகம் கரமே.

59. **சூரிய வட்டம்**

வெங்கதிர் வட்டம் விசயம் மண்டலம்
வெயில்ஒளி ஆதவம்-என்றுாழ் ஊழ்எல்
கோடையு மிதன்பெயர் கொள்ளப் படுமே.

60. **அருணன்**

சூரியன் சூதன் சூர சூதன்
கருடன்முன் அனூரு கால்லி அருணனே.

61. **சந்திரன்**

நிலவு சோமன் களங்கன் நிசாபதி
அலவன் சசிநிசா கரன்திங்கள் அம்புலி
உடுவேந்தன் வேந்தன் உடுபதி குரங்கி
அல்லோன் தானவன் ஆலோன் அருச்சிகன்
கலையினன் வெண்கதிர் கலாநிதி விதுமதி
பசுங்கதிர்த்தே தெவ்வு மதியம் வீபத்து
இமகரன் முயலின் கூடு இராக்கதிர்
தண்சுடர் வெண்சுடர் தண்ணவன் சீதன்
தாராபதி மானுரன் இனன் சந்திரன்
அமுதக்கதிரோன் இந்து அரி குமுத நண்பனே.

62. **இளமதி**

இளமதி யின்பெயர் பிறைநிலாக் குழவி.

63. **நிலாவொளி**

நிலவொளி சந்திரிகை ஆமென்சீர்சாற்றும்.

64. **செவ்வாய்**

செவ்வாய் அரத்தன் சேய் உதிரன் நிலமகன்
குருதி செந்தீ வண்ணன் அழல்குசன்
வக்கிரன் அழலோன் மங்கலன் பௌமன்
அங்காரகன் அறிவன் ஆரல்ஆமே..

65. **புதன்**

புதன் மால் மேதை பாகன் புலவன்
மதிமகன் நற்கோள் சௌமியன் மாலவன்

புந்தி அருணன் பண்டிதன் நிபுணன்
சிந்தை சூரியன் அனூரு தேர்ப்பாகன்
மேதை கணக்கன் சௌமன் மேதாவியன்
தூதுவன் அனுவழி சோம சூனுவே.

66. வியாழன்

வியாழன் ஆண் டளப்பான் மந்திரி வேந்தன்
பீதகன் குரு சுரகுரு பிரகற்பதி
பொன்தெய்வ மந்திரி சிகண்டிசன் பொன்னவன்
அமைச்சன் சீவன் வேதன் ஆசானே.

67. சுக்கிரன்

சுக்கிரன் வெள்ளி மழைக்கோள் சுங்கன்
அசுரர் மந்திரி அறுவிலன் ஆசான்
ஒள்ளியோன் நற்கோள் உசனன் பார்க்கவன்
சல்லியன் காப்பியன் சிதன்சீதகன்கவி
பிரசுரன் பளிங்கு பிருகு புயல்புகர்
விளங்கு திங்கள் எனவிளம் புவரே.

68. சனி

சனிகதிர் மைந்தன் நோய்முகன் சௌரி
சாயா புத்திரன் சாவகன் நீலன்
அந்தன் மந்தன் அந்தணன் கீழ்மகன்
சந்தில் காரி யூர்தி தமனியன்
கருவிளங் கண்ணியன் கரியவன் காரி
முடவன் மேற்கோள் பங்குமுது மகனே.

69. இராகு.

இராகு மதிப்பகை தமம்இருட் பாம்பே.

70. கேது

கேதுசிகி கதிர்ப்பகை செம்பாம்பு என்ப.

71. வாரம்

வாரம் கிழமை வாசரம் ஆமே.

72. சேடன்

சேடன் ஆயிரஞ் சென்னியன் அனந்தன்

மாண வேந்தன் மண்பரிப் போனே.

73. மேடம்

மேடம் மறிமை யாடு வருடை
ஆடு உதள் தகர் கொறிஆகு மென்ப.

74. இடபம்

இடபம் நரை குண்டை ஏறு சேநந்தி
பாண்டில் பாறல் புல்லம் விடை பசுவே.

75. மிதுனம்

மிதுனம் இரட்டை விழவு சயமகள்
பாடவள் தண்டு பாடவை யாழே.

76. கற்கடகம்

கற்கடகம் அலவன் களவன் மதிகுளிர்
நண்டு ஞெண்டு சேக்கை நள்ளியே.

77. சிங்கம்

சிங்க மதற்கரி சீயம் என்பவற்றின்
எல்லாப் பெயரு மியம்பப் படுமே.

78. கன்னி

கன்னிக்குப் பெண்பெய ரனைத்துங் கழறுப.

79. துலாம்

துலாம் துலை கட்டளை சீர் கோல் தூக்கு
வாணிகன் நிறை தராசு என வழுத்தினரே.

80. விருச்சிகம்

விருச்சிகம் பறப்பன் தெறுக்கால் தேளே.

81. தனுசு

தனுசு கொடுமரம் சிலை சாபம் வில்துரோணம்.

82. **மகரம்**

மகரம் தை கலை மான் சுறு ஆமே.

83. **கும்பம்**

கும்பம் கரீரம் சாடி குடம் குடங்கரே.

84. **மீனம்**

மீனம்சல சரம்சல சம்மச்சம் மயிலை மீன்.

85. **இராசி**

இராசி ஓரை பவனம் இல்லென்ப.

86. **அசுவதி**

அச்சுவினி இரலை ஏறு ஐப்பசி சென்னி யாழ்
முதனாள் வாசிபரி மருத்துவர்நாள் புரவியே

87. **பரணி**

பரணி சோறு அடுப்புப் பாகு பகலவன்
தாசி கிழவன் முக்கூட்டுத் தருமநாள்
போதம் தாழி காடு பூதமே.

88. **கார்த்திகை**

கார்த்திகை எரிநாள் நாடன் அளக்கர்
அறுவாய் தழல் இருல் நாவிதன் ஆரல்
அங்கி வாணன் அளகு அறுமீனே.

89. **உரோகிணி**

உரோகணி உரோகிணி உருள்சகடு விமானம்
பண்டி வையம் ஊற்ருல் பார்தேர்
சகடம் உருளி சதிஅய நாளே.

90. **மிருகசீரிடம்**

மிருக சீரிடம் இந்திரன் வெய்யோன்
மான்றலை மும்மீன் நரிப்புறம் மாழ்கு
மார்கழி பாலை பேராளன் மதிநாள்
ஐந்தானம் நாம மாகு மென்ப.

91. **திருவாதிரை**

திருவா திரைமூ திரையாழ் செங்கை
ஈசனுள் என்றி யம்பப் படுமே.

92 **புனர்பூசம்**

புனர்பூசம் அதிதிநாள் ஆவணம் புநர்தம்
கழைஎரி பாலை பிண்டி கரும்பே.

93. **பூசம்**

பூச நாளின் பெயரது புகலிற்
குருநாள் காற்குளம் கொடிறு தைவண்டே.

94. **ஆயில்யம்**

ஆயில்யம்கௌவை பாம்பு அரவுநாள் ஆயிலே.

95. **மகம்**

மகநாள் பிதிர்நாள் வாய்க்கால் கொடுநுகம்
வேட்டுவன் எழுவா யெழுஞ்சனி வேள்வி
மாசி ஆதிச்சனி எனப்பெயர் வருமே.

96. **பூரம்**

பூரம் இடையெழுஞ் சனிகணை நாவிதன்
எலிபக வதிநாள் ஆகு மென்ப.

97. **உத்திரம்**

உத்திரம் கடையெழுஞ் சனிசெங் கதிர்நாள்
பங்குனி செங்கதிர் பிறந்தநாள் பாற்குனி
மானேறு கதிர்நாள் எனவகுத் தனரே.

98. **அத்தம்**

அத்தம் அங்கிநாள் ஐம்மீன் ஐவிரல்
களிறு கன்னி காமரம் கைம்மீன்
கைனி நவ்வி கௌத்துவம் ஆமே.

99. **சித்திரை**

சித்திரை அறுவை ஆடை சுவை செவ்வி
தூசு பயறு நெய்துவட் டாநாள்
தச்சன் நடுநாள் மீன்எனச் சாற்றுப.

100. **சோதி (சுவாதி)**

சோதி காற்றுத் துளக்கம் மரக்கால்
விளக்கு தீபம் வீழ்க்கை அநிலநாள்
துணி வெறு நுகம் எனச்சொல்லப் படுமே.

101. **விசாகம்**

விசாகம் வைகாசி முற்றில் சுளகு அநிலநாள்
காற்றுமுந்துநாள் முறம் சேட்டை ஆமே.

102. **அனுடம்**

அனுடம் போந்தை தேள் தாளி பெண்ணை
மித்திர நாள்பனை புல்லெனை விளம்புவர்.

103. **கேட்டை**

கேட்டை நாளின் பெயரது கிளக்கில்
இந்திர நாள்செந் தழல்எரி சேட்டை
வேதிவல் லாரை எனவிளம் புவரே.

104. **மூலம்**

மூல நாளின் பெயரது மொழியின்
ஆனி சிலைவில் அன்றில் அசுரநாள்
தேட் கடை குருகு கொக்கு எனச்செப்புவர்.

105. **பூராடம்**

பூராடம் உடைகுளம் முற்குளம் நீர்நாள்.

106. **உத்திராடம்**

உத்திராடம் ஆனி ஆடி கடைக்குளம்
விச்சுவ நாள்என விளம்பப் படுமே.

107. **திரு ஓணம்**

ஓண நாட்பெயர் உலக்கை சிரவணம்
மாயோனுள் முக்கோல் வயிரம் நள்ளு
சோனை என்மனுர் சொன்முறைப் புலவர்.

108. **அவிட்டம்**

அவிட்டம் காகப்புள் ஆவணி பறவை புள்
வசுநாள் என்ன வழங்கு மன்றே.

109. **சதயம்**

சதயம் வருணநாள் குன்று சுண்டன்.
போர் செக்கு எனப்பெயர் புகலப் படுமே

110. **பூரட்டாதி**

பூரட் டாதிமுற் கொழுங்கோல் நாழியே.

111. **உத்திரட்டாதி**

உத்திரட் டாதி பிற்கொழுங்கோல் நீபம்
அறிவனுள் மன்னன் முரசு ஆ மென்ப.

112. **இரேவதி**

இரேவதி கடைநாள் இரவிநாள் குலம் கலம்
சூலம் தோணி தொழு நாவாய் பஃறி
புருடநாள் பெருநாள் எனப்புகன் றனரே.

113. **அருந்ததி**

அருந்ததி சாலி வடமீன் ஆமே.

114. **நட்சத்திரம்**

விண்மீன் தாராகணம் பம்பு சிதம் தாரா
தாரகை சோதி தாரை உடுஒளி
உற்கை சுக்கை என்றுரைதப் படுமே.

115. **நாழிகை**

நாழிகை இருத்தை நாழி கடிகை
பதம் கலை கன்னல் விகலை எனப்படுமே.

116. **கால நுட்பம்**

காலநுட்பம் துடி கலை விகலை கணம்.
(நிமிடம் 8 கொண்டது துடி.)

117. **காலவிரைவு**

கால விரைவு கணம்இறை ஒல்லை
மாத்திரை இலேசம் வல்லை சிறுவரை

118. **பொழுது**

பொழுது செவ்வி போழ்து கொன் பருவம்

ஆனியம் ஏல்வை பதம் நிலை அமையம்
காலை வேலை கால் பாணி கடி.

119. காலம்

காலப்பெயர் பருவம் யாண்டு ஆகும்மே.

120. காலப்பிரிவு

இறப்பு பூதம்நிகழ்வு வேலை.

121. பொழுது நீட்டித்தல்

பொழுது நீட்டித்தல் பாணித்தல் நெடித்தல்.

122. இரவு

இரா இரவு எல்லி ஏமம் யாமவதி
இரசனி யாமம் யாமினி தமி விபாவரி
அல்லி கங்குல் அல்கல் அல் மாலை
நிசா நிசி நத்தம் என நிகழ்த்துவரே.

123. பகல்

பகல் திவா எல் அகசு எனப்பகரப்படும்.

124. நாள்

நாள் அளவை அல்கல் ஞான்று ஆனியம்
திவசம் வாசரம் தினம் திவா வைகல்
எல்லை எல் ஏல்வை என்றெய்தும் பெயரே.

125. பாதி நாள்

பாதிநாள் அரைநாள் அத்தநாள் பானாள்.

126. இருள்

இருள் கவேரி சருவரி நிசி நத்தம்
கருள் கார் திமிரம் கச்சளம் துவாந்தம்
கங்குல் அந்தரம் அந்தகாரம் அல் திமிரம்
மங்குல் நீலம் தமம்துணாங் கறலே.

127. முன்னை நாள்

முன்னை நாள் நென்னல் நெருநல் முன்னாள்.

128. **பின்னை நாள்**

பின்னை நாள் பிற்றை பின்றை வழிநாள்.

129. **வைகறை**

விடியல் வைகல் வைகறை புலரி.

130. **மாலைக் காலம்**

அந்தி நாள் மாலை சந்தி சாயம்.

131. **சாமம்**

சாமத்தின் பெயர் யாமம் ஆகும்.

132. **பருவம்**

இருது பருவம் ஆனியம் என்ப.

133. **அறுவகைப்பருவம்**

கார் கூதிர் முன்பின்பனி இளவேனில்
வேனில் என்றுறும் விளம்பிய முறையின்
ஆவணி முதலா வாடி யிறுவாய்
இவ்விரு திங்களா யெய்து மென்ப.

134. **மாதம்**

மாதப்பெயர் திங்கள் மதி என வருமே.

135. **சித்திரை**

சித்திரை சயித்திரம் மதுஆ கும்மே.

136. **வைகாசி**

வைகாசி மாதவம் வைசாகம் வைகாசம்.

137. **ஆனி**

ஆனி சுக்கிரம் சேட்டம் ஆமே

138. **ஆடி**

ஆடி சசி ஆஷாடம் என்ப.

139. **ஆவணி**

ஆவணி நடம்சிரா வணம்என் றறைவர்.

140. **புரட்டாசி**

புரட்டாசி பாத்திரபதம் பாத்திரம்.

141. ஐப்பசி

ஐப்பசி ஆச்சுவினம் ஆச்சுவியம் ஆம்.

142. கார்த்திகை

கார்த்திகை பாகுலம் ஊர்ச்சம் என்ப.

143. மார்கழி

மார்கழி மார்க்கசிரம் மார்க்கம் சகம்.

144. தை

தைமதி பவுடம் தைடம் மகரம்.

145. மாசி

மாசி மதி தபம் மாகம் ஆமே.

146. பங்குனி

பங்குனி பாற்குணம் பாற்குனி கம்மே.

147. ஆண்டு

வருடம் ஆண்டு ஆயநம் சம்வற்சரம்.

148. வருடப்பாதி

அயனம் ஆண்டிற் பாதிஆமே.

149. யுக முடிவு

உகமுடிவு மடங்கல் ஊழிஎன்ப.

150. பிரமன் வாழ்நாள்

கமலக்கடவுள் வாழ்நாள் கற்பம்.

151. வாழ்நாள்

வாழ்நாள் ஆயுள் ஆயுகம் ஆயு.

152. மேகம்

மேகம் சீதம் விசும்பு கந்தரம் கனம்
நீகம் அப்பிரம் நீரதம் நாரதம்
பயோதரம் விண் கார்முகம் ஊரி செல்
முதிரம் மாசு இளமுகில் சீமுதம்
கொண்மு எழிலி மங்குல் மழைமஞ்சு
கொண்டல் புயல்மை குயின்மாரி வாரிதம்

விண்டு அம்புதம் கார் கதம்பம்
சலதரம் சலதம் தாராதரம்.

153. மின்னல்

மின்னல் மின் மின்னு வித்துரு சபலை
சஞ்சலை சம்பை சவலம் சஞ்சலம்
தடித்து துடித்தல் தடிக னருசி.

154. இடி

இடி அசனி அனலேறு இகளி உருமு ஏறு ஒலி
வெடி விண்ணேறு செல் மடங்கல் வானேறு.

155. மழை

மழை உறை சொரி வானம் வான் வருடம்
தூறல் துளிசீகரம் தூவல் மாரி
ஆலம் திவலை ஆர்கலி தாரை
ஆலி உதகம் விருட்டி விட்டிஆம்.

156. அடை மழை

அடைமழை பனித்தல் சோனை என்றறைவர்.

157. பெருமழை

பெருமழை பெய்தற் பெயர் ஆசாரம்.

158. மழை விடல்

பெய்து விடல் தலையல் எனப்பெயர் தானே.

159. மழைத்துளி

துளி உறை ஆலி சீகரம் துமிதம்
தளிசிதர் திவலை எனத்தகும் பெயரே.

160. ஆலங்கட்டி

ஆலங் கட்டி ஆலி கல்லுபலம்
கரகம் என்று கழறப் படுமே.

161. பனி

பனிஇமம் துகினம் துடாரம் நீகாரம்.

162. வானவில்

வானவில் பைஞ்சிலை வான்மிகம் வலாரிவில்.

முதலாவது தெய்வப் பெயர்த்தொகுதி முற்றியது.

இரண்டாவது மக்கட் பெயர்த் தொகுதி

163. நான்கு வருணம்

அந்தணர் அரசர் வணிகர் வேளாளரென
வந்த நால்வர் நால்வருணத் தவரே.

164. குலம்

குலம் இனம் உம்பல் குடி திணை வருணம்
ஒழுக்கம் விழுப்பம் எண்மை வண்மை என்
றுரைத்திய வெல்லாம் சாதி மேன.

165. மறையவர்

பிராமணர் ஐயர் பெரியோர் உயர்ந்தோர்
தராதலத் தேவர் சத்திரியர் அந்தணர்
முப்புரி நூலினர் முன்னூ லாய்ந்தோர்
விப்பிரர் பூசுரர் மெய்யர் - மறையவர்
வேத பாரகர் மேலவர் வாய்மையர்
ஓத லோ தாதார் உயர்ந்தோர் உம்பர்
ஆதி வருணர் அறுதொ ழிலாளர்
வேதியர் இருபிறப் பாளர் விதியினர்
தூயவர் தொழுகுலத்தோர் மறைக்கொடியோர்
வாய்மையர் - செந்தீவளர்ப்பவர் முகசர்
கேள்வியர் பார்ப்பார் எழுதாக்கிளவியர்
வேள்வி யாளர் மேற்குலத்தோரே.

166. அரசர்

அரசன் ஆதிபன் அண்ணல் பூபாலன்
நரபதி பூபதி நாதன் வாகுசன்
வேந்தன் முதல்வன் மீளி கொற்றவன்
ஏந்தல் தலைவன் இறைவன் ஓங்கல் கோன்
அதிபதி பார்த்திபன் ஆண்டகை குரிசில்

பதிஅரசு இனன் பாராளி பெருந்தகை
புரவலன் சக்கிரி பொருநன் காவலன்
பெருமகன் கோமான் பெருமான் காரணன்
தராபதி மன்னன் தாரணிக் குரியோன்
இராசன் கோ இறை தோன்றல் இனன் நிருபன்
மண்டலீகன் மன் மன்னவன் பெயரே.

167. **வைசியர்**

வைசியர் மன்னர் பின்னர் தாளாளர்
எட்டியர் தருமக்கிழவர் இளங்கோக்கள்
தோன்றிகர் நாயகர் ஊருசர் தூணிகர்
இப்பர் வணிகர் என்றேயும் பெயரே.

168. **வேளாளர்**

சூத்திரர் பாதசர் தூயர் தொழில்வலர்
காராளர் உழவர் களமர் வேளாளர்
சதுர்த்தர் மூவர்பின்னர் மண்மக்கள்
வினைஞர் - வெண்களமர் - எனவிதித்தனரே.

169. **பிரமசாரி**

பிரம சாரி நூல்பயிலியல்பினன்
மாணி பிரம நிட்டன் மணமிலான்
வன்னி என்றிவற்குப் பன்னிய பெயரே.

170. **இல்வாழ்வார்**

இல்வாழ்வோர் இல்லறம் வழாதார்.

171. **வானப்பிரத்தர்**

வானப் பிரத்தர் வனத்துறை தவத்தோர்.

172. **துறந்தோர்**

சந்நியாசியர் துறந்தோர் எனச்சாற்றுப.

173. **முனிவர்**

முனிவர் இருடியர் முப்பகை வென்றோர்
துனியில் காட்சியர் துகளறு சிந்தையர்

அறவோர் அமைதியர் ஐம்புலன் வென்றோர்
துறவோர் நீத்தோர் துறந்தோர் யோகர்
ஐயர் உறுவர் அருந்தவர் கடிந்தோர்
மெய்யர் மோனர் மிகையிலர் முனிவர்
அந்தணர் அறிஞர் அதீதர் பற்றற்றோர்
கந்தமூலாசனர் கடவுளர் தாபதர்
அடிகள் உயர்ந்தோர் அருந்தவர் சார்பிலோர்
படிவர் தபோதனர் பண்ணவர் தவத்தவர்
யதிகள் சௌமியர் யோகியர் மான்மியர்
மதியர் பெரியர் மாதவத்தோர்.

174. வியாசர்

வியாதன் ஒருமுகவிதி இருதோள் விண்டு
எரிவிழி காட்டாவிறை சுகன்றாதை
பராசரன் மைந்தன் பாதராயணன்.

175. வான்மீகி

வான்மீகி பிராசேதசன் அழிவுறுமுனி
அருங்கவி கண்டோன் ஆதி காப்பியன்.

176. அகத்தியன்

அகத்தியன் கும்ப சம்பவன் குறுமுனி
முத்தமிழ் முரியோன் முந்நீ ருண்டோன்
உலோபா முத்திரை கேள்வன் என்றோதுப.

177. தாபதர்

சடைமுடி யோர்பெயர் தாபதர் தாமே.

178. ஆசிரியன்

குரவன் ஐயன் கோமான் பெருமான்
தேசிகன் புங்கவன் தீர்த்தன் கடவுள்
ஈசன் ஐசாமி இறைவன் பண்ணவன்
ஆதன் ஆசிரியன் ஆரியன் அடிகள்
பதிதலைவன் பட்டாரகன் பகவன்
அத்தன் ஆசான் அபிதானம்மே.

179. **சைவர்**

சைவதவப் பாலோர் சைவர் பாசுபதர்
காளா முகர்மா விரதியர் தாமே.

180. **வைணவர்**

நாரா யணன்சம யத்தோர் வைணவர்
பாக வதர்எனப் பகரப் படுமே.

181. **மாயாவாதியர்**

மாயா வாதியர் மயங்கு வாதியர்
அவித்தை யினோர்தம் அபிதா னம்மே.

182. **உலகாயிதர்**

உலகா யிதர்பா ருகற்பத் தியரே.

183. **சமணர்**

சமணர் அருகர் சாவகர் சைநர்
அமணர் என்றவற் காயதொல் பெயரே.

184. **சமணமுனிவர்**

சமண முனிவர் ஆசீவகர் சாரணரே.

185. **புத்தர்**

புத்தர் பௌத்தர் தேரர் சாக்கியர்
சீவகர் என்ன மேவும் பெயரே.

186. **தார்க்கிகர்**

தார்க்கிகர் நையா யிகர்வை சேடியர்
விறலுறு வாய்மையர் மேம்படு கல்வியர்
பிறர்மதங் களைய வல்ல பெற்றியர்.

187. **வியாகரண பண்டிதர்**

வியாகரண பண்டிதர் வையா கரணரே.

188. **கற்றோர்**

கற்றோர் நாவலர் கலைவல்லோர் கவிஞரே.

189. குறிக்கொள்வோர்

குறிக்கொள்வோர் பாராயணர் ஆமெனக் கூறுப.

190. புலவர்

புலவர் புதர் அறிஞர் புந்தியர் கற்ருேர்
கலைஞர் பருணிதர் பாவலர் கவிகள்
சீரியர் நாவலர் செஞ்சொலர் மேதையர்
சாரதி சூரி சங்கம் சவை அவை
மூத்தோர் ஆன்ருேர் முதுவர் புலமையர்
மேலோர் விசாரதர் கவிஞர் விற்பன்னரே.

191. அறிவோர்

அறிவோர் நூலோர் ஆரியர் உயர்ந்தோர்
நெறியோர் மேலோர் நிறையோர் பொறையோர்
ஆன்றவர் நூல்வலோர் அறிஞர் கலைவலோர்
சான்ருேர் குசலர் தகுதியோர் வல்லோர்
தக்கோர் உலகம் மேதாவியர் சிறந்தோர்
மிக்கோர் கூவலர் மிகவலோர் நல்லோர்
விபுதர் நூலுரைப்போர் மீளியர் கலைஞர்
உரியோர் நிபுணர் உரவோர் பெயரே.

192. உயர்ந்தோர்

உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே.

193. மிக்க அறிவுடையோர்

மிகவலோர் நிபுணர் விபுதர் குசலர்.

194. பெருமையிற் சிறந்தோர்

பெருமையிற் சிறந்தோர் தக்கார் தகுதியோர்
ஏந்தல் குரிசில் தோன்றல் செம்மல்
அண்ணல் என்றிவர்க் கெண்ணிய பெயரே.

195. கொடையாளன்

கொடையாளன் ஈகையாளன் கொடுப்போன்
வண்மையாளன் உபகாரி வதானியன்

வேளாளன் தியாகி வேள்வி யாளன்
தனதன் தாதா தானி புரவலனே.

196. பெரும்பெயர் புகழாளன்

பெரும்பெயர் புகழாளன் பெயர்இயவுள் இயைபுளன்
வரையாது கொடுப்போன் வள்ளல் வள்ளியோன்
ஔதா ரியன்என் றறையப் படுமே.

197. தரித்திரன்

தரித்திரன் உறுகண்ணாளன் ஏழை
ஆற்றுன் கிஞ்சன் அற்றுன் பேதை
மிடியன் இலம்பாட்டோன் துயருறுவோன்
இல்லோன் வறியோன் ஆதுலன் தீனன்
நல்கூர்ந் தார்என நடைபெறு மன்றே.

198. இரப்போர்

இரப்போர் தீனர் இரவலர் இரவோர்
நிரப்போர் மார்க்கணர் பரிசி லாளர்
யாசகர் என்றி வையே பேசிய பெயரே.

199. புதியோர்

புதியோர் அதிதியர் புதுமையர் வம்பலர்
விருந்தினர் தமக்குத் திருந்திய பெயரே

200. உலோபி

உலோபன் பிசுனன் கிருபணன் என்ப

201. முதல் வள்ளல்

முதல் வள்ளல் குமணன் சகரன் சாகரன்
செம்பியன் துந்துமாரி நளன் நிருதியே.

202. இடை வள்ளல்

இடைவள்ளல் அக்குரன் தந்த வக்கிரன்
அந்திமான் அரிச்சந்திரன் சந்திமான்
சிசுபாலன் கருணன் எனச்சிறந் தோரே.

203. கடைவள்ளல்

கடைவள்ளல் எழிலி மலையன் பேகன்
காரி பாரி ஓரி நள்ளி
இவர் மூவெழுவர் பேரீகையாளர்.

204. புகழ்வோர்

புகழுவோர் சூதர் பூகதர் மாகதர்
பப்புவர் வந்தியர் வேதா ளியரே

205. திண்ணியோன்

திண்ணியன் அவணன் திறலோன் சதுரன்
பண்ணவன் பெருமான் மள்ளன் வியலன்
மிண்டன் மீளி விறலோன் வீரன்
வண்டன் வல்லுனன் வல்லான் வயவனே.

206. எப்பொருட்கும் இறைவன்

எப்பொருட்கும் மிறையோன் ஆதி
ஆதிபன் ஈசன் அரசன் கந்தன்
கொழுநன் அதிபன் கோன்பதி செம்மல்
நாதன் மன்னன் நாயகன் பிரானே.

207. கருணையுடையவன்

கிருபையாளன் கிருபாளு தயாளன்
காருணியன் அளியன் காருணிகனே.

208. காத்தளிப்போன்

காத்த ளிப்போன் பாலனன் புரவலனே

209. சக்கரவர்த்தி

சக்கர வர்த்தி தரணி முழுதாள்வோன்
சார்வபௌமன் சருப்ப பூபதி
மண்டலேச்சுரன் எனக்கண்ட தொல்பெயரே.

210. சேரன்

சேரன் மலையமான் சேரலன் குட்டுவன்
வான வரம்பன் கொங்கன் வாலவன்
வஞ்சிவேந்தன் மலையன் பொறையன்
போந்தின் றுரோன் பொருனைத் துறைவன்
வில்லவன் உதியன் கோதை விற்கொடியோன்
கொல்லிவெற்பன் பனந்தாரான் கேரளன்
குடகன் பூழியன் குடக்கோன் ஆமே.

211. சோழன்

சோழன் கோழி வேந்தன் சூரியன்
சென்னி வளவன் செம்பியன் கிள்ளி
பொன்னித் துறைவன் புனனுடன் எலுநன்.
தாதகித் தாரான் சார்த்தூல கேதனன்
நேரியன் அபயன் மால் நேரி வெற்பனே.

குறிப்பு : தாதகி-ஆத்தி. சார்த்தூலகேதனன்-புலிக்கொடியோன்.

212. பாண்டியன்

பாண்டியன் பொதிய வெற்பன் தமிழ்நாடன்
கைதவன் செழியன் கவுரியன் உதியன்
குமரிச் சேர்ப்பன் கூடற் கிறைவன்
மீனவன் வழுதி வேம்பின் தாரோன்
வைகைத்துறைவன் மாறன் பஞ்சவன் எனத்
தென்னவன் தனக்குத் தெரிந்த தொல்பெயரே.

213. குருகுலத்தரசர்

குருகுலத் தரசர் பௌரவர் கௌரவர்
பாரதர் எனப்பெயர் பகரப் படுமே.

214. துரியோதனன்

துரியோ தனன் அகி கேதனன் சுயோதனன்
திரிதராட்டிரன் மகன் அரவ முயர்த்தோன்
காந்தாரி சிறுவன் கண்ணிலான் மைந்தன்
மன்னர் மன்னன் வணங்கா முடியினன்

அந்தகன் மைந்தன் நந்தியா வட்டத்
தாமன் என்றிவர்க்கு நாம மாமே.

215. **கர்ணன்**

கன்னன் கருணன் கவச குண்டலன்
வன்மை யாளன் அதிரித்திரன் வள்ளியோன்
ஐவர்முன் பிறந்தோன் அங்கர் கோமான்
கானீனன் சவுரியன் கைத்துக் கொடியோன்
குந்திமுன் மைந்தன் மிகுகொடை யாளன்
பகலோன் மதலை பராயணி என்ப.

216. **துரோணாசாரியன்**

துரோணா சாரியன் பாரத்து வாசி
மெய்நூலன் கும்பசன் வின்னூ லாளன்
வேதக் கொடியன் என்றோதப் படுமே.

217. **வீட்டுமன்**

வீட்டுமன் தெய்வ விரதன் வன்னி
சந்தனு முன்மகன் தாலகேதனன்
கங்கைமைந்தன் பிரமசாரி காங்கேயன்
வீரன் என்றிவர்க்கு நேரும் பெயரே.

218. **தருமபுத்திரன்**

தருமராசன் உதிட்டிரன் பொறையன்
குந்தி குமரன் குவளைக் கண்ணியன்
மெய்விரதன் முரசக் கொடியோன் மெய்யன்
ஆண்டொழின் மைந்தன்முன் அறத்தின் செம்மல்
பாண்டு மைந்தன் என் றீண்டிய பெயரே.

219. **அருச்சுனன்**

அருச்சுனன் கிரீடி அனுமக் கொடியோன்
ஆண்டொழின் மைந்தன் காண்டீபன் வீபற்சு
சுவேத வாகனன் சுரேந்திரன் தனயன்
பார்த்தன் மாதவி கொழுநன் பற்குனன்

தனஞ்சயன் வில்லவன் சவ்விய சாசி
கேசவற் றேழன் வாசவன் மதலை
விசையன் என்றிசைந்த வசையில் பெயரே.

220. **வீமன்**

வீமன் இடும்பி கேள்வன் விருகோதரன்
குந்திசேய் மடங்கற் கொடியோன் கதாயுதன்
பாண்டு சூனு பகாசுர வைரி
மாருதி கீச காரி வளிமதலையே.

221. **பலராமன்**

பலபத்திரன் குண்டலன் பனைக்கொடியோன்
கண்ணன் முன் முசலி காமபாலன்
அலிநீலாம்பரன் அலாயுதன் வெள்ளை
இரேவதி கொண்கன் உரோகிணி தனயன்
கலப்பைப் படையோன் காழக வாடையன்
பனைத்தாமன் பலதேவன் அனந்தனே.

222. **சாளுக்கிய அரசன்**

சாளுக்கு வேந்தர் வேள்புலத் தரசர்
சாளுவர் எனப்பெயர் சாற்றின ரிவர்க்கே.

223. **குறுநிலமன்னன்**

குறுநில மன்னர் அரட்டர் குறும்பர்
வேளிர் புரோசர் எனவிளம்புவரே.

224. **மந்திரி**

மந்திரியர் அமாத்தியர் மதியர் அமைச்சர்
தந்திரர் நூல்வலோர் சதுரர் நுண்ணியர்
துணைவர் சூழ்வோர் சொல்லே ருழவர்
தேர்ச்சித் துணைவர் உழையர் செந்நெறியர்
எண்ணர் விதியர் இனம் ஏறுதியர்
முன்னோர் முதுவர் மூத்தோர் குரவர்
மன்னர்க் குறுதி வளர்ப்போர் பெயரே.

225. **மந்திரி (தொடர்ச்சி)**

தந்திரியர் ஆமாத்தியர் ஏறுதியர்
விதியர் எனப்பெயர் விளம்பப் படுமே.

226. **பொருந்த உரைப்போர்**

பொருந்த வுரைப்போர் கணக்காயர் ஓத்துரைப்போர்.

227. **கணக்கர்**

கணக்கர் தம்பெயர் காவிதியர் என்ப.

228. **எழுதுவோன்**

எழுதுவோன் பெயர் இலேககன் ஆமே.

229. **ஏவுவான்**

ஏவுவான் வியவன் ஆகு மென்ப.

230. **ஏவல் செய்வோர்**

ஏவல் செய்வோர் உழையோர் கிங்கரர்
சிலதர் சிலதியர் சேடர் சேடியர்
பரிசாரகர் பரிசனம் எனப்படுமே.

231. **தொழில் செய்வோர்**

தொழில்செய்வோர் கம்மியர் தொழுவர் என்ப.

232. **புரோகிதர்**

புரோகிதர் நிமித்திகப் புலவன் சாக்கை
வள்ளுவன் வருங்காரிய முரைப்போன்
நிமித்திகஞ் சொல்வோன் சகுனி என்ப.

233. **கூவநூலோர்**

கூவ நூலோர் உல்லியர் ஆகுவரே.

234. **மூத்தோர்**

மூத்தோர் முதுவர் ஆற்ற லுரைப்போர்
முதியோர் முதுமையர் மூதுணர்ந் தோரே.

235. **வைத்தியர்**

வைத்தியர் ஆயுள் வேதியர் மருத்துவர்
ஆரியர் கடகர் ஆமாத் தியரே.

236. **மடையர்**

மடையர் கூவியர் வாலுவர் பானசிகரே.

237. **உரிமையோர்**

உரிமையோர் குறிக்கோளாளர் உரியோர்
கிழமையர் கிழவர் கெழுதகை மையரே.

238. **நண்பர்**

நட்பாளர் நண்பர் நள்ளுநர் நயவர்
நசைநர் விழைநர் நல்லவர் நயந்தார்
இல்லுநர் ஆர்வலர் ஆவலர் இசைந்தார்
புல்லுநர் ஒல்லுநர் புரிந்தோர் காதலர்
ஒன்றுநர் எட்டிநர் ஒட்டுநர் விழைந்தோர்
துன்றுநர் மேவினர் துன்னுநர் தொடர்ந்தோர்
பசைந்தார் நேர்ந்தார் பற்றுநர் சேர்ந்தார்
வேட்டார் பெட்டார் மித்திரர் பெயரே.

239. **சுற்றத்தார்**

சுற்றத்தார் சுற்றம் சூழ்ந்தார் மேவினர்
உற்றவர் ஒக்கல் உறவு உற்றார் உறவோர்
நள்ளிநர் நட்பு நட்டோர் நண்பு நள்ளி
கிளைஞர் கிளை குடும்பம் கடும்பு கேள் கூளி
இனத்தார் உரியோர் இனம் இருளை பந்தம்
பாசனம் பற்றினர் பரிசனம் அடைந்தோர்
தக்கார் சிறந்தார் சார்ந்தார் தமரே.

240. **அயலோர்**

அயலோர் நொதுமலர் வம்பலர் ஏதிலர்
ஏதிலாளர் என்றியல் பெறுமே.

241. பரிவாரம்

பரிவாரப் பெயர் பரியா ளம்மே.

242. அடிமை

அடிமை தொண்டு தொத்து ஆள் தொழும்பு
தொறுவு தாசர் தாதர் தொழும்பர்
சேடர் கிணகர் சேடியர் பிருத்தியர்
விருத்தி என்பது முரித்தென மொழிப.

243. சேடியர்

சேடியர் அடிமை களிற்சிறந் தோரே.

244. பகைவர்

பகைவர் அடையலர் பகைஞர் பரர் அண்டர்
அகிதர் தொடர்பிலர் அமித்திரர் அமரார்
பற்றார் கருதலர் பற்றலர் எதிர்ந்தோர்
செற்றார் தரியலர் சேரார் முனைந்தோர்
பொருந்தலர் வேண்டார் புல்லார் ஒல்லார்
நள்ளார் கொள்ளார் நண்ணார் சார்பிலர்
உள்ளார் கூடார் ஒட்டார் விட்டார்
எண்ணலர் இன்னார் இகலோர் இரிஞர்
நண்ணலர் ஒன்னார் நயமிலர் நேரலர்
செறுநர் கேளலர் மேவலர் சினவர்
தெறுநர் நோனார் துன்னார் தெவ்வர்
மாணார் பேணார் மருவலர் வட்கார்
மாற்றலர்க் கின்னவை யேற்றதொல் பெயரே.

245. படைத்தலைவர்

படைத்தலைவர் பொருநர் பதாகினித் தலைவர்
தானைத் தலைவர் சேனை முதல்வரே.

246. படைவீரர்

படைவீரர் ஆயர் படர் பாடிவீரர்
கலவர் அணங்கிலர் கூளியர் கலியர்
தறுகணர் செருநர் தானை வீரர்
மள்ளர் விருதர் எறுழ்வர் வயவர்

மாளவர் மறவர் வாளுழவர் பொருநர்
வீரர் சூரர் வில்லே ருழவரே.

247. **தேர்ப்பாகன்**

தேர்ப்பாகன் வலவன் சாரதி சூதனே.

248. **யானைப்பாகர்**

யானைப் பாகர் ஆதோரணர் பண்ணுவர்
வதுவர் வாதுவர் எனவகுத் தனரே.

249. **குதிரைப்பாகர்**

குதிரைப் பாகர் வாதுவர் பண்ணுவர்
பரிமா வடிப்போர் வதுவர் மாவலரே.

250. **காலாள்**

காலாள் பதாதி ஆமெனக் கழறுப.

251. **சேனை**

சேனை தளம் வாஹினி தந்திரம் தார் ஞாட்பு
தானை பகுதி பதாகினி தண்டு
பலம் படை யூகம் பாடி அனிகம்
வலம் ககனம் கணம் வாகினி தண்டம்
நிதானம் அதிகம் என நிகழ்த் தினரே.

252. **படைவகுப்பு**

படைவகுப்பு அணி தார் ஒட்டு உண்டை தெற்றி
ஆக்கம் கை தூசி நிரை கூழை யூகமே.

253. **படை முன்னணி**

படை முன்னணி கொடிப்படை தார் தூசி
ஆக்கம் நிரையென் றறையப் படுமே.

254. **படைப் பின்னணி**

படைப் பின்னணி பிற்படை கடைக் கூழை
கூழை சூழ்தல் எனப்பெயர் கொளுமே.

255. படைத்தொகை

படைத்தொகை பதாதி சேனாமுகம் குமுதம்
கணகம் வாகினி பிரதனை சமுத்திரம் அநீகம்
அக்குரோணி என்ற றைந்தனர் புலவர்.

256. படைத்தொகைப் பாகுபாடு

படைத் தொகைப் பாகுபாடு பகர்காலை
இரதம் இபம் ஒவ்வொன் று இவுளி மூன்று ஆளைந்
தாயிவை பத்தி ஆகுமென் ப.

257. பத்திமும்மடி

பத்திமும்முடி சேனாமுகம் அவ்வா
றநீக மீருயமையு மென்மனர்.

258. அநீகம்

அநீகம் பத்து அக்குரோணி ஆமே,

259. சமர்வேட்டு எழுவோன்

சமர்வேட் டேழுவோன் சன்னத்தன் ஆமே.

260. தூதர்

தூதர் ஒத்த பண்புரைப்போர் வித்தகர்
வினையுரைப் போர்வழி யுரைப்போர் பெயரே.

261. தூது

தூது வாயில் விநியுளி சந்தே.

262. ஒற்றர்

வேவுகாரர் பெயர் வேயர் வேய்கள்
சாரணர் ஒற்றர் சாரர் என்ப.

263. மங்கலப் பாடகர்

மங்கலப் பாடகர் வந்தியர் வண்டர்
கவிகற்றோர் எட்டர் கடிகை மாக்களே.

264. திருப்பள்ளி யெழுச்சி பாடுவோர்

பள்ளி யெழுச்சி பாடு வோர்பெயர்
வைதா ளிகர்என வைத்தனர் புலவர்.

265. **பாணர்**

பாணர் மதங்கர் பண்ணவர் கலமர்
கண்டியர் இன்னிசை காரர் நீலந்தர்
மாகதர் சூதர் வைரியர் சென்னியர்
வந்தித்து நிற்போர் எனவகுத் தனரே.

266. **நரப்புக் கருவியோர்**

நரப்புக் கருவியோர் நாமங் குயிலுவர்.

267. **தோற்கருவி மாக்கள்**

தோற்கருவி மாக்கள் இயவர் குணுங்கர்.

268. **நடிப்போர்**

நாடகர் நிருத்தர் நாட கீயர்
கோடியர் காகோடியர் கூத்தர் பொருநர்
கண்ணுளர் வயிரியர்க் கெண்ணிய பெயரே.

269. **நாடகக் கணிகை**

நாடகக் கணிகை கூத்தி நடி மாதவி
நிருத்த மாது என்று நிகழ்த்தப் படுமே.

270. **பாடுவாள்**

பாடுவாள் விறலி பாண்மகள் மதங்கி
பாட்டி பாடினி பாடன்மகடூஉ
இரட்டை பாடு விச்சிஎன் றிசைப்பரே.

271. **தமிழ்க் கூத்தர்**

தமிழ்க் கூத்தர் வாயிலோர் தம்பெயர் தாமே

272. **கழைக் கூத்தர்**

கழைக் கூத்தர் கழாயர் கோரம்பர்
வயிரியர் கோடியர் கூத்தர் வேழம்பரே.

273. **பாடற்கீழ் மக்கள்**

பாடற்கீழ் மக்கள் பண்டர் ஓவரே.

274. **வேசி**

வேசி கணிகை விலைமகள் பொதுமகள்
பயனிலாள் சூளை பரத்தை பொருட்பெண்டு
வேசை வரைவில் மாது எனவிளம்புவர்.

275. **காமுகர்**

காமுகர் நாகரிகர் இடங்கழியர் பரத்தர்
விடர் தூர்த்தர் படிறர் பல்லவரே.

276. **கட்டிளமையோன்**

கட்டிளமை யோன்பெயர் காளை குமரன்
முருகன் சேடன் மழவன் எனமொழிப.

277. **நாகரிகர்**

நாகரிகர் நகரப் பதியோர் சதுரரே.

278. **கிராமியன்**

கிராமியன் கிராம முற்றோன் கிராமணி.

279. **தேசாந்திரி**

தேசாந்திரி பெயர் தேசிகன் என்ப.

280. **குலமுளோர்**

குலமுளோர் குலவர் குலீனர் குடிப்பிறந்தோர்
இனமுளோர் பெரியர் இழுக்க மிலாதார்
வண்மையர் ஒண்மையர் மாசிலார் விழுமியர்
ஒழுக்க முடையர் என்றுரைக்கற் பாற்றே.

281. **தனவைசியர்**

தனவைசியர் பரதர் வணிகர் நாயகர்
தாணிகர் சிலேபியர் தோன்றிகர் தேசிகர்
வாணிகர் என்ன வகுத்த தொல்பெயரே.

282. **கோபாலர்**
கோபாலர் கோவிந்தர் கோவலர் கோவருத்தனர்
முல்லையர் இடையர்க் கேய்ந்த தொல்பெயரே.

283. **பூவைசியர்**

பூவைசியர் உழவர் வேளாளர் மேழியர்
இசையுந் தொழிலர் என்றியாப்பப் படுமே

284. **குறிஞ்சி நிலத்தலைவன்**

குறிஞ்சி நிலத்தலைவன் வெற்பன் சிலம்பன்
பொருப்பன் கானக நாடன் பொருநன்
நண்பன் மலையான் என நவிற் றினரே.

285. **குறிஞ்சி நிலமக்கள்**

குறிஞ்சிநில மக்கள் குறவர் குன்றவர்
கானவர் கிராதர் இறவுளர் மள்ளர்
புனவர் என்றிவர் பெயர் புணர்க்கப் படுமே.

286. **குறிஞ்சி நிலமகளிர்**

குறிஞ்சி நிலமகளிர் கொடிச்சியர் குறத்தியர்.

287. **பாலைநிலத் தலைவன்**

பாலை நிலத்தலைவன் விடலை காளை
மீளி ஆமென விளம்பினர் புலவர்.

288. **பாலைநில மக்கள்**

பாலை நிலமக்கள் எயினர் புள்ளுவர்
மறவர் இறுக்கர் எனவகுத் தனரே.

289. **பாலைநில மகளிர்**

மறத்தியர் எயிற்றியர் பாலைநில மகளிரே.

290. **முல்லை நிலத்தலைவன்**

முல்லை நிலத்தலைவன் குறும்பொறை நாடன்
தோன்றல் கானக நாடன் அண்ணல்.

291. **இடையர்**

இடையர் முல்லை நிலமக்கள் ஆயர்
குடவர் தொறுவர் முந்நிரையர் கோவிந்தர்
அண்டர் அமுதர் ஆன்வலோர் பொதுவர்

இண்டர் முல்லையர் பாடியர் இப்பர்
கோவருத்தனர் கோபாலர் கோவலர்
கோவர் கானவர் எனமேவும் பெயரே.

292. **இடைச்சியர்**

இடைச்சியர் முல்லை நிலமகளிர் ஆய்ச்சியர்
குடத்தியர் தொறுவியர் பொதுவியர் என்ப.

293. **மருதநிலத் தலைவன்**

மருதநிலத் தலைவன் மகிழ்நன் ஊரன்
கிழவன் எனப்பெயர் கிளந்தன ரன்றே.

294. **மருதநில மக்கள்**

மருதநில மக்கள் மள்ளர் கம்பளர்
கடைஞர் வினைஞர் களமர் தொழுவரே.

295. **மருதநில மகளிர்**

மருதநில மகளிர் உழத்தியர் கடைசியர்
ஆற்றுக்கா லாட்டியர் ஆகு மென்ப.

296. **நெய்தல் நிலத் தலைவன்**

நெய்தல் நிலத் தலைவன் நெய்தற் சேர்ப்பன்
துறைவன் கொண்கன் புலம்பன் சேர்ப்பன்
மெல்ல னென்றிவர் பெயர் சொல்லப் படுமே.

297. **நெய்தல்நில மக்கள்**

நெய்தல்நில மக்கள் கடலர் கழியர்
பரதர் நுளையர் பரதவர் சலவர்
வலையர் திமிலர் வங்கர் புணையரே.

298. **நெய்தல்நில மகளிர்**

நெய்தல் நில மகளிர் கடற்பிணாக்கள்
பரத்தியர் நுளைச்சியர் எனப்பகர்ந் தனரே

299. **உப்பு அமைப்போர்**

உப்பமைப் போர்பெயர் அளவர் கழியரே.

300. **உப்பு அமைப்போர் மகளிர்**

உப்பமைப் போர்மகளிர் அளத்தியர் ஆகும்.

301. **உறைகாரர்**

உறைகாரர் காரோடர் முச்சியர் என்ப.

302. **உப்பு வாணிகர்**

உப்பு வாணிகர் பெயர் உமணர் என்ப.

303. **மாலுமி**

மீகான் நீவான் மீகாமன் மாலுமி
நீகான் என்று நிகழ்த்தப் படுமே.

304. **வெறியாட்டாளன்**

வெறியாட்டாளன் வேலன் முருகன் ஆமே.

305. **தேவராளன் (வெறியாட்டாளன்)**

தேவ ராளன் படிமத் தோனே.

306. **தெய்வம் கொண்டு உரைப்போள்**

தெய்வங் கொண்டு ரைப்போள் தேவராட்டி.

307. **கன்னிப்பெண்பெற்ற பிள்ளை**

கானினன் கன்னியிற் பிறந்தோன் ஆமே.

308. **அநுலோமன்**

உயர்குலத் துயர்ந்திழி தாதை தன்னையில்
அயன மானோன் அனுலோமனே.

309. **பிரதிலோமன்**

இழிவுயர் வாயதந்தை தன்னையிற்
பிறந்த பிள்ளை பிரதி லோமனே.

310. **அந்தராளன்**

அந்த ராள னனுலோ மற்கும்
பிரதி லோமைக்கும் பிறந்த பிள்ளையே.

311. **விராத்தியன்**

பிரதி லோமானு லோமத் தாதை
தன்னையிற் பிறந்தோன் றானே விராத்தியன்.

312. **நம்பி**

அரசமாதை யந்தணனி ராக்கத மணம்
புரியத் தோன்றி யரிவையர்ச் சிப்போன்
நம்பி என்று நவிலப் படுமே.

313. **மாலர்**

மாலர் பார்ப்பன மகள் மண் மகனொடு
மேவப் பிறந்தோர் எனவிளம் புவரே.

314. **குண்டகன்**

கொண்டோற் பிழைத்தீன்ற பிள்ளை குண்டகனே.

315. **கோளகன்**

தலையற்றாள் மகன் றானே கோளகன்.

316. **பதிதன்**

குடுமி புண்டரம் குலம் முறை சூத்திரம்
சமயா சாரந் தவிர்ந்தோன் பதிதன்.

317. **விராத்தியர் (ஒழுக்க நெறிதவறித் தம்தருமம் விட்டவர்)**

நீதிநெறியின் நிலையுணா ராராய்
சாதி தருமம் தவிர்ந்தோர் வித்ராதியரே.

318. **மூடன்**

மூடன் சிதடன் மூழு மகன் ஏழை
மண்ணே பேதை மடன் இழுதை குதலை
ஆதன் அஞர் அஞ்ஞன் அறிவிலன் ஆமே.

319. **மந்தன்**

மந்தன் கூர்ப்பில்லான் மடிஎன மொழிப.

320. கீழ்மக்கள்

கீழ்மக்கள் நீசர் கிஞ்சர் புல்லறிவர்
பூரியர் நெறியிலார் பொறியிலார் புல்லர்
முசுடர் புன்குவர் முறையிலார் மறையிலார்
குண்டகர் சுமடர் கையர் கற்றிலர் கலர்
சித்தையர் பதகர் தீயோர் சிறுமையர்
அசடர் கயவர் அநீதர் கனிட்டர்
சிறியர் அற்பர் தேரார் சிதையர்
தீம்பர் இதரர் தீக்குணர் இயவர்
முசுண்டர் மூடர் பேதையர் மூர்க்கரே.

321. வஞ்சகர்

வஞ்சகர் வஞ்சர் வஞ்சனை யாளர்
குத்திரர் கவடர் குடிலர் கிருத்திமர்
கலியர் தூர்த்தர் அகாதர் நிகாதரே.

322. திருடர்

திருடர் சோரர் புரையோர் தேனர்
படிறர் கையர் பட்டிகள் பித்தர்
கரவடர் கரவர் கள்வர் கள்ளரே.

323. மாயாவி

மாயை செய்வோர் மாயா வியரே.

324. கொடுந்தன்மையுள்ளோன்

கொடுமை யுள்ளோன் குரூரன் சண்டன்
வெய்யோன் எனவிளம் பினர்புலவர்.

325. பொய் சொல்வோன்

பொய்சொல்வோன் பிசுனன் பொய்யன் படிறனே.

326. கோபமுடையவன்

கோப முள்ளோன் கதத்தன் சினத்தனே.

327. வேதனை செய்வோன்

வேதனை செய்வோன் அருந்துதன் ஆமே.

328. அச்சமுள்ளோன்

அச்சமுள்ளோன் சிதன் கரிதன் காதரன்
பிதன் பிலுகன் பீருகன் பீருவே.

329. நோய்தீர்ந்து சுகப்பட்டு வருபவன்

நோயுற் றெழுந்தோன் உல்லாபன் என்ப.

330. வழிச்செல்வோர்

பதத்தேகுவோர் வியவர் பதிகர் பாந்தரே.

331. நெசவுத்தொழில் செய்வோர்

கைக்கோளர் அத்த கோளர் காருகர்
வேத காரர் வேமையர் துருவியர்
தந்து வாயர் எனத்தகு மென்ப.

332. நெசவுத்தொழில் செய்வோர் தொடர்ச்சி
சாலியர் தந்துவர் காருகர் பொருந்தர்.

333. தையற்காரர்

தூசுதைப்போர் பொல்லர் துன்னர் தாந்துவீகர்.

334. வண்ணார்

வண்ணார் தூசர் காழியர் என்ப.

335. வண்ணார் தொடர்ச்சி
ஈரங்கொல்லியர் ஏகாலியரே.

336. நாவிதர்

நாவிதன் ஆசி தையன் ஏறுதி
மங்கலி பகல் வினை யாளன் மஞ்சிகன்
மாசுதீர்ப் பான் மயிர்வினைஞன் முண்டியே.

337. கம்மாளர்

கம்மாளர் புந்தியர் கண்ணாளர் ஓவர்
வித்தகர் தபதியர் வித்தியர் யவனர்

338. தச்சர்

தச்சர் மரவினைஞர் தபதியர் சித்திரர்
யவனர் மரவினையாளர் என்ப.

339. தட்டார்

தட்டார் பொன்செய் கொல்லர் செங்கொல்லர்
பொன்வினை மாக்கள் அக்க சாலையர்
சுவர்ண காரகர் எனச்சொற்ற தொல்பெயரே.

340. கொல்லன்

கொல்லன் கரும்பொன்வினைஞன் கருமான்
மனுவன் என்ன வகுத்ததொல் பெயரே.

341. கன்னார்

கன்னார் கன்னுவர் கஞ்சகாரரே

342. உற்பாகர்

(மரம், செம்பொன் முதலியவற்றில் அழகுறப்படிமம்
அமைப்பவர்)
சிற்பாகன் மரஞ்செம் பொன்முதலாதியி
னெப்புற ஒப்பனை செய்வோர் ஓவர்
மண்ணீட்டாளர் மதியர் முறைதெரிந்தோர்
நண்ணிய விலையவர் நாம மாகும்.

343. முத்துக் கோப்போர்

முத்தங் கோப்பாளர் மணிகுயிலுவர் என
வைத்த நாம மிவர்தம் மாட்டே.

344. சங்கறுப்போர்

சங்கறுப்போர் வளைபோழ்நர் தாமே.

345. குயவன்

குயவன் மட்பகைவன் வேட்கோவன் சக்கிரி
மண்வினைஞன் மண்ணுடையான்
கும்பகாரன் குலாலன் ஆமே.

346. செக்காட்டி

செக்கான் நந்தி சக்கிரி.

347. வேடர்

வேடர் சவரர் வியாதர் வனசரர்
குறவர் கொலைஞர் குன்றவர் குழுவர்
மறவர் புளிநர் மாகுலர் கிராதர்
சில்லர் சிலவர் கானவர் எயினர்
புல்லர் பொறையிலார் புளிஞர் மறவர்
முருடர் பாவ மூர்த்திகள் என்ப.

348. ஊன்விற்போர்

ஊன்விற்போர் சூனர் ஊன்விலைஞர் ஆமே.

349. கள்விற்போர்

கள்விற்போர் சவுண்டர் கள்விலைஞர் துவசர்
பழயர் பிழியர் படுவர் என்ப.

350. கள்விற்பவள்

கள்விற்பவள் சாலினி படுவி ஆமே.

351. கொலைசெய்வோன்

கொலைஞன் சாருகன் கொல்வோன் காதகன்
நிகாரணன் நிசாரணன் நிடுதனன் விருசனன்
பராசனன் காதன் பிஞ்சகன் வதனே.

352. தோல் வேலை செய்வோர்

தோல்வினைஞர் கௌண்டிகர் பறம்பர்குயிலுவர்.
செம்மார் சரும காரகர் சருமர்
துன்னர் பொல்லர் தோற்றுன்னர் தொல்பெயரே.

353. சண்டாளர்

சண்டாளர் அந்தகர் மாதங்கர் குணுங்கர்
பாதகர் நீசர் பசுக்கிநர் பாவர்
கனைஞர் புலைஞர் கனகதர் கொலைஞர்.
கவுண்டர் புலையர் கடனிலர் வங்கர்
அகல்வோர் இழிஞர் ஆகு மென்ப.

354. பெரும்புலைஞர்

பெரும்புலையர் கட்புலப்படலாகார் பெயரே,

355. **யவனர்**

யவனர் குண்டாசியர் சோனகர் மிலேச்சர்
எவரினு மிழிந்தோ ரிவர்என மொழிப.

356. **நான்மறை பயிலா நாட்டகத் துள்ளார்**

நான்மறை பயிலா நாட்டகத் துள்ளார்
ஈனர் ஆனிதர் யவனர் சூனியர்
தூய்திலர் தோளளவுச் செவியர் துன்மதியர்
சாதி யிலாதார் தரும கண்டகர்
உயர்பிழி பற்றுர் ஊணர் உடையிலர்
மயரிய மாக்கள் மனிதரை யுண்போர்
மானமிலாதார் ....
ஊனகாரகர் ....
தம்மடநாணுர்.......................................
இம்மை மறுமை ....
சாவகர் கோக்கள்............................
பாவ காரிகள் ....
தெய்வங் கொள்ளார்......................
பொய்மையாளர்..............................
மக்கட்போது மானி ....

357. **மனிதர்**

மைந்தர் நரர் மாக்கள் மானுடர் மனிதர்
மாந்தர் ஆண்டையர் மானவர் மண்ணேர்க்
கேய்ந்த தொல்பெயர் என்றியம்பப் படுமே.

358. **கூட்டம்**

கூட்டம் இராசி குழுமல் மொய் குவால்
ஈட்டம் மேளனம் இனம் ஈண்டல் ஐமை
சவை கனம் கூளி சஞ்சயம் நிகரம்
அவை குழாம் குவிதல் ஆசிடை ஞாட்பு
முகை திரள் துற்று சமூகம் குலம் குவவு
தொகை குழு யோகம் கருவி தொறு சமு
தாயம் சாலம் விருந்தம் சயம் சம
வாயம் நிகாயம் நிவகம் நளி களரி

சமாசம் கோட்டம் கோட்டி சரி சங்கம்
தொகுத்தல் தோடு தொகுதி தொழுதியே.

359. **ஆண்மகன்**

ஆண்மகன் புருடன் ஆடூஉ மகன்புமான்
குமரன் நம்பி கோவேள் குருசில்
தோன்றல் காளை விடலை தொல்பெயரே.

360. **பெண்மகள்**

பெண்மகள் பெண்டு பிணா மகள் பூவை
நுண்ணிடை கொடியிடை நூலிடை வஞ்சி
பேதை தையல் பெதும்பை வஞ்சனி
கோதை காந்தை தாழ்குழல் இளம்பிடி மின்
அரிவை சுரிகுழல் ஆடவள் ஆட்டி
தெரிவை சுந்தரி சிறுமி மடந்தை
மெல்லியல் மானினி மின்னிடை வனிதை
வல்லி மகடூஉ மங்கை மடவரல்
நாரி துடியிடை நல்லாள் இளையாள்
காரிகை பாவை கனங்குழை அங்கனை
ஆயிழை மாயோள் அவிரிழை அணங்கு
சேயிழை மாது எனச் செப்பினர் புலவர்.

361. **நம்பி**

நம்பி ஆணிற் சிறந்தோன் நாமமே.

362. **நங்கை**

நங்கை பெண்ணிற்சிறந்தாள் நாமமே.

363. **தலைவன்**

தலைவன் முதல்வன் தலைமகன் காதலன்
அண்ணல் அரசன் ஆர்வலன் அன்பன்
நாதன் நண்பன் நாயகன் காவலன்
கோமான் இறைவன் கொற்றவன் நாமமே.

364. தலைவி

தலைவி முதல்வி சாமி செல்வி
பெருமாட்டி ஆட்டி கோமாட்டி இறையாட்டி
அரசி நாயகி அடிகள் அத்தை
ஆசாள் கோமாள் ஐயை இறைவியே.

365. மணவாளன்

மணவாளன் வேட்டோன் மகிழ்நன் மணமகன்
கணவன் கிழவன் கண்டன் கொழுநன்
நாதன் புருடன் நாயகன் புமான்
காதலன் உரியோன் காவலன் தவன்
கொண்கன் துணைவன் கொண்டோன் தலைமகன்
நண்பன் கேள்வன் நயந்தோன் பருத்தா
வல்லவன் அன்பன் மணாளன் ஆர்வலனே.

366. மணவாட்டி

மணவாட்டி மணாட்டி மனையாட்டி பெண்டாட்டி
துணைவி காதலி அறத்துணைவி விருந்தனை
இல்லாள் மனையாள் இல்லவள் உரிமை
நல்லாள் பாரியை நாயகி வல்லவி
குடும்பினி பன்னி குறைவிலாள் பிரியை
கடும்பு கப்பாள் களத்திரம் தாரம்
மனைவி கொண்டவள் மனை காந்தை தேவி
மணமகள் ஊழ்த்துணை வாழ்க்கைத் துணையே.

367. தந்தை

அப்பன் அத்தன் அம்மான் ஐயன்
தந்தை சனகன் தாதை தாதா பிதா
குரவன் ஈன்றோன் பெயரா கும்மே.

368. தாய்

தாய் அன்னை தல்லி மொய்தௌவை ஈன்றாள்
ஆய் அம்மனை தம்மனை அம்மை அவ்வை
தன்னை பயந்தாள் சநநி மாதாவே.

369. வளர்த்த தாய்

வளர்த்ததாய் கைத்தாய் கோடாய் தாதி
செவிலித் தாய்க்குச் சிறந்த தொல் பெயரே.

370. பாட்டனார்

பாட்டன் முன்றாதை மூதாதை பிதாமகன்
தாதை தாதை தாதை தானே.

371. பாட்டி

பாட்டி மூதாய் எனப்பகரப் படுமே.

372. தமையன்

தமையன் அண்ணல் தம்முன் முன்றோன்றல்
மூத்தோன் தலைவன் முன்னவன் முன்னை
சேட்டன் வரன் என்றிவர்க் கீட்டிய பெயரே.

373. தம்பி

தம்பி இளவல் இளையோன் தற்பின்
அவரயன் கனிட்டன் அனுசன் பின்னை
பிள்ளை பின்றோன்றல் பின்னவன் பின்னோன்
எம்பி உவர்என்றிவர்க்குப் பெயரே.

374. மாமன், மாமன் மைந்தன்

மாமன் அம்மான் மாதுலன் இவன்றன்
மைந்தன் மைத்துனன் என வகுத்தனர் முறையே.

375. மாமி

மாமன்றேவி மாமி அன்னையே.

376. தமக்கை

முன்பிறந்தாள் முன்னை மூத்தாள் அன்னை
சேட்டை தத்தை தௌவை செவிலியே.

377. தங்கை

பின்பிறந்தாள் எங்கை தங்கை பின்னையே.

378. மகன்

மகன் சுதன் தனயன் மகவு எச்சம் சேய்
தோற்றம் தோன்றல் சூநு முளை பட்டி
புதல்வன் குமரன் புத்திரன் மேயன்
மதலை சிறுவன் வழிவழித் தோன்றல்
மைந்தன் குமாரன் மருமான் செம்மல்
சந்ததி குட்டன் தனுசன் நந்தனன்
காதல் பொருள்கால் காதலன் என்ப.

379. மகள்

மகள் சுதை தனயை காதலி சிறுமி
புதல்வி பந்தனை புத்திரி ஐயை
எச்சம் சிறுவி என்றியம்பப் படுமே.

380. இருபாற்கும் உரிய பெயர்

எச்சம் என்ப திருபாற்கு முரித்தே.

381. பேரன், பேத்தி

பேரன் பௌத்திரன்; பெயர்த்தி பௌத்திரி.

382. சிறுவர் பன்மை

சிறுவர்பன்மை சிருர் மகார் மகர்
பாலர் முதலேற்பனபகரப் படுமே.

383. இளங்குழவி

இளங்குழவி குழவி சிசு மகவு மழவு
பசுங்குழவி என்று பகரற் பாற்றே.

384. மருமகன்

மருமகன் பலவழித் தோன்றல் மருமான்
மருகன் பிறங்கடை எனமன் னும்மே.

385. மருமகள்

மருமகள் மருகி மருமாட்டி ஆமே.

386. **பேதை**

பேதை பெதும்பை மங்கை மடந்தை
அரிவை தெரிவை பேரிளம் பெண்ணிவர்க்
குரிய பிராய மேழொன் பானிரா
றிரோடொன்று ஈரொன்பான் ஒன்று
எண்ணான்கு என்மனு ரியல்புணர்ந் தோரே.

387. **குமரி**

பதினாருட்டைக் குமரி யுவதி
விறலி மதங்கி எனவிதித் தனரே,

388. **கன்னி, உரோகணி, கெளரி**

எட்டாண் டெய்தியோள் கன்னி ஒன் பதாண்
டுற்றோ ளுரோகிணி பத்தாண்டுறுவோள்
கௌரி என்மனுர்கற்றுணர்ந் தோரே.

389. **பூப்பிணி**

பூப்புறு மாது பூப்பிணி என்ப.

390. **தெரிவை**

அரிணி வடவை அத்தினி என்றிவை
தெரியுங் காலை தெரிவையர் மேன.

391. **ஆண்மேற் சாதி**

சசனே இடபன் அச்சுவன் என்றிவை
மகன்மேற் சாதி வகுக்கப் படுமே.

392. **வண்ண மகள்**

கோலம் புனைவோள் கைபுனை மாது
வண்ணமகள் மண்ணுறுத்துவோள் பெயரே.

393. **மாதர் கூட்டம்**

பாவையர் கூட்டம் பண்ணை ஆயம்
ஓரை குழு என்றுரைக்கற் பாற்றே.

394. தோழன்

தோழன் எலுவன் துணைவன் காதலன்
சேடன் கேளன் சிலதன் சகாயன்
நண்பன் பாங்கன் எனநவிற் றினரே.

395. தோழி

தோழி பாங்கி துணைவி சிலதி
இகுளை அன்னை இணங்கி காதலி சகி,
சேடியர்க்கு நாடிய பெயரே.

396. தோழன் முன்னிலை

தோழன் முன்னிலை ஏடா என்ப.

397. தோழி முன்னிலை

தோழி முன்னிலை ஏலா ஏடியே.

398. தவப்பெண்

தவப்பெண் அம்மை அவ்வை ஐயை
கவுந்தி கந்தி கன்னி பைமை ஆம்.

399. கன்னி

கன்னி குமரி ஆமெனக் கழறுப.

400. கற்புடையள்

கற்புடையாள் சதி கற்பாட்டி ஆமே.

401. மலடி

மலடி மைம்மை வந்தி வந்தையே.

402. மலடியின் (தொடர்ச்சி)

காதலொன் றுள்ளாள் காக வந்தி.
காதல்-மகன். காகவந்தி-ஒரே பிள்ளையையுடையவள்.
தனிமரம் தோப்பு ஆகாது என்பது போல்,
ஒரு பிள்ளையைப் பெற்றவள் புத்திரவதியாக ஆகமாட்டாள்.
ஆகவே அவளும் மலடி இனத்தைச் சேர்ந்தவள்
என்று ஆசிரியர் கருதினர் போலும்.

403. **மூத்தாள்**

மூத்தாள் கிழவி மூதாட்டி விருத்தை.

404. **கைம்பெண்**

கைம்பெண் அமங்கலி கலன்கழி மடந்தை
கைமை திருவிலி கைனி தலையற்றுள்
தலையிலாள் தலையிழந்தாள் விதவை.

405. **பேடு**

பேடு அலி நபுஞ்சகம் பேடிகிலிபம்
பெண்டகர் சிகண்டி சண்டன் என்றிசைப்பர்.

406. **வசவி**

வசவி அசதி குறளி குட்டினி
குண்டனி துட்டை கூனி படுவி
தொழுத்தை என்றிவட்கு வழுத்திய பெயரே.

407. **நிறைமயிர் உள்ளோர்**

மயிர்முழு துடலுடை யோன்பெயர் கேசி
கேசவன் கேசிகன் எனக்கிளர்ந் தனரே.

408. **முடவன்**

முடவன் அனூரு பங்கு குணியன்.

409. **கூனன்**

கோணன் கூன் கூனன் குடிலன் வக்கிரன்.

410. **குருடன்**

குருடன் அந்தன் அந்தகன் சிதடன்.

411. **குள்ளன்**

குள்ளன் குஞ்சன் குறளன் சிந்து
வாமனன் நாம மாமென அறைவர்.

412. **செவிடர்**

செவிடர் வதிரர் செவிப்புல னிலாரே.

413. **ஊமை**

ஊமை குணி மூகன் ஊமன் மூங்கை.
மூகை என்று மொழியப் படுமே.

414. **மக்கட் பரப்பு**

மக்கட் பரப்பு மன்பதை பைஞ்ஞீலம்.

415. **உடல்**

உடல் உறுப்பு அவயவி உடம்பு உயிர்நிலை புகல்
சடம் உருவம் துவக்குதனு விக்கிரகம்
ஆகம் விம்மிதம் காத்திரம் கடம் தாவரம்
தேகம் பிண்டம் ஆதாரம் மூர்த்தம்
காயம் குரம்பை களேபரம் அங்கம்
தேயம் வியம் பூதியம் புரம் பூட்சி
சட்டகம் வடிவம் சரீரம் புணர்வு
யாக்கை புதைஎனத் தூக்கிய பெயரே.

416. **ஆன்மா**

ஆன்மா சதசத்து அணு நித்தன் ஆவி
தேகி பாசி சிற்றறிவன் உயிர் உறவி
புருடன் தற்செய லிலாதான் புற்கலன்
சீவன் பிராணன் சேதனன் புமான்
ஆதன் பசு என்றறையப்படுமே.

417. **மனம்**

உள்ளம் நெஞ்சு இதயம் உள் அகம் சித்தம்
உன்னம் முன்னம் உளம் மனம் ஆமே.

418. **அறிவுறு ஆன்மா**

பூதியம் பொறி புலன் கரணம் கலை
ஆதியினறிவுறுமான்மா என்ப.

419. **பொறி**

இந்திரியம் வாயில் கந்தம் பொறி கரணம்.

420. **ஞானேந்திரியம்**

அறிவுறுபொறி சுரோத்திரம் தோல் அம்பகம்
நாக்கு மூக்கு எனநவின்றனர் புலவர்.

421. **ஞானேந்திரியச் செயல்**

உணர்வுறு பொறிச்செயல் ஓசை ஊறு உருவம்
உருசி மணம் என்றுரைத்திசினோரே.

422. **கன்மேந்திரியம்**

கன்மப் பொறி வாய் கால் கை குதம் குறி
என்னப் பன்னினரியல் புணர்ந்தோரே.

423. **கன்மேந்திரியச் செயல்**

செய் பொறிச்செயல் சொலல் நடை தொடை விடுதல்
இன்பம் என்றிவை இசைத்தனர்புலவர்.

424. **அந்தக்கரணம்**

கரணம் மனம் புத்தி ஆங்காரம் சித்தம்.

425. **கரணம்**

மனங் கொளும் புத்தியாராயும் ஆங்கார
முரனதினூக்கும் புத்தியதுறுதி
உறுக்கும் என்பவுயர் மொழிப் புலவர்.

426. **வித்தியாதத்துவம்**

கலாதி காலம் நியதி கலை வித்தை
இராகம் புருடன் மாயை என்றிவையே.

427. **காலதத்துவம்**

காலம் கால சங்கை நியதி
கன்ம நிச்சயம் கலை வினைதெரிதல்
வித்தையறிவு இராகம் விழுமம் விளைத்தல்
புருடன் விடயமனைத்தினும் புணர்த்தல்
மாயைமரீஇயதின் மன்னுவித்தல்லே.

428. **வடிவம்**

வடிவு ஆகாரம் வடிவம் உரு உருவம்
சட்டகம் படிவம் சந்தம் மேனி
வண்ணம் செண்ணம் எனவழுத்தினரே.

429. **உறுப்பு**

உறுப்பு அங்கம் அவயவம் காத்திரம் சினை ஆம்.

430. **உடற்பொருத்து**

சந்து கொளுத்து பொருத்து மூட்டு
கந்து கத்து எனக்கருதப் படுமே.

431. **கால்**

கால் அங்கிரி அடி கழல் சரண் சரணம்
தாள் பதம் பாதம் தாளுகும்மே.

432. **கரடு**

கரடு மிசைத்திரள் காலடி பரடுவே

433. **கணைக் கால்**

கணைக்கால் சங்கம் சங்கு எனக்கழறுப.

434. **முழங்கால்**

முழந்தாள் சானு முந்து எனமொழிப.

435. **தொடை**

தொடை கவான் ஊரு சோகம் குறங்கு
வாமம் என்றிதன் பெயர்வகுத்தனரன்றே.

436. **அல்குல்**

அல்குல் அகல் வடிவு அல்குற் பெயரே.

437. **பெண்குறி**

பெண்குறி யோனி குய்யம் இராசியம்
அற்றம் சின்னம் பகம் அபவாரணம்.

438. அல்குல் (தொடர்ச்சி)

கதம்பம் கடிதடம் கடி நிதம்பமே.

439. **பீசம்**

வீயம் அண்டம் விடணம் பெயரே.

440. **ஆண்குறி**

ஆண்குறி கோசம் இலிங்கம் மேட்டிரம்.

441. **குதம்**

பாயு பிருட்டம் குதம் பாயுருவே.

442. **இடை**

இடை நடு உக்கம் மருங்கு மருங்குல்
நுசுப்பு மத்திமம் நுண்ணிடை ஆமே.

443. **இடையின் பக்கம்**

இடையின் பக்கம் மருங்கு மருங்குல்
உக்கம் உக்கல் என்றுரைத் தனரே.

444. **கொப்பூழ்**

கொப்பூழ் இதகெ இலஞ்சி போகில்
ஆகு உந்தி நாபிக் கமைத்ததொல் பெயரே.

445. **வயிறு**

வயிறு குக்கி மடி மோடு உதரம்
தொந்தி வயின் அகடு துத்தம் சடரம்
பண்டி எனப்பெயர் பகரப்படுமே.

446. **கருப்பம்**

கருப்பம் சூல் பீள் சினை வயாவே.

447. **மார்பு**

மார்பு அகலம் ஆகம் மருமம் நெஞ்சு உரம்
செப்பம் அங்கம் ஆமெனச்செப்புவர்.

448. **முலை**

முலை குயம் அம்மம் உரோருகம் சொர்க்கம்
குருக்கண் சேக்கை கொங்கை தனம் நகிலம்
பறம்பு மொய்கதிர் ஆமெனப் பகர்வர்.

449. **முலைக்கண்**

முலைமுகம் சிலீமுகம் முலைக்கண் சூசுகம் சுகம்.

450. **தேமல்**

தேமல் உத்தி திகை திதலை திதனி
துத்தி பொறி வரி சுணங்கு வசந்திகை
நுணங்கு என வைத்து நுவன்றனர் புலவர்.

451. **பசப்பு**

பசப்பு பசலை பீர்எனப் பகர்வர்.

452. **முலைப்பால்**

முலைப்பால் பீர் எனமொழியப்படுமே.

453. **கை**

கை கரம் அத்தம் கைத்தலம் சயம்தோள்
பாணி என்றிதற்குப் பேணிய பெயரே.

454. **முழங்கை**

முழங்கை கூர்ப்பம் கூபரம் என்ப.

455. **மணிக் கட்டு**

மணிக்கட்டு கிலுத்தம் மணிபந் தம்மே.

456. **உள்ளங்கை**

உள்ளங்கை அங்கை அகங்கை குடங்கை
உட்கை சுளகம் ஆமென்றோதுப.

457. **கைவிரல்**

கைவிரல் அங்குலி கரசா கையே.

458. **விரலிறை**

விரலிறை பிறங்கு வரை வரி இறை பொறி
தோரை என்று சொற்றனர் புலவர்.

459. **நகம்**

நகம் உகிர் கரோருகம் ஆமென நவில்வர்.

460. **தோள்**

தோள் புயம் மொய்ம்பு வாகு எனச்சொற்றனர்.

461. **தோளின் மேல்**

தோண்மேல் எருத்தம் சுவல் செகில் நிகலம்
பிடர் என்றிதன்பெயர் பேசப் படுமே.

462. **முதுகு**

முதுகின் பெயரே மொழியுங் காலைச்
சுவல் அவரம் புறம் தனனு வென் வெரிந்நே.

463. **பின்புறம்**

பின்புறம் பிறகு பிறக்கு எனப்பெயர் பெறுமே.

464. **பிடரி**

பிடரி தோண்மேல் பிடர்த்தலை எருத்தம்,
செகில் சுவல் பிடர் நிமம்கயில் சிறுபுறம்மே.

465. **கழுத்தடி**

கழுத்தடி கந்து கந்தம் ஆகும்.

466. **மிடறு**

மிடறு அணல் தால் என மேவும் பெயரே.

467. **விக்கல்**

விக்கல் இக்கு விக்குளின்பெயரே.

468. **தும்மல்**

தும்மல் தும்மு எனச் சொற்றனர் புலவர்.

469. **இருமல்**

இருமல் ஐ என் றியம்பப் படுமே.

470. கொட்டாவி

ஆவிப்பு கொட்டாவி ஆவலிப்பு என்ப.

471. கழுத்து

கழுத்து கண்டம் கந்தரம் மிடறு
களரி கில்லம் கிரீவம் களமே.

472. முகம்

முகம் வதனம் ஆனனம் வத்திரம் துண்டம்.

473. மேல்வாய்

மேல்வாய் சிவுகம் மோவாய் கட்டம்
தாடி அணல்எனச் சாற்றத் தகுமே.

474. கீழ்வாய்

கீழ்வாய் அணம்அணரி அண்ணம் என்ப.

475. கன்னம்

கன்னம் கதுப்பு கொடிறு கவுள் கபோலம்.

476. காது

காது செவி கேள்வி கன்னம் கருணம்
சுரோத்திரம் சிரவம் சுருதி சுதி சிரவணம்
அள் வள் என்பவு மாவயி றுனை.

477. உள்நாக்கு

உண்ணு அண்ணம் ஆகலு முரித்தே.

478. நாக்கு

நாக்கு சிக்குவை நா தாரை தாரம்
தாலம் தாலுத் தாறு கும்மே.

479. பல்

தந்தம் நகை தசனம் தட்டம் இரதனம்
இருபிறப்பு இரசனம் எயிறு பல் மூரல்
முறுவல் என்ன மொழியப் படுமே.

480. **உதடு**

உதடு துடி இதழ் பாலிகை அதரம் முத்தம் ஆம்

481. **மேலுதடு, கீழுதடு**

மேலுதடு ஓட்டம் கீழுதடு அதரம்.

482. **புன்சிரிப்பு**

புன்சிரிப்பு புன்முறுவல் புன்மூரல்
சின்னகை புன்னகை சின்னமூரல் சிறுநகை
குறுமுறுவல் குறுநகை எனப்பெயர் கொளுமே.

483. **சிரிப்பு**

சிரிப்பு ஆர்ப்பு ஆசம் இளி நகை மூரல்
முறுவல் என்ன மொழிந்த தொல்பெயரே.

484. **நிந்தைச் சிரிப்பு**

அவமதிச்சிரிப்பு ஆசியம் அசி இளி ஆம்.

485. **மூக்கு**

நாசி கோணம் நாசிகை துண்டம்
நாடி மூக்கு ஆக்கிராணம் என நவில்வர்.

486. **சுவாசம்**

சுவாதம் உயிர்ப்பு தும்மல் கொறுக்கை
ஆவி மூச்சு என்றமைந்த தொல்பெயரே.

487. **பெருமூச்சு**

நெடுமூச்சு நெட்டுயிர்ப்பு பெருமூச்சே.

488. **கண்**

கண் சக்கு அக்கம் நோக்கம் பார்வை குவளை
நாட்டம் உலோசனம் விலோசனம் நயனம்
திருக்கு விழி தாரை திட்டி திருட்டி
அக்கி நேத்திரம் அம்பகம் கோ இவை
நோக்கின் மாட்டே நுவலப் படுமே.

489. **கண்மணி**
கண்மணி தாரை கருமணி தானே
கண்ணிடைக் கருவரி செவ்வரி அரிவரி
அலரியுமி நுனபிதான மாமே

490. **கண்ணிமை**
இமை நிமை இதழ் விளிம்பு ஏடு கண்ணிமையே.

491. **கடைக்கண்**
கடைக்கணுக்கு சிறக்கணிப்பு அபாங்கமே.

492. **கண்ணின் குணம்**
கட்குணம் சஞ்சலம் சபலம் நத்தம்
கும்பம் என்ப குறியுணர்ந் தோரே.

493. **பெண்ணின் கண் குணம்**
ஏறல் இழிதல் எறிதல் ஆடவருயிர்
கோறல் தாவல் குழையெதிர் பொருதல்
ஓடல் திரும்பல் உகளல் உலாவல்
ஆடல் சேலினலமரல் புரளல்
பிறழ்தல் பிறவும் பேர் மாக்கண் செயல்.

494. **புருவம்**
புருவம் புரு பூரு புரூரம் பிருகுடி
புகுடி பீரு புதல் நுதல் ஆமே.

495. **நெற்றி**
நெற்றி நுதல் அலிகம் அளிகம் மத்தகம்
பாலம் முண்டம் சங்கம் இலலாடம்
குளமொடு பத்துங் கூறப்படுமே.

496. **மயிர்க்குழற்சி**
நெற்றி மென்மயிர்ச் சுருள்பத்தி பனிச்சை
குருள் சுருள் குந்தளம் எனக்குறித் தனரே.

497. **மயிர்ச்செறிவு**
மயிர்ச்செறிவு சிரோந்தம் ஆகு மென்ப.

498. **மயிர்க்குழற்சி (தொடர்ச்சி)**

மயிர்க் குழற்சிப் பெயர் குழற் கொத்து அளகம்
குந்தளம் விலோதம் என்பமற் றதற்கே.

499. **மயிர்முடி**

கொண்டை சுடிகை முடி கொப்பு தம்மிலம்
முச்சி சிகழிகை உச்சி பின்னகம்
பந்தம் என்று வந்த தொல்பெயரே.

500. **சடை**

சடை குடிலம் சடிலம் கோடீரம்
கிடை வேணி பின்னகம் எனக்கிளந் தனரே.

501. **உச்சி மயிர்**

உச்சிமயிர்முடி முச்சி சூழியே.

502. **பெண்மயிர்**

பெண்பான்மயிர் குரல் ஐம்பால் அளகம்
குருள் பரிசாரம் கோதை மராட்டம்
சுருள் குழல் கூந்தல் சுரியல் விலோதம்
கூரல் ஓதி குந்தளம் நெடுமை
கூழையு மிதன்பெயர் கொள்ளப் படுமே.

503. **ஆண்மயிர்**

ஆண்பான்மயிர் உளை ஓரி சிகை தளை
குஞ்சி பங்கி குடுமி நவிர் நவிரம்
பித்தை தொங்கல் பிச்சம் என்ப.

504. **ஆண்மயிர் (தொடர்ச்சி)**

சிகை குடுமி சிக்கம் சிமிலி சிமி முடியே.

505. **மயிரின் (தொடர்ச்சி)**

மயிர் கதுப்பு உரோமம் குந்தளம் கோலி
கேசம் சிகுரம் எனக்கிளந் தனரே.

506. புறமயிர்

புறமயிர் பங்கி மராட்டம் போலும்.

507. தலை

தலை மூர்த்தம் உத்தமாங்கம் மத்தகம்
முண்டகம் உவ்வி முடி நவிரம் கம்
சென்னி மூர்த்தனி சிரம் சேகரம் சிகரம் ஆம்.

508. உச்சந்தலை

உச்சந்தலை சிக்கம் உச்சி குடுமி
சுடிகை நடுத்தலை சூழி நனந்தலை
நவிரமுமாமென நவிற்றினர் புலவர்.

509. மொட்டைத் தலை

மொட்டைத்தலை தட்டை முண்டனம் முண்டம் முண்டிதம்
தட்டைத்தலையு மாமெனச் சாற்றுப.

510. பிணம்

பிணம் அழன் களேபரம் பிரேதம் குணபம்
சவம் எனவைத்துச் சாற்றினர் புலவர்.

511. உடற்குறை

உடற்குறை தலையறை யூபம் கவந்தம்
மண்டை முண்டம் எனவகுத் தனரே.

512. தலையோடு

தலையோடு ஓடு வெண்டலை கபாலம்மே.

513. முழுவெலும்பு

தலை யோட்டுப் பொருத்துத்தான் கரோடி
தசைகழி முழுவென்புதான் கங்காளம்
நெட்டை முழுவெலும்பு என்ன நிகழ்த்துப.

514. எலும்பு

எலும்பு அக்கு அங்கம் என்பு அத்திகளே பரமே.

515. நரம்பு

நரம்பு எசம் கன்னம் நாடி சிரை தாது
சங்கனனம் மேதை தாறு கும்மே.

516. இறைச்சி

ஊன் புலால் புலவு ஊத்தை தூ ஊழ்த்தல்
புரணி வள்ளூரம் புளிதம் பிசிதம்
துன்னு தசை தடி தூவு புண் விடக்கு ஊ
இறைச்சி மேதை என் றிசைக்கப்படுமே.

517. முடை

முடை புலவு ஊத்தை ஆமெனமொழிப.

518. சூட்டிறைச்சி

சூட்டிறைச்சி படித்திரம் சூசியம்.

519. ஆவினதிறைச்சி

ஆவின திறைச்சி வள்ளூரம் ஆமே.

520. கொழுப்பு

கொழுப்பு நிணம் வழுக்கு கொழுமை செழுமை
விழுப்பு மேதை நெய் விளர் வழும்பு இழுதே.

521. இரத்தம்

இரத்தம் உதிரம் எருவை கறை குருதி
அரத்தம் செந்நீர் ஆர்க்கம் செம்புனல்
சோணிதம் சுடுவல் சோரி செம்பால்
தோரை கீலாலம் தோன்றி நெய் நெய்த்தோர்
புண்ணீர் புலானீர் எனப்புகன் றனரே.

522. குடல்

குடல் குடர் எனப்பெயர் கூறினர் புலவர்.

523. ஈரல்

ஈரல் குண்டி ஈருள் எனப்படும்.

524. தோல்

தோல் அதள் பச்சை துவக்கு தொக்கு
புரணி சருமம் புனிறு கிருத்திமம்

ஒலியல் வடகம் உரி உரிவை போர்வை
மேதை என்று விதித்த தொல் பெயரே.

525. **வேர்வை**

வேர்வை கன்மம் கருமம் வியர்ப்பு
சுவேதம் கசிவு எனச் சொற்றனர் புலவர்.

526. **கழலைக்கட்டி**

கழலை அரலை எனக் கழறினரே.

527. **தழும்பு**

தழும்பு கசடு அங்கிதம் சுவடு வடு வசி
கச்சை சேக்கை காய்ப்பு உடற்றழும்பே.

528. **வடுப்படல்**

வடுப்படல் கதுவாய் என வகுத்தனரே.

529. **இளமை**

இளமை கன்னி எழில் இளை தருணம்
குருகு சேடு கொம்மை கோமளம்
முருகு விளரி விளர் வெண்மை புருவை
குழுவு நவ்வி செம்குருளை குழவி
மழவு போதகம் மண்ணை கயம் மஞ்சு
நாகு மிவ் விளமை நாம மாகுமே.

530. **நரை**

நரை திரை பலிதம் நரைநாம மாமே

531. **திரை**

திரை சுரி திரங்கல் இவையுடற் றிரையே.

532. **மூப்பு**

மூப்பு விருத்தம் முற்றல் முதுமை
கிழவு கிழமை எனக்கிளந் தனரே.

இரண்டாவது மக்கட்பெயர்த் தொகுதி முற்றியது.

மூன்றுவது விலங்கின் பெயர்த்தொகுதி

533. **சிங்கம்**

சிங்கம் வயமா சீயம் வயப்புலி
பொங்கடி முளை மாபுலி வயப்போத்து
மடங்கல் தெரிமா வட்புலி நகாயுதம்
முடங்குளை கொடும்புலி மொய்ப்பகை கோளரி
காளி பஞ்சா னனம்கண் டீரவம்.
ஆளி மிருகராசன் அறுகு அரி
கேசரி என்னக் கிளந்தனர் புலவர்.

534. **பெண்சிங்கம்**

பெண்சிங்கம் பெட்டை பிணவு பிறு இதன்
குட்டி போதகம் எனக்குறிக்கப் படுமே.

535. **ஆளி**

யானை யாளி அறுகு யாளி பூட்கையே.

536. **ஆளி ஆண் அதன் பிள்ளை**

ஆளியாண் தகர் அதன் பிள்ளை குருளை
குழவி என்று குறிக்கப் படுமே.

537. **புலி**

புலி உழுவை குளியம் புண்டரிகம்
குயவரி தரக்கு கொடுவரி வியாக்கிரம்
வயவரி பாய்மா வயமா வியாளம்
புல்லூகம் வல்லியம் போத்து அறுகு ஒருத்தல்
வெல்லுமா வரி வேங்கை மிருகாதி
சார்த்தூலம் சித்திர காயம் தானே.

538. **ஆண் புலி**

புலியாண் அறுகு போத்து ஒருத்தலே.

539. **புலிக்குட்டி**

புலியின் குட்டி குருளை போதகமே.

540. **யானை**

யானை இபம் அறுகு இம்மடி ஆம்பல்
தானமா ஒருத்தல் கரி கரேணு

தும்பி எறும்பி சூகை சுண்டாலி
கும்பி புழைக்கை குஞ்சரம் கோட்டுமா
தூங்கல் உம்பல் தோல் கறையடி மொய்
ஓங்கல் கடிவை உவா யாளி கைப்புலி
கயம் மாதிரம் கைம்மலை களிறு களபம்
வயமா நால்வாய் வழுவை வாரணம்
பகடு வல்விலங்கு பருமா நாகம்
புகர்முகம் அத்தி பூட்கை பொங்கடி
மந்தமா கைமா மதாவளம் மத்தமா
தந்தமா மதமா தந்தாவளம் மா
கருமா பெருமா களவம் கரிணி
மருண்மா நூழில் மதகயம் மறமலி
மாதங்கம் தந்தி மதமொய் சிந்துரம்
வேதண்டம் திண்டி வேழம் ஆமே.

541. **யானைக் கூட்டத்துத் தலைமை யானை**

குழூஉப் புரந்தருங் கூர்ங்கோட் டொருத்தல்
யூதநாதன் யூதபம் என்ப.

542. **யானை உறுப்புக்கள்**

யானை மத்தகம் கும்பம் அதன் செவி
கன்னம் தாலம் கதுப்புக் கொடிறு
கடம் கரடம் கவுள் கடைக்கண் நிரியாணம்
கொம்பு எயிறு தந்தம் கோடு மருப்பு அதன்
அடி கீரம் அதனடுப் பிருது
மானம் என்மனார் வான்மொழிப் புலவர்.

543. **யானையின் செவியடி**

தும்பியின் செவியடி சூளிகை என்ப.

544. **யானையின் துதிக்கை**

தும்பி யின்கை துதிக்கை தொண்டலம்
தொண்டை தண்டம் சுண்டம் சுண்டை
ஆழி புட்கரம் ஆகு மன்றே.

545. **துதிக்கை உமிழ்நீர்**

போதகம் புழைக்கை புட்க ரத்தின்
விடுநீர் கரசீகரம் விலாழி ஆமே.

546. **யானையின் மதம்**

கரிமதம் கரடம் கடம் கடாம் தானம்
கவுண் மதம் தானம் கண்மதம் சீது.

547. **யானையின் மதநீர் உண்டாகுமிடங்கள்**

சுருதி மதம் சாகரம் துதிக்கை மதம் சீகரம்
குருக்கண் மதம் கினகம் கோசமதம் மதம்
கால்உகிர் மதம் மேகம் உரமதம் கன்ம
வாரியெட்டு மதாவள மதமே.

548. **யானை முதுகு**

வாரண முதுகு மஞ்சு என மொழிப.

549. **யானை வால், வால் நுனி**

தந்திவால் வாலதி தாலவட் டம்மே
வேழத்தின் வானுனி வேசகம் ஆமே.

550. **யானையின் மத்தகப் புள்ளி**

பொங்கடி மத்தகம் பொறி வரி தத்தி
புகர் என வைத்துப் புகறல் வேண்டுமே.

551. **யானையின் முன்கால், பின்கால்**

கறையடி முற்கால் காத்திரம் அவரம்
பிற்கால் எனப்பெயர் பேசப்படுமே.

552. **ஆண் யானை,**

களிற்றி யானை கடமா உம்பல்
ஒருத்தல் தகர்மா பகடு என்றுரைக்கற் பாற்றே.

553. **பெண்யானை**

பெண்யானை அத்தினி பிடிவடவை கரேணு
கரிணி சீமூதம் ஆமெனக் கழறுப.

554. **யானைக்கன்று**

குஞ்சரக் கன்று குழவி துடியடி
கயந்தலை போதகம் கயமுனி களபம்
முனிஎன வைத்து மொழியப் படுமே.

555. **யானை பிறக்கும் இடம்**

மலைச்சார் காட்டுச்சார் யாற்றுச்சார்
வழங்கும் யானை கிரிசரம் வனசரம்
நதிசரம் என்ன நவின்றனர் புலவர்.

556. **யானைக்கூட்டம்**

குஞ்சரத்தின் குழாம் கடகம் கடாம்
யூதம் என்றுங் கோதப் படுமே.

557. **யானை நோய்**

பகடுறு நோயின் பெயர்பா கலம்மே.

558. **குதிரை**

குதிரை கந்துகம் கொய்யுளை குரைஐங்
கதிதரு கிள்ளை.கண்ணுகம் தேனு
வயம்மண் டிலம்மா வாசி இவுளி
அயம்நா ணுகம்கரந் திருவம் அச்சுவம்
குரகதம் உன்னி கொக்கு கோடை
துரகதம் துரகம் துரங்கம் சடிலம்
பாடலம் காண்டம் பரிபுரவி குந்தம்
கோடரம் தூசி கோரம் உத்தரி
பத்திரி, கோடகம் பாய்மா கற்கி
அத்திரி கோணம் அரி சயிந்தவம்மே.

559. **பெருங்குதிரை**

பெருங்குதிரை கேசி எனப்பெயர் பெறுமே.

560. **குதிரை மயிர்**

குதிரைமயிர் கேசம், குசை சுவல், கூந்தலே.

561. **குதிரைக்குளம்பு**

குதிரைக் குளம்பு குரம்சபம் குரைச்சையே

562. **குதிரை நடை**

அசுவ கதி தவனம் தாவு ஆமே.

563. **குதிரை நடை (தொடர்ச்சி)**

தாம்பரி மென்னடை தவுரி தகம்மே.

564. **குதிரையின் விரைவு நடை**

அரிவிரை செலல் ஆக்கிரந்திதம் ஆமே.

565. **குதிரை விரைவு நடை (தொடர்ச்சி)**

புரவி கடுவிசை போகல் புலுதம்மே.

566. **குதிரை வட்டமிட்டு ஓடுதல்**

பரிசாரி கையிற் பாறுதல் இரேசிதம்.

567. **குதிரை இரண்டு கால்களைத் தூக்கி ஆடிவருநடை**

இவுளி இருகா றூக்கி யாடி
வருதல் வல்கிதம் என்று வகுத்தனரே.

568. **குதிரை வழி**

குதிரை மார்க்கங் கூறின் மாதிகமாம்.

569. **குதிரை கனைத்தல்**

துரகதத் தார்ப்பு தூளி என்ப.

570. **குதிரையின் உமிழ்நீர்**

விரைபரி வாய்நுரை விலாழி எனப்படும்.

571. **ஆண்குதிரை**

ஆண்குதிரை சேவல் மாவா கும்மே.

572. **பெண்குதிரை**

பெண்பரி வடவை பெட்டை என்ப.

573. **குதிரைக்கன்று**

குதிரைமறி கன்று குட்டி ஆமே.

574. **ஓரி காரி வள்ளல்களின் குதிரை**

ஓரி வள்ளல் குதிரை ஓரி
காரி வள்ளல் குதிரை காரியே.

575. **சேரன் குதிரை**

பனந்தா ரான்பரி பாடலம் ஆமே.

576. **சோழன் குதிரை**

கோழி வேந்தன் குதிரை கோரம்மே.

577. **பாண்டியன் குதிரை**

கைதவன் குதிரை கனவட் டம்மே.

578. **சிற்றரசர்கள் குதிரை**

குறுநில மன்னர் குதிரை கந்துகம்மே.

579. **பசு**

பசுவின் பொதுப்பெயர் பன்னிில் ஆன் ஆ
கோ நிரை பெற்றம் குடம்சுட்டு ஆமே.

580. **கறவைப்பசு**

கறவைப்பசு ஆ, கபிலை கவம்குரம்
கோமளம் தேனு குடம்குரால் சூலம்
சுரபி பெற்றம் சுரைகோ ஆமே.

581. **தெய்வப்பசு**

தெய்வப்பசு கபிலை சுரபி தேனுவே.

582. **கன்றையுடைய பசு**

ஈற்று கற்று வற்சலம் என்ப.

583. **நல்லபசு , குணமில்பசு**

நலனுடைப் பசுவின் நாமம் பத்திரை
குணமில் பசு , சுதை எனக்கூ றுவரே.

584. **ஓரீற்றுப் பசு**

தலையீற் றுவி னதுபெயர் கிட்டி
கிருட்டி என்னக் கிளந்தனர் புலவர்.

585. **பசுவின்முலை, மடி**

ஆன்முலை சுரை அதன் மடிஆ பீனம்
செருத்தலு மதற்குச் செப்பிய பெயரே.

586. **பசுவின் அலைதாடி**

பசுவணல் களகம் பளம்சாச் சிலையே.

587. **பசுக்கன்று**

பசுவின் கன்றின் பெயரது பகரில்
வற்சம் தன்னம் கோதனம் வசுவே.

588. **இளங்கன்று**

இளங்கன்று கொற்றி என்றியம்பப் படுமே.

589. **மலட்டுப்பசு**

ஈறுப்பசு வற்சை என்று கும்மே.

590. **பசுக்கூட்டம்**

பசுக்கூட்டம் கதம்பம் காலி தொறுநிரை
கதுப்பு கோட்டம் காலி யம்மே.

591. **எருது**

எருது குண்டை இருல்நரை நந்தி
இடபம் கூளி ஏறுகொட் டியம்கோ
விடபம் புல்லம் விடைபசு மூரி
பகடு பெற்றம் பாறல்சே பாண்டில்
பூணி நூபம் போத்து ஆகும்மே.

592. **பொதி எருது**

பொதியெருது தூர்வகம் தூரியம் பகடு
பாறலோ டைந்தும் பகரப் படுமே.

593. **எருதின் முரிப்பு**

எருத்தின் திமில் அக்குஇமில் முரிப்பு என்ப.

594. **எருமை**

எருமை யின்பொது சைரிபம் காரான்
காரா மேதி கவரி சூரி
மயிடம் தேனு மகிடம் வடவையே.

595. **பெண் எருமை**

எருமையின் பெண் நாகு ஆ என இசைப்பர்.

596. **எருமையின் கன்று, மடி**

எருமையின் கன்று, குழவி இதன்மடி
செருத்தல் என்ப செஞ்சொற் புலவர்.

597. **ஆண் எருமை**

எருமைக்கடா ஏறு உம்பல் ஒருத்தல்
பகடு போத்து எனப்பகரப் படுமே.

598. **மலட்டு எருமை**

மலட்டெ ருமைப்பெயர் மைமை என்ப.

599. **ஆடு**

ஆட்டின் பொதுதுரு அருணம் அசம்அயம்
துருவை மேழகம் துள்ளல் வற்காலி
வருடை புருவை மறிதகர் மேடம்
கொச்சை மோத்தை கொறிவெறி உதள்உடு
செச்சை வெள்ளை பள்ளை செம்மறியே.

600. **செம்மறியாடு, குட்டி**

செம்மறி தூருவை மைமறி கொறிஇதன்
குட்டி சோரன் குட்டன் பறழ்மறி
மணங்கு மதற்கு வகுத்த தொல்பெயரே.

601. **செம்மறியாடு**

செம்மறிக் கடா அரி திண்ணகம் கம்பளம்
ஏழ கம்தகர் மேழகம் ஆமே.

602. **வெள்ளாடு, வெள்ளாட்டுக்குட்டி**

வெள்ளாடு காராடு வெள்ளை பள்ளை
கொச்சை வற்காலி இதன்குட்டி வெள்ளையே.

603. **வெள்ளாடு ஆண்**

வெள்ளாட் டுக்கடா வின்பெயர் மோத்தை
சாகம் செச்சை உதள்சல கம்மே.

604. **பன்றி**

பன்றிஅரி ஏனம் பஞ்சா யரிகிரி
கேழல் போத்திரி கிருட்டி பூதாரம்
மோழல் கனலி போழ்முகம் சூகரம்கிடி.
கோணி கோலம் கோட்டுமா கருமா
கானமா இருளி களிறு வல்லுளி
மைமா குரோட்டம் எறுழி வராகம்மே.

605. **பன்றி ஆண், பெண்**

பன்றியாண் ஒருத்தல் களிறுமா ஏறுஇதன்
பெண்பிணா பிணவு பெட்டை என்ப.

606. **பன்றிக்குட்டி**

பன்றிக் குட்டி பறழ்பிள்ளை குருளையே.

607. **முள்ளம்பன்றி, அதன் முள்**

முட்பன்றி எய்சமர் முண்மா சல்லபம்
சல்லியம் இதன்முள் சல்லி சல்லம்சலமே.

608. **கரடி**

கரடிபல் லூகம் குடா வடிஎலு
உளியம் மிளிறுஎண்கு பல்லம் என்றுரைப்பர்.

609. **ஆண்கரடி**

ஆண்க ரடிப்பெய ராம்ஒ ருத்தலே.

610. **கவரிமான், இதன் ஆண், பெண், குட்டி**

கவரிமா படகம் பட்டம் மானமா
நானம் அன்னம் எகினம் ஓதி மமிதன்
ஆண்ஏறு ஒருத்தல் பெண்ஆம்பிணா பிடி இதன்
குட்டி கன்றுஎனக் கூறினர் புலவர்.

611. **காட்டுப்பசு, இதன் ஆண், பிள்ளை**

காட்டா ஆமா கவயம் இதனாண்
போத்து பிள்ளை கன்றெனப் புகல்வர்.

612. **கீரி**

கீரி நகுலம் தீர்வை காத்திரியே.

613. **கீரிக்குட்டி**

கீரியின் குட்டி பிள்ளை பறழே.

614. **மான்**

மான் உழை அரிணம் மறிபிணை நவ்வி
ஏணம் குரங்கம் சாரங்கம் மிருகம்
சூனம் என்ப துகடூர் புலவர்.

615 **ஆண்மான் பெண்மான் அதன் குட்டி**

மானேறு இரலை வச்சையம் ஒருத்தல்
கருமான் புல்வாய் கலை இதன் பெண்பிணை
பிள்ளை கன்று பிணைமறி குழவி
பார்ப்பு ஏணிதன்னம்பறழ் எனப்படுமே.

616. **(மானின் தொடர்ச்சி)**

புல்வாய் இரலை இதனாண் ஏறு
போத்து பெண்பிணைபிணவு பிணாவே.

617. **கழுதை**

கழுதை கோகு அத்திரி வேசரி கத்தை
காளவாய் இராடம் கரம்வா லேபம்
கார்த்தவம் கருத்தவம் கரோடிகை இதன் பெண்
பெட்டை என்று பெயர்பெறு மன்றே,

618. **கோவேறு கழுதை**

கோவேறு கழுதைவே சரிகோ கரம்மே.

619. **ஒட்டகம்**

ஒட்டகம் நெடுங்களம் ஒட்டை ஒட்டிரம்
கனகதம் அத்திரி தாசோகம் இரவணம்
கூன்புறம் பெண்பிடி பெட்டை குட்டி
குழவி கன்று எனக் கூறல் வேண்டும்மே.

620. **நரி**

நரிசிரு காலன் சுரிகோ ணாய்சிவை
உள்ளன் இகலன் ஒண்டன் சம்பு
குரோட்டம் பூரி மாயுகோ மாயுவே.

621. **ஆண்நரி, பெண்நரி, குட்டி**

ஆணரி ஓரி பெண்ணரி பாட்டி
குட்டி பிள்ளை குருளை பறழே.

622 **நாய்**

நாய் எகின் எகினம் ஞாளி ஞமலி
கூரன் சுணங்கன் சாரமே யன்சுவா

623. பெண்நாய், குட்டி

பெண்ணாய் பாட்டி பிணாபிணை முடுவல்
குட்டி பிள்ளை குருளை பறழே.

624. செந்நாய்

செந்நாய் கொக்கு கோகம் முடுவல்
அண்டிகம் விருகம் ஆமென வறைவர்.

625. கோணாய்

கோணாய் தோண்டான் ஆமெனக் கூறுப.

626. நீர்நாய்

நீர் நாய் எகின் எகினம் ஆமென நிகழ்த்துப.

627. பூனை

பூனை பூஞை பூசை விடருகம்
அலவன் இற்புலி ஆகூண் வெருகு
பவனம் இந்தி பாக்கன் பில்லி
மண்டலி ஓதி விலாளம் மார்ச்சாலம்.

628. ஆண்பூனை, பூனைக்குட்டி

பூனையாண் கடுவன் போத்து அதன்பறழ்
குட்டி பிள்ளை ஆமெனக் கூறுப.

629. கத்தூரி மான்

கத்தூரி மிருகம் இரம்பம் காசறை
நாவி நானமா நானம் நரந்தம்
மறுவி மறுவல் மான்மதம் துருக்கம்
மிருக மதம் என விளம்பப் படுமே.

630. நாவியின் பிள்ளை

நாவிப் பிள்ளை நாமம் நாவியே.

631. **குரங்கு**

குரங்குஅரி சாகாமிருகம் கோடரம்
நிரந்தரம் கவிசி ரைநெடு வாலுகம்
வானரம் தோரணம் மந்தி மருக்கடம்
கானவன் சொங்கு களபம் கச்சகம்
வலிமுகம் கோகுலம் கீசகம் வலீமுகம்
பிலவங்கம் கடுவன் எனப்பெயர் பெறுமே.

632. **கருங்குரங்கு**

கருங்கு ரங்கு காருகம் யூகம்
நாகம் என்று நவிலப் படுமே.

633. **ஆண்குரங்கு பெண்குரங்கு**

ஆண்கவி கடுவன் பெண்கவி யூகம்
மந்தி என்று வகுக்கப் படுமே.

634. **மரக்கிளையில் வாழும் விலங்கின் குட்டி**

குரங்கு முதலிய கொம்பர்வாழ் விலங்கின்
குட்டி பிள்ளை குழவி மகவு
பார்ப்பு பறழ் எனப் பகரப் படுமே.

635. **ஓணான்**

ஓந்தி ஓத்தி ஓணான் ஓதி
சரடம் முசலி தண்டு சாயானதம்
ஓமான் கிருக வாதம்என் றோதுப.

636. **ஆண் ஓந்தி**

ஓந்தியாண் போத்து என்றுரைத்தற் குரித்தே.

637. **பல்லி**

பல்லி முசலி புள்ளி கவுளி
அண்டசம் கோகிலம் ஆகு மென்ப.

638. **பச்சோந்தி**

பச்சோந்தி கோம்பி காம ரூபியே.

639. **மூஞ்சூறு**

சுந்தரி சுண்டன் சுவவு சூரன்

641. காரெலி

காரெலி இரும்பன் கருப்பை வெள்ளெலிப்
பேரதுவிருபன்என விளம்பப் பெறும்.

642. பெருச்சாளி

அகழ்பெருச் சாளிமூடிகம் ஆகு உந்துரு
கந்துளம் களகம் எனக்கழ றினரே.

643. **அணில்**

அணில் வெளில் உறுத்தை வரிப்புறம் இலுதையாம்.

644. **அரணை**

அரணை பிராமணி அண்டசம் ஆமே.

645. உடும்பு

உடும்பு அண்டசம் நடி கோதா முசலி
முசலிகை என்ன மொழியப் படுமே.

6.6. முயல்

முயல்சசம் என்ன மொழிந்தனர் புலவர்.

647. **விலங்கின் ஆண்**

ஒருத்தல் போத்து உம்பல் ஓரி தகர்கடுவன்
களிறு பகடு ஏறு கலைமா விலங்கின்
ஆண்பாற் குரிய வவ்வம் மரபே.

648. **கவரி, உம்பல், குடாவடி. மான் மரை, எருமை புல்வாய், புலி, பன்றி இவற்றின் ஆண்**

ஒருத்தல் கவரி உம்பல் குடாவடி
மான்மரை எருமை புல்வாய் புலிபன்றி
என்பவற் றுணிற் கெய்தும் பெயரே.

649. **எருமை, காட்டா, புலி, பூனை, புல்வாய், பசு, மரை இவற்றின் ஆண்**

650. பசு, எருமை, ஆடு, யானை இவற்றின் ஆண்

உம்பல் எருமை, ஆடு உவா இவற்றுணே.

650 (அ) நரி, முசு இவற்றின் ஆண்

ஓரி நரி முசு விஞ்ஞெனை உரைப்பர்.

651. துருவாடு, யானை. யாளி இவற்றின் ஆண்

தகர் சுறவு துருவை தந்தி யாளியின்
ஆண்பால் எஃப அறிந்திசி ஞேரே.

652. பூனை கவி, முசு இவற்றின் ஆண்

கடுவன் பூனை கவிமுசு இவற்றுணே.

653. பன்றி, கரி, சுறவு இவற்றின் ஆண்

களிறு பன்றி கரி, சுறவு இவற்றின்
ஆணெனக் கூறுப அஞ்சொற் புலவர்.

654. எருமை, யானை, பசு, இவற்றின் ஆண்

பகடு எருமை யானை, பசு இவற்றுணே.

655. பன்றி, எருமை, புல்வாய், பாறு, மான், கவரி, பசு மரை, சுறவு, சங்கு இவற்றின் ஆண்

ஏறு பன்றி எருமை புல்வாய்
பாறு மான்கவரி பசுமரை சுறவு
சங்கு இவற்றுணெனச் சாற்றப் படுமே.

656. மான், முசு இவற்றின் ஆண்

கலைமான் முசுவி ஞெணெனக் கூறுப.

657. பன்றி, யானை, குதிரை இவற்றின் ஆண்

மாவென் கிளவி வராகம் வாரணம்.
தாவும் பரிஇவற் றுணெனத் தகுமே

658. விலங்கின் பெண்

பிடிமந்தி பாட்டி பெட்டைபிணை பிணவு ஆன்
நாகு எனவைத்து நவிற்றிய வெட்டும்
பாகுறு விலங்கின் பெண்பாற் படுமே.

659. கவரி, ஒட்டகம், பெருமா-இவற்றின் பெண்

பிடிகவரி ஒட்டகம் பெருமா இவற்றின்
பெண் எனவைத்துப் பேசினர் புலவர்.

660. **கருங்குரங்கு, குரங்கு, முசு-இவற்றின் பெண்**
மந்தி, காருகம் மருக்கடம் முசுக்களின்
வந்த பெண்பால் எனவகுத் தனரே.

661. **நரி, நாய், பன்றி-இவற்றின் பெண்**
பாட்டி, நரிநாய் பன்றியின் பெண்பால்.

662. **மரை, சிங்கம், ஒட்டகம், கழுதை, குதிரை இவற்றின் பெண்**
பெட்டை யென்னும் பெயர்மரை சிங்கம்
ஒட்டகம் கழுதை உன்ளி இவற்றின்
பெண்பாற் குரிய பெயரென லாமே.

663. **புலி, புல்வாய், பெருமா, ஒட்டகம், கவரி, பன்றி, நாய், கழுதை, குதிரை இவற்றின் பெண்**
பிணை, புலி புல்வாய் பெருமா ஒட்டகம்
கவரி பன்றி நாய்கழுதை குதிரை
இவற்றின் பெண் என்றி சைத்தனர் புலவர்.

664. **நாய், பன்றி, புல்வாய் இவற்றின் பெண்**
பிணாவு, நாய்பன்றி புல்வாயின் பெண்பால்.

665. **எருமை, பசு, மரை, இவற்றின் பெண்**
ஆன் மேதி பசுமரை ஆமிவற் றின் பெண்.

666. **மரை, மயிடம், மீன் இவற்றின் பெண்**
நாகு மரை மயிடம் நளிமீன் பெண்பால்.

667. **விலங்கின் பிள்ளை மரபு**
பறழ்பிள்ளை குழவி பார்ப்பு குருளை
கன்றுமறி குட்டி என்றவை விலங்கின்
பிள்ளைப் பெயர் எனக் கொள்ளப் படுமே.

668. **முயல், கீரி, பன்றி, நாய், நரி, அணில், புலி, முசு குரங்கு, ஆடு, பூனை, மான், பாம்பு இவற்றின் குட்டி**
பறழ் முயல் கீரி பன்றி நாய்நரி
அணில் புலி முசு குரங்கு ஆடு பூனைமான்
அராவு மென்றுங் காய விவற்றின்
குட்டி என்ப குறிப்புணர்ந் தோரே.

69. **பிள்ளை-மான், பன்றி, முயல், முசு பூனை, குரங்கு கீரி**

பிள்ளை மான்பன்றி முயல்முசு பூனை
குரங்கு கீரி இவற்றின் குட்டியே,

70. **குழவி :— முசு, ஒட்டகம் குரங்கு, மான், கடமை யானை, பன்றி, யாளி,**

குழவி முசு ஒட்டகம் குரங்கு மான் கடமை
யானை பன்றி யாளி இவற்றின்
குட்டி என்று குறித்தற் குரித்தே.

71. **கொம்பில் வாழ்வனவற்றின் இளமையும், தவழ்பவற்றின் இளமையும் பார்ப்பு**

பார்ப்பென் கிளவிபணை வாழ் விலங்கின்
பிள்ளையும் தவழ்சாதிப் பிள்ளையு மென்ப.

72. **பன்றி, குழிநரி, புலி, நாய், முசு, மான், யானைமுயல் இவற்றின் குட்டி குருளை என்று கூறப்படும்**

குருளை பன்றி குழிநரி புலிநாய்
முசுமான் யாளி முயலெனும் இவற்றின்
குட்டி எனப்பெயர் கூறப் படுமே.

73. **பசு, எருமை கவரி, பரி, ஒட்டகம், கடமை, யானை காட்டா, மரை, மான் இவற்றின் குட்டியின் பெயர் கன்று என்று கூறப்படும்.**

கன்று பசு எருமை கவரி பரி ஒட்டகம்
கடமை யானை காட்டா மரை மான்
குட்டியின் பெயரெனக் கொண்டனர் புலவர்.

74 **குதிரை, ஆடு, மான்-இவற்றின்குட்டி மறி என்று வழங்கப்படும்.**

மறிபரி ஆடு மான்என் பவற்றின்.
குட்டியின் பெயரெனக் கொண்டனர் புலவர்.

75. **குதிரை, ஆடு, பன்றி, ...**

குதிரையின் மறியும் கொறியின் மறியும்
பன்றி முயல்நாய் நரிப்பறழும் மான்கன்றும்
புலியின் குருளையும் பூனை கீரி
குரங்கு மூசு இவற்றின் பிள்ளையும் குட்டி.

676. **விலங்கின் பொதுப்பெயர்**

விலங்கின் பொதுப்பெயர் மிருகம் குரங்கம்
குரங்கு மான்மா எனக்கூறப் படுமே.

677. **விலங்கின் கூட்டம்**

விலங்கின் கூட்டம் கணம்குலம் விருந்தம்
யூதம் சாலம் வியூகம் என்ப.

678. **விலங்கின் வால்**

விலங்கின்வால் கூலம் இலாங்கூலம் வேசகம்
தோகை வாலதி எனச்சொற்றனர் புலவர்.

679. **வால் கீழிடம்**

விலங்கின் வாற்கீழ்டம் வெருகம் என்ப.

680. **விலங்கின் கொம்பு**

விலங்கின் கொம்பு உலவை விடாணம் சிருங்கம்
கோடு மருப்பு எனக் கோட்படு மன்றே.

681. **கொம்பு இல்லா விலங்கு**

கொம்பிலா விலங்கு குமரம் தூபரம்.

682. **பாம்பு**

பாம்பு அங்கதம் கட்செவி பணி பன்னகம்
தூம் பெயிற்றுரகம் அகி கஞ்சுகி அரி
பணம் காகோதரம் பவனாசனம்
மாசுணம் காலிலி தந்தசூகம் பாந்தள்
அரா அரவு அரவம் அண்டசம் அனுக்கம்
மராளம் விடதரம் வியாளம் வாதாசனம்
குண்டலி சருப்பம் கூடபதம் அறுகால்
மண்டலி ஊன்றி வாதாசி இரும்பை.
போகி சக்கிரி பனகம் நாகம் புயங்கமே.

683. **பாம்பின் படம்**

பாம்பின் படம் பை பணம எனப்படுமே.

684. **பாம்பு படம் விரித்தல்**

பாம்பு படம் விரித்தல் பைத்தல் என்ப.

685. **பாம்பின் படப் பொறி**

உரக படப் பொறி உத்தி துத்தியே.

686. **பாம்பின் விஷைப்பல், அதன் உயிர்ப்பு**

அரவி னச்சுப்பல் அதட்டம் தட்டம் ஆமே.
அதன துயிர்ப்பும் அதட்டம் ஆமே.

687. **பாம்பின் விடம்**

அரவின் விடம் நஞ்சு நஞ்சம் நச்சு ஆலம்
கரளம் காரி காளம் கடுவே.

888. **சாரைப் பாம்பு.**

சாரைப் பாம்பு தானே இராசிலம்
இலஞ்சி துண்ட முமாமென் றியம்புவர்.

689. **பெரும் பாம்பு**

பெருநெடும் பாம்பின் பெயர் பாந்தள் மாசுணம்
அயகரம் ஆமென வறைந்தனர் புலவர்.

690. **பறவை நாகம்**

பறவை நாகம் குக்குட சருப்பம்

691. **மண்டலிப் பாம்பு**

நஞ்சுமிழ் மண்டலி நாமம் கோளகை
கோளகம் என்று குறிக்கப் படுமே.

692. **கருவழலை, கண்குத்திப்பாம்பு, நாகம்**

கருவழலை இராசமா நாகம் கண்குத்திப்
பாம்பு மாலு தானம் உதாசனன்
மூர்க்கன் நாகம் என மொழிகுவரே.

693. **அன்னம்**

அன்னம் வக்கிராங்கம் அஞ்சம் எகின் எகினம்
உன்னம் விகங்கம் மராளம் ஓதிமம்

மென்னடை என்பமேம்படு புலவர்.

694. **இனிதாகப்பாடும் எகினம்**

இன்னிசை பாடு மெகினம் காதம்பம்.

695. **அன்னத்தின் இறகு**

அன்னத்தினிறகு தூவி தூவிகை ஆம்.

696. **மயில்**

மயில் நவிரம் ஒகரம் மஞ்ஞை சிகி சிகண்டி
கேகயம் ஞமலி தோகை சிகாவளம் மயூரம்
பீலி கேதாரம் பிணிமுகம் இதனுண்
கலாபம் போத்து எழால் கலாபி ஆமே

697. **மயிற்பீலி**

கலவ மயிற் ரேகை கலாபம் பீலி
கூழை சிகண்டம் கூந்தல் தழை தூவி
தொங்கல் சரணம் எனச் சொற்றனரே.

698. **மயிற்ரேகைக்கண்**

மயிலின் இறகின் வாய்த்தகண் மேசகம்
சந்திரகம் எனத்தந்தனர் பெயரே.

699. **மயில் குரல்**

ஆடு மயிற்குரல் அகவல் ஆலல்
ஏங்கல் என்றுங் கெய்தும் பெயரே.

700. **எண்காற் பறவை**

சரபம் பறவை வேந்து சம்பரம்
வருடை பெரும்புள் வாருண்டம் துரோணம்
சிம்புள் ககேசன் சிங்க வயிரி என்
றெண்காற் புள்ளிற் கேய்ந்த தொல்பெயரே.

701. **கருடன்**

கருடன் கலுழன் ககபதி தார்க்கியன்
திருமா லூர்தி அருணன் தன்பின்
பவனு சனுசி பன்னக வயிரி
உவணன் உவணம் உரகாரி நாகாந்தகன்

புந்தி யிளவல் புள்ளரசு செம்புள்
இமையிலி வயின தேயன் என் றிசைப்பர்.

702. **சக்கர வாகம்**

சக்கர வாகப்புள் நேமிப்புள் சக்கரம்
கோகம் ரகோரம் பெருங்குருகு என்ப.

703. **சாதகப் பறவை**

சாதகப் புட் பெயர் சாரங்கம் ஆமே.

704. **கழுகு**

கழுகு புண்டரிகம் பவணை உவணம்
பஞ்சரம் சகுந்தம் பணவை கிருத்திரம்
எருவை புண்டரம் என்மனார் புலவர்.

05. **பருந்து**

பருந்து சேனம் பாறு பாரசிகை
உவணம் கங்கம் என்றுரைக்கற் பாற்றே.

706. **கேகயப்பறவை**

கேகயப் புட் கிஞ்சுகம் அசுணமாமே.

707. **கிளி**

கிளி அரி அவந்திகை கிள்ளை கீரம்
சாரு சுகம் ஏசி தத்தை சுவாகதம்
வன்னி என்றிதற்குப் பன்னிய பெயரே.

708. **கருங்கிளி**

கிளி விசேடம் கருங்கிளி கிள்ளை கீரம்.

709. **சகோரப் பறவை**

சகோரம் பேராந்தை சாரம் அஃபோதம்
நிலாமுகி நிலாக்கூதிருண்புள் என்ப.

710. **செம்போத்து**

செம்போத்துக் குக்கில் எனச்சிறந் தன்றே.

711. **குயில்**

குயில் கோகிலம் கோரகை பரபிருதம்
காள கண்டம் பிகம் கள கண்டம்
அன்னிய புட்டம் பரபுட்டம் என்ப.

712. **கூகை**

கூகை ஊமன் குடிஞை கவுசிகம்
பெரும்புள் நிசாசரி எனப் பெயர் பெறுமே.

713. **கோட்டான்**

கோட்டான் உலூகம் குரால் பொய்கை குடிஞை.

714. **நாகணவாய்ப்புள்**

நாகணவாய்ப்புணுமம் குரகம்
சாரிகை பூவை எனச் சாற்றினரே.

715. **கரிக்குருவி**

கருங்குருவி கஞ்சரீடம் கஞ்சனம்
கயவாய் பிள்ளை காரி கிகிணி
வயா அன் வயவன் வஞ்சுளன் வலியான்
பாரத்துவாசம் எனப்பகர்ந் தனரே.

716. **சிச்சிலி**

சிச்சிலிப்புள் சிரல் தித்திரி கவுதம்
பொன் வாய்ப்புள் எனப் புகன்றனர் புலவர்.

717. **கோழி**

கோழி சரணாயுதம் குருகு வாரணம்
ஆண்டலை குக்குடம் ஆகுமென்ப.

718. **ஊர்க்குருவி**

ஊர்க்குருவி கலிங்கம் குலிங்கம் புலிங்கம்
கடலகம் சடகம் கல்வி சகடம் மே.

719. **கானாங்கோழி**

கானாங் கோழி பூழான் பூழே.

720. **வானம் பாடி**

வானம் பாடி தற்பாடி சாதகப்புள்
கார்னம் மேகப்புள் கம்புள் கலிங்கம்
காருண்ணி யோடிரு நான்கு மிதற்கு
நேரும் என்ப நிறைமொழிப் புலவர்.

721. **காடை**

காடை குறும்பூழ் இதல் கபிஞ்சலம்.

722. **கவுதாரி**

கவுதாரி சிரவம் இதல் சிவல் பூழான்
கோரசம் என்று குறித்த தொல் பெயரே.

723. **பகண்டை**

பகண்டை சிவல் எனப் பகரப் படுமே.

724. **வெளவால்**

வாவல் அஞ்சலிகை வெளவால் துரிஞ்சில்
ஆவாலம் ஆலாலம் ஆகு மென்ப.

725. **பொய்யாப்புள்**

சலாங்கு பொய்யாப்புள் தானுகும்மே.

726. **காக்கை**

காக்கை பரபிருதம் கரவாகம் கொடி
காரி கரடம் கரும்பிள்ளை வாயசம்
நரந்தம் கோண்டம் நராந்தம் உரண்டம்.
புட்டம் அரிட்டம் பலி புட்டம் துரோணம்
காகம் என்மனுர் கற்றுணர்ந் தோரே.

727. **அண்டங்காக்கை**

அண்டங் காக்கை காலோலம் ஆமே.

728. **ஆந்தை**

ஆந்தை கூன் பிங்கலை இருடி கின்னரம் ஆம்.

729. **புரு**

புரு இரதபதம் கபோதம் களாவம்
தாதுணம் என்ப துகடீர் புலவர்.

730. **கரும்புரு**

கரும் புறவு பாராவதம் கபோதமே.

731. **மாடப்புரு**

மாடப் புறவின் பெயர்

733. **தூக்கணாங்குருவி**

தூக்கணங் குருவி தூக்கு தூதுணம்.
சிந்தன் சிதகன் முந்தைப் பெயரே.

734. **சம்பங்கோழி**

சம்பங் கோழி கம்புள் என்ப.

735. **அன்றில்**

அன்றில் கிரவுஞ்சம் தரிஞ்சகம் இதனுண்
அகன்றில் என்ப வருங்கலை யோரே.

736. **மீன் குத்தி**

மீன் குத்திப் பறவை மீனெறி சிரலே.

737. **யானையுண் குருகு (சக்கர வாகம்)**

யானையுண் குருகு பெருங் குருகு என்ப.

738. **நாரை**

நாரை சிகரி நரை வண்டானம்
கொய்யடி குருகு எனக் கூறினர் புலவர்.

739. **கருநாரை, வெண்ணாரை இவற்றின்**

கருநாரை சிகரி வெண்ணாரை சாரசம்
முந்துஎன மொழிப முந்தையோரே.

740. **குருகு**

குருகு தாரா புட்கரம் ஆகுமே.

741. **கொக்கு**

கொக்கு வலாகம் குரண்டம் பகம் புதா
மஞ்சுகம் என்ப வண்டமிழ்ப் புலவர்.

742. **பெருநாரை**

பெருநாரை போதா பிதா போதி போதா

743. **நீர்க் காக்கை**

நீர்க்காக்கை காரண்டவம் கரண்டம்
அருக்கம் என்ப வருங்கலை வல்லோர்.

744. **நீர்ப்பறவை**

நீர்ப்பறவைப்பொது நீர்வாழ் பறவை

உன்னம் குரம் கின்னரம் உற்குரோசம்.

745. **பறவை**

புட்பொது வீகங்கம் போகில் பிணிமுகம்
பறவை அண்டசம் வீகம் பக்கிவீ விகிரம்.
சகுந்தம் வயானம் சகுனம் ஆசுகம்
பதங்கம் பதகம் சகுனி பத்திரி ககம்
குடிஞை குருகு எனக்கொண்ட தொல்பெயரே.

746. **சேவல்**

சேவல் மயிலொழி செங்கா லன்னம்
கோழி முதலிய குருகு பலவற்றின்
ஆண்பான் மரபி னபிதா னம்மே.

747. **கோழி, கூகை இவையல்லாத பறவைகளின் பெண் பால்**

கோழி கூகை அல்லாப் புள்ளின்
பெண் பால் அளகு எனப் பேசினர் புலவர்.

748. **பறவையின் பெண்பால்**

பெட்டை பேடை பெடை என மூன்று
மிட்ட பறவைப் பெண்பெய ரென்ப.

749. **பறவை மூக்கு**

பறவை மூக்கு அலகு சுவவு துண்டம்
சச்சு சஞ்சு எனச் சாற்றினர் புலவர்.

750. **பறவை இறகு**

பறவைச்சிறை பறை பக்கம் பத்திரம்
இறகு குரல் கூழை இறை சிறகு வாசம்
பிச்சம் கூரல் பிஞ்சம் சதம் சதனம்
தூவி தோகை எனத் தொகுத்தனரே.

751. **பறவையின் இறகடி**

புள்ளி னிறகடி முள் முருந்து என்ப.

752. **முட்டை**

முட்டை கோசம் அரிட்டம் அண்டம் சினை
குடம்பை கரு எனக் கொண்டதொல் பெயரே

753. பறவைக் குஞ்சு

பறவைக் குஞ்சின் பெயர்பிள்ளை பார்ப்பே.

754. கிள்ளை, அன்றில், கிகிணி இவற்றின் பிள்ளைப் பெயர்

கிள்ளை அன்றில் கிகிணி இவற்றின்
பிள்ளை பிள்ளை எனப் பெயர் பெறுமே.

755, பறவை சிறகடித்தல்

புட்சிற கடித்தல் ஒசனித்தல் புடைத்தலே.

756. பறவைக் கூட்டம், பறவைக் கூட்டத்து ஓசை

புட்குழாம் தொழுதி அக்குழாத் தரவம்
துழனி என்ப துகடீர் புலவர்.

757. பறவைக் குரல்

பறவைக் குரல் கலகலம் பயிர் சிலம்பல்
அலம்பல் துழனி ஆகு மென்ப.

758. குருவிக் கூடு

குருவிக் கூடு குயிலாயம் குலாயம்
குரம்பை கட்சி குடம்பை குஞ்சுறையே.

759. வண்டு

வண்டு பிரமரம் மதுகரம் மிஞிறு தேன்
புண்டரீகம் புள் அளி அறுபதம்
அரி கேசரம் கழுது ஆர்பதம் சிலீமுகம்
வரி மா மந்தி மொய், வரிக்கடை, கீடம்
சுரும்பு பிருங்கம் தும்பி சாரங்கம்
கரும்புள் கஞ்சாளிகம் கள்ளுண் பிரசம்
கீதம் மதுபம் கேசவம் ஈ வடு
சூதம் சஞ்சரிகம் எனச் சொல்லுப.

760. **ஆண் வண்டு பெண் வண்டு**

வண்டாண் தும்பி மதுகரம் சுரும்பு இதன்
பெண்டான் தேன் எனப் பேசப் படுமே.

761. **தேனீ**

தேனி பிரசம் அலரி தேன் சரகமே.

762. **தேன் கூடு**

பெருந்தேன் கூடு இருல் பிரசம் ஆமே.

763. **மரக்கிளையில் கட்டிய தேன்கூடு**

தேனினு மினிய செந்தேன் சிறுகூடு
கோற்றேன் என்ப குணமுணர்ந் தோரே.

764. **சிள்வண்டு**

சிள் வண்டு நெடி சிதடி சிமிலி சில்லி
சில்லிகை சில்லை சிள்வீடு சில்லே.

765, **மின் மினி**

மின்மினி நிசாமணி ஞவல் நுளம்பு
கத்தியோதம் அலகு கச்சோதமே.

766. **இந்திரகோபம்**

இந்திர கோபம் மூதா ஈயல் கோபம்
நொள்ளல் நுளம்பு என்று நுவலப்படுமே.

767. **உலண்டு**

உலண்டு கீடம் கோற்புழு என்றோதுப.

768. **ஈ**

ஈப்பறவைப் பெயர் இயம் மக்கிகமே.

769. **கொதுகு**

கொதுகு சகல் மசகம் கொசுகு உலங்கு அசவல்.

ஞொள்ளல் துள்ளல் நுளம்பு வலு நிலம்பி
அஞெலம் முஞெல் அஞெல் என்றறைந்தனர் புலவர்.

770. **சிலம்பி**

நுண்ணூற் சிலம்பியி னதுபெயர் நுவலில்
உரணை உரணம் உலூதை அரி ஆமே.

771. **உஞெ**

உஞெமராரி உசு என்றோதுப.

772. **நாகரவண்டு**

நாகர வண்டின் நாமம் நொள்ளையே.

773. **எறும்பு**

ஊரு மெறும்பு உறவி பிபீலிகை உழுவம்
பிலன் பிலஞ்சுலோபம் எனப் பெயர் பெறுமே.

774. **மொய்க்கும் எறும்பின் விசேடம்**

முயிறு மொய்க்கும் எறும்பின் விசேடம்.

775. **தேள்**

தேள்நளி விருச்சிகம் தெறுக்கால் பறப்பன்
துட்டன் என்றுரைப்பர் தொன்னூல் புலவர்.

776. **கறையான்**

கறையான் ஆழல் சிதல் சிதலை செல்லே.

777. **விட்டில்**

விட்டில் சலபம் பதங்கம் என்ப.

778. **மண்ணால் வீடு கட்டும் வண்டு**

மட்குடம்பை யிழைக்கும் வண்டு குளவி
வேட்டுவன் வேட்டு வாளி ஆமே.

779. **குழைசேறு உழு புழு**

குழை சேறுழு புழு குலால கீடம்.

780. **புழு**

புழு கிருமி கீடம் பொட்டொடு குணுவே

781. **புழுவின் ஒரு பிறப்பு**

புழுவிஞேர் பிறப்பின் பெயர் பொகுட்டு என்ப.

782. **நாங் கூழ்ப் புழு**

நாங்கூழ்நா மம் பூ நாகம் என்ப.

783. **அட்டை**

அட்டை சஹுகம் உரு ஆகும்மே.

784. **நண்டு**

நண்டு குளீரம் நளிர் குளிர்நள்ளி புள்ளி
அண்டசம் ஞண்டு ஞெண்டு அலவன் கவைத்தாள்
கள்வன் மதி கருக்கடகம் ஆமே.

785. **ஆண் நண்டு**

ஆண் நண்டின் பெயர் அலவன் என்ப.

786. **ஆமை**

ஆமை கமடம் கச்சபம் அண்டசம்
அம்பணம் கூர்மம் அழுங்கு கல்லி
உறுப்படக்கி ஒடுங்கி கிராகம் ஆம்.

787. **பெண் ஆமை**

பெண்ணாமை கமடி துளி எனப் பெயரே,

788. **முதலை**

முதலை இடங்கர் முசலி சிஞ்சுமாரம்
மகரம் அண்டசம் வன்மீன் என்ப.

789. **ஆண் முதலை**

முதலையாண் கராம் கரா என மொழிப.

790. **தவளை**

தவளை அண்டசம் தண்டடந்திரியரி
குவளைப் புனலிற் குதிகொளு நுணலை
காலூரம் நீகம் மண்டுகம் பேகம்
சாலூரம் தேரைமரை சாசிபம் என்ப

791. **பெண் தவளை**

பெண்டவளையின் பெயர் பேகி மண்டுகி.

792. **தவளையின் வேறுபாடு**

தவளை விகற் பந்தான் பிலவங்கம்
திவளிலை வாழை வெண்தேரை என்ப.

793. **மீன்**

மீன் செகுலி வகுலி மீனம் அண்டசம்
மயிலை சலசரம் சேல் மச்சம் என்ப.

794. **மகர மீன்**

மகர மீன் கலை சுருமான் மீனேறே.

795. **ஆண் சுரு மீன்**

கண்ணிய சுறவாண்களிறு ஏறு ஆமே.

796. **யானைமீன், பெருமீன்**

யானைமீன் பனைமீன் பெருமீன் திமிலம்.

797. **யானையை விழுங்குமீன்**

யானையை விழுங்குமீன் திமிங்கிலம் திமிதிமி
திமிதிமியை விழுங்குமீன் திமிதிமிங்கிலமே.

798. **மலங்கு மீன்**

மலங்கு ஏனை நாறை எனவழுத் தினரே.

799. **இருல் மீன்**

இருல் இரு இறவு என்றியம்பப்படுமே.

800. **ஆரல் மீன்**

ஆராலின் பெயர் ஆரல் ஆமே.

801. **வாளை மீன்**

வாளை பைஞ்சிலைச் சேல் என வருமே.

802. **கெண்டை மீன்**

கெண்டை கயல் சபரம் சேல் எனக் கிளப்பர்.

803. **ஓர் மீனின் விசேடம்**

உல்லம் ஓர் மீனின் விசேடம் என்றோதுப.

804. **வரால் மீன்**

வரி வரால் வரால் எனவைக்கப்படுமே.

805. **கெளிறு**

கெளிற்று மீன் கெளிறு எனக்கிளாந் தனர்புலவர்.

806, **அயிரை**

அயிரை ஓர்சிறுமீன் ஆகு மென்ப.

807. **பெரியமீன், சிறியமீன்**

பெரியவுஞ் சிறியவு மாய்ப்பெரு நீருள்
வருமீனெல்லாம் மச்ச விசேடம்.

808. **மீன் ஆண், மீன் பெண், அதன் சினை**

மீனுண் போத்து அதன் பெண் நாகு அதன்சினை
குண்டி எனப் பெயர் கோடன் மரபே.

809. சங்கு

சங்கு கோடு ஊரி தாரம் தரம் வெள்ளை
கம்புள் வளை கூனல் கம்பு வளையகம்
சுத்தி இடம் புரி சுரிமுகம் மனவு நத்து நந்து
இப்பி நாகு புரி நத்தம்
வண்டு சங்கு வாரணம் பணிலம் ஆம்.

810. சங்கின் ஆண், அதன் இளமை

சங்கிளுண் ஏறு சங்கிளமை நாகே,

811. இப்பியாயிரம் சூழ்ந்த சங்கு

இப்பியாயிரம் சூழ் சங்கு இடம்புரியே.

812. வலம்புரிச் சங்கு, சலஞ்சலம் இவற்றின் பெயர்

இடம்புரியாயிரஞ் சூழிருஞ் சங்கு
வலம்புரி கொக்கரை சலஞ்சலம் பணிலம்.

813. பாஞ்ச சன்னியம்

பாஞ்ச சன்னியம் பணில மாயிரம்
சூழ்ந்த சங்கு எனச்சொற்றனர் புலவர்.

814. கிளிஞ்சில்

கிளிஞ்சில் இறல் எருந்து ஏரல் என்ப.

815. இப்பி

இப்பி சுத்தி சுத்திகை என்ப.

816. நத்தை

நத்தை கருநந்து கூன்நாகு சுரிமுகம்
நத்தம் நந்து என நவின்றனர் புலவர்.

817, சோகி

சோகி கவடி வராடி வராடிகை
பலகறை அலகுபட்டி வட்டி வெள்வரியே,
மூன்ருவது விலங்கின்பெயர்த் தொகுதி முற்றியது.

நான்காவது மரப்பெயர்த் தொகுதி.

818. **பஞ்சதரு**

சந்தானம் பாரி சாதம் அரிசந்தனம்
மந்தாரம் கற்பகம் ஆமிவை யைந்தும்
ஆன்ற அமரர்க் கரும்பய னுதவும்
வான் தரு என்ன வைத்தனர் புலவர்.

819. **வில்வ மரம்**

வில்வம் சிவிருக்கம் வில்லுவம் திருமரம்
மாவிளம் கூவிரம் மாலூரம் கூவிளை
கூவிளம் என்று குறித்தனர் புலவர்.

820. **கொன்றை மரம்**

கொன்றை ஆர்க்குவதம் தாமமொடு
மன்றலங் கடுக்கை மதலை இதழியே,

821. **ஆத்தி மரம்**

ஆத்தி சல்லகி தாதகி ஆரம் ஆரே.

822. **சந்தன மரம்**

சந்தனம் ஈகம் சாந்தம் அனுக்கம்,
சந்தம் சந்திர திலகம் சந்தணி
மலையாரம் கோர வாரம் படீரம்
மலையசம் ஆரம் மணங்கமழ் சந்தே.

823. **செஞ்சந்தன மரம்**

செஞ்சந்தனம் அட்டி செக்கர்ச் சந்தனம்
மஞ்சு தோய் சல்லியம் மதுரம் பிசனம்
எஞ்சலி லனுகம் என்றிசைத்தனர் புலவர்.

824. **அகில்**

அகில் காக துண்டம் சாகா துண்டம்
அகரு பூழில் என்ருகும்பெயரே.

825. **கோங்கு**

கோங்கு கன்னிகாரம் பலினி கோங்கம்
ஓங்கு பிணர் ஞாழல் துருமோ பற்வமே.

826. **குரா**

அராவா யெயிற்றி னரும்பி மானிட மீன்
குராமரம் கோட்டம் குரவு கோடிலமே.

827. **மராமரம்**

மராமரம் ஆச்சா மரம்சாலம் யாலம்
பராரை நெட்டா பணைத்தெழு சுள்ளியென்ப.

828. **ஆச்சா மரம்**

ஆச்சா மரம் சுள்ளி ஆஎனலாமே.

829. **வேங்கை மரம்**

வேங்கை திமிசம் திமிசு திமிதம் கணி
தேங்கம பூசனம் பிரசாரம் திமிலமே.

830. **ஞாழல் மரம்**

ஞாழல் பலினி ஆமென நவில்வர்

831. **பாதிரி மரம்**

பாதிரி புன்காலி பாதிரம் பாடலம்.

832. **சண்பக மரம்**

சண்பகம் சம்பகம் சாம் பேயம் செண்பகம்.

833. **புன்னை மரம்**

புன்னை நாகம் புன்னு கம்மே.

834. **சுர புன்னை**

சுரபுன்னை வழை எனச் சொற்றனர் புலவர்.

835. **குங்கும மரம்**

குங்கும மரம் கொங்காரம் துருக்கம்
கொங்குறு ஞாழல் குளிரலர் நறவம்.
மாலம் மரவம் என்றேலும் பெயரே.

836. **அசோக மரம்**

தண்டளிரசோகம் பிண்டிகா கோளி
விண்டலர் செயலை வெறிகொள் சேந்து அசோகே.

837. **செருந்தி மரம்**

செருந்தி பஞ்சரம் செங்கோடு என்ப.

838. **அனிச்சமரம்**

அனிச்சம் நறவம் அருப்பலம் சுள்ளி ஆம்.

839. **மகிழ மரம்**

மகிழ் இலஞ்சி கேசரம் வகுளம் மகிழம்.

840. **மாதுளை மரம்**

மாதளை தாடிமம் மாதுளம் கழுமுள்
மாதுளங்கம் மாது லுங்கமே

841. **தாது மாதளை மரம்**

தாது மாதளை தாடிமம் தானே.

842. **மருதோன்றி மரம்**

மருதோன்றி தோன்றி கோரண்டம் குறிஞ்சி குரவகமே.

843. **பசுமை நிற மருதோன்றி, மரம்**

குளிர்பைந் துணர் மரு தோன்றி குரண்டகம்
தளிர்செறி கோரண் டகம் எனத் தகுமே.

844. **மருதோன்றி (தொடர்ச்சி)**

மலர னுங்கா மரு தோன்றி மாசகை
வாடாக் குறிஞ்சி எனவகுத் தனரே.

845. **மருதோன்றி**

குருதிப் பூமரு தோன்றி குரவகமே.

846. **மேகவண்ணப் பூ மரு தோன்றி மரம்**

மேக வண்ணப்பூ மென்மரு தோன்றி
மேக வண்ணக் குறிஞ்சி விரைசெறி
மழை வண்ணக் குறிஞ்சி புயல் வண்ணக் குறிஞ்சி
தழையவிழ் சயிரேயகம் பாணயமே.

847. **மருதோன்றி மரம்**

பீதக மலர் மரு தோன்றி பிதை ஆம்.

848. **மருதோன்றி மரம்**

பொன்மை கலந்த கருமைமென் போதவிழ்
நன்மரு தோன்றி குறிஞ்சி சகசரி.

849. **நறுவிலி மரம்**

நறுவிலி மரத்தின் நாமம் செலு வலி
முறிசெறி வெளிறு அலி ஆமென மொழிப.

850. **கடம்பு மரம்**

கடம்பு நீபம் கதம்பம் இந்துளம்
தடஞ்சினை விசாலம் அரத்தம் தானே.

851. **வெண் கடம்பு மரம்**

வெண்கடம்புமரா மராமரம் என்ப.

852. **நிலக்கடம்பு மரம்**

நிலக்கடம்பு கோகனம் எனநிகழ்த்துப.

853. **குமிழ மரம்**

குமிழ்வ வைச்சிரவணி கூம்பல் கடம்பலே.

854. **பாலை மரம்**

பாலை சீவந்தி சீவனி என்றறற்பாற்றே.

855. **வெட்பாலை**

வெட்பாலை கிரிமல்லிகை குடசம் என்ப.

856. **மஞ்சாடி மரம்**

மஞ்சாடி மரம் திலகம் திலம் ஆமே.

857. **கிஞ்சுகம்**

முள்ளரைச் செவ்விதழ் முருக்கு கிஞ்சுகம்
கள்ளவிழ் பலாசம் கவிர் எனலாமே.

858. **பலாசு**

பலாசு புனமுருக்கு பலாசம் ஆமே.

859. **குருந்த மரம்**

குருந்த மரத்தின் பெயர் குந்தம் என்ப.

860. **நொச்சி மரம்**

நொச்சி சிந்து வாரம் நிக்குண்டி.

861. **விளா, களா**

விளா விளவு ததித்தம் வெள்ளில் கபித்தம்
களா கள் களவு எனக் கழறினர் புலவர்.

862. **வன்னி மரம்**

வன்னி இரத்த துத்திகை தமனி
செந்நிறக் கலிசம் குலிசம் சமியே.

863. **தணக்கு மரம்**

தணக்கு நுணவை, நுணா எனத்தகுமே.

864. **நுணா**

நுணா மரம் நுணவை நுணவு என நுவல்வர்.

865. **இலவு மரம்**

இலவு பூரணி சான்மலி பொங்கர் என்ப.

866. சோதி மரம்

சோதி விருக்கம் சோதிமா மரமாம்.

867. இருள் மாமரம், பெருங்காயம்

இருண்மா மரம் தாபிஞ்சம் தமாலம்
பெருங்காயம் இங்கு காயம் இந்துளியே

868. கருங்காலி

கருங்காலியின் பெயர் கதிரம் காதிரம்.

869. செங்கருங்காலி

செங்கருங் காலி சிறுமா ரோடமே.

870. தேற்றுமரம்

தேற்று மரம் கதலி சில்லம் நீர்தெளிக்கும்
ஆற்ற லுடைய தேறு இல்லம் ஆமே.

871. தேக்க மரம்

தேக்க மரம் சாதி குமுதிகம் சாகம் ஆமே.
குமிதிகம் என்பது குமுதிகம் என்றுயிற்றுப்போலும்,

872. நெல்லி மரம்

நெல்லி ஆமலகம் என நிகழுமே.

873. கடு மரம்

கடு அரிதகி பத்தியம் எனக்கழறுப.

874. தான்றி மரம்

தான்றி மரம் கலித்துருமம் விபீதகம் தானே.

875. மருத மரம்

மருது பூதவம் மீக்குவம் அருச்சுனம் ஆம்.

876. இலுப்பை மரம்

இலுப்பை குலிகம் இருப்பை மதூகம்.

877. புன்கு, தமாலம்

பொரியின் மென்மலர் சொரிபுன்கு காஞ்சனம்
எரிபுரை தளிர்நத்த மாலம் என்ப.

878. மணிப்புன்கு மரம்

மணிப்புன்கு இங்குதி மாதூ கம்மே.

879. காயா மரம்

காயா வச்சி காசை அஞ்சனி
பூவை அல்லி புன்காலி என்ப.

880. கருக்கு வாளி

கருக்கு வாளி கத்திகை முத்தகமாம்.

881. பராய் மரம்

பராய் மரம் புக்கி பசுநா விட்டில்
பிராய் மரம் என்று பெயரா கும்மே.

882. உசில மரம்

உசில் முன்னம் சீக்கிரி துரிஞ்சில் என்றேதுப.

883. அழிஞ்சில் மரம்

அழிஞ்சில் சேமரம் செம்மரம் அங்கோலம்.

884. எட்டி மரம்

எட்டி காளம் கோடரம் மதுகம்.
முட்டி காஞ்சிரம் ஆமெண மொழிப.

885. முருங்கை மரம்

முருங்கை சிக்குரு புனமுருங்கை புன்கு என்ப.

886. சேங் கொட்டை மரம்

சேங்கொட்டை மரம் வீரசாகி பல்லாதகி
ஓங்கெரி முகி என்றேதப் படுமே.

887. **கள்ளியின் வகை**

வள்ளி கள்ளி வச்சிரம் சதுரக்
கள்ளி திருகு கள்ளி கண்டிரவம்
முள்ளைச் சூழ்வச்சிரம் வச்சிராங்கம்மே.

888. **உடை மரம்**

உடை குடை வேலென் ருேதினர் புலவர்.

889. **ஒடை மரம்**

ஒடையும் ஓமையும் உலவை எனப்படும்.

890. **கடவு மரம்**

கடவுமரம் நடவை கடவை கவிறுக்கு
மடவை என்ப வண்டமிழ்ப் புலவர்.

891. **வேல மரம்**

வேல மரம் உடை குடை என விதித்தனரே.

892. **ஒதிய மரம்**

ஒதிய மரம் ஓதி உதி ஆமென் ருேதுப.

893. **வாகை மரம்**

வாகை சிரீடம் வண்பாண்டில் பிரமே.

894. **அகத்தி மரம்**

அகத்தி கரீரம் அச்சம் முனி ஆமே.

895. **முன்னை மரம்**

முன்னை வனசாகம் முனிசாகம் என்ப.

896. **காரை**

காரை பைதிருகம் ஆமெனக் கழறுப.

897. **மழுக்காரை**

மழுக்காரை வைகங்கதம் எனப்படுமே.

898. கறி வேம்பு

கறி வேம்பு கருவேம்பு கஞ்சகம் ஆமே.

899. வேப்ப மரம்

வேம்பு பிசிதம் பிசுமந்தம் நிம்பம்
காம்புங் கைக்கு மாலுகம் எனக் கழறுப.

900. எலுமிச்ச மரம்

எலுமிச்சு அம்பு அருணம் இலிகுசம் முருக்கு
சதாபலம் தந்தசடம் சம்பிரம்.

901. நாரத்தை

நாரத்தை நரந்தம் நாரங்கம் நாரம்
நாக ரங்கம் ஆமென நவில்வர்.

902. புளிய மரம்

பொந்து படும் பெரும் புளி எகின் எகினம்
சிந்துரம் சிந்தம் சிந்தாரம் சிந்தகம்
தேம்பறிர் சஞ்சீவகரணி திந்துருணி
ஆம்பிலம் அணபனிருரவேமிது
(குறிப்பு:-கடைசி அடி சரியாக இல்லை,

903. நாவல் மரம்

நீனிறத் தீங்கனி நாவல் நேரோடம்
வானிமிர் சம்பு ஆருகதம் என வழுத்துப.

904. குழி நாவல்

குழி நாவல் சாதேவம் குறு நாவல் ஆமே.

905. இலந்தை மரம்

இலந்தை குல் வலி, இரத்தி, குல்லரி,
நலங்கொள் பதரி கொங்கொலி கோற் கொடியே.

906. **இலந்தையின் தொடர்ச்சி**

இலந்தையி னேரார் இன்கனி கொண்டை
குலம் கோலம் என்ப குறியுணர் புலவர்.

907. **மாமரம்**

மாமரம் கொக்கு ஆம்பிரம் மாந்தி மாழை
சூதம் இரதம் சுள்ளிஎன் ருமே.

908. **தேமா மரம்**

தேமா கொக்கு ஆம்பிரம் சேதாரம்.

909. **புளிமாமரம்**

புளிமா சூதம் ஆம்பிலம் எகின் மாழை
எகினம் நாளினி இபங்கம் என்ப.

910. **பலாமரம்**

பலாமரம் பலாசம் பனசம் பைந்தேன்
குலாவு சுளை வருக்கை கோடுயர் பாகலே.

911. **ஈரப்பலா**

ஈரப்பலா ஆசினி எனலாமே.

912. **ஆலமரம்**

ஆலமரம் தொன்மரம் ஆலம் ஆல்கான்மரம்
பாலி நியக்குரோதம் பழுமரம்
பூதவம் கோளி வடம் எனப் புகல்வர்.

913. **ஆலவிழுது**

ஆலத்தின் விழுது வீழ் ஆகுமென்ப.

914. **அரச மரம்**

915. அத்தி மரம்

அத்தி எச்சாங்கம் அதம் அதவு ஏம
துத்திகை கோளி உதும்பரம் என்ப.

916. இத்தி மரம்

இத்தி சுவ்வி இறலி இரத்தி
இரத்திரி என்றிதற் கெய்தும் பெயரே.

குறிப்பு : கவி என்பது சுவ்வி என்ருயிற்று.

917 இளமரம்

இளமரம் நாகுஎன் றிசைத்தனர் புலவர்.

918. பருவத்தில் காய்க்கும் மரம்

பருவத்தில் காய்க்குமரம் பலினம் பலி.

919. காயா மரம்

காயா மரம் அவகேசி ஆமே.

920. பூத்துக் காய்க்கும் மரம்

பூத்துக் காய்க்கும் பொங்கர் நெடுமரம்
வாய்த்த வான பத்தியம் ஆமே.

921. பூவாது காய்க்கு மரத்தொடர்ச்சி

கானிற் பூவாது காய்க்குமரம் கோளி
வானப் பிரத்தியம் வானப் பிரத்தி
வான பத்தி என வகுத் தனரே.

இவ்விரு நூற்பாக்களின் கருத்து மாறுபடுகிறது.

922. ஒரு தடவை காய்த்துப் பட்டுப் போகும் மரம்

ஒருகாற் காய்த்துப் படுமரம் ஓடதி.

923. உள்ளே வைரமுள்ள மரம்

அகக்காழ் மரம் ஆண் மரம் ஆகும்மே.

924. வெளியில் வைரம் உள்ள மரம்

புறக்காழ் மரம் பெண்மரம் எனப் புகல்வர்.

925. **உள் வயிரமுள்ள மரங்கள்**

அகக்காழன புளி ஆச்சா ஆதி
இகப்பில் ஆண்மரம் என்மனுர் புலவர்.

926. **புறக்காழ் மரம்**

புறக்காழன புற்பதி தெங்கு பூகம்
விற்புடை வேரல் வெண்மலர்த்தாழை ஆதி
வற்பிலே வன்புன் மரம் ஆமென்ப.

927. **மர வயிரம்**

மரவயிரம் காழ்ப்பு வன்காழ் சம்பம் கரி
அரி கலே சாரம் சேகு ஆசினி ஆமே.

928. **உள் வயிரம்**

அகவயிரம் அகக்காழ் அகங்காழ் ஆகும்.

929. **புற வயிரம்**

புறவயிரம் புறக்காழ் புறங்காழ் என்ப.

930. **வயிரமில்லாத மரம்**

காழின் மரம் வெளிறு அலிஎனக் கழறுப.

931. **வயிரமில்லாத மரங்கள்**

முருக்கு ஓதி பாதிரி முருங்கை இலவு ஆதி
தருக்கள் காழில் வெளிறு எனத் தகுமே.

932. **மரப் பொதுப்பெயர்**

மரப்பொது அகலியம் வானுயர் துருமம்
விருக்கம் கோடரம் விடபி சாகி
தாரு அஞேக்கம் தாவரம் அகமம்
பூருகம் பலாசி சாலம் குசம்
சாதி பாதவம் தரு எனப் படுமே.

933. **முளை**

முளேத்தெழு முளே, அங்குரம், தறி, கால், மண்
கிளேத்தெழு நாறு எனக் கிளந்தனர் புலவர்.

934. **வேர்**

வேர் மூலம் சடை சிவை தூர் என விளம்புவர்.

935. **மரக்கன்றின் பெயர்**

மரக்கன்று குழவி போதகம் பிள்ளை போத்து.

936. **இளமரக் கொம்பு**

இளமரக் கொம்பு மெல்லியல் வளாரென்ப.

937. **மரக் கொம்பு**

மரக்கொம்பு உலவை வண்சினை சாகை
உரத்தெழுங் கொம்பர் கோடு உறுப்பு கோடரம்
கவடு இபம் தாரு கவலை விடபம் பணை
குவடு பொங்கர் கோல் கொப்பு எனப்படுமே.

938. **கவர்த்த கொம்பு**

கவர்த்த கொம்பு கப்பு கவை கவடே.

939. ம.............டையிடை

ரு கொள் க ணு கி க ண் ப ய் மா பருவம் ஆம்.
''சுவடியிலுள்ளபடி பதிப்பிக்கப்பட்டுள்ளது''

940. **கிழமரத்தின் முருடு**

மருது, வேம்பு, ஆதிவன் கிழ மரத்தின்
முருடு மொண்ணை ஆமொன மொழிப.

941. **மரப்பொந்து**

பொங்கர் மரப்பொந்து புடை பொள்ளல்
வங்கு உலவை கோடரம் மரச்செறிவு பொதும்பர்பொய்.

942. **தளிர்த்தல்**

தளிர்த்தல் சிலிர்த்தல் தழைத்தல் குழைத்தல்
இலிர்த்தல் என்ப இன்றமிழ்ப் புலவர்.

943. **தளிர்**

தழை நெய் தோய்த்தன்ன தண்டளிர் கிளை அலங்கல்
குழை கிசம் கிசலயம் குளிர்கா கிசலம்
உல்லரி பல்லவம்-உலவை மஞ்சரிமுறி
வல்லரி என்ப வான்றமிழ்ப் புலவர்.

944. **இலை**

இலை சதம் தகடு பாசிலை தமாலம் தழை
தலம் அடை பத்திரம் தளம் பத்திரி முறி
தண்ணடை பலாசு சதனம் பலாசம்
பன்னம் பாசடை பருணம் எனப்படும்.

945. **முதிர்ந்த இலை**

ஊழிலை பழுத்துதிர்ந் துலரிலை புலரிலை
வீழிலை செத்தை சருகு என விளம்புவர்.

946. **அரும்பு**

கன்னிகை மெல்லரும்பு களிகை கலிகை
பன்னில் கோரகை கோரகம் மொட்டு எனப்படும்.

947 **அரும்பின் தொடர்ச்சி**

முகையரும்பல் முகைத்தல் மொட்டித்தல் முகிழ்த்தல்
நகைத்தல் சினைத்தல் நனைத்தல் என நவில்வர்.

948. **பூ அரும்பு**

பூ வரும்பு சாயகம் போகில் சாலகம்
கா......................................கலுயை ம்
நனை கன்னிகை முகை நகை சாலேகம்
சினை எனப்பத்துஞ் சிறந்ததொல் பெயரே.

949. **அரும்பின் தொடர்ச்சி**

விள்ளும் பருவத் தரும்பு நனை முகிழ் விரை
கொள்ளும் போது முகை மொக்குள் முகிழம் ஆம்.

950. **மலர்தல்**

விரிதல் மலர்தல் விள்ளல் விரியல்
அவிழ்தல் நெகிழ்தல் அலர்தல் விகாசம்
விகசம் விகசிதம் ஆமென விளம்புவர்

951. **மலர்தலின் தொடர்ச்சி**

பூ அலர் மலர் விரிபோது சுரும்புவிழ்

வீ சுமம் சுமனசம் விரைகமழ்தாமம்
துணர் தார் அலரி சூனம் கொடிக்கடை
இணர் ஆலமோ டிலதாந்தமுமாமே.

952. **பூங்கொத்து**

பூங்கொத்து இணர் துணர் பொற்புறு மஞ்சரி
தேந்தொத்து வல்லரி திரள்குலே தொடர்ச்சி ஆம்.

953. **குலே**

மருதோன்றி தோன்றி மா மாதவி ஈனுங்
குருமலர்க் கொத்துக் குலே எனப்படுமே.

954. **பூந்தாள்**

பூந்தாள் காம்பு கால் ஆமெனப் புகல்வர்.

955. **பூவிதழ்**

பூவிதழ் அதழ் ஏடகம் ஏடு தோடு
மாவரி பாடும் வண்டளம் மடல் தண்டே

956. **பூந்தாது**

மலரகத் துறுமலர்த் தாது மகரந்தம்
கிளர் சிதர்கோங்கு கேசரம் மகரம்
இணர் துணர் என்ப இன்சொற் புலவர்.

957. **அகவிதழ் புறவிதழ்**

அகவிதழ் அல்லி புறவிதழ் புல்லி ஆம்.

958. **நறுமணமுள்ள மலர்த்தாது**

பரிமள மலர்த்தாதிற்றுகள் பராகம்
அரிசிதர் சாந்து அலர்ப்பூழி ஆமே.

959. **பூந்தேன்**

பூந்தேன் மென்மலர் பொழி மகரந்தம்.

960. **பழம் பூ**

பதனழிந் துகுமலர் பழம்பூ வெம்பலர்
தேம்பல் செம்மல் சாம்பல் என்ப.

961. **இளங்காய்**

இளங்காய் பிஞ்சு வடு எலு என்றும்.

962. **காய்**

காய் தீயளி பலன் ஆகக் கருதுப.

963. **பழம்**

பழம் கனி பலம் எனப் பகரப்படுமே.

964. **கருங்காயின் பெயர் (கருங்காய் கொஞ்சம் குறைய முற்றிய காய்)**

கருங்காய் செங்கனி கழுமிய கொத்து
நெருங்கு கடும்பு என நிகழ்த்தப்படுமே.

965. **குலையென்று வழங்கும் மரம்**

குலையென் கிளவி கொழுங்கனி வாழை
பனை தெங்கு ஈந்து கமுகின் பாற்றே.

966. **தாறு என்று வழங்கும் மரம்**

கமுகு ஈந்து வாழைக்காய்த்திரள் தாறே.

967. **விதை**

விதை காழ் வித்து வியம் பரல் ஆம்.

968. **கொட்டை**

கொட்டை பனை பலா ஆதியின் கொட்டை.

969. **மரப்பட்டை**

மரப்பட்டை ஒட்டு வற்கலம் தோல் தொக்கே.

970. **உலர்ந்த மரம்**

உலர்ந்த மரம் வானம் என்றுரைத்தனர் புலவர்.

971. **கொடி**

ஏறுதல் வேட்கும் இருங்கொடி கொம்பில்
பாறு மிலதை படர்வள்ளி நூழிலே.

972. **கொடியின் பெயர் (தொடர்ச்சி)**

வன்கொடி கோற்கொடி மென்கொடி புழற்கொடி
என்ப வீரிரண்டு மிக்கொடிப்பிறப்பே.

973. **காமவல்லி**

வேண்டிற் றெல்லாந் தருங்கற் பகத்தின்
ஈண்டு படர் வல்லி இருங்காம வல்லி.

974. **கொடி**

சீந்தில் அமுதவல்லி சீவந்தி பகன்றை
வாய்ந்த பறிவை பட்டிகை சோமவல்லி.

975. **கொடியின் பெயர் (தொடர்ச்சி)**

சோதிக்கொடி புறவடி தாதுணவடி
கடபி பண்ணியை காளபத வடியே.

976. **கொடியின் பெயர் (தொடர்ச்சி)**

சிவேதை பகன்றை சாறடை திரிபுரியே.

977. **தாளிக் கொடி**

தாளி மஞ்சிகம் மஞ்சிலகை தானே.

978. **கூதாளி**

கூதாளி கூதலி கூதளம் துடி
கூதாளம் என்று கூறுதற் குரித்தே.

979. **கழற்கொடி**

கழற்கொடி கழங்கு கற்சூரம் கழற்சி
முழற்கொடி என்று மொழியப் படுமே.

980. **இண்டை**

இண்டு இண்டை ஈகை புலிதொடக்கி ஈண்டு ஈங்கை

கொத்துடைக் குன்றிக் கொடிகுஞ்சம் ஆம்.

982. **கோவை**

கோவை விம்பம் விம்பிகை, கொவ்வை தொண்டை ஆம்.

983. **ஆதொண்டை**

ஆதொண்டை தொண்டை ஆகுமென்ப.

984. **காக்கணம்**

காக்கணம் உபமை கருவிளை கன்னி, கிகிணி

பூக்கிளர் கிருட்டிணி ஆமெனப் புகல்வர்.

985. **கொத்தான்**

கொத்தான் நந்தை கொடிக் கொத்தான் நூழில.

986. **வெள்ளரி, கக்கரி**

வெள்ளரிப் பெயர் உருவாரம் கக்கரிக்கு

உள்ள பெயர் வாலுங்கி என்றோதுப.

987. **பாகல்**

பாகல் கூரம் படர்கார வல்லி

கூலம் என்று குறித்ததொல் பெயரே.

988. **புடல்**

புடலினது பெயர் பொடலி பொடோலிகை.

989. **சுரைக்கொடி**

சுரை ஆலாபு புழற்கொடி தும்பி கோற்கொடியே.

990. **பீர்க்கு**

பீர்க்கு கோஷம் பீரம் பீரே.

991. **பெரும்பீர்க்கு**

பெரும் பீர்க்கு படலிகை எனப்பெயர் பெறுமே.

992. **அவரை**

அவரை சிக்கடி சிம்பை முதிரை ஆம்.

993. **திப்பிலி**

திப்பிலி கலினி சிறுமூலம் ஆர்கதி
பிப்பிலி காமன் மாகதி எனப்பெயரே

994. **முந்திரி**

முந்திரிகை கோத்தனி மதுரம் திராக்கம்
பந்தரிற் படர்சி மூதை கோத்திரிகையே.

995. **மிளகு**

மிளகு திரங்கல் காயம் கலினை மிரியல்
மரிசம் கோளகம் கறி வள்ளியம் மரீசி.

996. **வெற்றிலைக் கொடி**

வெற்றிலைக் கொடி வெள்ளிலைக் கொடி இலைக்கொடி
நற்றும் பூலி நாக வல்லி
தாம்பூல வல்லி ஆமெனத் தருமே.

997. **வெற்றிலை**

வெற்றிலை திரையல் வெள்ளிலை தும்பை
பொற்றகட்டொளிர்தாம் பூலம் மெல்லிலையே.

998. **காந்தள்**

காந்தள் கோடை கடிமலர்த் தோன்றி.

999. **வெண்காந்தள்**

வெண்காந்தள் கோடை கோடல் காந்துகமே.

1000. **செங்காந்தள்**

செங்காந்தள் பற்றை இலாங்கலி தோன்றி ஆம்.

1001. **முல்லை**

விளர்மலர் முல்லை கற்பு ஊதிகை மாலதி
தளவு தளவம் நைந்திகை எனத் தருமே.

1002. **மல்லிகை**

மல்லிகை பூருண்டி மாலதி அனங்கம்.

1003. **மலை மல்லிகை**

மலை மல்லிகை சக்கரம் கிரி மல்லிகை
குலைசெறி வச்சகம் குடசம் என்றுமே.

1004. **வனமல்லிகை**

வனமல்லிகைப் பெயர் மௌவல் என்ப.

1005. **பித்தி** (பித்தி—சிறு சண்பகம்)
பித்தி சாதி எனப்பெயர் பெறுமே.

1006. **இருவாட்சி**

இருவாட்சி அனங்கம் மயிலை கருமுகையே.

1007. **சிறுசெண்பகம்**

சிறுசெண்பகம் சாதி பித்திகை மாலதி
கருமுகை என்ப கலைவல் லோரே.

1008. **குருக்கத்தி**

குருக்கத்தி அதிகம் குருகு நாகரி
மருக்கிளர் மாதவி வாசந்தி ஆமே.

1009. **செடி**

பூடு புதல் எனப் புகன்றனர் புலவர்.

1010. **அலரி**

அலரி கவீரம் அயமரம் கணவீரம்
புலரியினலர் கரவிரம் கவிரம்மே.

1011. **செம்பரத்தை**

செம்பரத்தை பந்தூகம் செம்பரத்தம்
மந்தாரம் மணமிலி ஆமெனப் படுமே.

1012. **நந்தியாவட்டம்**

நந்தியா வட்டம் நந்தியா வருத்தம்

கந்தமிலி வலம்புரி எனக்கருதுப.

1013. **வெட்சி**

வெட்சி சேதாரம் மென்னெடுந்தாண்மலர்ச்
செச்சை குல்லை சிந்துரம் ஆமே.

1014. **பவளமல்லிகை**

பவள மல்லிகை பாரிசாதம் சூதம்
திவளு முன்னலருகு திராமரம் என்ப.

1015. **மருக்கொழுந்து**

தண்மருக் கொழுந்து தமனகம் தவனகம்மே.

1016. **வெட்டிவேர்**

வெட்டிவேர் பீதகம் வேரி இருவேலி
சுட்டு மூன்றெடு மூல கந்தமுஞ் சொல்லுப.

1017. **விலாமிச்சம்**

விலாமிச்சம் உசிரம் விரணம் ஆமே.

1018. **மலைப்பச்சை**

மலைப்பச்சை குளவி வண் மலர்த்தும்பை துரோணம்.

1019. **எருக்கு**

எருக்கு அருக்கம் அருச்சுனம் என்றுகும்மே.

1020. **பூளை**

பூளை உழிஞை சிறுபூளை என்ப.

1021. **துளசி**

துளசி குல்லை துளவு துழாய் வனம்
துளவம் விருந்தும் எனச் சொல்லப் படுமே

1022. **கிலுகிலுப்பை** (கிலுகிலுப்பை - செடிவகையுள் ஒன்று)
பல்லிணர்க்கிலு கிலுப்பைப் பெயர் பகன்றை.

1023. ஊமத்தை

ஊமத்தை ஊமத்தம் உன் மத்தம் மத்தமே.

1024. கஞ்சா

கஞ்சாவின் பெயர் கஞ்சம் குல்லை.

அவுரி

அவுரி நீலி கருந்தோளி ஆமே.

1025. நாயுருவி

நாயுருவி கரமஞ்சரி அபாமார்க்கம்.

1026. இசங்கு (சங்கு-சங்கஞ்செடி)

இசங்கு குண்டலி முத்தாபலம் என்ப.

1027. ஆடா தாடை

ஆடா தோடைப் பெயர் வாசை ஆமே.

1028. சுண்டி வறட்சுண்டி

சுண்டில் சுச்சு வறட்சுண்டி சமங்கை.

1029. நீர்வஞ்சி

நீர்வஞ்சி பிசின் வானீரம் வேதசம்மே.

1030. காஞ்சொறி

காஞ்சொறிப்பெயர் கண்டூதி என்ப.

1031. கற்றாழை

கற்றாழை குமரி கன்னி ஆமே.

1032. மரலை

மரலை அரலை எனப்பெயர் வைத்துரைத்தனரே.

1033. பிரண்டை

பிரண்டை கிரிட்டி வச்சிரவல்லி என்ப.

1034. காளான்

காளான் ஆம்பி காளாம்பி சிந்திரம்.

1035. **வெங்காயம்**

வெங்காயம் அரிட்டம் வெள்ளுள்ளி இலசுனம்.

1036. **ஈரவெங்காயம்**

ஈரவெங்காயம் ஈருள்ளி பலாண்டு
நீருடைச் சுகாந்தம் என நிகழ்த்தப் படும்.

1037. **நெட்டி**

நெட்டி சடைச்சி கிடாச்சு என நிகழ்த்துப.

1038. **கையாந்த கரை**

கையாந்த கரை அறுபதம் கோகனகம்.

1039. **பொன்னுங்காணி**

பொன்னுங்காணி சேற்கண்ணி சீதை ஆம்.

1040. **வள்ளை**

வள்ளை ஞாளிகம் நாளிகம் என வகுத்தனர்.

1041. **பசிரி** (பசிரி—ஒருவகைக் கீரை)

பசிரி பாய்விரி எனப்பகரப் படுமே.

1042. **கீரை**

கீரை சாகம் சாகினி எனக் கிளந்தனர்.

1043. **சிறுகீரை**

சிறுகீரை மேகநாதம் சில்லி.

1044. **கத்திரி**

கத்தரிப் பெயர் பிரகதி வங்கம் என்ப.

1045. **வழுதலை**

வழுதலை வங்கம் வார்த்தாகம் வழுதுணம்
பழுதில் பிரகதி எனப்பகரப் படுமே.

1046. சுண்டை

சுண்டை சுண்டை தூதாளி தூதாளி.

1047. கடுகு

கடுகு கடிப்பகை ஐயவி கறிகட்
கிடுவெண் கடுகு சித்தார்த்தம் என்ப.

1048. கடுகின் விசேடம்

கடுகின் விசேடம் வெண்சிறு கடுகு ஐயவி.

1049. கொத்தமல்லி

கொத்தமல்லி உருளரிசி குத்தும்பரியே.

1050. எள்

எள் எண் நூவு திலம் எனலாகும்.

1051. வெள்ளெள்

வெள்ளெள் குமிகை எனவிளம் பப்படும்.

1052. காரெள்

காரெள் மருத்தெள் கரும்பூ வெள்ளே.

1053. எள்ளிளகாய்

எள்ளிளங்காயின் பெயர் கவ்வை என்றும்.

1054. பருத்தி

பருத்திப் புதல் பரிப்புதல் பன்றைப் புதலே.

1055. ஆமணக்கு

ஆமணக்கு ஏரண்டம் சித்திரம் கொட்டை
தாமணக்குங் காந்திரு வாகை தானே.

1056. செடி

தூறு பஞ்சி விடபம் குன்மம்.

1057. சிறுசெடி

சிறு தூறு இறும்பு அரில் அறல் பொற்றை பதுக்கை.

1058. முள்ளி

முள்ளி கண்டல் முளரி முண்டகம்.

1059. நீர்முள்ளி

நீர் முள்ளி கண்டல் முண்டகம் என நிகழ்த்துப.

1060. செம்முள்ளி

செம்முள்ளி குறிஞ்சி ஆமெனச் செப்புவர்.

1061. முள்

முள் கண்டகம் கடு என மொழியப்படும்.

1062 பச்சிலை

பச்சிலை தமாலம் பசும்பிடி என்ப.

1063. மருந்து

மலையின் மறை மருந்து அருமருந்து அதகம் ஆமே.

1064. துணிப்பட்ட உறுப்பைப் பொருத்தும் மருந்து

சிந்து முறுப்புத் துணி சேர்ந் துடங்குறச்
சந்து செய் மருந்து சந்தான கரணி.

1065. விரணம் தீர்க்கும் மருந்து

அமானஞ் செயிரணத் தழும்பறுத் தழகுறச்
சமானஞ் செய்மருந்து சமான கரணி.

1066. கருவிப் புண்ணொழிக்கு மருந்து

அத்திரஞ் சத்திரமாகிய பல்படை
தைத்த புண்த விர்ப்பது சல்லிய கரணி.

1067. உயிர்தரு மருந்து

அயர் வொழித் துயிர் தரு மருந்து சஞ்சீவினி
சஞ்சிவி சீவினி சஞ்சீவகரணி
சிவனி என்ப செஞ் சொற் புலவர்.

1068. மருந்து (தொடர்ச்சி)

புல் மரம் கொடிபுதல் என்னுநால் வகையின்
மன்னிய யாவும் மருந்து எனப்படுமே.

1069. புற்பொது

புற்பொதுப் பெயர்பதம் புதல் எனப்புகல்வர்.

1070. அறுகு

அறுகு இளம்புல் பதம் தூருனவ தூர்வை ஆம்.

1071. தருப்பை

தருப்பை பவித்திரி குசை குசம் கூர்ச்சமே.

1072. நாணல்

கண்ணுடை நாணல் காசை சரவணம் சரம்
வெண்முளை கெழுமுப்புற் பிடியென விளம்புவர்.

1073. விழல்

விழல் விரணம் என்ப வியன்மொழிப் புலவர்.

1074. கொறுக்கை

கொறுக்கை சரவணம் சரம் கொறுக்கச்சி வேழம்
அறுக்கக் கிளைக்கும் எருவையு மாமே.

1075. பிரம்பு

சுஃறெருலிப் பிரம்பின் பெயர் சூரல் சாதி நுண்
பஃறுளை வேத்திரம் வேத்திரகம் என்ப.

1076. மூங்கில்

மூங்கில் அமை கிளை முடங்கல் முளை வெதிர்
ஏங்கல் ஆம்பல் உயர்கீசகம் வேய்
தூம்பு திகிரி முந்தூழ் துளை வேழம்
காம்பு சந்தி கண் கழை வேரல்
நெட்டில் வரை வேணு நேமி பாசு வேல்
தட்டை அம்பு அரி சபம் சானகி தண்டு
பணை விண்டல் விண்டு பத்திரி சினை பாண்டில்
புணை என்றிதன்பெயர் புகன்றனர் புலவர்.

1078. **தாழை**

தாழை கண்டல் கேதகை கைதை முண்டகம்
மாழை மலி மடங்கல் மடி முகரி முசலி.

1079. **வாழை**

வாழை அரம்பை அம்பணம் மடற்சேகிலி
காழிலி திரணபதி கவர் ஓசை
வேழ முகஞ்செய் விரிதலைக் கதலியே.

1080. **கருப்பூரவாழை**

மடல் வழி கருப்புர மீனும்வண் கதலி
அடர்கருப் பூர வாழை என்றுமே.

1081. **மகரவாழை**

மகர வாழைப் பெயர் மருகு எனப்படுமே.

1082. **கரும்பு**

கரும்பு இக்கு வேழம் கழை கன்னல் என்ப.

1083. **வெண்கரும்பு**

வெண்கரும்பு புண்டரம் வேழம் கன்னல் ஆம்.

1084. **கமுகு**

கமுகு பூகம் கந்திபூக் கம்மே.

1085. **பாக்கு**

பாக்கு கோலம் துவர்க்காய் பாகே.

1086. **தென்னை**

தென்ன மரம் ஏடகம் தெங்கு இலாங்கலி
துன்னு மடலுளி கேரம் கேளி தாழை
மன்னு கோரகை நாரிகேளமு மாமே.

1087. **பனை**

ஓலை மலிகள் ளுமிழ்பனை போந்தை

நீலம் புற்பதி கரும்புறம் புற்றுளி
தாலம் புல் பெண்ணை ஏடகம் தாளி போந்தே.

1087. **இளம்பனை**

இளம்பனை போந்தை என்றெய்தும் பெயரே.

1088. **பெரியமடலையுடையபனை**

பெருமட னெடும் பனை பெண்ணை பல்வரி
சுரவக ரேட்டுத் தாளி போந்தே.

1089. **கூந்தற்பனை**

கூந்தற்பனை தாலம் கூந்தற்கமுகொடு
போந்தை பூகம் ஆமெனப் புகல்வர்.

1090. **ஈந்து**

ஈந்து பேரீந்து உட்படுகுருத்து பயின்
ஆனி வெட்டுக் குருத்து என்றுமே.

1091. **ஓலை**

ஓலை இதழ் ஏடு உண்மடல் கூந்தல்
மாழை தோடு என்ப வண்டமிழ்ப் புலவர்.

1092. **ஓலை என்று வழங்கும் மரங்கள்**

ஓலை பனை தெங்கு தாழைக் குரித்தே.

1093. **கமுகு ஓலை**

கமுகோலை கூந்தல் மடல் எனக் கழறுப.

1094. **மடல்**

மடலென் கிளவி வாழை கமுகு ஈந்து
மிடல் கொள்பனை தாழை தெங்கின் மேற்றே.

1095. **மட்டை**

மட்டை மடல் என வரு மிரு கிளவியும்
வட்டுடை வாழை பனை தெங்கு இவற்றுறு
டொட்டற் குரியவென் றோதினர் புலவர்.

1096 **தோடு**

தோடு தாழை தொகுமடற் பனைதெங்
கோடு கூடற் குரித்தாங் கிளவி.

1097. **பாளை**

பாளை கோரகம் கோரகை எனப்படும்.

1098. **பாளை என்று வழங்கும் மரங்கள்**

பாளை பனை தெங்கு கமுகின் பாற்றே.

1099. **பன்னாடை**

பனை தெங்கு இவற்றில் பன்னாடை நாரி
நிலையி னெய்யரி என நிகழ்த்தப்படும்.

1100. **கோரை**

கோரை சாய் எருவை பஞ்சாய் எனக் கூறுப.

1101. **திரள் கோரை, வாட்கோரை**

திரள் கோரை சாய் வாட்கோரை செருந்தி.

1102. **கோரைக் கிழங்கு**

கோரங் கிழங்கு கனம் முத்தை முத்தக்
காசு என வைத்துக் கழறினர் புலவர்.

1103. **பயிர்**

பயிர் கூழ் பசும்புல் பைங்கூழ் என்ப.

1104. **இளங்கதிர்**

இளங்கதிர் பீட்டை பீள் இளஞ்சூலே.

1105. **கதிர்**

கதிர் குரல் ஏனல் ஈனல் அலகு ஆமே.

1106. **நெற்கதிர்**

நெல்லினது கதிர் குரல் சொல் ஏனலே.

1107. கதிர்த் தொகுதி

கதிர்த் தொகுதியின் பெயர் காரை ஆகும்.

1108. நெற்போர், நென்மணி

நெற்போர் சும்மை நென்மணி அலகே.

1109. தூற்றுதநெல்

தூற்று நெல் பொங்கழி பொலி ஆமே.

1110. சாவி

சாவி பதர் பதடி ஆமெனச் சாற்றுப.

1111. வைக்கோல்

வைக்கோல் பலாலம் வை வழுது என்ப.

1112. நெல்

நெல் விரீகி சாலி வரி ஆமே.

1113. செந்நெல்

செந்நெல் செஞ்சாலி சொல் நன்னெல் என்ப.

1114. இயவை (இயவை ஒருவகை மலைநெல்) **மூங்கிலரிசியுமாம்**

இயவை தோரை என்றெய்தும் பெயரே.

1115. மலைநெல்

மலைநெல் ஐவனம் ....நீ வாரம்
குளநெல் என்று குறித்தனர் புலவர்.

1116. மூவருடநெல்

ஆண்டு மூன்றுறு நெல் அசர் ஆகும்மே.

1117. கோதுமை

கோதும்பை கோதி கோதூமம் ஆமே.

1118. தினை

தினை ஏனல் குரல் கருந்தினை இறடி கங்கே.

1119. செந்தினை

செந்தினை கம்பு கவலை செழுங்குரற்
பைந்தினை ஏனல் எனப்பகர்ந்தனரே.

1120. தினைத்தாள்

ஏனற்றாள் அருவி இருவி என்ப.

1121. சாமை

சாமை சாமாகம் ஆமெனச் சாற்றுப.

1122. வரகு

வரகு கோத்திரவம் இதன் வைக்கோல் கருவை.

1123. சோளம்

சோளம் இறுங்கு சொன்னல் ஆகும்.

1124. தட்டை

கதிர்நெறித் தோங்கும் கம்பு கேழ்வரகு
வெதிரி னிமிர்ந்து வெள்ளலகு கோளிறுங்கு
வளைகுரல் வண்டினை எனவரு மிவற்றின்
விளைவு கொய்தாள் தட்டை தட்டு என விளம்புவர்.

1125. அரிசி

அரிசி தண்டுலம் அரிப ரிவயமர் ஆம்.

1126. நொய்

நொய் நொறுங்கு என்ன நுவலப்படுமே.

1127. தவிடு

தவிடு முரவை அவிழ் முட்டை தானே.

1128. உமி

உமியின் பெயர் துடம் ஆமென்றோதுப.
(துஷம்-உமி; துடம் என்றுயிற்று).

1129. பயறு

பயறு முற்கம் முதிரை எனப்படும்.

1130. உழுந்து

உழுந்து மாடம் என்றுரைதற்குரித்தே.

1131. துவரை

துவரை முதிரை ஆடகி ஆடகம் ஆம்.

1132. காராமணி

காராமணி கூலம் இதை எனக் கருதுப.

1133. கடலை, காணம்

கடலை சூரம் மஞ்சூரம் காணம்
முதிரை கொள் குலுத்தம் ஆமென மொழிப.

1134. கிழங்கு

கிழங்கு மூலம் மூலகம் சகுனம் மண்
ணகழ்கந்து கொள்ளும் பலம் கந்தம் ஆமே.

1135 கருணைக்கிழங்கு

கருணைக் கிழங்கு கந்தம் சூருணம்.

1136. சிறுகிழங்கு

சிறுகிழங்கு சுரசம் சிறுமூ லகம்மே.

1137. சேம்பு

சேம்பு சாகினி சகுடம் ஆமெனச் செப்புவர்.

1138. இஞ்சி

இஞ்சி மருப்பு அல்லம் ஆத்திரகம் என்றுமே.

1139. மஞ்சள்

மங்கல மாகிய மஞ்சள் அரிசனம் நிசி
பிங்கம் காஞ்சனி பீதம் கசற்பம்.

1140. **சிறுமஞ்சள்**

சிறுமஞ்சள் சிறுபசு மஞ்சள் என்ப.

1141. **தாமரை**

தாமரை சலசம் சரோருகம் பங்கயம்
தேமரு சதபத்திரி சததளமலர்
ஆய்மலர் கஞ்சம் அம்போசம் அம்புயம்
தோயசம் காணடசம் சூது பங்கேருகம்
சரசீருகம் சலருகம் குசேசயம்
அரவிந்தம் பதுமம் பயோசம் அம்போருகம்
முண்டகம் தோடகம் முளரி சரோசம்
புண்டரீகம் புட்கரம் கமலசம்
நாரசம் இண்டை நளினம் சாரசம்
நீரசம் பற்பம் நீரோருகம் சலிலசம்
திருமலர் வனருகம் திருமாலுந்தி
மருமலி கமலம் வனசம் வாரிசம்மே.

1142. **வெண்டாமரை**

வெண்டாமரை புண்டரீகம் விரைகமழ்
தண்டாதுதிர் செந்தாமரை நல்லிசை
வண்டார் கோகனகம் ஆமென்ப.

1143. **தாமரை (தொடர்ச்சி)**

பதிற்றுப்பத் தடுக்கிதழ்ப் பங்கயம் குசேசயம்.

1144. **தாமரை (தொடர்ச்சி)**

நூற்றுப்பத் திதழ்திகழ் சேற்றுத் தாமரைதேன்
ஊற்றிருந் தொழுகு மொண்கம லம்மே.

1145. **தாமரைச் சுருள்**

தாமரைச் சுருள் வியம் வளையம் தானே.

1146. **அழகான தாமரைப்பூ**

எழில் கொடாமரை மலர் இறும்பு இராசீவம்.

1147. **தாமரைக்காய்**

வண்டா மரைக்காய் வராடகம் என்ப.

1148. **தாமரைப் பொகுட்டின் பெயர்**

பொன்னந் தாமரைக் கொட்டை. பொகுட்டு
கன்னிகை கண்ணிகை என்ப கற்றுணர்ந்தோர்.

1149. **குவளை**

குவளையின் பெயர் உற்பலம் குவலயம் ஆம்.

1150. **செங்குவளை**

செங்குவளை செங்கழுநீர் அரத்தோற்பலம்
கொங்குவிளை அரத்தம் எரு மணம்
கங்குலிற் றிங்களி னலர்கல் லாரமே.

1151. **கருங்குவளை**

கருங்குவளை இந்தீரவம் காவி நீலம்
நெருங்கிதழ்ப் பானல் நீலோற் பலமே.

1152. **அல்லி**

அல்லி சயம் நெய்தல் ஆம்பல் குமுதம் ஆம்.

1153. **செவ்வல்லி**

செவ்வல்லி திகழரக் காம்பல் செவ்வாம்பல்.

1154. **சேதாம்பல்**

சேதாம்பல் கயிரவம் செங்குமு தம்மே.

1155. **வெள்ளல்லி**

வெள்ளல்லி வெண்குமுதம் வெள்ளாம்பல் கயிரவம்.

1156. **கொட்டி**

கொட்டி நீரொட்டி குளக்கொட்டி என்ப.

1157. **பாசி**

குளிரி கல்லாரம் நீர்க்குளிரி ஆமே.

1158. **பாசி (தொடர்ச்சி)**

பாசி சடைச்சி பதியம் செவிரம் நாரம்
மாசினிர்ப் படுஞ் சைவலம் பீனம் ஆகும்.

1159. **கோடு**

கோடு கொடி நீர் நிலக் கொழு மலர் நான்கிற்
பீடுறப் பிணிக்குந் தோடுசூழ் மாலை
அணியல் ஒலியல் ஆரம் சரம் சிகழிகை
பிணையல் தொடையல் பிணை கோதைதாமம்
இலம்பகம் சுக்கை ஈர்ந்தேனுமிழ் கண்ணி
அலங்கல் சுருங்கல் சூட்டு அளிமுரன் மஞ்சரி
தெரியல் மாலிகை கத்திகை தொடர் வாசிகை
அரி தொடை படலை தார்அணி தொங்கல் ஆமே.

1160. **முடிமாலை**

கமழ்முடி மாலை கரோடி கரோடிகை.

1161. **நுதலணி மாலை**

நுதலணி மாலை நுதற்சூட்டு இலம்பகம்.

1162. **தொடுத்த மாலை**

தொடுத்த மாலை சிகழிகை தொடையல் வெண்
டடுத்த வாசிகை ஆமென வறைவர்.

1163. **பின்னப்பட்ட மாலை**

பின்லியமைத்த மாலை பிணை பிணையல்.

1164. **கோத்த மாலை**

கோத்த மாலை கோவை சிகழிகைபொன்
பூத்த படலை வாசிகை எனப் புகல்வர்.

1165. வெட்சி

கட்சி யுண்மணி நிரை கவர்வோர் கண்ணி
வெட்சி என்ப மேம்படு புலவர்.

1166. கரந்தை

பகைவர் கவர்நிரை கவர்படர் படலை
முகைய கரந்தை எனமொழி குவரே.

1167. வஞ்சி

கலவார் முனைமேற் செலவயர் செருநர்
குஞ்சி மலைவது வஞ்சி என்ப.

1168. காஞ்சி

ஈண்டடை படை யெதி ரூன்றே றுழவர்
மாண்ட காஞ்சி மாலை மலைகுவரே.

1169. நொச்சி

வான்றோய் நொச்சி வல்லரண் காக்குநர்
கான்றோய் நொச்சிக் கண்ணி சூடுவரே.

1170. உழிஞை

கூடா ரெயில் கொளக் குறிக்கு நர்க்கு
வாடா வுழிஞை மாலை என்ப.

1171. தும்பை

செங்களம் படச்செருவெல் செருநர்
வெங்களந் தும்பை மாலை வேய்குவரே.

நான்காவது மரப்பெயர்த் தொகுதி முற்றியது.

ஐந்தாவது இடப்பெயர்த் தொகுதி

1172. மோட்சம்

மோக்கம் திருவடி முத்தி அபவருக்கம்
நிலைபேறு வீடுபேறு நிருவாணம்
பரகதி மீளாக்கதி பஞ்சமகதி

கேடிலுவகை கைவல்லியம் கேவலம்
சித்தி அமுதம் சிவம் ஆகும்மே.

1173. **வைகுண்டம்**

வைகுண்டம் விண்டுபதம் வைகுந்தம்
மைகொண் மேனி மாயவ னுலகே.

1174. **சுவர்க்கம்**

சுவர்க்கம் உயர்நிலை துறக்கம் விண்ணாடு
பவனம் வானுலகு பதவி சுவவு
அமருலகம் மேலுலகம் அமுழ்ப்புகம்
உம்பருலகு ஆனுலகு உவணை சுரரிடம்
நாகம் பொன்னாடு புத்தேணாடு கோ
விசும்பு தானம் விமானம் கற்பம்
வியனுலகு மேனிலை விண்ணோ ருலகமே.

1175. **வித்தியாதரர் உலகு**

வித்தியா தரரிடம் விஞ்சைய ருலகு
சேணரி சேடி ஆமெனச் செப்புவர்.

1176. **பாதாளம்**

பாதாளம் அரம்பிலம் பாதலம் என்ப.

1177. **நரகம்**

நரகம் தீயுழி நரகு நரானை
நிரையம் கும்பி கீழுலகம் நீள்குழி
பாதாளம் அளறு இருள் பவர்க்கம் துவாந்தம்
அள்ளல் ஊழல் ஆவிரம் இருணிலம்
செந்து தீ புலவு திமிரம் சுவப்பிரம்
அழல் பூதி வீழ்கதி அதோகதி யென்ப.

1178. **திசை**

திசை கருபம் காட்டை கோ திக்கு உகு

மாதிரம் அம்பரம் விசும்பு தேம் ஆசை அரிதம்
வம்பல் எண்ப வண்டமிழ்ப் புலவோர்.

1179. **கிழக்கு**

கிழக்கு ஐந்திரம் கீழ்த்திசை கீழ் பிராசி
குணக்கு இந்திரி பூருவம் குணம் ஆமே.

1180. **தெற்கு**

தெற்கு அவாசி சிவேதை தக்கணம் தென்
யாமம் யாமியம் யாமினி யம்மே.

1181. **மேற்கு**

மேற்கு பிரத்தியக்கு மேக்கு மேல்
வாருணம் பச்சிமம் குடக்கு என வருமே.

1182. **வடக்கு**

வடக்கு உதக்கு உதீசி உத்தரம் என வகுத்தனர்.

1183. **கோணம்**

கோணம் மூலை ஆமெனக் கூறுப.

1184. **எண்திசை**

எண்டிசை யிடை அந்த ராளம் என்ப.

1185. **பூமி**

பூமி பிருதுவி புவிமண் டலம்மண்.
நேமி வையகம் படிநிலம் குமன்னிலம்
தாலம் பார்த்திபம் தராதலம் தரணி
ஞாலம் தாலவட்டம் நாடு பார்
புவனம் அகிலம் தலம் பூதியம் அநந்தை
பவனம் அளக்கர் பாரகம் பாரிவையம்
மாதிரம் கிடக்கை வசுமதி குத்தி
மேதினி அசலை விபுலை தரித்திரி
கோத்திரை கோத்திரம் கோபூ வசுந்தரை

தாத்திரி பொழில் திணை தாபரம் அசலம்
உகம் வசுதை பாலம் உதகம் உலகம்
சகம் நிலை புடவி தாரணி தரை சக்கரம்
புவனி நகர் பூதலம் மகி பொறை
அவனி மண்டலி அகலிடம் காசினி
குவலயம் பூவலயம்......

1186. இடம் (பொதுப் பெயர்)

இடம் அகம் கீழ் மேல் இல் உழை உழி உளி
கடை இடை புடை வயின் களம் தாமம் தலம்
கண் பால் புரம் நிலம் கால் தலை வளாகம்
முன் சார் வழி வலம் முகம் முதல் பதி பின்
பாடு அயல் அரங்கு பக்கம் பாங்கர்
மாடு திணை புலம் வாய் தேம் தேயம்
தானம் வைப்பு எனச் சாற்றத் தகுமே.

1187. அவ்விடம்

அவ்விடம் அங்கு அங்ஙனம் அந்தில்
அம்பர் அவண் ஆண்டு ஆகுமென்ப.

1188. இவ்விடம்

இவ்விடம் இங்கு ஈங்கு இங்ஙனம் இம்பர்
ஈண்டு இவண் என்ப வின்மொழிப் புலவர்.

1189. உவ்விடம்

உவ்விடம் உங்கு ஊங்கு உங்ஙனம் உம்பர்
உவணை உவண் என் றோதற்குரிய.

1190. எவ்விடம்

எவ்விடம் எங்கு யாங்கு யாங்ஙனம் எங்ஙனம்

எம்பர் எவண் யாண்டு யாண்டை யென்ப.

1191. மேல்

மேல் வலம் ஞாங்கர் மேக்கு மேற்கு இந்தனம்

மீ உபரி உம்பர் முன் மீமிசையே.

1192. கீழ்

கீழ் கயம் இழிவு கிழக்கு எனக்கிளப்பர்.

1193. பக்கம்

பக்கம் ஞாங்கர் பாங்கர் இடை சிறை
மருங்கு பாங்கு மாடு பாரிசம் பால்
புடை புரம் என்ப புலனுணர்ந்தோரே.

1194. நடு

நடு இடை செப்பம் நா நனந்தலை
அகடு பகல் உந்தி அணவு சமன் ....த்தல்.
மத்திமம் மத்தியம் மையம் பிரமம்
நாப்பண் கூழை நாள் ஊடு ஆமே.

1195. உலகின் பொது

உலகின் பொது நாடு உறையுள் புவனம்பொழில்
தலமென் றிதன்பெயர் சாற்றத் தகுமே.

1196. நாடு

நாடு அகலுள் அரசு தண்ணடை அழுவம்ஏணி
பாடி பொழில் சும்மை பாண்டில் சனபதம்
தேயம் தண்டம் மண்டிலம் தேம் உறையுள்
படப்பை கோட்டம் பைதிரம் உங்கே.

1197. மலை

மலை குவடு அடுக்கல் வரை இறும்பூது
சிலை தடம் பிறங்கல் சிலோச்சயம் பொச்சை
மாதிரம் ஓதி போதி தராதரம்
ஓதிமம் வீரம் ஓங்கல் பொங்கர்
பருப்பதம் ஏந்தல் பரம்பு கோத்திரம் நகம்
பொருப்பு நாகம் பொகுட்டு அசலம்தரம்
பாதபம் சிகரம் பதலை சக்கரம் கோ
பூதரம் தாணு பொறை தானி சயிலம்
சிலம்பு விண்டு சிமயம் சிமிலம்

விலங்கல் குன்று குன்றம் திகிரி வித்தம்
இறும்பு அரி சிகரி இரவி கிரி மேரு
குறும்பொறை அத்திரி குதரம் குத்திரம்
சாரல் கல்லகம் கல் தாபரம் கோத்திரை
வீரம் சையம் வேதண்டம் வெற்பே.

1198. **பொன்மலை**

பொன்மலை பாசனனியம் பொலங்குன்றம்
மணிமலை பூதரம் மேரு மாமேரு
ஏமகூடம் என்மனூர் புலவர்.

1199. **வெள்ளி மலை**

வெள்ளிமலை விசயார்த்தமம் வெண்மலை
கயிலை வேதண்டம் கயிலா யம்மே.

1200. **இமயமலை**

இமயமலை பனிமலை என்மனூர் புலவர்.

1201. **பொதியமலை**

பொதியமலை மலயம் பொதியில் தென்மலையே.

1202. **மந்தரமலை**

மந்தரமலை கவக்குன்று மால் குடை
பரம்பரம் மத்த மலை எனப் படுமே.

1203. **கொல்லிமலை**

கொல்லியும் பொருப்பு வல்லியம் பொருப்பே.

1204. **சிறுமலை**

சிறுமலை இறும்பு சின்னமலை பொற்றை
குறுமலை பொச்சை குறும்பொறை குன்று
பதலை என்ப பண்புடைப் புலவர்.

1205. **குன்றின் உச்சி**

குன்றினுச்சி கோடு கொடுமுடி.

குவடு முகடு கூடம் சிகரம்
சிமையம் என்றுங் கமையும் பெயரே.

1206. **மலைக்குகை**

அடுக்க லுட்குகை அளை குகம் குகரம்
முடுக்கர் கந்தரம் பிலம் முழை நிகுஞ்சமே.

1207. **மலைப்பக்கம்**

மலைப்பக்கம் கடகம் வாரம் நிதம்பம்
தடம் சாரல் சானு சரி எனப்படுமே.

1208. **கற்பாழி**

கற்பாழி காண்டை கருவரைச் சாரற்
பொற்பார் முழைஎனப் புகலப் படுமே.

1209. **கீழறை**

கீழறை பிலம்எனக் கிளந்தனர் புலவர்.

1210. **பாறை**

பாறை முரம்பு அறை பதுக்கை ஆமே.

1211. **கல்**

கல் சிராவம் சிராவணம் சிலை சையம்
நற்பாடாணம் ஆமென நவில்வர்.

1212. **திரண்டகல்**

திரண்டகல் உபலம் உலம் கற்பாறை என்ப.

1213. **பெருங்கல்**

பெருங்கல் கேளிதம் எனப்பெயர் பெறுமே.

1214. **சிறுகல்**

சிறுகல் உபலம் ஆமெனச் செப்புவர்.

1215. **பருக்கைக்கல்**

பருக்கைக்கல் அரி காழ் பரல் என்ப.

1216. **குறும்பரல்**

குறும்பரல் பருக்கைக் கல்லெனக் கூறுப.

1217. **தூம்பு அடைக்கும் கல் (தூம்பு - சலதாரை)**

தூம்படைக் குங்கல் பொறை துறுகல் துறுவே.

1218. **மலைப்பிளப்பு**

மலைப்பிளப்பு விடபு விடர் அழை எனவரும்.

1219. **நிலப்பிளப்பு**

விட்ட விளப்பு வெடிப்பு வெடி வெடியோடல்
விடபு விளவு விடப்பு விடர் விடவு
கது நிலப்பிளப்பு கமர் எனப்படுமே.

1220. **மேடு**

மேடு குப்பை மிசை குவால் ஓங்கல்
மோடு சுவல் குவை முரம்பு உயர்நிலம் கரு
திடர் வல்லை வன்பால் திட்டை திடல்திட்டு
படருட னீரொன் பஃதெனப் படுமே.

1221. **திட்டை**

திட்டை பதுக்கை திடர் பாறை முரம்பே.

1222. **சிறு திட்டை**

சிறுதிட்டை பதுக்கை திட்டை என்ப.

1223. **கடல்**

செந்நீர்ப் பவளந் திகழ்கடல் தெண்டிரை
முந்நீர் புணரி சமுத்திரம் சாகரம்
கந்தி சலதி சக்கரம் கலி ஆர்கலி
உந்தி நதிபதி உததி பயோததி
குரவை நரலை கார்கோள் சலராசி
பரவை மகோததி பயோநிதி வாரிதி
உப்பு உவர் ஓதம் உவரி வாரி

அப்பு நீராழி ஆழி சிந்து அளக்கர்
அலை ஆம்போதி அம்பரம் அத்தி வேலா
வலயம் அரி சலநிதி வாரணம் வாருணம்
அருணவம் அன்னவம் அம்புதி நேமி
கருநிறவேலை பெருநீர் பௌவம்
பாராவாரம் பரப்பு பயோததி
வாரம் வீரை மகரா லயமே.

1224. **காயல்**

கழி காயல் உப்பளம் கானல் முரம்பே.

1225. **கழிமுகம்**

கழிமுகம் அதோமுகம் கயவாய் கயவு
அழிவி கூடல் அருவி புகார் ஆம்.

1226. **சூழ்கழியிருக்கை**

சூழ்கழி யிருக்கை கோணுமுகம் தோட்டி ஆம்.

1227. **உப்பளம்**

உப்பளம் அளக்கர் அளம் உவளகம் கழி
உவர்க்களம் இருணம் இரிணம் உவர்த்தரை.

1228. **கடலலை**

கடலலை அறல் சீகரம் திரை தரங்கம்
ஓதம் புணரி என்றோதப் படுமே.

1229. **கடலின் பேரலை**

கல்லென் றொலிக்குங் கடற்பெருந்திரைப்பெயர்
உல்லோலம் கல்லோலம் என்றோதுப.

1230. **கடற்கரை**

நீரார் பரவை நெடுங்கரை வேலை
பாரா வாரம் பாரம் என்ப.

1231. **திரை**

திரை அலை தரங்கம் சீகரம் வாரம்
அறை கல்லோலம் அறல் எனப்படுமே.

1232. **கடற்கரை (தொடர்ச்சி)**

ஆழி தீரம் அணை வரை பாரம்
வாரம் விளிம்பு என வைக்கப்படுமே.

1233. **செய்கரை**

செய்கரை குலை அணை சேது குரம்பே.

1234. **அருவி**

அருவி உவதை மலையின்வீ ழாறே.

1235. **ஆறு**

நதி துனி குடிஞை ஓணம் துறை தீபவதி
திரை தடினி வருபுனல் தரங்கிணி
சிந்து யாறு ஒலியல் தீர்த்திகை வேணி
உந்தி ஆறு என்றேதப் படுமே.

1236. **காவேரி**

காவேரி பொன்னி காவேரி யாறே.

1237. **கங்கை**

கங்கை நதி வானதி காசி மாநதி
மங்குனதி பாகீரதி மந்தாகினி.
வரநதி விமலை சானவி திரிபதகை
சுரநதி என்ப தூயசொற் புலவர்.

1238. **யமுனை**

யமுனை காளிந்தி இனன்மகள் என்ப.

1239. **சரச்சுவதி**

சரச்சுவதி நதி சுயு நதி தானே.

1240. **பொருனை**

பொருனை யாற்றின் பெயர்பொருந்தம் என்ப.

1241. **வைகை**

வைகைநதி வேகவதி எனவருமே.

1242. **மேற்குநோக்கி ஓடும் ஆறு, கிழக்குநோக்கி ஓடும்ஆறு**

குடக்கிளுேடுங் குடிளுை நதம் நதி
குணக்கிளுேடியாறு எனக் கூறப்படுமே.

1243. **காட்டாறு**

முல்லை நிலத்தியாறு உலவை கலுழி கான்யாறே.

1244. **குமரி**

குமரி கன்னி ஆமெனக் கூறுப.

1245. **வாய்க்கால்**

வாய்க்கால் கால் என வைக்கப்படுமே.

1246. **குளம்**

குளம் அயம் பண்ணை குண்டம் நீர்நிலை
வளமலர்ப் படுகர் மடு நளினி சலதரம்
கிடங்கு பொய்கை கேணி இலஞ்சி
தடம் குழி சூழி தாங்கல் உவளகம்
குட்டம் வட்டம் கோட்டம் தடாகம்
பட்டம் ஏல்வை பங்கம் படு ஓடை
ஆவி ஏரி அலந்தை பயம் கயம்
வாவி சுனை பல்வலம் எனப்படுமே.

1247. **மடை மதகு**

மடை மதகு தூம்பு சுருங்கை அம்மடைக்
கடைசெறி கவாடம் ஓ எனக் கழறுப.

1248. **தடாகம்**

தடாகம் அயம் நீர்நிலை தடம் எனப்படுமே.

1249. பொய்கை

பொய்கை சுனையெனப் புகறல் வேண்டும்.

1250. கமலவாவி

அங்கமல வாவி ஆவி நளினி
பங்கர் சலதரம் படுகர் என்ப.

1251. மிதவை விடுந்தடம்

மிதவை செலுத்தி விழவியர் பெருந்தடம்
உவளகம் அலத்தை என்றேதப் படுமே.

1252. ஆழம்

ஆழம் குட்டம் அழுந்து கம்பிரம்
தாழ்வு குண்டு கயம் எனத் தகுமே.

1253. பள்ளம்

பள்ளம் அவல் அதம் பயம்பு இழிவு உவளகம்
ஞெள்ளல் தாழ்வு நெடுங்குழி படுகர்
கூவல் கிழக்கு எனக் கூறினர் புலவர்.

1254. சிறுபள்ளம்

சிறுபள்ளம் அவல்எனச் செப்பப்படுமே.

1255. ஊருக்கருகிலுள்ள குளம்

ஊரடுத்த குளம் ஊருணி என்ப.

1256. கிணறு

கிணறு அசும்பு உறவி கேணி துறவு
கூவல் பூவல் குழி கூபம் ஆமே.

1257. இயந்திரவாவி

இயந்திர வாவி இலவந்திகையே.

1258. சலசூத்திரம்

சலசூத்திரம் கிழார் சலேந்திரம் பூட்டை
ஆம்பி தூம்பி காராம்பி ஆமே.

1259. ஏற்றமரம்

ஏற்றமரம் பூட்டை துலா என்றிசைப்பர்.

1260. ஊற்று

ஊற்றின் பெயர் உறவி ஊறல் எனப்படும்.

1261. தெளிநீர்

தெளிந்தநீர் துணிநீர் தெண்ணீர் சற்சலம்.

1262. கலங்கல் நீர்

கலங்கனீர் ஆவிலம் கலுழி கலுடம்
விலங்கல் என்ப மெய்மொழிப் புலவர்.

1263 மல்குபுனல்

மல்குபுனல் வாரி வழாறு பிராறே.

1264. நீந்துபுனல்

நீந்துபுனல் தலையல் அகாதம் நீத்து என்ப.

1265. உவர்நீர்

உவர்நீர் உரவுநீர் உறைஎனப் படுமே.

1266. நீரோட்டம்

நீரோட்டம் கோலர் நீரொலி ஆலோலம் ஆம்.

1267. நீர்ச்சுழி

ஓடுநீர்ச்சுழி சுரியல் உந்தி ஆவருத்தம்.

1268. நுரை

நுரைபே பேனம் பேவு என நுவல்வர்.

1269. குமிழி

குமிழி நுரை புற்புதம் கொப்புள் மொக்குள்
இமிழ்நீர்ப் பௌவம் என்றுர் புலவர்.

1270. சேற்றில் தோன்றும் குமிழி

சேற்றெழுங் குமிழி பொகுட்டு எனச் செப்புவர்.

1271. சேறு

சேறு கலவை சிறுமியம் பூழி தாள்
பாறு செதும்பு பங்கம் அங்கணம்
செய்யல் அசறு சேதகம் காலாழ்
தொய்யல் அளக்கர் தொளி குழை கும்பி
கொள்ளம் அள்ளல் குழம்பு வதி கூழை
தொள்ளம் கழனி தொள்ளி எனப்படும்.

1272. பெருஞ்சேறு

பெருஞ்சேறு நொதி எனப்பெயர் பெறுமன்றே.

1273. விளைபுலம்

விளைபுல மெல்லாம் விளையுள் என்ப.

1274. வயல்

வயல் கழனி ஆலவாலம் பழனம்
பணைபுலம் கோட்டம் பண்ணை கேதாரம்
கைதை அகணி கம்பலை விளைபுலம்
செய்தடி பானல் சேறு எனலாமே.

1275. வரம்பு

வரம்பு கங்கு முரம்பு அணை கூலம்
பரம்பு கோடு பாரம் வரை தடம்
வாரம் என்று வகுத்ததொல்பெயரே.

1276. கழனிவரம்பு

கழனி வரம்பின் பக்கம் கங்கே.

1277. புது வரம்பு

புதுவரம்பு மாசி ஆமெனப் புகன்றனர்.

1278. **செந்நெல்விளைநிலம்**

செந்நெல் விளைநிலம் திகழ்சாலேயம்
என்னப் பன்னினர் இயல்நூற்புலவர்.

1279. **பாத்தி**

பாத்தி சிறுசெய்சிறுச்செய் குண்டில்
ஆலவாலம் ஆமென வறைவர்.

1280. **ஆற்றிடைக்குறை**

ஆற்றிடைக் குறைப்பெயர் அரங்கம் இலங்கை
துருத்தியென்ப தூமொழிப் புலவர்.

1281. **மணல்**

மணற்பெயர் சிகதம் வெண்மணற்பெயர் வாலுகம்
நுண்மணல் அதர் அயிர்என நுவன்றனரே.

1282. **கருமணல்**

கருமணல் அறல் அலே ஆமெனக் கழறுப.

1283. **மணல்திட்டை**

மணற்றிட்டை புளினம் மணற்குன்று ஆகும்.

1284. **பசுமையானநிலம்**

பசும்புல் நிலம் அரிதம் சாட்டுவலம் என்ப.

1285. **அசும்புநிலம்**

அசும்புநிலம் வழுக்குநிலம் இழுக்குநிலம் ஆமே.

1286. **பாழ்நிலம்**

பெரும்பாழ்நிலம் களர் முதுநிலம் எனப்பெறும்.

1287. **உவர்நிலம்**

உவர்நிலம் இருநிலம் ஊடரம்கழிநிலம்
பயிர்கொளா வருநிலம் பாழ்நிலம் கரம்பே.

1288. **பரலால் உயர்ந்தநிலம்**

பரலடுத் துயர்நிலம் முரம்பு எனப்படுமே.

1289. மலையில் நீரில் வனத்தில் பயன்படாத மிகுநிலம்

மலையி னீரின் வனத்திற் பயன்படா
மிகுநிலம் கருநிலம் ஆமென விளம்புவர்.

1290. குறிஞ்சியைச் சார்ந்தநிலம்

குறிஞ்சி சார்நிலம் கொல்லை புனம் என்ப.

1291. ஐவகைநிலம்

வரை சுரம் புறவு மல்லலங் கழனி
திரை இவை சேர்நிலஞ் செப்பிய முறையே
குறிஞ்சி பாலை முல்லை மருதம்
நெய்தல் என்ப நிறைமொழிப் புலவர்.

1292. குறிஞ்சிநிலம்

குறிஞ்சி நிலம் புறவம் புறம்பணை கூடார்த்
தெறுந்திறல் வேலோன் சேர்வரை யுலகே.

1293. பாலைநிலம்

பாலைநிலம் பொருபுவி பைதறு நிலம் படுநிலம்
ஆலமறு நிலம் அருஞ்சுரம் செம்புலம்
கன்முரம் படுநிலம் களரூருப் பவிர்நிலம்
வெண்கற்கண் மேய வேனில் கூருலகே.

1294. முல்லைநிலம்

முல்லைநிலம் முளரிச் சார்பு புறவம்
குல்லைசூழ் புறவு குறும்பொறை நாடு
திண்ணரைப் பிடவந் திகழ் புறம்பணை
கண்ணன் மேய காடுறை யுலகே.

1295. மருதநிலம்

மருதநிலம் அகணி வயல் கணிகம்பலை
முருகலர்ப் பண்ணை பணை முளரிசூழ் கழனி
பூந்தண் பழனம் பொங்குசீர்ப் படுகர்
வேந்தன் மேய தீம்புன லுலகே.

1296. நெய்தல் நிலம்

நெய்தனிலம் வருணன் மேய நெடுங்கடற்சார்
நைதலில் பெருமணை லுலகுஎன நவில்வர்.

1297. குறிஞ்சி

குறிஞ்சி பாலை வன்பால் குளிர்முல்லை
சமப்பால் என்ப தண்டமிழ்ப் புலவர்.

1298. மருதம்

மென்பால் மருதம் என்மனார் புலவர்.

1299. நெய்தல்

நெய்தல் முல்லைப் பாலை நம்மே

1300. ஊர்

ஊர் இருக்கை வாழ்க்கை உறையுள் அருப்பம்
சேரி குப்பம் சேர்ப்பு பதிகுடி
காடு பாடி பேடு புரி பக்கணம்
மேடு சும்மை வேலி நிவேசனம்
பூக்கம் முட்டம் பூரி எயில் வாசம்
பாக்கம் ஒக்கல் பட்டணம் பாழி
காண்டகங் குடிக்காடு குடி நத்தம்
பூண்டி வைப்பு அகலுள் பூரியம் என்ப.

1301. சிற்றூர்

சிற்றூர் சீறூர் சிறுகுடி ஆமே.

1301. (அ) சிற்றூர், சீறூர்

சிற்றூர் நொச்சி சீறூர் பள்ளி
பட்டு என வைத்துப் பகரப் படுமே.

1302. மலைமேலுள்ள ஊர், மலையும் ஆறும் சேருமிடமுள்ள ஊர், மலைசெறிந்த இடத்தில் உள்ள ஊர்

மலைமே லேத்திய வூர் சமவாகம்
மலையும் யாறும் வலக்குமூர் கருடைம்,
மலைசெறியூர் கேடகம் என வகுத்தனர்.

1303. குறிஞ்சி நிலத்து ஊர்

குறிஞ்சி நிலத்தூர் குறும்பொறை குறிச்சி
சிற்றூர் சிறூர் சிறுகுடி ஆமே.

1304. பாலை நிலத்து ஊர்

பாலை நிலத்தூர் குறும்பு எனப்படுமே.

1305. முல்லை நிலத்து ஊர்

முல்லை நிலத்தூர் சொல்லில் உவளகம்
வல்லியம் ஆவிரம் வல்லி ஆய்ப்பாடி
இடைச்சேரி பாடி என்றிசைக்கப்படுமே.

1306. மருத நிலத்து ஊர்

மருதநிலத்தூர் நியமம் நிலயம் வாழ்க்கை
புரிவசதி நிகேதனம் புரம்பள்ளி பாழி
அகரம் உறையுள் அகலுள் கிராமம்
நகரம் கோட்டம் நகர் தடம் நிவேசனம்
தண்ணடை படப்பை சரணம் பூரியம்
எண்ணிய இருபத் தாயிரண்டு மிதற்கே.

1307. நெய்தல் நிலத்து ஊர்

நெய்தல் நிலத்தூர் நெடுங்கடற் சேர்பு
கைதை சூழ்வெளி பாக்கம் பட்டினமே.

1308. பகைவர் மேற்சென்றோர்உறைவிடம்

பகைவர் மேற் சென்றோ ருறைவிடம் பாசறை
முனைப்பதி பாடி வீடு என மொழிப.

1309. பகைவர் ஊர்

பகைவ ரூர்ப்பெயர் பாழி ஆமே.

1310. நூறு குடியுள்ள ஊர்

ஒரு நூறு குடியுளவூர் கிராமமே.

1311. நூறு கிராமம் சேர்ந்த கிராமம்

கிராமம் நூறு கெழுமிய கிராமம்
கருவடம் என்ப கலைவல்லுனரே.

1312. ஐந்நூறு குடியுள்ள ஊர்

அஞ்ஞூறு குடியுளவூர் பேரூர் ஆம்.

1313. மருங்கில் ஊர் சூழ்பதி,

மருங்கிலூர் சூழ்ந்துள வண்பதி படப்பம்.

1314. ஐஞ்ஞூறு பேரூர் சூழ்பதி

அஞ்ஞூறு பேரூர் சூழ்ந்துள வண்பதி
படப்பம் என்ப வண்டமிழ்ப் புலவர்.

1315. மன்னர் வாழ்பதி

மன்னர் வாழ்பதி மாநகர் புரிபுரம்
என்ன வோதுப விருந்தமிழ்ப் புலவர்.

1316. கோயில்

எல்லையில் காலத்திரும்பதி கோயில்
தில்லை என்ப தெரிந்திசி னோரே.

1317. காசி, காஞ்சி

காசி வாரணசி காஞ்சி
கச்சி என்ப கற்றுணர்ந்தோரே.

1318. கருவூர், கடாரம், கூடல், உறையூர்

கருவூர் வஞ்சி கடாரம் காழகம்
கூடல் மதுரை கோழி உறையூரே.

1319. அயோத்தி

அயோத்தி சாகேதம் கோசலம் ஆமே.

1320. மிதிலை

மிதிலை சனகை விதேகை என்ப.

1321. வினதைநகர்

வினதைநகர் கோலம் என விளம்பப்படுமே.

1322. அவந்திநகர்

அவந்திநகர் உஞ்சை ஆகுமென்ப.

1323. ஈழம்

ஈழம் சிங்களம் என்றிசைக்கப் படுமே.

1324. காவிரிப்பூம்பட்டினம்

காவிரிப்பூம்பட்டினம் காகந்தி புகாரே.

1325. மலைமேலுள்ள புரிசை

மலைமேற்புரிசை துருக்கம் அழுவம் ஆம்.

1326. மதில்

மதில் இஞ்சி நொச்சி வாரி வரைப்பு எயில்
பதணம் கற்பு அகப்பா அரணி நாயில்
ஓதை ஆரை சுற்று உவளகம் கடகம்
வேதி காப்பு காவல் வேலி வேணகை
அரணம் ஆரல் அரண் சிறை சாலம்
புரிசை பந்தம் புறம் எனப்படுமே.

1327. மதிற்சுற்று

மதிற்சுற்றின் பெயர் வாரி என்ப.

1328. மதிலுறுப்பு

மதிலுறுப்பு விதப்பு மேவறை முடக்கறை
நாயில் ஞாயில் நாஞ்சில் இயந்திரம்
பதப்பாடு தோணி கோசம் எனப்படுமே.

1329. மதிலுண்மேடை (மதிலுண்மேடை - கொத்தளம்)

மதிலுண் மேடை மஞ்சிவர் பதணம்
பரிகை கற்பு அகப்பா பரிகம் ஓதை.

1330. அகழ்

அகழ் கிடங்கு ஓடை அகழி பாம்புரி
பரிகம் கேணி பரிகை உடு என்ப.

1331. வாயில்

வாயில் தொட்டி வாரி கடைதூம்பு
வாய்தல் துவாரம் வாய் அருநெறியே.

1332. கோட்டையின் கள்ளவழி

உரங்கொளு மதிலிடைக் கரந்துபுரி வாயில்
சுருங்கை கற்படை எனச் சொற்றனர் புலவர்.

1333. கோபுரம்

கோபுரம் சிகரி புரிமுகம் எனக் கூறுப.

1334. கோபுர வாயில்

கோபுர வாயில் ஆத்தானம் கோபுரம்
அரிகூடம் கோட்டி ஆகுமென்ப.

1335. சிறுவாயில், திண்ணை

கோபுர வாயில்கொள் கதவிலிட்டுப்
புகும்வழி புதவு பூழை அவ்வழிச்சார்
திண்ணை குறடு அளிந்தம் ஆமெனச் செப்புவர்.

1336. படி

படி சோபானம் ஆரோகணம் எனப்படும்.

1337. படியின் இருபக்கமும் உள்ள யானைத்துதிக்கை

படியிரு மருங்கும் பாங்குற வமைத்துத்
தொடரும் வடிவு கொணெடிய சுருட்பெயர்
சுண்டம் தண்டம் சுண்டாலம் தண்டம்
தொண்டம் தொண்டலம் எனச் சொல்லப்படுமே.

1338. தெரு

தெரு நியமம் வீதி ஆவணம் கோணம்
மறுகு ஞெள்ளல் மார்க்கம் ஆமே.

1339. **தேர் செல்லும் தெரு**

தேர்செலு நெடுந்தெரு பெருந்தெரு நியமம்
மார்க்கம் மன்றம் எனவகுத்தனரே.

1340. **வீதி**

வீதி ஞெள்ளல் செப்பம் என விதித்தனர்.

1341. **அரசர் வீதி**

அரசர்வீதி பூரியம் எனலாமே.

1342. **கடைவீதி**

கடைவீதி கூலம் அங்காடி நியமம்
ஆவணம் ஆபணம் ஆவணியம் வீபணி
பீடிகை வாடிகை எனப்பெயர் பெறுமே.

1343. **குதிரை வையாளியிடும் வீதி**

குதிரை வையாளிவீதி யாக்குவயம்
செண்டு செண்டுவெளி திருமுற்றம்
புரவி வட்டம் எனப்புகன்றனரே.

1344. **குறுந்தெரு**

குறுந்தெரு மறுகு எனப்பெறும் பெயரே.

1345. **முடுக்கு**

முடுக்கு கோணம் எனவடுக்குமே.

1346. **இடையர் வீதி**

இடையர் வீதி சிரேணி வேணி
வாடை சேடி பாடம் எனப்படும்.

1347. **வேடர் வீதி**

வேடர்வீதி வாடை பக்கணம்மே.

1348. **பலதெரு கூடுமிடம்**

பலதெருக் கூடும் பாங்கர் கவலை
சந்தி என்ப முந்தைநூற் புலவர்.

1349. **மூன்று தெரு கூடும் இடம்**

முத்தெருக் கூடிடம் முச்சந்தி அந்தி ஆமே.

1350. நான்கு தெரு கூடும் இடம்

நாற்றெருக் கூடிடம் நாற்சந்தி சந்து
கோடகம் சிருங்காடகம் சதுக்கம்
வுரிச்சந்தி என்ப வான்கவிப்புலவர்.

1351. தேவர் கோயில்

தேவர் கோயில் சினகரம் சேதிமம்
வானவ ருறையுள் விமானம் மந்திரம்
தேவநகர் கோட்டம் கற்கி தேவகுலம்
நியமம் ஆலயம் நிகேதனம்
புள்ளி பீடரம் பாழி தளி ஆமே.

1352. ஓம மண்டபம்

ஓம மண்டபம் சமித்தும் என்றேதுப.

1353. ஓம குண்டம்

ஓம குண்டம் கூனை உதகவஞ்றுறையுள்
வேதி வேள்வி தடம் வேள்விக் குண்டமே.

1354. முனிவர் ஆச்சிரமம்

முனிவராச் சிரமம் மடம் முனிவாசம்
பள்ளி கரண்டை பாழி தாபதம்மே.

1355. வீடு

வீடு நகர் சரணம் நிவேசனம் இல்லம் இல்
மாடம் மாளிகை மந்திரம் மனை புக்கில்
பதி இடம் இடவகை பவனம் பாத்தி
வசதி குலம் உறையுள் தாமம் சேர்பு கிரகம்
நிகாயம் சதனம் நிகேதனம் நிசாந்தம்
அகாரம் கேகம் அகம் வயின் ஆமே.

1356. அந்தணர்மனை

அந்தணர் மனை பிரமாலயம் அகாரம்.

1357. **மன்னர்மனை**

மன்னர் மனை பவனம் மந்திரம் மாளிகை
கோயில் சாலம் குலம் நகர் மாலை என்
றேயுமென்ப வின்சொற் புலவர்.

1358. **அரசர் மனைவியர் இருக்குமிடம்**

வெந்திறல் வேந்தர் மனைவியர் வியன்மனை
அந்தப்புரம் கந்தவாரம் ஆமே.

1359. **மாடம்**

மாடம் வேயுள் மண்ணீடு உயர்நிலை
மேடை உப்பரிகை தளம் என விளம்புவர்.

1360. **மெத்தை வீடு**

எண்கதை மாடத் துச்சிமேலுறையுள்
சந்திரசாலை தானு குமமே.

1361. **மாளிகை மேல் வெளி**

மேனிலை மாடத்து மேலுலாம் வெளி
நீணிலா முற்றம் நிலாமுன்றில் அரமியம்.

1362. **முற்றம்**

முற்றம் அங்கணம் முன்றில் எனப்படும்.

1363. **படுக்கை அறை**

படுக்கை வீடு கண்படை அரி துயிலிடம்
கிடக்கை சேக்கை கிடை கட்சி சேர்விடம்
சட்டகம் துஞ்சிடம் தளிமம் வளரிடம்
பட்டம் அமளிபள்ளி கொள்ளிடம்
சாயல் உறையுள் சயனம் பாழி
பாயல் என்ப பண்புடைப் புலவர்.

1364. சுவர்

சுவர் குட்டியம் மேடுகம் பித்திகை
உவளகம் உவமானிலம் என்றோதுப.

1365. பலகணி

பற்பல கண்ணுடைப் பலகணி குறுங்கணி
சாலகம் சாலம் சாலேகம் சாளரம்
நுழைவாயில் வாதாயனம் நுழையெனப.

1366. உத்திரம்

உத்திரம் தூலம் வீட்டுத்திரம் ஆமே.

1367. தூண்

தூண்நிலைபேறு தூணம் கந்து கால்
தாணு மதலை தம்பம் கம்பமே.

1368. நீண்ட உத்திரம்

சுவர்ப்புறத்து நீளுத்திரம் துடைதாழ்
சுற்றுவாரி விடங்கம் முகடே.

1369. மனையிறப்பு

மனையிறப்பு இறவு இறை ஒளவி ஆமே.

1370. முகடு

முகடு விடங்கம் மஞ்சு என மொழிப.

1371. வீட்டுக் கொடுங்கை

வீட்டுக் கொடுங்கை விடங்கம் மதலை ஆம்.

1372. தாழ்வாரம்

தாழ்ந்திறங்கு தாழ்வாரம் சோபானம்
ஆரோகணம் எலலாகு மென்ப.

1373. திண்ணை

திண்ணை குறடு திட்டை குட்டிமம்
மண்ணீடு தெற்றி வேதிகை வேதி எனவரும்.

1374. அரசிருக்கை

அரசிருக்கை ஆத்தானம் ஆத்தானி ஆம்.

1375. நியாயசபை

நியாயசவை தருமசவை நிறையவை என்ப.

1376. சபை

சவை அவை கோட்டி சாலம் சமூகம் சங்கம்.

1377. அம்பலம்

அம்பலத்தின் அபிதானம் போதி
மன்றம் பொதுவில் சவை எனவருமே.

1378. சித்திர கூடம்

சித்திர கூடம் தெற்றில் அம்பலம் ஆம்.

1379. பொக்கிஷ சாலே

நால்வகைப் பொன்னு நவமணித்திரளும்
பால் பாலாகப் பாரித்துவைக்குந்
தண்டாச் சிறப்பிற்குவில் பெருநிதி
பண்டாரந் தண்டம் கோசம் எனப்படும்.

1380. பொன், மணி இவைகளை வைக்குமிடம்

வாரித் தெண்டிரை மணிப்பணி முதலிய
பாரித்து வைக்குமிடம் பண்டசாலேயே.

1381. தனித்திருக்கும் இடம்

தனித்திருக்குமிடம் ஏகாந்தம்
ஒருவந்தம் வேறிடம் என்றுரைக்கப்படும்.

1382. ஒதுக்கிடம்

ஒதுக்கிடம் துச்சில் பிறப்பிடம் ஒருசிறை.

1383. உறைவிடம்

உறைவிடம் ஆகரம் ஆமெண உரைப்பர்.

1384. கல்வி பயிலும் இடம்

கல்வி பயில்இடம் கல்லூரி கழகம்
கல்வியூரி எம்ப கற்றுணர்ந்தோரே.

1385. அரங்கம்

ஆடல் பயிலிடம் அரங்கம் சூதொ
டாயுதம் பயிலடம் அப்பெயர் பெறுமே.

1386. சமையல் செய்யுமிடம்

அடுமடைப் பள்ளி அடுக்களை அட்டில்
பாகசாலை ஆமெனப் பகர்வர்.

1387. அடுப்பு

நறை கமழடுப்பி னுமர் உத்தானம்
சுபாலிகை சுல்லி சோபாலிகை மணவை
காமரம் குமுதம் என்ப கற்புடையோர்.

1388. அறச்சாலை

அறச்சாலை சாலை அறப்புறம் பள்ளி ஆம்
சத்திரம் மடம் ஊண்சாலை அன்ன
சத்திரம் அன்னசாலை எனத்தகும்.

1389. நெற்குவியல்

நெற்கூடு கொட்டு நெல்லிராசி ஆம்.

1390. குதிர்

நெல் இயவை பெய்து நிரம்புங் குதிர் புகல்.

1391 பந்தல்

பந்தல் காவணம் பந்தர் எனப்படும்.

1392. தண்ணீர்ப் பந்தல்

தண்ணீர்ப்பந்தர் பிரவம் பிரவைதானே.

1393. யானைகட்டுமிடம்

1394. **குதிரைச்சாலை**

வாசியின் பந்தி மந்திரம் பணை
சாலையென்ப தமிழ் வல்லோரே.

1395. **பசுக்கொட்டில்**

பசுக்கொட்டில் ஆனிலை படப்பை கோட்டம்
இடங்குறைச் சுற்றில் கும்பை கூரை தொழுவே.

1396. **குடங்கர்**

குடங்கர் குடிசை குடில் ஆகும்மே.

1397. **அடிச்சேரி** (அடிச்சேரி - பணியாளர் குடியிருப்பு)

அடிச்சேரி அடிக்குடில் ஆகுமென்ப.

1398. **குயவன் மண்பாண்டம் செய்யுமிடம்**

குலாலன் மட்கலம் வினையிடம் கூடம்
குலாயம் பஞ்சரம் குயிலாயம்மே.

1399. **சுள்ளை**

சுள்ளை சூளை தாமம் எனப்படும்.

1400. **சலதாரை**

சலதாரை அங்கணம் தூம்பு சுருங்கை
புழைநீரோடி ஆமெனப் புகல்வர்.

1401. **சோலை**

சோலை அரி அடவி துடவை உய்யானனம்
கோடரம் கானம் குளிர்வனம் தண்டலை
ஆராமம் பொழில் ஆகுமென்ப.

1402. **ஊரைச் சூழ்ந்த சோலை**

ஊர்சூழ்சோலை உய்யானனம் பாணி
ஆராமம் கா வனம் எனலாமே.

1403. கடற்கரைச் சோலை

கடற்கரைச் சோலைப் பெயர் கானல் ஆமே.

1404. நந்தவனம்

வைத்து வளர்த்த வனம்நந் தவனம்
உபவனம் ஆராமம் உத்தியானம்
தண்டலை துடவை பூஞ்சோலை தானே.

1405. தோட்டம்

தோட்டம் படப்பை துடவை என்ப.

1406. வேலி

வேலி காவல் காப்பு இவை வாடி.
கோலரண் அரணம் ஆமெனக் கூறுப.

1407. பொருகளம்

பொருகளம் செங்களம் போர்க்களம் முரட்களம்
செருநிலம் களரி செருக்களம் செம்புலம்
படுகளம் விளாகம் பகைக்களம் களம்
அடுகளம் பலகையகம் அமர்க்களம் சமர்க்களம்
அரங்கம் மொய் பறந்தலை ஆகவபூமியே.

1408. சுடுகாடு

சுடுகாடு இறந்தோர் சேரிடம் சுடலை
இடுகாடு படுகாடு ஈமம் சுடுநிலம்
காளாவனம் அறக்காடு பிதிர்வனம் வனம்
வெங்காடு மயானம் வெம்புறங் காடே.

1409 காடு

காடு காந்தாரம் கட்சி சுரம் கடம்
அத்தம் குறும்பொறை அடவி அருப்பம்
கடம் கண்டம் காண்டம் காண்டகம்
கிரணி பொச்சை தில்லம் தாவம்
ஆரணியம் புறவம் அரணியம் துருக்கம்
பாணி விபினம் பழுவம் சங்கிரம்

கானல் கான் கானம் கானனம் ககனம்
களரி கவை விடர் கானகம் வியல்
முளரி என்ப மூதுணர் புலவர்.

1410. காவற்காடு

காவற்காடு அரண்கணையம் இளை அரணம் ஆம்.

1411. குறுங்காடு

குறுங்காடு இறும்பு எனக் கூறினர் புலவர்.

1412. பெருங்காடு

பெருங்காடு வல்லை யெனப்பெயர் பெறுமே.

1413. யானை திரியும் காடு

கரிதிரிகாடு பொதி கரிக்காடே.

1414. முதுகாடு

முதுகாடு பிறங்கியல் முதையல் என்ப.

1415. கொல்லை

கொல்லை ஆலைம் புனம் எனக் கூறுப.

1416. புதுக்கொல்லை

புதுக் கொல்லை இதைப்புனம் புதுப்புனம் என்ப.

1417. பழங்கொல்லை

பழங்கொல்லை முதைப்புனம் எனப்பகர்ந் தனரே.

1418. தினைப்புனம்

தினைப்புனம் ஏனல் தினைவிளை வனாகம்.

1419. காட்டைவெட்டிச்சுட்டகாடு

காடு வெட்டிச் சுட்டகாடு முதை மூதை ஆம்.

1420. உழுநிலம்

உழுநிலம் தொய்யில் என்றோ தப்படும்.

142 ...

உழவு தொய்யில் என்றுரைத்தனர் புலவர்.

1422. **உழவுத்தொழில்**

உழவுத் தொழில் வளப்பு தொழுப்பு என்றோதுப.

1423. **படைச்சால்**

படைச்சால் சீதை சால் எனப்படுமே.

1424. **விலங்கின் படுக்கை**

விலங்கின் படுக்கை சேக்கை பட்டம்
பணை பண்ணை பாழி போத்து எனப்படும்.

1425. **யானை துயிலுமிடம்**

யானை துயிலுமிடம் சேவகம்மே.

1426. **யானை செல்லும்வழி, படுகுழி**

யானை செல்வழி தண்டம் அவ்வியானை
படுகுழி வாரி பயம் எனப்படுமே.

1427. **புற்று**

செல்லின் வாயாற் செய்தமை புற்று
வன்மீகம் நாகு வாமலூருவே.

1428. **புற்றுஞ் சோறு**

புற்றுஞ் சோறு குறும்பி வல்சி ஆம்.

1429. **எறும்பளை**

எறும்பளை ஆக்கு என்றெய்தும் பெயரே.

1430. **வளை**

புடை வங்கு பொக்கு அளை பொய் பிலம் பொந்து.

1431. **வழி**

வழி அதர் வட்டை வாரி தாரியே.

1432. **வழி** (தொடர்ச்சி)

அழிவில் வதி பட்டம் ஆறு பாதை
நடவை கால் வீதி நடை செலவு அயனம்

இடவை செப்பம் கிறி இயவு தடம்தெரு
பரி பதம் போக்கு பதலை ஒழுக்கம்
வரி சரி பதவி மார்க்கம் வனம் துலாற
வயலை உந்தரம் வகிர் படர்
இயவை நெறி அடை என்றி சைத்தனர் புலவர்.

1433. **கவர்வழி**

கவர்வழி கவலை கவ்வை ஆமே.

1434. **சிறுவழி**

சிறுவழி தானே விடங்கர் என்ப.

1435. **நீள்வழி**

நீள்வழி அளக்கர் நெட்டாறு என்ப.

1436. **அரும் வழி**

அரும்வழி கடம் கடறு அத்தம் தூம்பு
சுரம் அருநெறியெனச் சொற்றனர் புலவர்.

1437. **இடுக்குவழி**

இடுக்கு வழிப்பெயர் இட்டிகை என்ப.

1438. **புதுவரம்பின்வழி, பழவரம்பின்வழி**

புதுவரம்பின் வழி மாசி, மஞ்சில்
பழவரம்பின் வழி எனப்படுமே.

1439. **இழிந்தேறுவழி**

இழிந்தேறுவழி படுகர் என்மனார் புலவர்.

1440. **ஆதி**

ஆதி எழுவாய் அடி தலை தாள் முதல்
மூலம் முன்னர் மோனை தொடக்கம்
பூருவம் பிரசயம் ஆமெனப் புகல்வர்.

1441. **பக்கம்**

இனி முன் மேல் ஞாங்கர் புரம் மற்று என்ப.

1442. **முன்னம்**

முன் முன்னம் முன்னை முன்பு புரம் முன்னரே.

1443. **பின்பு**

பின் பின்னை பின்பு பிற்றை பின்றை
பின்னர் பிறகுஎனப்பெய ராகும்மே.

1444. **சேய்மை**

சேய்மை தூரம் சேண் சேய் சேய்த்தே.

1445. **நணிமை**

நணிமை சமீபம் நணித்து அண்மை என்ப.

1446. **கூப்பிடுதூரம்**

கூப்பிடு தூரத் தளவை குரோசம்
எல்லையென்ப வியலுணர் புலவர்.

1447. **ஆண்டலைப்பறவை யளவை**

ஆண்டலைப்பறவை யளவை கிரவுஞ்சம்.

1448. **காதம்**

காதம் புகை யோசனை காவதம்மே.

1449. **எல்லை**

எல்லை கரை வரம்பு ஏணிகாடு அளவை
வரைவு பரியந்தம் வரைப்பு அவதி கோடம்
கொத்தம் ஆமெனக் கூறினர் புலவர்

ஐந்தாவது இடப் பெயர்த் தொகுதி முற்றியது.

ஆருவது பொருட்பெயர்த் தொகுதி.

1450. **பொன்**

பொன் அரி பூரி பொருள் பொலம் கைத்து
சொன்னம் ஈகை சுவணம் தொடுக்கம்
அனந்தம் நிதி நிதானம் அருச்சுனம் சந்திரம்
கனம் தனம் தமனியம் கல்யாணம் காணம்
ஆசை கற்பூரம் அருத்தம் கணயம்
மாசை தேசிகம் மாழை காங்கேயம்
ஆடகம் உடல் உரை ஆக்கம் சாமிகரம்
மாடை பீதகம் மாடு வசு நிசி
சாதரூபம் தசும்பு சாம்பூநதம்
பிதம் ஏமம் பிங்கலம் பண்டம்
இரணியம் காரம் ஏகாகாரம் ஈழம்
திரவியம் தேசு கூழ் செந்தாடி செங்கொல்
வித்தம் வேங்கை வெறுக்கை செம்பொன்
அத்தம் கனகம் அரிய காஞ்சனமே.

1451. **வெள்ளி**

வெள்ளி தாரம் வெண்டாது ஈனம்
சுல்லு வங்கம் துருவெண்ணம் வெண்பொன்
இரசிதம் களதபுதம் என்றென்பதும்
சாதநூற் புலவர் சாற்று தொல்பெயரே

1452. **செம்பு**

செம்பு எருவை தாம்பிரம் சிருணம் சிருள்
உதும்பரம் வடுவொடு சுற்பமு மிதற்கே.

1453. **ஈயம்**

ஈயம் வங்கம் சிருளம் என்ப.

1454. **காரீயம்**

காரீயம் நாகம் ஆமெனக் கழறுப.

1455. **இரதி**

இரதி ஆரகூடம் இரீதி
ஆரம் மாயாபுரி என்றறைவர்.

1456. **வெண்கலம்**

வெண்கலம் கஞ்சம் உறை தாரமே.

1457. தரா

தரா மதுகம் என்ப தந்துநூற் புலவர்.

1458. பித்தளை

பித்தளைப் பெயர் ஆரகூடம் ஆருபதம்.

1459. இரும்பு

இரும்பின் பெயர் கருந்தாது அகி அயம் அயில்

கரும்பொன் கருங்கொல் என்ப கற்றுணர்ந்தோர்.

1460. உருக்கு

உருக்கு எஃகு என்ப உணர்ந்திசினோரே.

1461. உலோகக்கட்டி

பொன் முதலுலோகக் கட்டி வங்காரம்.

நன்மாழை தகடு என்ப நன்குணர்ந்தோர்.

1462. பொற்காசு

பொற்காசு காணம் ஆமெனப் புகன்றனர்.

1463. வயிரம்

வெயிரமணி வயிரம் வச்சிரம் ஆமே.

1464. வயிடூரியம்

வெயிடூ ரியமணி வாலவாயமே.

1465. மாணிக்கம்

மாணிக்கம் செம்மணி மாமணி கௌத்துவம்

ஆணிக் கனகத்தமை பதுமராகம் ஆம்.

1466. மரகதம்

மரகதம் அரி மரதகம் பச்சை என்ப.

1467. நீலமணி

நீலமணி நீலம் இந்திர நீலம் மணியே.

1468. முத்து

முத்துமணி மணி முத்தம் முத்து ஆரம்

நெய்த்தொளிர் தரளம் நித்திலம் மௌத்திகம்

முத்தாபலம் எனமொழியப் படுமே.

1469. பவளம்

பவளம் துகிர் பிரவாளம் பவாளம்
துப்பு வித்துருமம் துவர் அரத்தம்மே.

1470. பத்மராகம்

பதுமராகம் கௌத்துவம் எனப்படுமே.

1471. அகன்மணி

அகன்மணி சலாகை மாடு அரதனம் ஆகும்.

1472. கடவுண்மாமணி

கதிர் கொணவமணி கடவுண்மாமணி இவை
நிதி நிதானம் ஆமென நிகழ்த்துப.

1473. மணிப்பொது

மணிப்பொது இரத்தினம் மனவுகாழ் காசே.

1474. அயக்காந்தம்

அயக்காந்தமணி சும்பகம் சலாகை ஆம்.

1475. சந்திரகாந்தம்

சந்திரனொளி முன்னீர் சிந்துமாமணி
சந்திரகாந்தம் சலாகை சசிகாந்தம்
இந்துகாந்தம் எனப்பெயரெய்தும்.

1476. சூரியகாந்தம்

சூரியனொளிமுன் சுடுமழற் கான்மணி
சூரிய காந்தக்கல் எனச் சொல்லுப.

1477. பளிங்கு

பளிங்கு காழ் படிகம் பருக்கை ஆமலகம் ஆம்.

1478. சங்கு

சங்குமணி அக்கு மனவு எனத்தகுமே.

1479. சூதம்

சூதம் பேதி துள்ளிரதம் சபலம்
பாதரசம் பாரதம் எனப்படுமே.

1480. **சாதிலிங்கம்**

சாதிலிங்கம் குலிகம் இங்குலிகம் தாதே.

1481. **காவிக்கல்**

காவிக்கல் தாது நற்செங்கல் காரிகம் ஆம்.

1482. **அரிதாரம்**

அரிதாரம் பழுப்பு தாளகம் ஆகும்.

1483. **கோரோசனை**

கோரோசனை சௌரபம் கோரோசனம்
கார நேருங் கௌதமி யாமே.

1484. **கத்தூரி**

கத்தூரி நரந்தம் கமழ்நானம் மான்மதம்
மிருகமதம் என்ப வியன்மொழிப் புலவர்.

1485. **கருப்பூரம்**

கருப்பூரம் கப்புரம் கனசாரம் சசி
பாளிதம் சந்திர நாமம் பளிதம்.

1486. **குங்குலியம்**

குங்குலியம் குக்குலு குங்குலு என்ப.

1487. **பருத்தி**

பருத்தி கார்ப்பாசம் பரி பன்னல் ஆமே.

1488. **பஞ்சு**

பஞ்சு துலவம் தூலம் எனப்படும்.

1489. **நூற்கும் பஞ்சின்தொடர் நுனி**

நூற்கும் பஞ்சிற்றொடர் நுனி துய்யே.

1490. **இலவம் பஞ்சு**

இலவம் பஞ்சின் பெயர் பூளையென்ப.

1491. **செம்பஞ்சு**

செம்பஞ்சு அலத்தகம் அலத்தம் அரத்தமாம்.

1492. **அரக்கு**

அரக்கு தமரம் அரத்தம் துப்பே.

1493. **மெழுகு**

மெழுகு வள்ளியம்என மேவும் பெயரே .

1494. **பிசின்**

பிசின் பயின் தொடர்பு எனப்பேசினர் புலவர்.

1495. **கலவைச் சந்தனம்**

கமழுநற் கலவைச் சேறு கலம்பகம்
களபம் வண்ணம் காலேக வண்ணம்
பீதம் விரை சாந்து பீதகம் ஆமே.

1496. **வாசனைச் சந்தனம்**

பரிமளச் சாந்து அங்காரகம் எனப்படும்.

1497. **நான்கு வகையான சந்தனம்**

நால்வகைச் சாந்திணுமம் வட்டிகைபுலி
பீதம் காலேகம் எனப்பெயர் பெறுமே.

1498. **களபம்**

பன்னறும் பண்டத்திற் பதனுற வமைத்த
நன்னறுங் குழம்பிணுமம் களபம்
செச்சை கலம்பகம் தேய்வை கலவை ஆம்.

1499. **மயிர்ச் சாந்து**

மயிர்ச் சாந்து காசறை மணமலி ஏலம்
தகரம் கோட்டம் எனத்தகும் பெயரே.

1500. **திருநீறு**

திருநீறு திருவெண்ணீறு நீறு

ஏமம் விசிதம் ஓமப்பொடி காப்பு
பூதி விபூதி என்றோதினர் புலவர்.

1501. குங்குமம்

குங்குமம் செஞ்சாந்து ஆமெனக் கூறுவர்.

1502. சிந்தூரம்

சிந்தூரம் சாலேகம் திலகம் ஆமே.

1503. அரும்பண்டம் (அரும்பண்டம் - அருமையான பொருள்)

அரும்பண்டம் தாரம் ஆகுமென்ப.

1504. பலபண்டம்

பலபண்டம் கூலம் வளம் பண்ணிகாரம்
பண்டாரம் பாணி பரிகாரம் என்ப.

1505. திரிபுண்டரம்

ஆன்றமை சிறப்பினண்ணல் வெண்ணீற்றின்
மூன்று பிறையடுத்துத் தோன்றுவபோல
வெந்துயர் நீங்க விதி பெற நுதலிற்
றந்து புனைகுறிதான் திரிபுண்டரம்.

1506. திலகம்

திலகம் திலதம் ஆமெனச் செப்புவர்.

1507. நுதலணிகுறி

வெதிரிலை துத்தி விரிபுளி யலரின்
நுதலணி குறியெலாம் நுதற்குறி என்ப.

1508. அறுகும் அரிசியும் கூட்டி அணிவது

அறுகு வெள்ளரிசி கூட்டியது அச்சுதம்.

1509. மகரிகா பத்திரம்

தெரிவையர் தோளினுந்திதலைமென் முலையினும்
வரிபட வெழுதிய மகரிகா பத்திரம்

வல்லி தொய்யில் மகரிகை என்ப.

1510. **புழுதி**

புழுதி அதர் சுண்ணம் நுண்பொடி துகள்தூளி
பூழி பூழ்தி பொடிஎனப் புகல்வர்.

1511. **நுண்பொடி**

நுண்பொடி பராகம் நுண்டுகள் பிதிர்நீறே.

1512. **விறகு**

முரிவிறகு முளரி முருடு ஈமம் இந்தனம்
எரிகோல் கட்டை காட்டம் காட்டை கறலே.

1513. **சுமை**

சுமை பரி பாரம் சும்மை பொறை ஆமே.

1514. **சுமையடை**

சுமையடை கடும்பு சுடுவு சிம்புரி
அமைசுமடு சும்மாடு ஆகுமென்ப.

1515. **ஓமவிறகு**

ஓமவிறகு சமிதை என்றேதுப.

1516. **தீயையுடைய விறகு**

நெருப்புறுவிறகு ஞெகிழி கொள்ளியே.

1517. **கடைக்கொள்ளி**

கடைக்கொள்ளி இராதம் உற்கை முளரி ஞெகிழி.

1518. **கரி**

கரி இருந்தை கந்துளம் ஆகக் கருதுப.

1519. **சாம்பல்**

சாம்பல் வெண்பலி பூதி பலி சாம்பர் அடலை ஆம்.

1520. சுடுசுண்ணம்

சுடுசுண்ணம் களபம் மண்சுதை சுட்டசாந்தே.

1521. பின்னம்

பின்னம் சின்னம் பிதிர் சிதர் பராகம்.

1522. உபகரணம்

உபகரணம் துணைக்காரணம் கரணம்
ஆயுதம் கருவி துப்பு ஏது ஆமே.

1523. தோரணம்

தோரணம் மகரிகை தூக்கணம் தூக்கே.

1524. எண்ணெய்

எண்ணெய் தயிலம் நெய் நேயம் என்றிசைப்பர்.

1525. பிண்ணாக்கு

பிண்ணாக்கு துவை பிண்டி மலாவகம்
வறையல் தயிலாபகம் எனவறைவர்.

1526. சோறு

சோறு உணா உண்டி சொன்றி தொடுபதம்
போனகம் வல்சி பொம்மல் புகாபுழுக்கல்
ஓதனம் அன்னம் ஊண் அமலை புன்கம்
சாதம் அயினி போசனம் பொருகு தோரி
மிசை மடை அடிசில் கூழ் மிதவை பாளிதம்
பிசி பலி நிமிர்தல் பிண்டம் கவளம்
சதி அவி மூரல் சரு அமுது புளகம்
பதம் துப்பு அழுப்பு பாத்து அசனம்மே.

1527. பெருஞ்சோறு

பெருஞ்சோறு பொதி எனப் பேசினர் புலவர்.

1528. வழியுணவு

தோட்கோப்பு பொதிசோறு பாதேயம்.

ஆற்றூண் அதரூண் ஆகுமென்ப.

1529. பாற்சோறு

பாற்சோறு தீம்பாலடிசில் பாளிதம்
பாயசம் என்ப பண்புடைப் புலவர்.

1530. சர்க்கரை சேர்த்து ஆக்கிய சோறு

செந்நெலரிசி சிறு பருப்புத்தீம் பாலொடு
கன்னலின் சுவை கழுமுறக் கலந்து
துடிச்சி கமழ்நெய் சொட்டச் சொட்ட
அடுமடலை அக்காரடலை என்ப.

1531. வெண்பொங்கல்

பருப்பொடு விராயநெய் பயிலுமின்னமுது
விருப்புறு செம்பொன் வண்ணப்புழுக்கல்.

1532. தயிர்ச்சோறு

வெண்ணெய் மலிதயிர் விராயபோனகம்
உண்ணவினிய ததியோதனம்மே.

1533. புளியோதரை

புளிஞ்சோறு புளிந்தோரி புளிம்பாளிதம்மே.

1534. பற்பல சுவைபட அமைக்கும் சோறு

வேறுவேறு சுவையுற வமைக்கும்
சோறெலாம் சித்திர வமுதெனச் சொல்லுப.

1535. பருப்புத்திரள்

பருப்புத்திரள் வியஞ்சனம் எனப்படும்.

1536. கீரை

அங்குழைக் கீரை அடகு இலைக்கறியே.

1537. பொரிக்கறி

பொரிக்கறி கருணை பொரியல் சிற்றுண்டி.

1538. துவட்டல்

துவட்டல் வறை வறையல் எனச் சொலப்படுமே.

1539. குய் (குய் - தாளித்தகறி)

ஐயவி பொரித் தடுகலன் மாற்றுங்கறி
நெய்யொடு கமழுங் குய்யென மொழிப.

1540. புளிங்கறி

புளிங்கறி துவைஎனப் புகன்றனர் புலவர்.

1541. பெருங்கறி

பெருங்கறி நீடாணம் எனப்பெயர் பெறுமே.

1542. குழம்பு

குழம்பு பாகு ஆணம் ஆமெனக் கூறுப.

1543. பலவகைக் கறிகளைச் சேர்த்துச் சமைப்பது

பலவகைக் கறியோர் பாகாயடுவது
கலவை என்ப கவிமுதியோரே.

1544. கஞ்சி

கஞ்சி மோழை காடி குழம்பு
பாகு வருக்கொடு பாத்து என்றேதுப.

1545. கூழ்

கூழ் புற்கை காடி ஆமெனக் கூறுப.

1546. அமரர் உணவு

அமரருணவு அவி பலி சரு அமிழ்தம்.

1547. காளகூடம்

காளகூடம் ஆலாலம் கடுவிடம்
ஆலம் என்ப வறிந்திசி னோரே.

1548. அமுதம்

அமுதம் அமிர்தம் அமிர்து அமிழ்து அமிழ்தம்

அமரி சுதை மருந்து அமுது ஆகும்மே.

1549. **அப்பவருக்கம்**

அப்பவருக்கம் அபூபம் இலட்டுகம்
துப்பமை பூரிகம் தோசை சஂஂகுல்லி
அண்டகை கஞ்சம் அடை நொலை நொலையல்
மண்டிகை பொள்ளல் வடை மோதகம்மே.

1550. **அடை**

அடை வடை அபூபம் ஆகுமென்ப.

1551. **பிட்டு**

பிட்டு ஆவி வெந்தை பிதிர்படும் அருப்பம்
உக்காரி என்ப உணர்ந்திசி னோரே.

1552. **தோசை**

தோசை அடை இலட்டுகம் ஆமெனச் சொற்றனர்.

1553. **அவல்**

அவல் பிதுகம் பொரி இலாசம் ஆமே.

1554. **உக்காரி (உக்காரி - பிட்டு)**

உக்காரி அஂகுல்லி ஆமென்றோதுப.

1555. **மோதகம்**

மதுரபூரண நிறை மோதகம் மண்டிகை.

1556. **திணைமா**

நுண்டிணைமா இடி நுவணம் நுவணை
பிண்டி எனப்பெயர் பேசப்படுமே.

1557. **பிண்டி (பிண்டி - மாவு)**

பிண்டி பொருடாசம் இடி பிட்டம் தென்மாவே.

1558. **தேன்**

தேன் பிரசம் அமுதம் மது தெண்மகரந்தம்.

1559. சருக்கரை

சருக்கரை கன்னல் சயம் பஞ்சதாரை பாகு
அருக்கிய கட்டி அக்காரம் விசயம்
அழகு குளம் பாகு அயிர் குடம் ஆமே.

1560. கண்ட சருக்கரை

கண்ட சருக்கரை கண்டம் புல்லகண்டம்
அயிரம் கண்டு பாளிதம்மே.

1561. பால்

பால் கீரம் துத்தம் பயசு பயம் சுதை
அமுது கலசம் அமிழ்து எனப்படுமே.

1562. தயிர்

தயிர் அளை பெருகு முசரு ததி என்ப.

1563. மோர்

மோர் அளை தக்கிரம் முசரு காலேயம்
நீருறு மருப்பம் மதிதம் மச்சிகையே.

1564. நீர்மோர்

நீர்மோர் பாதநிர் அத்தநீர் நேர்நீர்.

1565. வெண்ணெய்

வெண்ணெய் நுரை ஐயங்கவீனம் நவநீதம்.

1566. நெய்

நெய் துப்பு அவி கிருதம் நேயம் ஆச்சியம் ஒமி
செய்துப்பகம் ஆகாரம் இழுது என்ப.

1567. பருகுவன

பருகுவன வெவையவை பானம் துவையே.

1568. துத்தி, தித்தி

துத்தி உண்பனவென்றும் தித்தி
தின்பன வென்றுஞ் செப்பினர் புலவர்.

1569. எச்சில்

எச்சில் உச்சிட்டம் எச்சம் சேடம்
மிச்சில் என்ப மேம்படு புலவர்.

1570. சாணம்

சாணம் ஆப்பி சாணகம் சாரதம் கோமயத்தொடு
பேணு திருமெழுக்கு எனப்பெயர் பெறுமே.

1571. விலங்கு உணவு

இலைநுகர் விலங்கினுணவு குளகு என்ப.

1572. பறவை உணவு, ஒரு சில விலங்கின் உணவு

பறவையுணவு ஒருசார் விலங்குணவு ஊட்டி
உறை உணு இரை உண்டி என்றோதுப.

1573. பனங்கட்டி

பனங்கட்டி பனுட்டு அட்டு ஆமெனப்படுமே.

1574. கள்

களிகொள்கள் வேரி களி கவ்வை கல்லியம்
அளிகள்சூழளி படு அருப்பம் அம்மியம்
முருகு சாதி முண்டகம் மௌலி
அருகி சுலோகி ஆம்பிலம் ஞாளி
ஆதவம் ஆசவம் அறிவழி ஆதுவம்
மாதவம் நறவு நறு மகரந்தம்
இக்கு மட்டு யானம் ஈழம்பானம்
சிக்கர் சுழிகை தேன் கொங்கு குந்தி
ஆம்பல் விகுணி ஆலை குடு வாருணி
தேம்பிழி விசுளி தேறல் வாணிதம் நனை
தொண்டி சாயனம் தோப்பி சொல்விளம்பி
சுண்டி தணியல் தும்பி சொல் மாரி
பேதை சோபம் சுவிகை பிரசம் பாணி
மேதை மறவி வெறி சேறு சாறு
மருட்டம் மதுகரம் மது மதுவம் மதுரை

அரிட்டம் நாற்றம் அரி சுரை இரேயம்
மாலி காவி வடி சாலி ஆலி
பாலி ஏலி பாடலி சுமாலியே.

1575. பனங்கள்

பனையினடுகள் பனட்டு தாலயம்.

1576. தென்னங்கள்

தெங்கினடுகள் கொங்கு இலாங்கலிகம்.

1577. மலரிலிருந்து எடுக்கும் கள்

மலரினடுகள் பூங்கள் மகரந்தமே.

1578. இலுப்பை மலரிலிருந்து எடுக்கும் தேறல்

மதூக மலரின் வடியுறு தேறல்
மதூகம் மதுகம் மது எனப்படுமே.

1579. கன்னற் கட்டியிலிருந்து எடுக்கும் கள்

கன்னற் கட்டியி னடுகள் கௌடம் ஆம்.

1580. தேனீக்கள் சேகரிக்கும் கள்

தேனினடுகள் தேம் மாதவம்மே.

1581. வெண்ணெல்லிலிருந்து எடுக்கும் கள்

தூவெண் ணெல்லி னடுகள் தொண்டி. ஆம்.

1582. கள்வகை

நெல் கோதி தெங்கு நெட்டிலையரம்பை
புற்றுளி ஈந்து பூங்கழை தீந்தேன்
சோறு பல்பழம் மரத்தோல் இலை அரலை
நாறுமலர் முதனவில்பல வற்றின்
அடுபவை யாவு மருந்தினர் மாட்டுப்
படுகளி செய்கட் பாகுபாடு என்ப.

1583. கானல்

கானல் பேய்த்தேர் கழுதிரதம் நீர்மருள்

வேனில் மரீசிகை வெண்டேர் என்ப.

1584. ஒழுங்கு

ஒழுங்கு அணி கோதை ஒளி சிரேணி
ஆவளி மாலை ஆளி இராசி.
தாமம் நிரல் நிரை தார் வீதி
பத்தி முறை எனவைத்த தொல்பெயரே.

ஆருவது பொருட் பெயர்த் தொகுதி முற்றியது.

ஏழாவது செயற்கை வடிவின் பெயர்த் தொகுதி.

1585. சூலம்

மும்முனை நீளிலைச் சூலம் மூவிலைவேல்
தெம்முனை தெறும்பெருந் திறலுறுஞ் சத்தி
கழுமுள் முக்குடுமி காளம் குளிர் கழு
விழுமிய முத்தலை வேற்படை ஆமே.

1586. கோடரி

கூர்மழு கணிச்சி குளிர் தண்ணம்
பாலம் நவியம் பரசு எனப்படுமே.

1587. சக்கராயுதம்

சக்கராயுதம் அரி ஆழி சுதரிசனம்
எஃகம் திகிரி ஏழ் பரிதி வட்டம்
நேமி வளை என்ப நிறைமொழிப் புலவர்.

1588. வில்

வில் சராசனம் முனி வேணு துரோணம்
கொக்கரை சானகம் கொடுமரம் கார்முகம்
சிந்துவாரம் தனு சிலை தடி தவர் சரம்
உந்து கோதண்டம் சாபம் தருமமே.

1589. சிவபெருமான்வில்

ஈசன்வில் அயகவம் பிநாகம் எனப்படும்.

1590. திருமாலின் வில்

மாயன்வில் சார்ங்கம் ஆமென வறைவர்.

1591. ஸ்ரீராமன்வில்

சீராமன் செஞ்சிலை சிறந்த கோதண்டமே.

1592. அருச்சுனன்வில்

அருச்சுனன்வில் காண்டீபம் என்றறைவர்.

1593. தனுவின் குதை

தனுவின் குதை குலை தாறு எனத்தகுமே.

1594. நாணி

தடம்படு சிலையி னிடம்படு நாணி
வடம் குணம் ஆவம் மவுருவி சிஞ்சினி
பூரி ஆயம் தொடை பூட்டு நரம்பு
நாரி நாண்என நவிலப் படுமே.

1595. அம்பு

அம்பு சாயகம் ஆசுகம் கதிரம்
புங்கம் பாணம் பூதை புதை தொடை
அத்திரம் கோ கோல் ஆவரி சிலீமுகம்
பத்திரம் கணை கங்க பத்திரம் பத்திரி
மார்க்கணம் பிரதரம் வண்டு காண்டம்
வேத்திரம் பகழி விசிகம் ககம் பல்லம் சரம்
வாளி என்ப மதிநூற் புலவர்.

1596. மொட்டம்பு

மொட்டம்பு உதணம் மாக்கோல் எனமொழிப.

1597. முன்விடும் அம்பு

முன்விடும்அம்பு அத்திரம் என மொழிவர்.

1598. அம்பின் கட்டு

அம்பின் கட்டுப் புதை எனலாமே.

1599. அம்பு இறகு

அம்பிறகு ஈர்க்கு உடு ஈர்க்கில் ஆகும்.

1600. கொல்லும் அம்பின்குதை

கோறுமம் பின்குதை குலை பகழி
கூறுசெய் புங்கமு மிதன்பெயர் கொளுமே.

1601. அம்பின் தலை

அம்பின் தலை யபிதானம் உடு சுரை
என்ப செந்தமி ழின்சொற் புலவர்.

1602. அம்பின் குப்பி

அம்பின் குப்பிக் கமைபெயர் புழுதே.

1603. அம்புத் தொகுதி

அம்புத் தொகுதி கட்டாக்கை பற்ருக்கை.

1604. அம்பின் கூடு

அம்பின்கூடு ஆவநாழிகை ஆவம்
தூணம் தூணி தூணீரம் என்ப.

1605. வேல்

வேல் எஃகம் எஃகு விட்டேறு அயில் நிணம்
கால் சத்தி குந்தம் கடுக்கொ ளுடம்பிடி
அரணம் ஞாங்கர்என் ருகுமென்ப.

1606. கைவேல்

கைவேல் சத்திரம் கப்பணம் தோமரம்
வைவேல் விகற்பம் ஆகுமென்ப.

1607. வச்சிராயுதம்

வச்சிராயுதம் அசனி வயிரம் குலிசம்
சதமுனை சம்பம் சதகோடி என்ப.

1608. வாள்

வாள் கண்டம் வஞ்சம் வசி ஏதி உவணி

நீள் கண்டகம் அசி நெய்தோய் நவிரம்
கட்கம் வேணு கரவாளம் கரவாள்
புட்கரம் சாயகம் பூமரு கடுத்தலை
நாந்தகம் தூவத்தி நாட்டம் வள்ளனத்
தீந்தமிழ்ப் புலவர் செப்பின ரன்றே.

1609. **உடைவாள்**

உடைவாள் சுரிகை ஒண் குறும்பிடி
படைவேல் பத்திரம் எனப்பகரப் படுமே.

1610. **ஈட்டி**

ஈட்டி கழுக்கடை இட்டி கழுமுள் முன்
னிட்டு சவளம் சலாகை என நிகழ்த்துப.

1611. **பெரிய ஈட்டி**

பெருஞ்சவளம் குந்தம் பீலி தோமரம் என
வரும் பெயர் என்ப வண்டமிழ்ப் புலவர்.

1612. **சிறிய சவளம்**

சிறுசவளம் குந்தம் எனச்செப் புவரே.

1613. **பிண்டி**

பிண்டி வாலம் எறிபடை பீலித்
தண்டு எனவைத்துச் சாற்றினர் புலவர்.

1614. **தடி, குறுந்தடி**

தடி கதை தண்டு எறும் தண்டம் ஆம்
குறுந்தடி குணில் என்னச் சாற்றத்தகுமே.

1615. **ஊன்றுகோல்**

ஊன்றுகோல் தண்டம் ஊற்றுக்கோலே.

1616. **அத்திரம், சத்திரம்**

அத்திரம் கைவிடு மரும்படை தூரியம்
சத்திரம் கைவிடாப் படைஎனச் சாற்றுப.

1617. கேடகம் சேடகம்

கேடகம் தோற்பரம் கிடுகு தோல் பரிசை
சேடகம் பலகை வேதிகை மறைகடகம்
அறுகுமிழ் வட்டம் தட்டு ஆகமுழு தடக்கி
உறுபடை தாங்கி உயர்வட் டணம்மே.

1618. தோற் கேடகம்

தோற்கே டகப்பெயர் தோற்பரம் தோலே.

1619. பிரம்பின் வட்டம்

பிரம்பின் வட்டப் பெயர் தண்டை வள்ளி.

1620. நெடும்பரிசை

நெடும் பரிசை மரவட்டம் நெடியவட்டம்மே.

1621. கவண்

கவண் குளிர் தட்டை கவணை குணில் தழல்
ஒடிசிலோடேழென் றேதப்படுமே

1622. குளிர்

குளிர் ....கிளிகடிகோல் தழல் தட்டை.

1623. ஆயுதப்பொது

ஆயுதப்பொது அசி அலகு படை உயிர்
வாயிடுமெதி மறமலி படைக்கலம்
காத்திரை காண்டம் வேல் கருவிசத்திரம்
கூர்த்திகை சுதனம் கொல்லிரும்பு அரி
சேனை கழுமுள் செம்புனலுமிழெஃகம்
தானை துப்புளனத் தக்கதொல்பெயரே.

1624. கூர்மை

கூர்மை நுண்மை கூர்ப்பு நுணுக்கம்
ஆர் உசி நிசிதம் அரி கடி தாரை

வள் வசி பூ வை வயிரம் எஃகு அயில்
அள் அளம் என்ப அறிந்திசிஞேரே.

1625. **நுனி**

நுனி கூர்மை நுதி நுனை முனை என நுவல்வர்.

1626. **கூர்மழுங்கல்**

கூர்மழுங்கல் மந்தம் கூர்மையின்மை ஆம்.

1627. **ஆயுத உறை**

அறைகழல் வீர ராடல் கொள்வெம்படை
உறை தடறு புட்டில் என் ருேதற்பாற்றே.

1628. **வாளுறை**

வாளுறை தடறு வள் எனப்படுமே.

1629. **கைக்கவசம்**

கைக்கவசம் கோதை முன்கைத் தோற்கடுக்
கைக்கட்டி ஆசு கைப்புடை கையுடையே.

1630. **தலைக்கருவி**

தலைக்கருவி கீசகம் தலையிடு கவசம்
சித்தகம் தலைத்திராணம் சிரகம்மே.

1631. **உடலிடு கவசம்**

உடலிடுகவசம் உயிர்நிலைக்காப்பு
தடை பரம் மேழகம் தம்பம் அம்பரம்
அந்தளம் கண்டம் ஆசு மெய்க்கவசம்
கந்தளம் கசை கச்சை உருக்குறை
அரணம் பாரம் அரணி வாரணம்
பரணம் உடலுறை பாசம் மெய்யுறை
சடாரி சாலி சாலிகை சுரிகை
சுடாரி என்ப துகடீர் புலவர்.

1632. **கொடுவாள்**

கொடுவாள் வளைவாள் கூன்வாள் கோணம்.

1633. கோடாலி

கோடாலி தாத்திரி குடாரம் நவியம்
கோடரி என்று குறிக்கப்படுமே.

1634. மண்வெட்டி

மண்வெட்டி கொட்டு மண்ணகழ்கனித்திரம்
அவதாரணம் என்றறையப் படுமே.

1635. அரிவாள்

அரிவாள் புள்ளம் கொடுவாள் குயம் ஆம்.

1636. ஈர்வாள்

ஈர்வாள் கரபத்திரம் அரி இரம்பம்
கூர்வாள் அரம் வேதினம் எனக் கூறுப.

1637. வெற்றிலை மூக்கரி கருவி

வெற்றிலை மூக்கரி கருவி குளிர் எனச்
சொற்றனர் தொன்னூற் சொன்முறைப் புலவர்.

1638. சலாகை

சலாகை நாராசம் சராவம் காழே

1639. தார்க் கோல்

தார்க்கோல் இருப்புமுட்கோல் தாறே.

1640. கலப்பை

கலப்பை தொடுப்பு கலனை படை படைவாள்
இலதை ஞாஞ்சில் நாஞ்சில் இலாங்கலி
அலம் உழுபடை என்றறையப் படுமே.

1641. மேழி

மேழி கலப்பை மேலமை யுறுப்பே.

1642. நுகக்கோல்

நுகக்கோல் நுகத்தடி நுகம் யுகம் என்ப.

1643. கொழு

கொழு உழுபடை காறு ஆமெனக் கூறுப.

1644. எழுத்தாணி

எழுத்தாணி ஆணி இலேகிணி கண்டம்

ஊசி ஓலை தீட்டு மொண்படையே.

1645. எழுதுகோல்

எழுதுகோல் அஞ்சனக்கோல் கோல் இலேகிணி
பழுதறு துகிலிகை தூரியம் எனப்படும்.

1646. சித்திரம் எழுதுகோல்

புல்லின் மயிரிற் பொருந்துற வடுக்கி
நல்லெழிற் சித்திர மெழுது கோனுமம்
தூரியம் துகிலிகை எனச்சொலப்படுமே.

1647. ஊசி

ஊசி சூசிகை சூசி இழையுறுதுளை
பாசம் காது எனப் பகரப்படுமே.

1648. உளி

உளி தறிகை கணிச்சி இடங்கம் என்றோதுப.

1649. கன்னக்கோல்

கன்னக்கோல் கன்னம் சுவர்துளை கருவி
கன்னகம் என்று கழறப்படுமே.

1650. தூண்டில்

வேண்டயிரை கோத்திடுந் தூண்டில் வெளிசம் மீன்
றீண்டிலலை மிதப்புக் கண்டலுறுகோல்
நீண்ட படிசம் என நிகழ்த்தப்படுமே.

1651. வலை

வலை கண்ணி கொக்கரை சாலம் இதன் மணி
கோளம் கோளகம் ஆமெனக் கூறுப.

1652. காலிற்பெய் விலங்கு

காலிற்பெய் விலங்கு காற்றளை புனை சிருங்கலை
மாலுற வருத்து நிகளம் வல்லி ஆம்.

1653. **அங்குசம்**

வேழம் வணக்கு மங்குயம் கூர்முள் சுருணி
கோணம் தோட்டி குடாரி இதன்பிடர்
இயாதம் என்ப வியலுணர் புலவர்.

1654. **யானைச்சங்கிலி**

யானைச்சங்கிலி இடங்கணி சிருங்கலம்
அந்துகம் நிகளம் ஆகுமென்ப.

1655. **யானையை அடிக்கும் கோல்**

இரும்பி லியற்றி யியானையை யடிக்கும்
நெருஞ்சிமுள் கப்பணம் எனநிகழ்த்தப்படும்.

1656. **யானைமேற்றவிசு**

யானை மேற்றவிசு பலகாரம் இலகடம்
யானை முகத்திலிடுபடாம் படம்
சூழி மந்தணை இதன்றுத்தி நுதலணி
பட்டம் ஓடை எனப்படு மென்ப.

1657. **யானை கழுத்தணி**

களிற்றின் கழுத்தணி கயிறு கண்டம்
கச்சம் கச்சை எனக் கருதப்படும்.

1658. **யானை மணி**

புகர்முகப் புழைக்கைப் பொருகரி யிருபுடை
அகநா விரட்டி யார்க்கு மணி கண்டை.

1659. **மதம் பிடித்த யானையைக் கட்டும் கயிறு**

கடம்பாய் தந்தி கட்டுங் கயிறு கச்சை
வடம் தூசு கச்சம் கவடு புரோசை ஆம்.

1660. **யானை கட்டும் தறி**

வேழ மணைதறி வெளில் கந்துகம் கம்பம்
ஆளானம் தம்பம் ஆகுமென்ப.

1661. குதிரைக் கடிவாளம்

குதிரைக் கடிவாளம் குசை கலினம்
கவியம் மூட்டுகீழ் கறுழ் ஆகும்மே.

1662. குதிரைக் கடிவாளப் பூண்

வெம்பரிக் கடிவாளப் பூண் விருளை ஆம்.

1663. குதிரைச் சேணம்

பரியின் கல்லணை படை பண் பாரம் மாக்
கருவிப் பல்லணம் பரம் கவின்றிகழ் பருமமே.

1664. குதிரையின் கன்னத்து மயிர் (உன்னி-குதிரை)

உன்னியின் கன்னத் தணிமயிர் உளையே.

1665. குதிரைச் சம்மட்டி

குதிரைச் சம்மட்டி கசை கோல் மத்திகையே.

1666. குதிரை ஏறும் படி

அங்கவடி படி கச்சம் ஆமே.

1667. குதிரையின் கயிறு

கற்கியின் கயிறு கசை வடி கயிறு
வற்கம் வாய்வட்டம் ஆகுமென்ப.

1668. குதிரை முளை

குதிரை முளை கால் கோட்டுத் தறியே.

1669. அணிகலன்

அணிகலன் இழை நகை ஆரம் ஆபரணம்
பணி கலம் கலன் அணி பன்மணி மதாணி
பூண் மஞ்சு வள்ளி பூடணம் ஆமே.

1670. பேரணிகலம்

பேரணி கலத்தின் பெயர் ஆபரணம்
ஆரம் மதாணி அருங்கலம் ஆமே.

1671. முடி

முடி கிரீடம் மொய்யொளி மௌலி
சுடிகை கோடீரம் சூடிகை சேகரம்
மகுடம் பதுமம் மன்னருங் கலமே.

1672. முடியுறுப்பு ஐந்து

மணிமுடி யுறுப்பு மகுடம் கோடகம்
அணிகொள் கிம்புரி தாமம் பதுமம் ஆம்.

1673. காதணி

காதணி கடிப்பு கடிப்பம் கடிப்பிணை
கம்பி கன்னப்பூ கன்னுவ தங்கம்
குணுக்கு குண்டலம் குழை கொட்டை செவிமலர்
தோடு மஞ்சிகை தொங்கல் தாடங்கம்
வேடம் வல்லிகை தூக்குஎன விளம்பப்படும்.

1674. குண்டலம்

குண்டலம் மஞ்சிகை குழை மகர குண்டலம்.

1675. தோடு

தோடு தாடங்கம் குழை எனச் சொல்லுப.

1676. செவிப்பூ

செவிப்பூ கருணதாமம் செவிமலர்.

1677. பூணூல்

பூணூல் உபவீதம் ஆமெனப் புகல்வர்.

1678. மார்பணி

மார்பணி பதக்கம் மதாணி கண்டிகை
ஆரம் என்ப அருங்கலைப் புலவர்.

1679. கைக்கடகம்

கைக்கடகம் வலயம் கண்டிகை கங்கணம்.

1680. **தோளணி**

தோளணி அங்கதம் தோள்வளை கண்டிகை
கேயூரம் வாகு வலயம் கிம்புரியே.

1681. **வீரசன்னம்**

தார் தாழ் மொய்ம்பிற் றந்தணி மணிப்பணி
வீரசன்னம் ஆமென விளம்புவர்.

1682. **கழல்**

ஆடவர் படை கொடை வீரத்தணிவு
பீடுறு கழல்எனப் பேசப் படுமே.

1683. **பாதுகை**

பாதுகை அடிநிலை பாவல் மிதியடி
கோதறு மராஅடி இம்மர வடியின் குமிழ்
கொட்டை கல்லை குடை எனலாமே.

1684. **தலைக் கோலம்**

தலைக் கோலம் பங்குசம் பிஞ்ஞகம் தானும்.

1685. **தலையில் அணியும் அணி**

தலையிலணி பணி தலைப்பாளை தொய்யகம்மே.

1686. **நுதலணி**

நுதலணி சுட்டி நுதற்சூட்டு இலம்பகம்
திலகம் திலதம் செம்பொற் சுடிகை
புல்லகம் என்று புகலப் படுமே.

1687. **நுதல் மேலணி**

நுதல்மேலணி திருவுறுப்பு உத்தி செந்திரு
தெய்வவுத்தி இத்திரு வயின் வைக்கும்
பணி வலம்புரி எனப் பன்னினர் புலவர்.

1688. **சென்னியணி**

சென்னி யணியுட் சிறக்கு நல்லணி
மன்னிய திருவும் பிறையும் என்ப.

1689. கைவளை

கரவளை குருகு கன்று சூடகம்
சரி தொடி வண்டு சங்கு வள்ளி
பரியகம் என்ப பன்னூற் புலவர்.

1690. கைவளை (தொடர்ச்சி)

கைவளை முற்பெய்வது கங்கணம் தொடி.

1691. கைவளை (தொடர்ச்சி)

பிள்ளைக் கைவளை பிடிகம்என் றோதுப.

1692. தாலி

தாலி மங்கல நாண்எனத் தகுமே.

1693. பெண்கள் மார்பில் அணியும் அணி

மாதர்மென் முலைமே லணிவடம் மணிவடம்
கோதில் காழ் ஆரம் கோவை தாமம் சரம்.

1694. பொன்னால் செய்யப் பட்ட அணி

பொன்னா னியன்ற புனையிழை பொலங்கலம்.

1695. மணி மாலை

மணிபல குயின்று வனப்புற மண்ணும்
அணியிழை அவிர்மணி மாலை ஆகும்.

1696. கயில்

மணிப் பணிக் கடைப் புணர்வு மலைகயில்
பணிக்கடைப் பூட்டும் பகரப் படுமே.

1697. அணிகலத் தொடக்கு வடிவு

அணிகலத் தொடக்கு வடிவு நிதி தொங்கணி
தூங்கணி மதலிகை தூக்கம் நிலை தொங்கல் ஆம்.

1698. சங்கிலி

சங்கிலி தொடர் சிருங்கலம் துவக்கு இடங்கணி
அந்துகம் என்றிதற் காயதொல் பெயரே.

1699. அரைஞாண்

அரைஞாண் இரதனம் அரைநூல் இரதம்.

1700. அரைப் பட்டிகை

அரைப் பட்டிகை கலை அத்து மறு ஆம்.

1701. மாதர் இடைமணி

மாத ரிடைமணி சலி சரமணிக் கோவை
கலாபம் விரிசிகை காழ் அரைப் பட்டிகை
தோரை என்று சொற்றனர் புலவர்.

1702. மாதர் இடைமணிக் கோவை

தெரிவைய ரிடைமணிக் கோவை யின்றிறம்
விரிசிகை காஞ்சி மேகலை கலாபம்
பருமம் என்ப பண் புடைப் புலவர்.

1703. மாதர் இடைமணிக் கோவை (தொடர்ச்சி)

விரிசிகை நாலெண் கோவை விற் காஞ்சி
இருவடம் இருபத் தொன்று கலாபம்
பருமமோர் பதினுன்கு எண் கோவை
வரிமிகு ஞர்க்கும் வண்ண மேகலையே.

1704. காலில் பூணும் அணியின் பொதுப் பெயர்

பதத்தணிப் பொதுப் பெயர் பாதசா லம்மே.

1705. மகளிர் காலணி

பாடகம் பரியகம் பாதகடம் ஆம்.

1706. மகளிர் காலணி (தொடர்ச்சி)

காற்சரி பரியகம் ஆகக் கருதுப.

1707. தண்டை

தண்டை சிர்எனச் சாற்றப் படுமே.

1708. சிலம்பு

சிலம்பு அரி அரவம் செம்பொற் பரிபுரம்

அலம்பு தளை ஞெகிழி மஞ்சிரம் நூபுரம் ஆம்.

1709. **சிலம்பின் பரல்**

சிலம்பினுட் பெய் பருக்கை அரிசிரம்பம்
சிலம்பம் என்ப செஞ்சொற் புலவர்.

1710. **சதங்கை**

சதங்கை கிண்கிணி சிறுமணி தாளணியே.

1711. **கிண்கிணி**

கிண்கிணி பரியகம் கிளரொளி நூபுரம்
வண்பரி புரம்என வகுத்ததொல் பெயரே.

1712. **கால்விரலணி**

கால்விரலாழி மோதிரம் காலாழியே.

1713. **முன்சங்கி**

முன்சங்கி முற்றடை முகிழாழி ஆமே.

1714. **பீலி (மகளிர் அணியும் கால்விரலணி)**

பீலி கானடு விரற்பெய் சுருட்குமிழ் ஆம்.

1715. **தாள்மேல் இருக்கும் அணி**

தாள் மிசையிற் றங்கணி மயிலடி
வாளவிர் மயூர பதம்என வருமே.

1716. **சிறுவிரலணி**

நகம் நகையுமிழ் சிறுவிரலணி நன்கமை
மகரவாழி வண்சேலாழியே.

1717. **பெருவிரலணி**

மின்னவிர் பெருவிரலணி நன்மலர்....
அன்ன நடைபயிலாழி ஆமே.

1718. **சங்கிலி**

அங்கிரியை விரலணிமிசை யாக்கும்
சங்கிலி பாத சங்கிலி தளையே.

1719. கண்ணாடி

கண்ணாடி படிமக்கலம் ஆதரிசனம்
தண்ணொளி வட்டம் ஆடி சுதரிசனம்
தருப்பணம் கஞ்சனம் அத்தம் புளகம்
உருக்காட்டி கஞ்சனை முகுரம் ஒளிர்பளிங்கு.

1720. குடை

குடை கவிகை ஆதபத்திரம் சத்திரம்
இடையுறு பொலங்காலெழிற்சத்தி பிச்சம்.

1721. வெண்குடை

வெண்குடை தொங்கல் சுசி பிச்சம் என்ப.

1722. செங்குடை

செங்குடை யின்பெயர் சிந்துரம்மே.

1723. குடைக்காம்பு

குடைக்காம்பு தண்டு தண்டம் குடைக்காலே.

1724. ஈயோட்டி

ஈயோட்டி குஞ்சம் ஈயோப்பி என்ப.

1725. விசிறி

விசிறி சாந்தாற்றி வீசனம் விசனம்
கால்செய்வட்டம் பீலி சிற்றாலவட்டம்
தால விருந்தம் ஆமெனத் தகுமே.

1726. கவரி

கவரி சாமரம் கவரம் வெண்மயிர் நரை
சவரி ஆகு சீகரம் சவரம்மே.

1727. ஆலவட்டம்

ஆலவட்டம் உக்கம் காலசம்
தால விருந்தம் பீலிதாளுமே.

1728. நீர் தூவும்துருத்தி

நீர் தூவுந் துருத்தி சிவிறி யாகும்.

1729. கொடி

கொடி கதலிகை துகில் கொண்மூ வெண்வான்
படர்படம் வாணி பதாகை கேதனம்
சத்தி விலோதனம் துவசம் சருத்தி
கத்திகை தோகை கேது கதலியே.

1730. பெருங்கொடி

வீதியிற் கட்டிய பெருங்கொடி விடங்கம்.

1731. சிறுகொடி

சிறுகொடி கத்திகை எனச்செப் புவரே.

1732. வாகனப் பொது

ஏறுபரி சிவிகை தேர்முதலி வற்றிற்குக்
கூறுபொது ஊர்தி வாகனம் வையம்
யாலம் என்ப வின்சொற் புலவர்.

1733. சிவிகை

சிவிகை யானம் சீர்கெழு தண்டிகை
அணிகம் வையம் தசம் ஆகும்மே.

1734. முத்துச்சிவிகை

முத்தின் சிவிகை வெண்முத்தினூர்தியே.

1735. நவமணிச்சிவிகை

கதிர்கிளர் நவமணிச் சிவிகை கஞ்சிகை ஆம்.

1736. தண்டிகை (தண்டிகை—பல்லக்கு)

தண்டிகை தெறளி அந்தளிகம் ஆந்தோளிகை

1737. தேர்

தேர் இரதம் அரி இயந்திரம் திகிரி கவரி
கூவிரம் வையம் கூவிரி சயந்தனம்
கொடிஞ்சி விமானம் குயவு எனப்படுமே.

1738. தேர் உருள்

தேருருள் உருளை உருளி சில்லி கால்
ஆழி பரிதி இரதாங்கம் சக்கரம்
உந்தி நேமி திகிரி என்றோதுப.

1739. அச்சு

அச்சினது பெயர் ஆதாரம்மே.

1740. தேரின் அகத்தின் செறிகதிரின் பெயர்

பைந்துணர்த் தேரினுட் செறிகதிர்ப்பெயர்
அஞ்சுருவாணி ஆர் எனலாமே.

1741. தேர்நடு

தேர் நாப்பண் நாத்தட்டு எனச் செப்புவர்.

1742. தேர்ப்பலகைப்பரப்பு

தேரின் நெடுந்தேர்ப் பரப்புப்பாரே.

1743. தேர்மரச்சுற்று

தேர்மரச் சுற்றுக் கிடுகு எனச் செப்புவர்.

1744. தேர்மொட்டு

கொடிநெடுந் திண்டேர் மொட்டு கொடிஞ்சி
குவிரம் கூம்பு கூவிரம் ஆமே.

1745. தேர்க் கொடி

தேர்க்கொடி இடக்கியம் சிதவல் சிதாரம்
சத்திதுணி கூவிரம் சருத்தி என்ப.

1746. தேர்முட்டி

தேர்முட்டி பிரம்பு எனச் செப்பப்படுமே.

1747. வண்டி

வண்டி ஊர்தி வையம் சகடம்
பண்டி ஒழுகை பல்பண்டம்பெய்சாடு
சகடு சகடை சாகாடு என்ப.

1748. குதிரை இழுக்கும் வண்டி

கொய்யுளைக் கடும்பரி பூண்டேர்க்கு ரூர்தி
வையம் சகடம் சிவிகை வண்டியே.

1749. வண்டியுள்ளிரும்பு

வண்டியுள்ளிரும்பு கந்து இருளை எனவருமே.

1750. சின்னம்

சின்னம் வென்றிகொள் சின்னம் இரட்டைச்
சின்னம் காளம் சிங்கநாதம்மே.

1751. சிறுசின்னம்

சிறுசின்னம் பீலி தாரை என்ப.

1752. காளம்

காளம் சின்னம் காகளம் அம்பியம்
காளகம் தாரை ஆகக் கருதுப.

1753. கொம்பு

கொம்பு ஆம்பல் இரலை கொடுவயிர் ஆமே.

1754. துத்தரி (ஒருவகை ஊதுகொம்பு)

துத்தரி வென்றிகொள் கொம்புஎனச் சொல்லுப.

1755. வேய்ங்குழல்

வேய்ங்குழல் முரளி வேணு வங்கியம்
ஆம்பல் என்ப அருங்கலைப் புலவர்.

1756. இன்னிசைக்குழல்

இன்னிசைக்குழல் வங்கியம் ஆம்பல் வாரி
பன்னில் வள்ளியமா மெனப் பகர்வர்.

1757. **மூக்கால் வாசிக்கும் குழல்**

மூக்கின் வாசிக்குங் குழல் முரளி ஆமே.

1758. **பேரிகை**

தடிபொரு பேரி பேரிகை தடாரி
அடிபடு தண்ணுமை பதலை துந்துமி ஆம்.

1759. **தம்பட்டம்**

தண்டு முகமடு தம்பட்டம் ஆனகம்
திண்டிமம் பணயம் திண்டி படகமே.

1760. **மல்லரி (மல்லரி-பம்பை மேளம்)**

மல்லரி பம்பை மல்லாரி தடாரி
சல்லரி திமிலை தக்கை எனத்தகும்.

1761. **முரசம்**

முரசம் பெருங்கோடணை முழவம் அமுழவம்
போர்ப்பறை பணை தூரியம் சகண்டை முரசே.

1762. **தண்ணுமை**

....தண்ணுமை என்றேதற் குரித்தே.

1763. **இடை சுருங்கிய பறை**

இடை சுருங்கு பறை தமரகம் துடி
உடுக்கை என்ப வுயர்மொழிப் புலவர்.

1764. **இடக்கை**

இடக்கையின் பெயர் திரிகை யாமம் என்ப.

1765. **முழவு**

முழவு குளிர் குடமுழா முழவம் முழாவென்ப.

1766. **ஒருகண் பறை**

ஒரு கட்பறை தண்ணுமை உடுக்கை தண்ணம்
மொந்தை நிசாளம் எனமொழி குவரே.

1767. **பரந்த வாய்ப்பறை**

பரந்த வாய்ப் பறையின் பெயர் பதலை என்ப.

1768. **சிறு பறை**

சிறுபறை நந்தி ஆகுளி எனச் செப்புவர்.

1769. **பாண்டமுக வாத்தியம்**

பாண்டமுக வாத்தியம் பட்கரம் எனப்படும்.

1770. **உவகைப் பறை**

உவகைப் பறை தூரியம் என்றோதுப.

1771. **துந்துமி**

நேமி யகிழ்ந்து நெட்டுரி போர்த் தறையியம்
பூமி துந்துமி ஆமெனப் புகல்வர்.

1772. **மார்ச்சனை**

இயம் இருவாய்குவி தூரியம்
தடிகொண்டடிக்குங் கருவி தகுணிதம்
....லைதடாரி மிருதங்கம்
மண் இம் முழவின் மார்ச்சனை ஆமே.

1773. **குறிஞ்சி நிலப்பறை**

குறிஞ்சி நிலப்பறை குமுறுலி முருகியம்
கறங்கிசைத் தொண்டகம் துடி எனக் கழறுப.

1774. **பாலை நிலப்பறை**

பாலை நிலப்பறை துடி எனப் படுமே.

1775. **முல்லை நிலப்பறை**

நாறுமுல்லை நிலப்பறை பம்பை
ஏறுகோட்பறை ஏறங் கோட்பறை
ஏற்றுப் பறையென் றியம்பப்படுமே.

1776. **மருதநிலப்பறை**

மருத நிலப்பறை பணைகிணையென வழுத்துப.

1777. நெய்தல் நிலப்பறை

நெய்தல் நிலப்பறை மீன் சாபறை கோட்பறை.

1778. நெய்தற் பறை (தொடர்ச்சி)

சாபறை நெய்தற் பறையெனத் தகுமே.

1779. கிணி எனும் தாளம்

கைத்தாளம் பாண்டில் கஞ்சம் கஞ்சனம்
கிட்டிவட்டிகை கிணியெனனுந் தாளமே.

1780. வட்டம்

பரந்த கைம்மணி படலிகை எல்லிரி
பரந்த வட்டம் வட்டம் எனப்படும்.

1781. சேமக்கலம்

சேமக்கலம் எறிமணி சேகண்டி ஆம்.

1782. கண்டாமணி

எல்லாவியமு மியம்புமணி கண்டை
நல்லொலிக் கண்டம் ஆமென நவில்வர்.

1783. வீணை

வீணை யாழ் விபஞ்சி விபஞ்சிகம் விபஞ்சிகை
மாணுறு கோட்டம் கோடவதி மாடகம்
வல்லிகை தண்டு வல்லகி கின்னரம்
நல்லிசைத் தந்தி நரல்கருவி ஆமே.

1784. நரம்பு குறைந்த யாழ்

நரம்பு குறையாழ் நாமம் திறமே.

1785. ஏழு நரம்பினையுடைய யாழின் பண்

ஏழு நரம்பியாழ் பண் இன்னிசை என்ப.

1786. துயரி, தந்திரி

தும்பியம் பழுத்துங்கை யாழ்நரம்பு
துயரி குரல்நாடி தந்திரி கோலே.

1787. **முறுக்காணி**

மாசில் வீணை மணிமுறுக் காணி
ஆசில் குரவர் மாடகம் என்ற றைவர்.

1788. **வலிக்கட்டி**

மகர யாழ் வலிக்கட்டி ஞமம் திவவே.

1789. **யாழுறுப்பு**

யாழுறுப்பு உந்தி கோரமகம் என்ப.

1790. **வாத்தியப் பொது**

வாச்சியப் பொது இயம் மண்கணை சகண்டை
தகுணிச்சம் தடாரி உயர் தூரியம் பறை
கருவி சகடை காண்டம் கோடணை
முருடு முழவு முரசு துந்துமி
பேரி தக்கை பீலி தகுணிதம்
ஆர்கலியி ஞர்க்கு மரியம் தண்ணம் ஆமே.

1791. **தூபக்கால்**

தூபக்கால் தடவு தூபந் தருகலம்
இத்தளம் தூபமுட்டி என்றிசைப்பர்.

1792. **தீபக்கால்**

தீபக்கால் பலவும் தீபமுட்டியே.

1793. **வட்டகை**

வட்டகை பஞ்ச பாத்திரம் வள்ளம்.

1794. **கிண்ணம்**

கிண்ணம் வட்டில் கேழ்கிளர் சிகரம்
வண்ணச் செம்பொன் வள்ளம் கரகம்
சகடம் கோரம் சாகை எனப்படும்.

1795. **சிறு கிண்ணம்**

சிறுகிண்ணம் வட்டில் செம்பொற் கிண்ணம்.

1796. கெண்டி

கெண்டி சாரி கோடிகம் கெண்டிகை ஆம்.

1797. கரகம் (கரகம்—கமண்டலம்)

கரகம் கற்கரி வற்கரி கன்னல் -
சிரகம் சீகரம் ஆமெனச் செப்புவர்.

1798. கமண்டலம்

கமண்டலம் கரண்டம் காண்டம் கரகம்
திரண்ட நாக்குண்டிகை ஆமெனச் செப்புவர்.

1799. கலசப்பானை

கலசப் பானை கஞ்சனை என்ப.

1800. கொப்பரை

கொப்பரை கொப்பரி ஆமெனக் கூறுப.

1801. கடாரம்

கடாரம் பெருஞ்சோறடுகலன் கடாகம்.

1802. பானை

பானை முகை மடங்கல் குண்டம் குழிசி ஆம்.

1803. தாழி

தாழி அகளம் தளம் அகளி சாடி
பாழிவாய்ப் பதலை ஆமெனப் பகர்வர்.

1804. பெரும்பானை

பெரும்பானை கரீரம் தடா மிடா எனப்படும்.

1805. குடம்

குடம் குடந்தம் குணம் கும்பம் தசும்பு
கடம் குடங்கர் கலசம் இரும்பை
இடங்கர் தாழி இறங்கர் இடக்கரே.

1806. **நீர்ச்சால்**

நீர்ச்சால் வட்டம் நீர்கொள்ளிடங்கர்.

1807. **சட்டி**

சட்டி குண்டை விசனை தானுமே.

1808. **அகல்**

அகல் பாண்டில் சுத்திகை சராவம் இடிஞ்சில்
தகழி என்ப தந்துநூற் புலவர்.

1809. **யாசிப்போர்கலம்**

இரப்போர்கலம் மண்டை ஏற்கும் பாத்திரம்
கரப்போரல்லார் பெய் கடிஞை கப்பரையே.

1810. **உணவு உண்ணும் கலம்**

போசனஞ் செய்கலம் சக்கு தாலம்
பாசனம் தளிகை பாத்திரம் கலம் தட்டம்.

1811. **அகப்பை**

அகப்பை மூழி மூழை கோரிகை சூழ்
முகக்கு முகவை ஆமென மொழிப.

1812. **துடுப்பு**

துடுப்பு முழை மூழி துழாவு மூழை மொண்
டெடுக்குங் கசிதம் என்றிசைத்தனர் புலவர்.

1813. **சட்டுவம்**

சட்டுவம் தருவி சிலகம் தவ்வி தானே.

1814. **வாள்மணை**

வாண்மணைப் பெயர் மணைவாள் எனப்படுமே.

1815. **நெய்த்துடுப்பு**

நெய்த்துடுப்பு சுருக்கு சுருவை நெய்த்துடுவை.

1816. மத்து

தாழிபடு தயிர்கடை மத்து மந்தானம்
மூழி வெளில் மத்தம் மூழை கவம் என்ப.

1817. தயிர்கடைமத்து (தொடர்ச்சி)

வெண்டயிர் கடைதறி வெளில் ஆகும்மே.

1818. தயிர்கடைதாழி

தயிர்கடைதாழி கர்க்கரி குடம் மந்தனி.

1819. மட்கலம்

மட்கலம் பாண்டம் பாசனம் ஆமே.

1820. மகளிர் ஆடும்கலம்

ஒள்ளிழை மகளி ராடுங்கலம் ஓரை ஆம்.

1821. பேழை

பேழை மஞ்சிகை பெட்டி மஞ்சிகமே.

1822. கூடை

கூடை புட்டில் இறைவை வட்டிகை ஆம்.

1823. இறை கூடை

இறைகூடை அம்பி இடார் காராம்பி
இறைவை புட்டில் கிழார் பிழார் என்ப.

1824. இறைபத்தல்

இறைபத்தல் இறைவை ஆமென விசைப்பர்.

1825. துடைப்பம்

துடைப்பம் அலகு சோதினி என்ப.

1826. நாழி

நாழி படி குஞ்சம் ஆமென நவில்வர்.

1827. உழக்கு

உழக்கு கூகால் பாதி என்றேதற் பாற்றே.

1828. **மரக்கால்**

மரக்கால் தூம்பு அம்பணம் குளகம் வள்ளம்
கச்சம் கடன் கால் ஆமெனக் கூறுப.

1829. **உரல்**

உரல் கறை திட்டை உலூகலம் எருந்தே.

1830. **உலக்கை**

உலக்கை தடி முசலம் உரோங்கல் ஆமே.

1831. **முறம்**

முறம் சின்னம் தட்டு முற்றில் சுளகே.

1832. **சுளகு**

சுளகு முற்றில் சூர்ப்பம் என்ப.

1833. **உறி**

உறி தூக்கு சிதர் சிமிலி சிக்கம் என்றுரைப்பர்.

1834. **குற்றி**

குறிய உட்டுளை யுடைக் குற்றி தண்டு ஆமே.

1835. **அழல் ஊதுகுழல்**

அழலூது குழலின் பெயர் தமனி ஆமே.

1836. **தாம்பு**

தாம்பு கண்ணி நார் தாமணி தாமம் ஆம்.

1837. **கயிறு**

கயிறு அக்கம் கடம் கச்சை இரச்சு
பழுதை தாம்பு பாசம் புரி வடம்
நாரம் நார் தாமம் நாண் என நவில்வர்.

1838. **அம்மி**

அம்மி இல்லுறைகல் அரைசிலை ஆமே.

1839. **திரிகை**

திரிகை தட்டு வட்டம் பந்து இயந்திரம்.

1840. சாணைக்கல்

பயினொடு சேர்த்திய கல் சிலாவட்டம்
வெயின்மா மணிவிளக்குஞ் சாணை சாணம்.
(பயின்—பிசின்)

1841. குலால சக்கரம் (குலாலன்—குயவன்)

குலால சக்கரம் கொட்குந் திகிரி
சுலாவு வட்டம் ஆமெனச் சொல்லுப.

1842. கரும்பு திரிக்குங் கருவி

கரும்பு திரிக்குங் கருவி இயந்திரம்
ஆலை என்ப அறிந்திசினோரே.

1843. எள்திரிகருவி

எட்டிரீ கருவி காணம் பூட்டை செக்கே.

1844. பாடை

பாடை ஆசந்தி அபஞ்சரம் வெள்ளில்.

1845. கொல்லுலை மூக்கு

கொல்லுலைமூக்கு குருகு சிவை என்ப.

1846. உலையாணிக்கோல்

உலையாணிக்கோல் சூட்டுக்கோல் என்றோதுப.

1847. பற்றிரும்பு

பற்றிரும்பு அள்ளு பறலை பறளிகை வலி
உற்றதொல் பெயரென் றோதற்பாற்றே.

1848. பற்றுக்குறடு (ஒரு கம்மக்கருவி)

பற்றுக் குறடு தூவு எனப்படுமே.

1849. பட்டடை

பட்டடை அடை குறடு அடைகல் எனப்படும்.

1850. கொல்லன்கூடம்

கொல்லன் கூடம் அகிகொட்டு சம்மட்டியே.

1851. **பூட்டு**

பூட்டு வீட்டைப் பூட்டுங் கருவியாம்.

1852. **திறக்கும்கோல்**

தாழ்திறக் குங்கோல் தாழக்கோல் திறவுகோல்.

1853. **கதவிடுதாழ்ப்பாள்**

கதவிலிடு தாழ் சிப்பு கடிகை தாழ் எனத்தகும்.

1854. **கதவு**

கதவு அரம் அரணம் காப்பு கவாடம்
புதவு தோட்டி வாரி பொற்கதவம்.

1855. **ஏணி**

ஏணி கடவை சேணி இறவையே.

1856. **கண்ணேணி**

கண்ணேணி மால்பு எனக் கழறப் படுமே.

1857. **துருத்தி**

துருத்தி துருதி தோல்கருவி என்ப.

1858. **உலைத்துருத்தி**

உலைத்துருத்தி உதி சிவை அத்திரி
பதித்திரி என்ப பனுவல்வல் லோரே.

1859. **பெருந்துருத்தி**

பெருந்துருத்திப்பெயர் சிவிறி பந்தம் ஆம்.

1860. **மட்டத்துருத்தி**

மட்டத்துருத்தி பந்து ஆமென வழுத்துப.

1861. **கச்சம்**

வார் வகிர் கச்சம் வள்எனப் படுமே.

1862. பஞ்சுநூல்

பஞ்சின் நூல் தொடர்பிசின் பனுவல் இழை சூத்திரம்
தந்து நுவணம் நுவணை எனத்தகும்.

1863. நூல்பந்து

நூற்றூர் நோழிகை ஆமென நுவல்வர்.

1864. நாடா

நாடா நூறுழி என்பஉன்குணர்ந்தோர்.

1865. நூற்பா வாற்றி

நூற்பா வாற்றி குச்சு என நுவல்வர்.

1866. புடைவை

புடைவை அறுவை புனை மடி மேகலை
உடை கலை சூறை உடுக்கை ஏடகம்
சீலை ஒசியல் சிற்றில் ஆசாரம்
சேலை சூடிகம் சீரை ஆவரணம்
கோடி சாடி கோடிகம் கோசிகம்
சூடி தூரியம் தூசு இலக்காரம்
அம்பரம் பிடியல் ஆசிடை ஆடை
சம்பரம் இடைதல் சம்படம் படம்
கஞ்சிகைதூட்டி காண்டம் காழகம்
பஞ்சு தானை பட்டம் கத்தியம்
வட்டுடை கண்டை வாதனம் கப்படம்
பட்டிகை தோக்கை படாம் பட்டிகந்தை
வட்டம் வாசம் வரதம் வத்திரம் துகில்
புட்டம் காடகம் புங்கம் கலிங்கம்
நீவி பரிவட்டம் நீவியம் ஆமே.

1867. நற்றுகில்

நற்றுகில் பாரி நாகம் என்ப.

1868. சித்திரப்படாம்

சித்திரப்படாம் புத்தகம் எனச் செப்புவர்.

1869. பட்டு

பட்டு கோசிகம் பாளிதம் காம்பு அப்
பட்டின் விகற்பம் பணிதே வாங்கம்
பாணம் கவுசிகம் நேத்திரம் எனப்படும்.

1870. மயிர்ப்படாம்

மயிர்ப்படாம் மயிரகம் மயிரியம் ஆகும்.

1871. பீதாம்பரம்

பீதாம்பரம் பீதக வாடை பொற்றுகில்.

1872. சட்டை

சட்டை அங்கி தைப்பை குப்பாயம்
மெய்ப்பை வரணம் வியப்பை வாரணம்
கஞ்சுகி கஞ்சுளி காஞ்சுகம் காஞ்சுகி
கஞ்சுகம் என்ப கற்றுணர்ந் தோரே.

1873. கச்சு

கச்சு வார் விசிகை வம்பு வட்டிகையே.

1874. சீலைத்துணி

சீலைத்துணி பட்டிகை சிதார் சிதர்
சிதலை சீரை ஆமெனச் செப்புவர்.

1875. மரமுரித்த தோல்

மரமுரித்த தோல் மரவுரி ஆசினி
சிதலை வற்கலை சீரை இறைஞ்சி
சீரம் என்ப செஞ்சொற் புலவர்.

1876. போர்வை

போர்வை மீக்கோள் ஆமெனப் புகல்வர்.

1877. **மீக்கோள்**

மீக்கோள் அத்த வாளம்மேற் போர்வை
ஏகாசம் வடகம் உல்லாசம் என்ப.

1878. **முன்றானை**

முன்றானை தோகை முன்விடுந் தலைப்பு
கஞ்சகம் சார்வாரம் கச்சம்மே.

1879. **கச்சின் தலைப்பு**

கச்சு விடுந் தலைப்புக் கஞ்சகம் ஆமே.

1880. **உத்தரீயம்**

உத்தரீயம் உத்தரா சங்கம்
ஏகாசம் என்ப வியலுணர் புலவர்.

1881. **கொய்சகம்**

கொய்சகம் நீவி ஆமெனக் கூறுப.

1882. **திரைப்படாம்**

திரைப்படாம் படாம் கஞ்சிகை எழினி கண்டம்
படகம் ஏமம் பாரகம் கையடம்.
கழனி அவிடி காண்டம் கஞ்சுகி
கவழிகை என்ப கலையுணர் புலவர்.

1883. **மேற்கட்டி**

மேற்கட்டி வானி விதானம் படங்கு
கம்பலம் ஆமெனக் கழறப் படுமே.

1884. **கம்பளி**

கம்பளி பரப்புங் கம்பளம் கம்பலம்
சிம்புளி என்ப செந்நூற் புலவர்.

1885. **கட்டில்**

குஞ்சரக் கோட்டுக் காற்கட்டில் பாண்டில்

மஞ்சு அரி பாரி மஞ்சம் பரியங்கம்
அங்கம் என்ப அருங்கலைப் புலவர்.

1886. கட்டில்தொடர்ச்சி

விசி அரி என்ன விளம்பப் படுமே.

1887. மெத்தை

மெத்தை அமளி மென்பஞ்சணை காகுளி
தற்பம் தவிசு தளிமம் தானே.

1888. தலையணை

தலையணைப் பெயர் உபதானம் ஆமே.

1889. சிங்காதனம்

சிங்காதனம் அரியணை சிங்கவணை ஆம்.

1890. முனிவர் ஆசனம்

முனிவ ரிருக்கு மாதனம் பீடம்
பீடிகை விட்டரம் எனப்பெயர் பெறுமே.

1891. பீடம்

பீடம் ஆதனம் மணை பீடிகை வட்டம்.

1892. பாய்

பாய் ஆரை சாப்பை புற்பாய் கொத்தளியே.

1893. பிரப்பம்பாய்

பிரப்பம்பாய் சாதிப்பாய் எனப்பெயர் பெறுமே.

1894. தடுக்குப்பாய்

தடுக்குப்பாய் தவிசுஎனச் சாற்றினர் புலவர்.

1895. தோற்பாய்

தோற்பாய் புலியின் ஞெரல் மான் ஞெரலே.

1896. விளக்குத் தண்டு

விளக்குத் தண்டு மிளிர் சுடர்நிலை இருள்
பிளக்குந் தீப மத்திகை மல்லிகை
கம்பம் தளி திகழ்கௌசிகம் தீபத்
தம்பம் என்மனுர் தண்டமிழ்ப் புலவர்.

1897. அகல்

தூண்டு சுடரிடும் அகல் சுத்திகை தகழி
பாண்டில் இடிஞ்சில் ஆமெனப் பகர்வர்.

1898. படிக்கம்

படிக்கத்தின் பெயர் படியகம் என்ப.

1899. அணிகலப் பெட்டி

அணிகலம் வைக்குஞ் செப்பு அணிதிகழ் கடிப்பம்
பணிபல கொள்கலம் பாணி துமானம்
பிடிகை கண்டிகை பெரும்பணிக் காண்டம்
கோடிகம் என்று குறித்தனர் குறித்தே.

1900. சுண்ணும்பு வைக்கும்பாத்திரம்

சுண்ணம் பெய் தோமறு செப்புக் கரண்டம்
வண்ணக் கரண்டகம் ஆமென வகுத்தனர்.

1901. நறுமணப் பொருள் வைக்கும் பாத்திரம்

சாந்துமடி நானம் தாமம் முதலியபெய
வாங்குறு பாத்திரம் வட்டம் கொள்கலம்.

1902. சீப்பு

சிப்பு மயிர்வாரி சிக்கம் கங்கமே.

1903. அம்மானை, பந்து

அம்மானை அம்மனை ஆகும் பந்து
கந்துகம் என்ப தந்துநூற் புலவர்.

1904. **சூது**

சூது ஆயம் கழங்கம் சூதம் சாரிகை
தாசு நாய் தாயம் சாரி வல் ஆமே.

1905. **சூதாடுமிடம்**

சூதாடறைப் பெயர் சொல்லில் அரங்கே.

1906. **சூதாடு கருவி**

சூதாடு கருவி கவறு எனச் சொற்றனர்.

1907. **காற்ருடி**

காற்ருடி கறங்கு கதலி சுழல் என்ப.

1908. **ஊஞ்சல்**

ஊஞ்சல் தோளம் ஊசல் என்ருேதுப.

1909. **தெப்பம்**

தெப்பம் அம்பி செலுத்துபுணை கோடை
வெப்பந் தீர விழவயர்பிலவம்
படுவை மிதவை பட்டியாதனம்
உடுவை கோலம் நீரோட்டும் பகடு
வள்ளம் வண்புனல் மிசைவரு வையம்
தொள்ளம் என்ப துகடீர் புலவர்.

1910. **மரக்கலம்**

மரக்கலம் சதா கலம் வங்கம் தோணி
பரக்குநீர் கிழிக்கும் பாரதி பாறு
சோங்கு அம்பி யானம் யாதனம் தொள்ளை மதலை
ஓங்கல் நாவாய் ஓவி நீருர்தி
பவ்வம் போழ் பஃறி பாதை போதம் புணை
நவ்வு நாவம் ஆமென நவில்வர்.

1911. **ஓடம்**

ஓடம் பகடு அம்பி பஃறி என்ருேதுப.

1912. **தோணி**

தோணி பொறி நவ்வி திமில்எனச் சொற்றனர்.

1913. **வள்ளம்**

வள்ளம் ஓர் மரத்தின் வகுத்தசிற் றோடமாம்.

1914. **மரக்கலப்பாய்**

மரக்கலப் பாய்க்குப் பெயர் இதையே.

1915. **பாய்மரம்**

பாய்மரப்பெயர் கூம்பு ஆமெனப் பகர்வர்.

1916. **சட்டப்பலகை**

சட்டப் பலகையின்பெயர் கிடுகு எனத்தகும்.

1917. **ஆணி**

ஆணி கீலம் ஆப்பு முளை ஆமே.

1918. **துண்டு**

துண்டு கடிகை கண்டம் துணியே.

1919. **சித்திரப்படாம்**

சித்திரப்படாம் கிழி புத்தகம் என்ப.

ஏழாவது செயற்கை வடிவின்
பெயர்த்தொகுதி முற்றியது.

ஒன்பதாவது செயல்பற்றிய பெயர்த்தொகுதி

1920. செயல்

செயல் வினை கருமம் செய்கை கன்மம் தொழில்
இயல்புறு விதி பணி தருமம் தன்மமே.

1921. அரியசெயல்

அரியசெயல் பேராண்மை ஆகுமென்ப.

1922. மிக்கசெயல்

மிக்கசெயல் ஊராண்மை மேம்படு செயலே.

1923. தொழில் பயிலுதல்

தொழிற்பயில்வு, தொறு என் கிளவியாகும்.

1924. செய்தல்

செய்தல் ஆற்றல் செய்கை இழைத்தல்
எய்தல் ஆக்கல் இயற்றல் குயிற்றல்
அமைத்தல் பண்ணல் ஆடல் அயர்தல்
சமைத்தல் குயிறல் சவைத்தல் மாடல்
வனைதல் காண்டல் புரிதல் எனவரும்
இனைய மாற்றம் இதன்பெயரென்ப.

1925. படைத்தல்

படைத்தல் நிருமித்தல் பயத்தல் பாரித்தல்
சிட்டித்தல் ஆக்கல் சிருட்டித்தல் காண்டல்
விதித்தல் தோற்றுவித்தல் நியமித்தலே.

1926. காத்தல்

காத்தல் அளித்தல் தாங்கல் நிலைபெறுத்தல்
நோக்கல் புரத்தல் திதி என நுவல்வர்.

1927. காவல்

காவல் ஓம்படை கடி கதவு கதவம்
சேவல் கழுது திராணம் அரண் சிறை
சேமம் காப்பு செயல் தட்டி வேலி
ஏமம் பாது கட்டு என்மனூர் புலவர்.

1928. **தலைக்காவல்**

தலைக்காவல் இளை உக்கிரம் எனத்தகுமே.

1929. **பாதுகாத்தல்**

பாதுகாத்தல் ஓம்பல் பரி போற்றல் என்ப.

1930. **அழித்தல்**

அழித்தல் கெடுத்தல் அரக்குதல் நூறல்
சிதைத்தல் சிரத்தல் தேய்த்தல் அரைத்தல்
சவட்டல் செகுத்தல் சட்டித்தல் முருக்கல்
செவிட்டல் விரகு தெறுதல் கீழ்தலே.

1931. **அழிதல்**

அழிதல் கெடுதல் அழுங்குதல் அவிதல்
சிதைதல் குறைதல் சிகல்சிந்தல் நந்தல்
மடிதல் வட்கல் மங்குதல் வீதல்
பொடிதல் கந்தல் தபுதல் படல் தௌவல்
உருங்கல் இறுதல் உடைதல் இறல் இரிதல்
முருங்கல் முரிதல் ஆமெனமொழிப.

1932. **அழிவு**

அழிவு கிலம் நலிவு சிதிலம் சீரணம் ஆம்.

1933. **பதனழிவு**

பதனழிவுஊழ்த்தல் சீத்தை சீரணஞ்
சிதலம் சிதிலம் சிதம்பு செடிகுன்றுதல் ஆம்.

1934. **அழிவின்மை**

அழிவின்மை கோளை நிறை கன்னிகுமரி ஆம்.

1935. **மறைக்குதல்**

மறைக்குதல் ஒளித்தல் மறைத்தல் ஆகும்.

1936. **மறைதல்**

மறைதல் மறைவு அற்றம் மாய்வு அபவாரணம்
உறையிருள் கூடம் ஒதுக்கம் மறைப்பு இராசியம்
புதை மாய்தல் குய்யம் ஆமெனப்புகல்வர்.

1937. **இரங்குதல்**

இரங்குதல் பரிதல் இனைதல் இணைதல்
குரங்குதல் நைதல் குனிதல் கனிதலே.

1938. இரக்கம்

இரக்கம் கிருபை ஈரம் காருண்ணியம்
சுரக்குமருள் அபயம் தூநிழல் கருணை
தயாளம் தகவு தயை எனத்தகுமே.

1939. ஆதல்

ஆதல் ஆகுதல் படுதல் உண்டாதல் அஞ்சிதம்
வீதலினத்தல் படல் விளைதல் பயத்தல்
பூத்தல் சுரத்தல் ஆமெனப் புகல்வர்.

1940. தோன்றல்

தோன்றல் வெளிப்படல் தோற்றல் ஆமே.

1941. வாழ்த்து

வாழ்த்து ஆசிடை அபிவதனம் சோபனம்
ஆசி பல்லாண்டு ஆமென அறைவர்.

1942. வைதல்

வைதல் திட்டல் வசை ஏசல் ஏசுதலே.

1943. சபித்தல்

சபித்தல் சாபம் ஆமெனச் சாற்றுப.

1944. நல்வினை

நல்வினை அறம் புண்ணியம் தருமம் வீறு ஆம்.

1945. தீவினை

தீவினை கலுடம் செடி அசுபம் பிறந்தை
பாவம் துரிதம் பங்கம்பாதகம்
ஏனம் மறம் பவம் என்மனூர் புலவர்.

1946. ஊழ்வினை

ஊழ்வினை பழவினை ஆமென் றோதுப.

1947. பிறப்பு

பிறப்பு உருகம் உற்பவம் பிறந்தை சக்கரம்
மறப்புறு பிறத்தவம் பவம் சனனம்

சாதம் சனிப்பு சம்பூதம் சம்பவர்
சூதகம் அனிலம் தோற்றம் உற்பத்தி
அயனம் பூ என்றுய மூவாறும்
நயனுடைப் புலவர் நவின்றதொல் பெயரே.

1948. **இப்பிறப்பு**

இப்பிறப்பு இம்மை இப்பவம் இகமே.

1949. **வருபிறப்பு**

வருபிறப்பு அம்மை மறுமை என்ப.

1950. **முற்பிறப்பு**

முற்பிறப்பு உம்மை ஒருபிறப்பு ஒருபவம்
எப்பிறப்பு எம்மை என்மனூர் புலவர்.

1951. **எழுபிறப்பு**

எழு பிறப்பு எழுமை எழுபவம் என்ப.

1952. **பிறத்தல்**

பிறத்தல் சனித்தல் பிறங்கிய கன்மத்
திறத்துச் சனனித்திடல் சம்பவித்தல்
தோன்றல் மலர்தல் நாறுதல் தோற்றல் வெளிப்படல்
ஊன்றி முளைத்தல் உருத்தல் உதித்தலே.

1953. **நீட்டுதல்**

நீட்டுதல் வடித்தல் நீட்டல் ஓட்டலே.

1954. **நீளுதல்**

நீளுதல் நீடல் நீக்கல் நேர்தல்
போகுதல் நீளல் நீடுதல் போதல் நீடு
ஓடுதல் வடிதல் ஒழுகல் வார்தலே.

1955. **நீளம்**

நீளம் நெடுமை நீட்டம் உறை சேய்மை
ஆயம் நீட்சி ஆயதம் நீக்கம்
நெடில் தீர்தல் நெட்டை நேர்பாடு நேர்வார்
கொடி நேர்பு சேண் வரி ஆமெனக் கூறுப.

1956. **முடக்கல்**

முடக்கல் முடக்கம் முடக்குஎன மொழிப.

1957. **மடங்கல்**

மடங்கல் முடங்கல் நுடங்கல் எனவரும்.

1958. **தாழ்த்தல்**

தாழ்த்தல் இகுத்தல் தாழ்குதல் நாற்றல்
ஆழ்த்தல் எல்ப அறிந்திசிேனாரே.

1959. **தாழ்தல்**

தாழ்தல் இறைஞ்சல் தாழ்குதல் குரங்கல்
ஆழ்தல் நாலல்என் றுகும் பெயரே.

1960. **தாழ்வு**

தாழ்வு இழிபு இழிவு தஞ்சம் குண்டுசாய்வு
ஆழ்வு அதம் தூங்கல் அகப்பு வட்டமே.

1961. **உயர்தல்**

உயர்தல் ஓங்கல் உந்துதல் ஒழுகல்
நிவர்தல் வார்தல் நிமிர்தல் பிறங்குதலே.

1962. **உயர்த்தல்**

உயர்த்தல் நிவறுத்தல் உந்தித்தல் என்றுமே.

1963. **உயர்ச்சி**

உயர்ச்சி உன்னதம் ஒக்கம் ஒழுக்கம்
நிவப்பு உகப்பு உவப்பு நிமிர்தல் உவணம்
உரை உறை ஊக்கம் மீ உந்துதல் உந்தி
புரை மிசை பிறங்கல் பொங்கல் சேண் சிகரம்
ஓங்கல் நிவர்தல் ஒழுகல் உத்தரம்
ஏந்தல் வார்தல் எழுமை மேக்கு உச்சம்.

துங்கம் யோகம் உத்துங்கம் நீள் உம்பர்
புங்கம் மேடு மோடு ஆமெனப் புகல்வர்.

1964. **குப்புறுதல், குப்புறுத்தல்**

குப்புறுதல் கவிழ்தல் குப்புறுத்தல் கவிழ்த்தலே.

1965. **புரளுதல்**

புரளுதல் புரளல் புரட்டுதல் புரட்டல்
உருளுதல் உருளல் உருட்டுதல் உருட்டலே.

1966. **தவழ்தல்**

தவழ்தல் ஊர்தல் ஆமெனத் தகுமே.

1967. **நடை**

நடைகதி ஒழுக்கம் ஆமென நவில்வர்.

1968. **மாறுநடை**

மாறுநடை சதாகதி எனவருமே.

1969. **நடத்தல்**

நடத்தல் இகைத்தல் நன்கமைந் தொதுங்கல்
கடத்தல் பிரிதல் கழிதல் திரிதல்
செல்லல் தீர்தல் சேறல் பெயர்தல்
இல்லல் வழங்கல் இறத்தல் விடுதல்
போகல் மீளல் போகுதல் நீங்கல்
ஏகல் வருதல் இவர்தல் படர்தல்
வயங்கல் தணத்தல் போக்கு எனவருமி வற்றோ
டியங்கல் என்று மியம்பப்படுமே.

1970. **கடத்தல்**

கடத்தல் இகத்தல் கழிதல் உகளுதல்
குதித்தல் நீந்தல் குப்புறல் அகறல்
தாவுதல் நீடுதல் தாண்டல்.....
வாவுதல் என்ப வண்டமி ழோரே.

1971. **ஓடல்**

ஓடல் பாறல் ஓட்டம் ஓட்டெடுத்தல்
நீடல் விசைத்து நிமிர்தல் நீளுதல்
நெரிதரல் இரிதல் எனநிக ழும்மே.

1972. **நேரோடல்**

நேரோடல் ஆதி வீதி தாரையே.

1973. **வட்டமாய் ஓடல்**

வட்டமா யோடல் வாளி சாரிகை.

1974. **சுற்றல்**

சுற்றல் மாதிகம் எனச் சொற்றதொல் பெயரே.

1975. **பின்றல்**

பின்றல் பிறகிடல் பிற்றல் என்ருகும்.

1976. **மீளல்**

மீளல் திரும்பல் மீட்சி திரிதரல்.

1977. **ஆளியின் மறிதல்**

ஆளியின் மறிதல் மடங்கல் ஆமே.

1978. **மீட்டல்**

மீட்டல் திருப்பல் மீட்பு மீட்குதலே.

1979. **சூழ்ந்திடல்**

சூழ்ந்திடல் கோலல் சூழ்தல் சுற்றுதல்
வலத்தல் சூழ்போதல் வளைத்தல் வளாகம் ஆம்.

1980. **சுழலல்**

சுழலல் கொட்பு அலமரல் சுலவுதல் சுலாவல்
உழலல் கறங்கல் உழிதரல் மறுகல்
சொரிதரல் பிரமணம் சூர்த்தல் பிரமரி
திரிதரல் தெருமரல் ஆமெனச் செப்புவர்.

1981. **ஏறுதல்**

ஏறுதல் ஊக்கல் இவர்தல் ஆரோகணம்
எஃகல் உந்துதல் எக்கல் மிக்கோளே.

1982. **இறங்குதல்**

இறங்குதல் வாவுதல் இழிதல் அவரோகணம்.

1983. **ஆடல்**

ஆடல் தாண்டல் அகவல் நடித்தல்
அசைதல் தூங்கல் ஆலல் நுடங்கல்
மாறல் குனித்தல் பெயர்தல் எனவரும்.

1984. **ஆட்டுவித்தல்**

ஆட்டுவித்தல் ஆட்டல் ஆமென்றறைவர்.

1985. **கூத்து**

கூத்து நட்டம் நாடகம் குரவை தாண்டவம்
தூக்கு கண்ணுள் துணங்கை மண்டிலம்
படிகம் இலயம் பரதம் புரியம்
நடனம் வாணி நடம் நடை பாணி
நாட்டியம் நிருத்தம் ஆமென நவில்வர்.

1986. **கூத்து விகற்பம்**

கூத்துவிகற்பு உள்ளாளம் கூடை கொந்தளம்
வாத்தியத் திரையபுறல் இலயம்கடகம்
அலைப்பு குனிப்பு விரட்டானம் சிங்கலம்
மலைப்பு தேசிகம் பிரமரி பௌரி கரணமே.

1987. **குந்தி நிற்றல்**

குந்திநிற்றல் குஞ்சித்தல் குஞ்சிதம் ஆம்.

1988. **பரமனுடல்**

பரமனுடல் கொடுகொட்டி காபாலம்
பாண்டரங்கம் ஆமெனப் பகர்வர்.

1989. மாயனூடல்

மாயனூடல் குடம் மரக்கால் மல்அல்லியம்.

1990. குமரன் ஆடல்

குமரனூடல் கொடுகொட்டி துடி குடை
குடவுமென்று குறித்தற்குரித்தே.

1991. அனங்கன் ஆடல்

அனங்கனூடல் பேடு ஆமென அறைவர்.

1992. துர்க்கை, திருமகள் கூத்து

துர்க்கை திருமகள் எனுமிவர் தூக்கு
மரக்கால் பாவை எனவகுக் கப்படும்.

1993. எழுமகளிர், இந்திராணி இவர்கள் கூத்து

எழு மகளிரிந்திராணி யிவர் கூத்துத்
துடி, கடையம் என முறைசொல்லற்பால.

1994. தேவர்க்கு ஆடும்கூத்து, வேலனூடல்

தேவர்க்காடுங் கூத்து அணங்கு ஆருஞ்சி
வேலனூடல் கழங்கு வெறியாடலே.

1995. துணங்கை

முடக்கிய இருகை பழுப்புடை யடிக்கத்
தொடக்கிய நடையது துணங்கை ஆகும்.

1996. நான்கு விரல்களை வளைத்துப் பெருவிரலை நிமிர்த்தி மார்பில் வைப்பது

நால்விரல் முடக்கிப் பெருவிரனிமிர்த்து
மார்பிடை வைப்பது குடந்தம் ஆகும்.

1997. வாயார்த்து ஆடல்

வாயார்த் தாடல் அவலங் கொட்டல் என்ப.

1998. கைகோத்து ஆடல்

கைகோத் தாடல் களிப்புறு குரவையே.

1999. கும்மி கொட்டல்

கும்மி கொட்டற் பெயர் கொட்டல் ஆகும்.

2000. கை குவித்துஆடல்

கைகுவித்தாடல் கைகொட்டி கொப்பி
கொட்டல் கை கூப்பல் கொம்மை ஆமே.

2001. கொம்மை

கொம்மை அங்கை விரித்துக் கொட்டல் ஆம்.

2002. வட்டணை

வட்டணையுறுத்தல் வட்டித்தல் ஒத்தறுத்தல்
தட்டல் இலயம் தாளமுறுத்தலே.

2003. தாளவொத்து

தாளவொத்து இலயம் சதி சீர் எனத்தரும்.

2004. பழகல்

பழகல் உழத்தல் பழக்கம் ஆகும்.

2005. சிரமஞ் செய்தல்

சிரமஞ் செய்தல் பருமித்தல் உழக்குதல்.

2006. தாண்டுதல்

தாண்டுதல் அகறல் தத்துதல் குதித்தல்
ஈண்டு பாய்தல் இகுத்தல் நீடுதல்
தாவுதல் தரணம் வாவுதல் கடத்தல்
பாவுதல் என்ப பண்படு புலவர்.

2007. குதித்தல்

குதித்தல் துள்ளல் குப்புறல் பாய்தல்
மிதித்தல் துடித்தல் உறுக்கல் உகளல் ஆம்.

2008. **மிதித்தல்**

மிதித்தல் உதைத்தல் குமைத்தல் மிதி உதை ஆம்.

2009. **விளையாட்டு**

விளையாட்டு உண்டாட்டு ஓரை உப்பு இலீலை
கேளி கிரீடை கீடை விலாசனை
கெடவரல் பண்ணை கேலம் தகுளம்
தொடலை ஆடல் எனச்சொல்லப்படுமே.

2010. **மகளிர் விளையாட்டு**

மகளிர் விளையாட்டு வண்டல் உப்பு ஓரை
கெடவரல் தொடலை கிரீடை உண்டாட்டு
பண்ணை பொய்தல் என்றெண்ணிய பெயரே.

2011. **விளையாட்டிற் பொழுது போக்கல்**

விளையாட்டிற் பொழுது கழித்தல் விநோதம்
குலாவல் வேலைகழி உலாவல் ஆமே.

2012. **படித்தல்**

படித்தல் ஓதல் பயிலல் கற்குதல்
நவிலல் கெழுமல் என நவின்றனரே.

2013. **எழுதல்**

எழுதல் பொறித்தல் தீட்டல் எழிலுற
வரிதல் தெரித்தல்வரைதல் கிறுக்கலே.

2014. **எழுத்து**

எழுத்து அக்கரம் பொறிவரி இலேகை ஆம்.

2015. **உயிரெழுத்து**

உயிரெழுத்து ஆவி சுரம் அச்சு என்றோதுப.

2016. **மெய்யெழுத்து**

மெய்யெழுத்து உடம்பு உறுப்பு ஒற்று அல் எனல் விதி.

2017. **ஆய்தம்**

அக்கேனம் ஆய்தம் தனிநிலை புள்ளி ஒற்று
இப்பால வைந்து மிதன்பெய ரென்ப.

2018. **ஒற்று**

ஒற்று மெய் வியஞ்சனம் உடம்பு உடல் உறுப்பு அல்
உற்ற புள்ளி விராமமென் றேதுப.

2019. **வல்லெழுத்து**

வல்லெழுத்து வன்மை வன்கணம் பரிசம் வலியே.

2020. **மெல்லெழுத்து**

மெல்லெழுத்து மென்மை மென்கணம் அனுநாசிகை
சொல்லிய பரிசமு மாமெனச் சொல்லுப.

2021. **இடையெழுத்து**

இடையெழுத்து இடைமை இடைக்கணம் இடையினம்
கடைநிலை அந்தத்தம் ஆமெனக் கழறுப.

2022. **ஈற்றுநிலையெழுத்து**

ஈற்றுநிலை யெழுத்து அந்தத்தம் எனப்படும்.

2023. **அளபெடை**

அளபெடை புலுதம் ஆகுமென்ப.

2024. **எண்**

எண் கணக்கு அலகு கரணம் கணிதம்.

2025. **ஒற்றைப்பட எண்ணல்**

ஒற்றைப் படவெண்ணல் ஒற்றித்தல் என்ப.

2026. **இரட்டைப்படஎண்ணல்**

இரட்டைப்பட வெண்ணல் இரட்டித்தல் இரட்டல்.

2027. **எண்ணைக்கூட்டிப்பெருக்கல்**

எண்கூட்டிப் பெருக்கல் உறழலென் றுருகுமாம்.

2028. ஓரிரண்டு

ஓரிரண்டு உபயம் யுகம் யுகளி யுகளம்
துவந்துவம் மிதுனம் துவிஎனச் சொல்லுப.

2029. மூன்று, நான்கு, ஐந்து

மூன்று முதலைந்தெண் காறு முறையே
ஆன்ற திரி சது பஞ்சம் என்றுமே.

2030. ஆறு

ஆறெண் பெயர் சடு ஏழெண் சத்தமாம்.

2031. எட்டு

எட்டனது பெயரட்ட மென்ப.

2032. ஒன்பது

ஒன்பது நவம் தொண்டு ஒன்பான் என்றுறும்.

2033. பத்து

பத்து தசம் என வைத்தனர் புலவர்.

2034. நூறு

நூறு சதம் எனக் கூறப்படுமே.

2035. ஆயிரம்

ஆயிரம் சகத்திரம் பதினுயிரம்
நேரும் அயுதம் எனநிகழும்மே.

2036. நூறுயிரம்

நூறுயிரம் நியுதம் இலக்கம் என நுவல்வர்.

2037. பத்திலக்கம்

பத்திலக்கம் பிரயுதம் எனப்படுமே.

2038 கோடி

கோடி நூறிலக்கம் ஆமெனக் கூறுப.

2039. **எண்ணின்மை**

எண்ணின்மை அகணிதம் இலக்க மின்மையே.

2040. **சித்திரம் எழுதல்**

ஓவிய மெழுதல் தீட்டல் ஆம்.

2041. **படிப்பித்தல்**

படிப்பித்தல் ஓதுவித்தல் பயிற்றுதல்
கற்பித்தல் என்ப கற்றுவல்லோரே.

2042. **கொய்தல்**

கொய்தல் பறித்தல் கொய்கைப் பெயர்க்கொடை.

2043. **தொடுத்தல்**

தொடுத்தல் பிணைத்தல் தொடுப்பு எனப்படுமே.

2044. **கத்தரித்தல்**

கத்தரித்தல் கத்தரிக்கை கைத்திரித்தலுமாம்.

2045. **தைத்தல்**

தைத்தல் துன்னம் பொல்லம் அத்து எனத்தகுமே.

2046. **நனைதல்**

நனைதல் நனையல் நனைவு என நவில்வர்.

2047. **நனைத்தல்**

நனைத்தல் நீர்ப்படுத்தல் என நவின்றனரே.

2048. **தோய்த்தல்**

தோய்த்தலின் பெயர் துவைத்தல் என்ப.

2049. **பிழிதல்**

பிழிதல் ஈரப்பிடியல் முதலிய நீர்
வழியப் பிசைந்து வடிவித்தல் ஆமே.

2050. **உதறல்**

உதறல் உதிர்தல் உகுத்தல் என்றும்.

2051. **விரித்தல்**

விரித்தல் பரப்பல் என மேவும்மே.

2052. **உலர்தல்**

உலர்தல் வாடல் உணங்குதல் காய்தல்
புலர்தல் என்ப புரைதீர் புலவர்.

2053. **உலர்த்தல்**

உலர்த்தல் வாட்டல் உணக்குதல் காய்த்தல்
புலர்த்தல் என்ப புரைதீர் புலவர்.

2054. **பற்கறைஎறிதல்**

பற்கறையெறிதல் கோல்கறித்தல் கோறினலே.

2055. **மயிர்களைதல்**

மயிர்களைதல் மயிர்மண்ணல் வபனம் மழித்தல் ஆம்.

2056. **மொட்டையடித்தல்**

மொட்டையாக்கல் மழித்தல் முண்டித்தல் என்ப.

2057. **தொடுதல்**

தொடுதல் திவளல் துவளல் பரிசம்மெய்
யுறுதல் தீண்டல் பரிசனம் ஊறு எனப்படும்.

2058. **தூய தாக்கல்**

தூயதாக்கல் உவளித்தல் துப்புரவாக்கல் ஆம்.

2059. **முழுகல்**

முழுகல் படிதல் மூழ்கல் மஞ்சனம்
செறிதல் தோய்தல் செறித்தல் நீராடல்
குடைதல் நானம் குளித்தற் பெயர்க்கொடை.

2060. **துடைத்தல்**

துடைத்தல் நீவல் துவட்டல் இகுத்தல் ஆம்.

2061. **உடைகளைதல்**

உடைகளைதல் உடுக்கை மாற்றல் என்றோதுப.

2062. **உடுத்தல்**

உடுத்தல் சுற்றல் ஒற்றல் நானமுந்தி
எடுத்தெரளித் திறுக்கல் வேட்டித்தல் என்ப.

2063. **பூசுதல்**

பூசுதல் வரித்தல் விரித்தல் புலர்த்தல்
தேசுறத் திமிர்தலுமா மெனச் செப்புவர்.

2064. **அப்புதல்**

அப்புதல் கொட்டல் சதுர்த்தல் சாத்தல் ஆம்.

2065. **சூடுதல்**

சூடுதல் அடைச்சல் சுரும்பு நல்லிசை
பாடு மென்மலர் பாங்குற வேய்தல்
மிலைதல் என்ன விளம்பிய நான்கொடு
மலைதலு மென்ப வழக்குணர் புலவர்.

2066. **சூடுவித்தல்**

சூடுவித்தல் சூட்டல் ஆமெனச் சொல்லுப.

2067. **சொருகுதல்**

சொருகுதலின் பெயர் செருகுதல் ஆகும்.

2068. **அணிதல்**

அணிதல் மிலைதல் ஆர்த்தல் வேய்தல்
புனைதல் சூடல் பூணல் மலைதல் ஆம்.

2069. **அலங்கரித்தல்**

அலங்கரித்தல் அணிதல் ஒப்புறுத்தல்கை
சுலம்பட வேய்தல் மண்ணல் ஒப்பனை
புனைதல் மிலைச்சல் பூசுதல் கைத்தல்
வனைதல்கை செய்தல் வழக்கு எனமொழிப.

2070. **கலியாணம்**

கலியாணம் விவாகம் கைப்பற்றல் உபயமம்
நலியாமன்றல் பொன்னணிதல் பரிணயம்
மங்கலம் கடி தீவலஞ் செய்தல் வதுவை
கொங்கலர் மாலை சூட்டல் மணம் வேட்டல்
விதியுளி வரைதல் என விதித்தனரே.

2071. **கைப்பற்றல்**

கைப்பற்றல் கடி தீ வேள்வி கை தொடலே.

2072. **புதுமணம்**

புதுமணம் வதுவை புதுநலம் கடியே.

2073. **யாகம்**

யாகம் சித்து இட்டி எச்சம் இயசனம்
யூபம் வேள்வி ஓமம் சத்திரம்
காமம் யாவுந் தருமகம் கமழுந்
தூமமெழுகிருது எனச்சொல்லப் படுமே.

2074. **பூசனை**

பூசனை அருச்சனை பூசை ஆராதனை
வாசனை மலரின் வழிபடல் வந்தனை
பத்தி வழிபாடு பலி வேள்வி போற்றல் என்
றித்திற மெட்டு மிரண்டு மிதன்பெயர்.

2075. **திருவிழா**

திருவிழா உயர்நாள் தீர்த்தம் துணங்கறல்
முருகு சாறு சேறு என மொழிப.

2076. **உலாப்போதல்**

உலாப்போதல் பவனி சாரி என்றோதுப.

2077. **உலாவல்**

உலாவல் நூறடி யொதுங்கல் வழங்கல்
சுலாவல் வீதி சுற்றுதல் திரிதல்
அசைதல் இயங்கல் ஆகுமென்ப.

2078. **சார்தல்**

சார்தல் தொடல் புல்லல் சார்ச்சி தோய்வு அணவல்
ஊர்தல் புணர்தல் ஒட்டல் உறல் பிடித்தல்
அணுகல் அண் ணுதல் என்றபிதானம்மே

2079. **காட்டல்**

காட்டல் தோற்று வித்தல் சுட்டலே.

2080. **காணல்**

காணல் குறித்தல் காண்டல் தரிசித்தல்
மாணுற நோக்கல் வனப்புறத் தெரிதல்
கண்ணுறல் பார்த்தல்என் றெண்ணிய பெயரே.

2081. **காட்சி**

காட்சி பார்வை கட்புலப் படுதல் தரிசனம்.

2082. **கும்பிடுதல்**

கும்பிடுதல் அஞ்சலிகை கூப்புதல் தொழலே.

2083. **வணங்குதல்**

வணங்குதல் இறைஞ்சல் வந்தித்தல் காண்டல்
பணிதல் போற்றல் பார்த்தல் பரவுதல்
வழிபடல் குரங்கல் வந்தனை காணல்
தொழுதல் கைகூப்பல் அஞ்சலி துணவினிற்
ருழ்தல் விழ்தலிற்றண்டமுமாமே.

2084. **அடைக்கலம்**

அடைக்கலம் சரண் சரணம் அபயம் மறைகையடை.
இடைக்கல மல்லா இல்லடை என்ப.

2085. **அடைக்கலம் புகுதல்**

அடைக்கலம் புகுதல் மறைபுகல் சரண்புகல் ஆம்.

2086. **குறையிரத்தல்**

குறையிரத்தல் வேண்டல் குறை கோள் குறைகொளல்.

2087. **வேண்டல்**

வேண்டல் இரதி விருப்பம் நேர்தல் ஆம்.

2088. **பேறு**

பேறு கம்மியம் பிராப்பியம் என்ப.

2089. **ஆதாயம்**

ஆதாயம் ஆயம் ஆக்கம் இலாபம்
தீதிலா ஊதியம் அதிகம் பசை
பயன் பலன் சபலம் பலித்தல் நந்தல்
நயன் பயம் பேறுஎன நவின்றனர் புலவர்.

2090. **கிடைத்தல்**

கிடைத்தல் கைப்படல் அகப்படல் சிக்கல் வாய்த்தல்
பயத்தல் என்ப பன்னூற் புலவர்.

2091. **கொண்டு போதல்**

கொண்டு போதல் போதரல் கொடுபோதல் என்ப

2092. **கொண்டுவரல்**

கொண்டுவரல் போதரல் கொடுவரல் கொணர்தலே.

2093. **வருதல்**

வருதல் உறுதல் வரவு உறல் வருகை வரல் ஆம்.

2094. **கிட்டல்**

கிட்டல் அடைதல் கெழுமுறச் சிவணல்
தட்டல் அடுத்தல் சார்தல் சாருதல்
அணுகல் மருவுதல் அணைதல் உறல் குறுகல்
நணுகல் துன்னல் நண்ணல் அருகுறல்
சேர்தல் அண்ணல் சேரல் அணவுதல்
நேர்தல் என்ப நிறைமொழிப் புலவர்.

2095. **அடைத்தல்**

அடைத்தல் செறித்தல் தாட்கொளல் காப்புச் செயல் ஆம்.

2096. திறக்குதல்

திறக்குதல் அங்காந்திடல் திறவு ஆகும்.

2097. புகுதல்

புகுதல் புக்கல் புகல்எனப் புகல்வர்.

2098. குனிந்து புகுதல்

நுடங்கிக் குனிந்து புகுதல் நுழைதல் ஆம்.

2099. நுழைவித்தல்

நுழைவித்தல் புகுத்தல் நுழைத்தல் புகவிடலே.

2100. தூர்த்தல்

தூர்த்தல் அலகிடல் துடைப்பமிடல் பெருக்கல்.

2101. திருமெழுக்கிடல்

திருமெழுக்கிடல் மெழுகுதல் தீற்றல் நீவல்.

2102 தெளித்தல்

தெளித்தல் சிந்தல் சிதர்தல் தவிர்தல்
உகுத்தல் தூவல் உளர்தல் என்றோதுப.

2103. புனித மந்திர நீர் தெளித்தல்

புனித மந்திர நீர் தூவல் புரோக்கணம்.

2104. மூட்டல்

மூட்டல் பொருத்தல் மாட்டல் கொளுத்தலே.

2105. இதழைக் குவித்து ஊதல்

இதழ்குவித் தூதுதல் ஊதல் என்ப.

2106. எரியச் செய்தல், எரிதல்

எரியச் செய்தல் எரித்தல் எரிதல்
எரியல் என்ப இன்சொற்புலவர்.

2107. **கரியச் செய்தல், கரிதல்**

கரியச் செய்தல் கருக்குதல் கரித்தல்
கரிதல் கரியல் ஆகக் கழறுப.

2108. **பொரியச்செய்தல், பொரிதல்**

பொரியச் செய்தல் பொரித்தல் பொரிதல்
பொரியல் என்ப புரைதீர் புலவர்.

2109. **வறுக்குதல்**

வறுக்குதல் வறுத்தல் வறட்டல் வறையலே.

2110. **பூழியாக்கல்**

பூழியாக்கல் நுணுக்கல் பொடித்தல் ஆகும்.

2111. **கடைதல்**

கடைதல் மதனம் துருவல் கவர்தல் ஞெலிதல்
குடைதல் இயக்கல் குமுற மதித்தலே.

2112. **அழற்பாகம்**

அழற்பாகம் வேதல் அவிதல் பசனம் ஆம்.

2113. **அவித்தல்**

அவித்தல் நதுத்தல் நவிழ்த்தல் நுதுத்தல்
நொதுத்தல் என்ப நுணங்கியோரே.

2114. **அமுதமைத்தல்**

அமுதமைத்தல் சமைத்தல் அடுதல் அடல் அட்டல்ஆம்.

2115. **வடியச்செய்தல்**

வடியச் செய்தல் வடித்தல் வடிதல்
வடியல் என்ப வான்றமிழ்ப் புலவர்.

2116. **கவிழச்செய்தல்**

கவிழச் செய்தல் குப்புறுத்தல் கவிழ்த்தல்
கவிழ்தல் கவிழல் என்ப கற்றுணர்ந்தோர்.

2117. இறக்குதல்

இறக்குதல் இழித்தல் என்மனார் புலவர்.

2118. மூடுதல்

மூடுதல் கவித்தல் மொய்த்தல் போர்த்தல்
மூய்தல் வேய்தல் எனமொழி குவரே.

2119. அடுக்குதல்

அடுக்குதல் ஒன்றின்மே லொன்றேற்றல் பிறக்கல்.

2120. படைத்தல்

படைத்தல் கலத்தூண் பகுத்திடல் என்ப.

2121. நிவேதனம்

நிவேதனம் அவிக்காட்டல் நிவேதித்தல் ஆமே.

2122. புசித்தல்

புசித்தல் உண்டல் போசனம் மிசைதல் நுகர்தல்
பசித்தருந்தல் பருகுதல் துவ்வல் துறுவல்
அற்றயிலல் அயிலல் அயின்றல் கறித்தல்
துற்றல் உணல் மாந்தல் துய்த்தல் துத்தல்
ஆர்தல் சுவைத்தல் கைதொடல் அமுதுசெய்தல்.
பாரணம் என்ப பண்புடைப் புலவர்.

2123. தின்றல்

தின்றல் மேய்தல் என்றிரு கிளவியும்
துன்று மிருதிணைத் தொழிற்பண் பென்ப.

2124. மேயச் செய்தல், மேய்தல்

மேயச் செய்தல் மேய்த்தல் மேய்தல்
மேயல் என்ப மேம்படு புலவர்.

2125. கடித்தல்

கடித்தல் அறவுதல் கறித்தல் என்ப.

2126. அ. மெல்லல்

மெல்லல் அதுக்கல் கவட்டல் சவட்டல்

2127. நுங்கல்

நுங்கல் விழுங்கல் நோண்டல் நுகர்தல் ஆம்.

2128. குடித்தல்

குடித்தல் மாந்தல் குளிர்நீர் பருகல்என்
றடுக்கு மென்ப அருங்கலைப் புலவர்.

2129. உறிஞ்சல்

உறிஞ்சல் உறிதல் ஊச்சல் என் றோதுப.

2130. நாவாற் பருகுதல்

நாவாற் பருகுதல் நக்குதல் என நவில்வர்.

2131. கக்குதல்

கக்குதல் உமிழ்தல் காலல் கான்றல்
உக்காரம் சத்தி சருத்தி ஓங்கலே.

3132. பிச்சை

பிச்சை பாகம் சரியை பிண்டம் படிகம்
நச்சுமய்யம் பலி ஆமென நவில்வர்.

2133. சொரிதல்

சொரிதல் உமிழ்தல் சோனை பனித்தல்.
பொழிதல் எக்கர் ஆமெனப்புகல்வர்.

2134. முகத்தல்

முகத்தல் நொள்கல் மொள்ளுதல் தோண்டல்
நோண்டல் ஆம்.

2135 வார்த்தல்

வார்த்தல் பெய்தல் வார்க்குதல் சொரிதரல்
ஏற்றலிப் பெயரோ டூற்றலு மெய்தும்.

2136. ஒழுகல், ஒழுகுவித்தல்

ஒழுகல் ஒழுக்கு ஒழுகுவித்தல் ஒழுக்கலே.

2137. **வாய்கழுவல்**

வாய்கழுவல் வாய்பூசல் வாய் மண்ணல் என்ப.

2138. **கொப்பளித்தல்**

கொப்பளித்தல் பிளிர்த்தல் ஒக்குதல் பில்கல் காலல்
ஒப்பவிதழ்குவித் துமிழ்தல் பிலிற்றல்
தெவிட்டல் இமிழ்த்தல் தெவுட்டல் என்ப.

2139. **கழுவல்**

கழுவல் மண்ணல் ஆமெனக் கழறுப.

2140. **இருத்தல்**

இருத்தல் இறை தங்கல் இயங்கல் அசைதல்
தரித்தல் வதிதல் வைகுதல் தாழ்தல் அல்கல்
தெறல் இறுத்தல் தெவுட்டல் வலிதலொடு
ஆர்தலு மென்ப அறிந்திசினோரே.

2141. **நிறைதல்**

நிறைதல் பிறங்குதல் நிரம்பல் தேங்கல்
குறைவி லார்தல் குன்று மல்கல் மலிதல்
கழுமல் தெவிளல் கமம் மலர்தல் தெகுளம்
கெழுமல் துவன்றல் கெழுவுதல் ததும்பல்
கிளைத்தல் பெருகல் கிளர்தல் புட்கலம்
தெளித்தல் துற்றல் தெவிட்டல் தேக்கலே.

2142. **நிறைவு**

நிறைவு பிரகாமியம் நிரப்பு நிதிபுட்டம்
செறிவு கனை கமம் பூரணம் எனச் செப்புவர்.

2143. **நிறைதல்**

நிறைத்தல் பூரித்தல் நிரப்பபடல் பூரிதம்.

2144. **உயிர்வாழ்தல்**

உயிர்வாழ்தல் வாழ்தல் உய்தல் உய்தி ஆம்.

2145. வாழ்தல்

வாழ்தல் வாழ்வு வாழ்க்கை எனப்படும்.

2146. ஊக்கம்

ஊக்கம் ஆள்வினை உரன் உரம்யோகம்
ஆட்சி சால்பு உத்தியோகம் உற்சாகம்
தள்ளாண்மை தாளாண்மை சான்றாண்மை
உள்ளக்கிளர்ச்சி உள்ள மிகுதியே

2147. விரைவு

விரைவு துவல் நொறில் வெம்மை விதப்பு
பரிசடுதி விசை சடிதி கடுமை துருதம்
கடுகல் வெம் கதழ்வு கதனம் கவனம்
முடுகல் சவம் ஆசுமுந்துறு துணவு வேகம்
வல்லை ஈண்டு வல்கடி கடுப்பொடு
ஒல்லையுந்து வறலு முரைக்கப்படுமே.

2148. விரைவின் குறிப்பு

விரைவின் குறிப்பு வெய்தெனல் கோரம்
ஞெள்ளெனல் குத்திரம் ஞெரேலெனல் சண்டம்
பொள்ளெனல் கதுமெனல் பொருக்கெனல் நொய்தெனல்
அள் எனலென்ப அறிந்திசினோரே.

2149. முயற்சி

முயற்சி தாளாண்மை தாள் முயலல் ஆள்வினை
இயற்றி உழப்பு உள்ளம் இழிவிலா ஊக்கம்
உஞற்று உற்சாகம் என்றேதற்குரித்தே.

2150. கேட்டல்

கேட்டல் சிரவணம் கேள்விஎன்றுமே.

2151. வாசித்தல்

வாசித்தல் ஓதல் பாடல் படித்தல்
சாசித்தல் என்ப தண்டமிழ்ப் புலவர்.

2152. **மறை ஓதுதல்**

அரிய மறை யோதுதல் அத்தியயனம் ஆம்.

2153. **வீணைவாசித்தல்**

வீணைவாசித்தல் தடவுதல் கொளுத்துதலே.

2154. **பண்ணல்**

இணைகிளை முதலிய வின்னிசை நரம்பின்
துணையா ராய்ந்து சுருதியமைவுற
வண்ண மாடகம் வலித்துவீக்குதற்பெயர்
பண்ணல் மண்ணல் என்ப பண்மரபினர்.

2155. **பரிவட்டணை**

தகைமலி விபஞ்சி தழீஇ இயதந்திரிக்கண்
நகமுகநு தியினன் கெழீஇயகம்புறங்
கரணஞ் செய்தெழால் காண்டல் பரிவட்டணை.

2156. **ஆரோகணவகையால் இசை தெரிதல்**

ஆரோகணவகை யானிசை தெரிதல்
ஆராய்தல் தெள்ளுதல் ஆமென அறைவர்.

2157. **தைவரல்**

இசைகொளு நல்யாழ்வசையறு நரம்பின்
மிசைவிரனிறு வியசைவுற நடுக்கி
மூவகை நிலயமு மேவியோவறத்
தாவல் தைவரல் ஆமெனத்தகுமே.

2158. **செலவு**

திருந்து நல்யாழின் விரிந்தெழு மிசைவழி
பருந்தினிழலிற் பாட்டெழா லொன்றப்
பொருந்திச் செல்லல் செலவு ஆமெனப்புகல்வர்.

2159. **உழுதல்**

உழுதல் உழவு உழுகை உழல் ஏராண்மையே.

2160. **உழவுத்தொழில்**

உழவுத்தொழில் வேளாப்பு தொழுப்பு எனவுரைப்பர்.

2161. **தோண்டல்**

தோண்டல் சூன்றல் சூறல் தொடல் தொட்டல்
நோண்டல் கட்டல் அகழ்தல் இடத்தலே.

2162. **கீண்டல்**

கீண்டல் நோண்டல் கிளைத்தல் கிளர்தலே.

2163. **செப்பம் செய்தல்**

செப்பஞ்செய்தல் சீத்தல் செதுக்கல்
ஒப்புரத்துதல் தூய்தாக்கல் எனமேரேதுப.

2164. **பாயச்செய்தல் பாய்தல்**

பாயச்செய்தல் பாய்த்தல் பாய்தல்
பாயல் என்ப பன்னூற் புலவர்.

2165. **குழைந்தல்**

குழைத்தல் இகுத்தல் நெகிழ்த்தல் குழைவித்தல்.

2166. **குழைதல்**

குழைதல் நெகிழ்தல் அணைதல் ஈடு ஒல்கல்
சுணைதல் என்ப துகடீர் புலவர்.

2167. **வித்து விதைத்தல்**

வித்து விதைத்தல் வித்தல் தெளித்தல் ஆம்.

2168. **முளைத்தல்**

முளைத்தல் நாறுதல் கெழுமுதல் தோற்றல் பொடித்தல்
உருத்தல் அங்குரித்தல் என்ரேதத் தகுமே.

21 9. **வளர்தல்**

வளர்தல் விருத்தி வளர்ச்சி உருத்திதம்
திமிர்தல் நிமிர்தல் நிமிரலுமாமே.

2170. **பறித்தல்**

பறித்தல் பிடுங்கல் பருஉவொடு குற்றல்
புய்த்தல் களைதல் எனப் புகலப்படும்.

2171. **நடுதல்**

நடுதல் நடல் ஊன்றல் நாட்டல் நட்டல்
நடுகை என்ப நவைதீர் புலவர்.

2172. **தோகதம்**

கொழுமலர்க் கொடிமரம் குனம் முதலாயின
விழுமிய பருவத்தன்றி விரகதனல்
வான்சினை கிளைத்து வண்டளிரீன்று
கான்சேர் நறுமலர் கவின்று சொரிதரக்
கொய்தல் புகைத்தல் கிளைத்தல் குழையெருவிடற்
கெய்து பெயர் தோகதம் தோகளம் களமே.

2173. **ஈனுதல்**

மானிட மாக்கண் மகப்பயத்தற்குங்
கானமர் யானை மான் கன்றுயிர்த்தற்கும்
வாழை நெல்லாதி வண்குலை விடுத்தற்கும்
மாழை மாதவி மஞ்சரி காலுதற்கும்
கூனல் இறல்குளிர் முத்துமிழ்தற்கும்
ஈனுதல் ஈனல் ஈன்றல் என்ப.

2174. **காய்த்தல்**

காய்த்தல் காய்ப்பு காய்க்கை என்றுகும்.

2175. **விளைதல்**

விளைதல் விளாவல் விளைவுபோகம்மே.

2176. **முதிர்ந்திடல்**

முதிர்ந்திடல் வற்றல் வரற்றல் முற்றல்
முளிந்திடல் காய்தல் முளித்தல் என்றுமே.

2177. அரிதல்

அரிதல் விதல் ஈர்தல் அறுத்தல் சேதித்தல்
பரிதல் அகைத்தல் பகல் கொய்தல் சூலல்.
கடிதல் துணித்தல் கைத்திரித்தல் துண்டித்தல்
தடிதல் விடுவாய்ச் செய்தல் எனத்தகும்.

2178. வெட்டல்

வெட்டல் துமித்தல் வெங்கூர் செறிதரு
கட்கத் தெறிதல் காய்தல் பரிதல்
தண்டித்தல் எற்றல் தறித்தல் கண்டித்தல்
துண்டித்தல் அறுக்கல் துணித்தல் எருக்கல்
.... ல் இறுத்தல் சேதித்தல் பகுத்திடல்
களைதல் எண்ப கலையுணர் புலவர்.

2179. எற்றல்

எற்றுதல் எற்றல் தடிதல் காதுதல்
.... வெட்டல் பகுத்திடல் பரிதல்
கண்டித்தல் என்று காட்டுமிப் பெயரொடு
துண்டித்தலுமாமெனச் சொலப்படுமே.

2180. எறிதல்

எறிதல் ஓச்சல் எற்றல் செலவிடல்
முறிய வீசல் விலகல் முடுகி
யிடுதல் என்ன இயம்புமிவ்வேமொடு
விடுதல் என்ப வியன் மொழிப்புலவர்.

2181. முறித்தல்

முறித்தல் ஒடித்தல் முரித்தல் அகைத்தல்
இறுத்தல் ஒசித்தல் கோடல் என்றிசைப்பர்.

2182. ஒடிதல்

ஒடிதல் முறிதல் ஒசிதல் ஞெமிர்தல்
இடிதல் முரிதல் இறுதல் பரிதலே.

2183. வீழ்த்தல்

வீழ்த்தல் இருத்தல் விழுத்தல் என்ப.

2184. விழுதல்

விழுதல் சோர்தல் விழல் நாலல் வீழ்தலே.

2185. சாய்தல்

சாய்தல் நெரிதல் சரிதல் கெடுகுதல் அடி
மாய விரிதல் வழுவுதல் இடைதல் உடைதலே.

2186. சாய்த்தல்

சாய்த்தல் சாய்வித்தல் சரித்தல் இரித்தல் ஆம்.

2187. வலியறுத்தல்

வலியறுத்தல் ஆற்றறுத்தல் என்மனார் புலவர்.

2188. கட்டல்

கட்டல் பந்தித்தல் கயிற்றுற் பிணித்தல்
ஒட்டச் சுருக்கல் ஒன்றுறத் துவக்கல் பிணைத்தல்
அசைத்தல் வரிதல் ஆர்த்தல் வரித்தல்
விசித்தல் தொடுத்தல் வீக்கு வளைத்தல் தொடர்தல்
இமிழ்த்தல் யாத்தல் இசைத்தல் யாப்புறல்
சிமிழ்த்தல் என்ப செஞ்சொற் புலவர்.

2189. எடுத்தல்

எடுத்தல் எடுப்பு எடுப்பல் எடுக்குதல் என்ப.

2190. தரித்தல்

தரித்தல் சுமத்தல் தாங்குதல் துரியம்
பரித்தல் பொறுத்தல் தூர்வகம் எனப்படுமே.

2191. ஏற்றுதல்

ஏற்றுதல் பொறுத்தல் சுமத்துதல் எடுத்துதல்.

2192. போகடுதல்

போகடுதல் போகடல் போகவிடல் ஆமே.

2193. போகவிடுதல்

போகவிடுதல் விடுத்தல் போக்குதல் செலுத்தல்.
போக்கல் செலவிடுதல் விடுத்தல் என்ப.

2194. போகல்

போகல் போக்கு போகுதல் போதல்
ஏகல் கழிதல் இறத்தல் கடத்தல்
சேறல் தீர்தல் செலல் இவர்தல் ஆமே.

2195. வழிப்படுத்தல்

வழிப்படுத்தல் ஆற்றுப் படைஎன வருமே.

2196. வழிச்செலவு

வழிச்செலவு பயணம் பிரயாணம் யாத்திரை.

2197. தள்ளல்

தள்ளல் நூக்கல் தள்ளுதல் ஊன்றல் நோன்றல் ஆமே.

2198. அகற்றல்

அகற்றல் நீக்கல் உச்சாடனம் ஒருவுதல்
துறத்தல் ஐந்தும் சொற்றதொல் பெயரே.

2199. வேருக்கல்

வேருக்கல் விகற்பித்தல் வேறு படுத்தல்
வேருகல் வேறுபடல் வீற்றம் வீற்றெடு
வேறுபாடு என்றும் விளம்பப் படுமே.

2200. தூற்றுதல்

தூற்றுதல் தூற்றல் தூவுதல் எனப்படுமே.

2201. அளத்தல்

அளத்தல் கடம் கச்சம் ஆகுமென்ப.

2202. **அளவு**

அளவு பிரமாணம் மட்டு அவதி மாத்திரை
அளவை வரை வரையறை அந்தரம் தனை
.... மிதம் மானம் தலை துணை மடங்கு
.... வல்லி ஆமெனக் கழறுப.

2203. **அளவின்மை**

அளவின்மை எல்லையின்மை அனந்தம்
அபரிமிதம் அபாரம் அனவதி அமானம்
அமிதம் என்ப சொல்லாய்ந்திசினோரே.

2204. **அள்ளுதல்**

அள்ளுதல் கவர்தல் வாருதல் வௌவல் வளைத்தல்
கொள்ளுதல் வரன்றல் கொழித்தல் தெள்ளுதலே.

2205. **குவியச் செய்தல்**

குவியச் செய்தல் குவிக்குதல் குவித்தல் ஆம்.

2206. **குவிதல்**

குவிதல் இராசி குவை குவிவு குப்பை
கூம்புதல் துற்றல் குவால் குவவு நூழில்
சாம்புதல் என்ப தண்டமிழ்ப் புலவர்.

2207. **குவிவு**

குவிவு குப்பை குவால் குவவு குவையே.

2208. **ஒடுங்கல்**

ஒடுங்கல் சாம்பல் கூம்பல் என்றோதுப.

2209. **வணிகச்செயல்**

வணிகச் செயல் வியாபாரம் வாணிச்சியம்
வாணிகம் என்று வகுத்தனர் புலவர்.

2210. **பங்கு செய்தல்**

பங்குசெய்தல் பாகிடுதல் பகுத்தல்
பகிர்தல் காதுதல் வகிர்தல்ஆமே.

2211. பங்கு

பங்கு பாகம் பாத்தி கந்தம் திறம்
பாகுபாடு பால் பாத்தொடு வாரம்
கூறு கூறுபாடு எனக் கூறுப.

2212. கூறுபாடு

கூறுபாடு வகை கூற்று திறனே.

2213. கிளப்புதல்

கிளப்புதல் திமைத்தல் ஆமெனக் கிளப்பர்.

2214. வைத்தல்

வைத்தல் வைப்பு வைக்குதல் இருத்தலே.

2215. புதைத்தல்

புதைத்தல் சேமித்தல் கன்னம் கனிதல் கூடம் ஆம்.

2216. புதையல்

புதையல் ஏமம் நிக்கேபம் சேமமே.

2217. இறுகச்செய்தல்

இறுகச் செய்தல் இறுக்கல் இறுகுறல்
இறுகல் என்ப இன்சொற் புலவர்.

2218. வலிந்து வாழ்தல்

வலிந்து வாழ்தல் வல்லாங்கு வாழ்தல்
வற்கென வாழ்தல் எனவகுத் தனரே.

2219. செய்கடன்

செய்கடன் நியதி நியமம் என்ப.

2220. கொள்கடன்

கொள்கடன் இருணம் ஆமெனக் கூறுவர்.

2221. நன்றி

நன்றி நலன் நன்கு நன்மை வேளாண்மை
நன்று உபகாரம் நலம் எனலாமே.

2222. ஈகை

ஈகை கொடை கடப்பாடு இடுகை அளிகவிகை
வாகை புரவு உதாரம் வண்மை வேளாண்மை
உதவி பிரதானம் உபகாரம் தத்தம்
விதரணம் தியாகம் வேள்வி தானமே.

2223. தலையாகு ஈகை

அறத்திற்செய் பொருண் மூன்றரிறபுதவத்தோர்
பெறப்பணிந் தவர்க்குப் பெரிதுள்ளுவந்து
கொண்மின் என்று குறையிரந்துதவல்
தண்ணளி யோடருள் தலையாகீகை.

2224. இடையாகு ஈகை

ஆதுலர் வதிரர் அந்தகர் ஊமர்
மாதர்என் றிவர் பால் வறுமை கண்டிரங்கி
யாதும் ஓராது இசையுமாத்திரையின்
ஈவது இடையா கீகை என்ப.

2225. கடையாகு ஈகை

ஆர்வம் கண்ணோட்டம் அச்சம் கைம்மாறு
காரணம் புகழ் கடப்பாடு என்றிவற்றின்
ஈவது கடையா கீகை என்ப.

2226. வரையாக் கொடை

வரையாக்கொடை பெருவள்ளன்மையே.

2227. கொடை மடம்

எல்லை தீர்ஞாலத் திசைபடல் கருதி
முல்லைக்குத் தேரும் மயிற்குமீக் கோளுந்
தொல்லையிலுதவுந்தூயோர்போல
ஒல்லையிலுதவல் கொடைமடம் என்றோதுப.

2228. இரத்தல்

இரத்தல் குறைகோள் இரவு ஏற்பு ஏற்றல் வேண்டலே.

2229. கொடாமை

கொடாமை வழங்காமை நல்காமை புரவாமை
இடாமை அவிதரணம் ஈயாமை கரத்தல்
மறுத்தல் கரவு மாற்றல் அருளாமை.
நிறுத்தல் என்ப நிறைமொழிப் புலவர்.

2230. உபசரித்தல்

ஓகைகூர உபசரித்தல் உபசாரம்
வாகை திகழ் நயம் சன்மானம் முகமனே.

2231. கொண்டாடல்

கொண்டாடல் பாரட்டல் குலாவல் மெச்சலே.

2232. அலேயல்

அலேயல் ஞெகிழ்தல் சோம்பு அலேத்தல் ஞொள்கல்
அலேதல் துளும்பல் அலேவு அழுங்கல் ஆமே.

2233. அலேவு

அலேவு கம்பிதம் அசைவு கம்பம் சலம்
உலேவு சஞ்சலம் உலோலம் சலனம்
துலிதம் ஆமெனச் சொற்ற விப்பத்தொடு
சலிதம் தரளம் எனலுந்தகுமே.

2234. அலேத்தல்

அலேத்தல் அலேப்பு என்றறைந்திசினேரே.

2235. அசைதல்

அசைதல் ததும்பல் அலங்கல் தயங்கல்
ஒசிதல் சாய்தல் ஊசல் தளம்பல்
துவளல் தள்ளாடல் ஆடல் துயல்வரலே.

2236. அசைத்தல்

அசைத்தல் இரட்டல் ஆட்டல் துவட்டல்
ஒசித்தல் என்ப உணர்ந்திசினேரே.

2237. துவளல்

துவளல் அசைதல் துவணல் துணங்கல்
உவளல் ஒல்க ல்உவண்டல் நுதுங்கல்
திவளல் திவண்டல் ஆமெனச் செப்புவர்.

2238. துவளச் செய்தல்

துவளச் செய்தல் துவட்டல் சவட்டலே.

2239. அசையாநிலை

அசையாநிலை சாச்சுவதம் அசலம் துவம்
சலியாமை துருவம் ஆமெனத்தகுமே.

2240. அசைவின்மை

அசைவின்மை அதுலிதம் அசையாமை ஆமே.

2241. நிற்கச்செய்தல்

நிற்கச்செய்தல் நிலைநிறுத்தல் நோன்றலே.

2242. நிலைப்படுத்தல்

நிலைப்படுத்தல் தாபித்தல் நிறுத்துதல் நோன்றல்
நிறுத்தல் தாபிதம் நிறுப்பு எனப்படுமே.

2243. நிலை

நிலை தாணு தம்பம் நிற்றல் தாபரம் திரம்
உலைவிலா தாரம் உறுதிதி மன்னல்
அலைவிலாத தாதல் ஏண் ஆகு மென்ப.

2244. நிலையுடைமை

நிலையுடைமை ஏண் என நிகழ்த்தினர் புலவர்.

2245. நிலைபெறுதல்

நிலைபெறுதல் தாணு திதிநிலை பேறு மன்னல்
அலைவின்மைதுஞ்சல் அற்கல் நிலைத்தலே.

2246. நிலைபெறுத்துகை

நிலைபெறுத்துகை திதி தாபகம் ஆமே.

2247. நிலைபெறுத்தல்

நிலைபெறுத்தல் காத்தல் நிறுவல் என்ப.

2248. தாபதம்

தாபதம் தூபிதம் தாபிதம்மே.

2249. செவ்வையாய் நிற்றல்

செவ்வையாய் நிற்றல் செந்நிற்றல் நெறித்தல்
செவ்வனிற்றல் என்பசெம்புலவர்.

2250. நிலையிலாமை

நிலையிலாமை வம்பு அற்காமை நிலையின்மையே.

2251. உறுதிப்படுத்தல்

உறுதிப் படுத்தல்வற் புறுத்தல் வருட்டல்
தெருட்டல் என்ப செஞ்சொற் புலவர்.

2252. வற்புறுத்தல்

வற்புறுத்தல் தெருட்டல் வருட்டல் ஆமே.

2253. ஆணையிடல்

ஆணையிடல் தட்டல் வட்டித்தல் தடுத்தல்
வாரித்தல் தகைதல் எனவழுத் துவரே.

2254. ஆணை

ஆணை சத்தியம் சூள் சூளுறல் சபதம்
பேணு விரதம் தெரிசொல் பிரமாணமே.

2255. சபதம்

இன்ன தீ வன் செயிலின்னணுக்குவனெனப்
பன்னிப் பாடை யிடல் சபதம் என்ப.

2256. அழைத்தல்

மாவெனல் அழைத்தல் விளித்தல் ஆகருடணை
வாவெனல் உளைத்தல் வாங்கல் இகுத்தல்
கூவுதல் கேதல் குயிறல் கரைதல்
என்ற இவற்றெடு அகவலு மாமே.

2257. **கூப்பிடல்**

கூப்பிடல் அலறல் குமுறெழுக் கதறல் கத்தலே.

2258. **வசமாக்கல்**

வசமாக்கல் வருட்டல் வசித்துவம் ஆகும.

2259. **கைவசப்படுத்தல்**

கைவசப்படுத்தல் அகப்படுத்தல் கைப்பற்றல் கோள்.

2260. **ஏவல் கொளல்**

ஏவல்கொளல் வியங்கொளல் வியங்கோடல்' பணிகொளல்.

2261. **தொடங்கல்**

தொடங்கல் எழுவாய் துவக்கம் ஆமே.

2262. **நிரைகவர்தல்**

நிரைகவர்தல் ஆகோள் நிரைகொளல் என்ப.

2263. **போர்செய்ய அழைத்தல்**

பொரவழைத்தல் அறைகூவல் ஆமெனப்புகல்வர்.

2264. **வீராவேசத்தால் கொக்கரித்தல்**

மிக்கம ரிற்படர் வீரவெறி யேறிக்
கொக்கரித்தற் பெயர் குணலை ஆமே.

2265. **பொருதல்**

பொருதல் அடல் அடர்த்தல் பூசல் ஆடல்
சிவணல் ஆர்த்தல் சினவுதல் நிகர்த்தல்
இகலல் பாறல் எக்கல் அமர்த்தல்
உடலல் நேர்தல் உடன்றல் மலைதலே.

2266. **போர்**

போர் சங்கிராமம் புரியும் ஆயோதனம்
சூர்தரு சங்கரம் தும்பை பண்டனம்
ஆர்ப்பு குறும்பு ஆகவம் காளையங்கம்

ஞாட்பு நிகர்ப்பு நண்ணலர்த் தெறும் சமரம்
அமர்கலிகதனம் அடும்செரு வினைமொய்
சமர் நிகம் விதர்ப்பு சமீரம் விறப்பு
மறல் உறழ்வு கணையம் மலைப்பு தாக்கு
திறம் மலைவு கூட்டம் தெவ்முயல் வெஞ்சமம்
இரணம் செருநர் சோற்றிருங்கடன் கழிக்கும்
முரண் இகல் என்ப முந்தையோரே.

2267. **எதிர்த்தல்**
எதிர்த்தல் நேர்தல் எதிருன்றல் தலைப்படல்
கிடைத்தல் முட்டுதல் மலைதல் கிட்டல் முடுகல்
எற்றல் எதிர்தல் தாக்கல் என்னுமிம்
முந்நான்கும் என வகுத்தனரிதற்கே.

2268. **பகைவர் நாடழித்தல்**
பற்றலர் வாழும் பைதிரம் அழித்தல்
கொற்ற வள்ளை ஆமெனக் கூறுப.

2269. **தோற்குதல்**
தோற்குதல் தோலல் நிலையழிவு தோல்விதோல்
ஆற்றலழிந்து பின்னிடல் ஓடல் அஞ்சல்
தோற்றல் ஓட்டம் தொலைவு புறங்கொடையே.

2270. **சாய்ந்தார் மேற்படராமை**
சாய்ந்தார் மேற்படராமை தழிஞ்சி ஆகும்.

2271. **வெல்லுதல்**
வெல்லுதல் வெல்லல் வெற்றி பெறுதலே.

2272. **வெற்றி**
வெற்றி விறப்பு ஆடு ஆடல் வென்றி படினம்
கொற்றம் ஆணை குடுமி புகல்முல்லை.

2273. **பெரும் விதர்ப்பு**
பெரும் விதர்ப்புப் பீடுறுவாகை
விறல் சயம் விசயம் வலன் வெற்றம் ஆமே.

2274. **கப்பம்**

மறுபுல வேந்தர் வழங்கிறை கப்பம்
குறை திறை பாகுடம் ஆமெனக் கூறுப.

2275. **வரி**

இறை குடியிற் கொளும் இறைகடன் இறுப்பு
கறை குறை வரிகரம் எனக்கழறினரே.

2276. **ஆயம்**

ஆயம் உல்கு சாரிகை சுங்கம் ஆகும்.

2277. **கொளுத்தல்**

கொளுத்தல் பற்றுவித்தல் கொளுவலின் மாற்றம்.

2278. **வேட்டை**

வேடர்புரி வேட்டை ஆகேடகம் வேட்டை
யாடல்பா பத்தியென் றறையு மென்ப.

2279. **ஆளுதல்**

ஆளுதல் ஆட்சி ஆளல் ஆண்மை ஆம்.

2280. **அதிகாரம்**

அதிகாரம் அதிகரித்தல் ஆமென் றறைவர்.

2281. **கொள்ளை**

கொள்ளையின் பெயர் சூறை கொண்டி ஆமே.

2282. **கொள்ளையிடல்**

கொள்ளையிடல் வாருதல் கொளல் வவ்வல்கவர்தலே.

2283. **வழிப்பறித்தல்**

வழிப்பறித்தல் அதர்கோள் ஆறலைத்தல் அதர்கொளல்.

2284. **திருடல்**

திருடல் வாருதல் கவர்தல் கரத்தல் வவ்வல் ஆமே.

2285. களவு

உள்ளத்துள்ளலும் ஊறுறுங் களவு
கள்ளல் திருட்டு கயவு கரவடம்
படிறு சோரம் பட்டிமை சோர்வு
கடுதல் தேயம் கரப்பு கரவுகள்
கள்ளம் தேனு கவர்வு என்றிப்பெயர்
கொள்ளும் என்ப குறியுணர்புலவர்.

2286. ஒளித்தல்

ஒளித்தல் பாந்தல் பதுங்கல் கரத்தல்
குவித்தல் கரவு கரப்பு எனக் கூறுப.

2287. பதுங்கல்

பதுங்கல் ஒடுங்கல் பாந்துதல் மறைதல்
ஒதுங்கல் என்ப ஒண்புல வோரே.

2288. வெளிப்படல்

வெளிப்படல் மன்றுபடல் வெள்ளிடைப் படலே.

2289. வளைத்தல்

வளைத்தல் கோட்டல் வரையறுத்தல் குனித்தல்
தொடுத்தல் முற்றுதல் சூழ்போதல் கோலல்
........ல் திருகல் வாங்கல் ....த்தல்
குரக்கல் கோணுவித்தல் ஆகும்மே.

2290. வளைதல்

வளைதல் வளைவு வக்கிரம் கூனல் கூன்
வசிவு தடவு ஆவல் வலந்தம் கோணல் கோண்
வளாவல் தட்டு வணர் முற்றல் வாங்கல்
குலாவல் கோட்டம் குணக்கு குடிலம்
குரங்கல் கோடல் குனிதல் என்றிவற்றொடு
வணங்கலு மென்ப வண்டமிழ்ப் புலவர்.

2291. நிரைதல், நிரைத்தல்

நிரைதல் நிரல்படல் நிரைத்தல் நிரல்படுத்தலே.

2292. **எழுச்சி**

எழுச்சி கஞறல் இவர்தல் மீறல்பொலிவு
ஒழுக்கம் நேர்பு ஏர்பு ஓங்கல் அகைத்தல்
உம்பல் கதித்தல் கலித்தல் உறுமல்
பம்பல் பாச்சல் ஆமெனப் பகர்வர்.

2293. **மாற்றல்**

மாற்றல் விலக்கல் மறுத்தல் வரையறுத்தல்
நீக்கல் என்ப நிறைமொழிப் புலவர்.

2294. **மாறுபாடு**

மாறுபாடு மலைதல் மலைவு எதிர்தல் இக்
கூறுபாடுடைய........கடல.........

2295. **தெற்றல்**

தெற்றல் கோணல் தெரித்தல் முரணல்
நீக்கல் என்று நிகழத்தப் படுமே.

2296. **பெயர்தல்**

பெயர்தல் பேர்தல் பிறழ்தல் ஆமே.

2297. **இழுத்தல்**

இழுத்தல் ஈர்ப்பு ஈர்த்தல் என் றிசைக்கப்படும்.

2298 **அம்புதொடுத்தல்**

நால்வகை நிலையி னல்வரி வில்லிரு
கால்வளைத் தெய்தல் கடுஞ்சரங் கோலல்
தொடுத்தல் ஏவல் துரத்தல் உகைத்தல்
விடுத்தல் தொடல் தொட்டல் எனவிளம்புவரே.

2299. **துளைக்குதல்**

துளைக்குதல் தெளிதல் துளைத்தல் ஆமே.

2300. உருவல்

அடலிடை அத்திரஞ் சத்திர மென்றிவை
உடல்புகுந் தோடல் உருவல் உரு வுதலே.

2301. வடுப்படல்

வடுப்படற்பெயர் கதுவாய் ஆமென்ப.

2302. கிழிதல்

கிழிதல் கிழி போழ்தல் கீற்று கிழிவு கீறலே.

2303. கிழித்தல்

கிழித்தல் கீண்டல் கீன்றல் அவிர்தல்
கீறல் கீழ்தல் கீளல் பிளிறுதல்
பீறல் என்று பேசப் படுமே.

2304. பிளத்தல்

பிளத்தல் ஈர்த்தல் பிளவு பகல் பகிர்தல்
போழ்தல் கீளல் ஆமெனப் புகல்வர்.

2305. வகிர்தல

வகிர்தல் நார் முதலிய சுவிர்தல் ஆமே.

2306. அடித்தல்

அடித்தல் எறிதல் அகைத்தல் அதுக்கல்
புடைத்தெழ அறைதல் புடைத்தல் எற்றல்
மொக்கல் மோதுதல் கொட்டுதல் வழுக்கல்
மொத்தல் என்று மொழியப்படுமே.

2307. கெடுதல்

கெடுதல் குட்டல் உடைத்தல் தகர்தல்
உடைதல் என்ப உணர்ந்திசிஞேரே.

2308. குத்தல்

குத்தல் எற்றல் பற்றல் புடைத்தல் என்று
இத்திற மீரிரண் டென்ப இதன்பெயர்.

2309. குற்றல்

குற்றல் அவைத்தல் நெறித்தல் செறித்தல்
தெறுத்தல் என்ப செந்தமிழ்ப் புலவர்.

2310. குற்றல் (தொடர்ச்சி)

குற்றல் நெல்லவைத்தல் குத்தல் கோறுதல் என
நற்றமிழ்ப் புலவர் நவின்ற தொல் பெயரே.

2311. நெரித்தல்

நெரித்தல் .... குற்றல் அவைத்தல்
செறித்தல் செறுத்தல் ஆமெனச் செப்புவர்.

2312. சுழற்றியாடல்

சுழற்றியாடல் தரித்தல் சுழற்றல் என்ப.

2313. அமைத்தல்

அமைத்தல் கெழுமல் புல்லுதல் பொருத்தல்
சமைத்தல் என்ப தண்டமிழ்ப் புலவர்.

2314. அமைதல்

அமைதல் பொருந்தல் அமையுமென்றல் அலமே.

2315. ஆராய்தல்

ஆராய்தல் சூழல் சூழ்ச்சி தூக்கு ஆய்தல்
ஓர்தல் தெரிதல் தேர்தல் தெளிதலே.

2316. ஆராயாமை

ஆராயாமை தூக்காமை ஆயாமை
ஓராமை சூழாமை ஆமென்றோதுப.

2317 தேடல்

தேடல் துருவல் கூடல் கையரிக் கொளல்
நாடல் தொடர்தல் நேடல் என்றுமே.

2318. பிடித்தல்

பிடித்தல் தொடல் தொட்டல் பற்றல் வௌலே.

2319. சிறைப்படல்

சிறைப்படல் தளைப்படல் வலைப்படல் ஆமே.

2320. சிறை

சிறைகாவல் ஏமம் சிக்கம் என்ப.

2321. சலஞ்சாதித்தல்

சலஞ்சாதித்தல் சாதனை கறுவு தொந்தம்
செற்றம் வேரம் செறும்பு வயிரமே.

322. அதட்டல்

அதட்டல் சிறல் அதிர்த்தல் உரப்பல்
தெழித்தல் என்ப செம்மொழிப் புலவர்.

2323. தண்டித்தல்

தண்டித்தல் தண்டனை தண்டிப்பு தண்டமே.

2324. சந்தாபம்

பாப மெய்துழிப் பதைத்து வெதும்புறுந்
தாபம் அனுதாபம் சந்தாபம் எனப்படுமே.

2325. கண்ணோட்டம்

கண்ணோட்டம் கேண்மை ஏணிலையுடைமை கண்மை
நயப்புணர்வு நாகரிகம் நலம் ஆமே.

2326. பொறுத்தல்

பொறுத்தல் சாந்தம் பொறை பொறுமை ஓர்ப்பு
சகித்தல் நோன்றல் சமித்தல் கமித்தல்
நோற்றல் சகனம் தகுதிநோற்பு நோன்மை
ஆற்றல் என்ப அறிந்திசி னோரே.

2327. **பொருமை**

பொருமை அழுக்காறு பொறையின்மை கூரம்
நோலாமை வக்கிரம் நோனுமை ஆமே.

2328. **வெய்யவே தோற்றல்**

வெய்யவே தோற்றல் உறுத்தல் ஒற்றுதலே.

2329. **வலிதருதல்**

வலிதருதல் ஆற்றுவித்தல் வலியுறுத்தல் ஆம்.

2330. **விடுதல்**

விடுதல் உகுத்தல் விடல் விடை வியோகம்
து வைத்தல் பெய்தல் தும்மல் நியதுதல்
மாறல் செலவிடல் எனக் கூறப்படுமே.

2331. **விடுத்தல்**

விடுத்தல் தீர்தல் வியோகம் விமோசனம்
உயிர்த்தல் வாரணம் ஒக்குதல் நிவாரணம்
மோக்கம் மோசனம் என்னு மிவற்றொடு
நீக்கல் என்று நிகழ்த்தப்படுமே.

2332. **அழுங்கல்**

அழுங்கல் சோம்பு மடி சம்படம்
ஆழ்தல் சோகம் சோபம் அசைதல்
மாழ்கல் மந்தம் மடிமை தளர்ச்சி
ஆழ்தல்செய் துஞ்சல் அலைதல் அலைசலே.

2333. **மந்தம்**

மந்தம் தாழ்த்தல் சோம்பு என வகுத்தனரே.

2334. **மந்தக்குறிப்பு**

மந்தக்குறிப்பு ஒய்யெனல் பையெனல்மெல்லெனல்.

2335. **வாருதல்**

வாருதல் வளைத்தல் வலத்தல் வலித்தலே.

2336. படுத்தல், கிடத்தல்

படுத்தல் படுக்கை கிடத்தல் கிடக்கையே.

2337. உறங்குதல்

உறங்குதல் நனவ தொடுங்கிக் கனவு
பிறங்குங் கண்படல் பெருங்கனவொழிதுயில்
தூங்கல் பள்ளி துயிறல்கண் வளர்தல்
வீங்கல் துஞ்சல் விழிபொருந்தல்லே.

2338. நித்திரை

நித்திரை உறக்கம் நிகழ்கனுநிசி
முத்திரை யெனக்கண் முகிழ்த்திடுந்துயில்
பள்ளி அனந்தர் அனந்தல் கண்படை
ஒள்ளிய சயனம்என் ேறுதப் படுமே.

2339. நிரம்பாத் தூக்கம்

நிரம்பாத் தூக்கம் தூங்கல் என நிகழும்.

2340. பேசாமை

பேசாமை மதனம் மோனம் மௌனம்
வாளாமை மூகம் வாளா ஆமே.

2341. கேளாமை

கேளாமைப் பெயர் வாளா எனலொடு
வேளா எனலு மாமென விளம்புவர்.

2342. கால் தடவல்

கால்தடவல் தைவரல் கால்வருடல் ஆமே.

2343. தடவல்

தடவல் ஊர்தல் தைவரல் வருடல் நீவல் ஆம்.

2344. விழித்தல்

விழித்தல் இமைகொட்டல் சிமிழ்த்தல்.......

2345. நொடி

நொடி விரலால் நொடிக்குதல் என்ப.

2346. எடுப்பல்

.... எடுப்பல் எற்றலே.

2347. துயிலொழித்தல்

துயிலொழித்தல் சாகரம் சாகளுகம்.

2348. எழல்

எழல் எழுகை எழுதல் எழுகுதல் எழுந்திருத்தல்.

2349. தழுவல்

தழுவல் விள்ளல் முயங்கல் எனத்தகும்.

2350. இறுகுதல்

இறுகுதல் இறுகல் என்றெய்தும்மே.

2351. அமுக்கல்

அமுக்கல் ஞெமுங்கல் அரங்கல் அமுங்கல் ஆம்.

2352. பதியச்செய்தல்

பதியச் செய்தல் பதித்தல் பதிதல்
பதியல் என்ப பன்னூற் புலவர்.

2353. மயிர்சிலிர்த்தல்

மயிர்சிலிர்த்தல் இலிர்த்தல் மயிரரும்பல் புளகிதம்
மயிர்பொடித்தல் புளகித்தல் மயிர்முகிழ்த்தல் புளகமே.

2354. இறுமாப்பு

இறுமாப்பு செம்மாப்பு ஏமாப்பு மிகுமகிழ்ச்சியே.

2355. அடக்கம்

அடக்கம் நொறில் குத்தி அடங்கல் சங்கோசம்
ஒடுக்கம் முணங்கொடு ஒருங்கல் ஆமே.

2356. நெருங்கல்

நெருங்கல் பொதுளல் நிமிர்தல் செறிதல்
மருங்கற மொய்த்தல் துவன்றல் கஞறல்
அடர்தல் கழறல் அள்ளுதல் ....

மிடைதல் திணுங்கல் மீதூர்தல் மிண்டுதல்
துன்னல் கிளைத்தல் துறுமல் பிணங்கல்
பன்னல் துறுவல் பம்பல் புளித்தல்
துதைதல் வெறிதல் துன்றல்என் றிவற்றெடு
ததைதல் என்ப தந்துநூற் புலவர்

2357. **இடையற நெருங்கி நிற்றல்**

இடையற நெருங்கி நிற்றலின் பெயர்
மிடைதல் துதைதல் ததைதல் மீதூர்தலே.

2358. **இடங்கழிமை**

....இடங்கழிமை நிபிடமே.

2359. **நெருக்கம்**

நெருக்கம் இடங்கழிமை நிரந்தரம் சாந்திரம்
துற்று ஐமை சேத்து ஓதி அளம் கனை
....நனி நிபிடம் நளி அள்வள்
...அரிசமீபம் விரிப்பு அடர்பு செறிவே.

2360. **இரஞ்சிதம்**

இரஞ்சிதம் புணர்ப்பு இசைப்பு இயைபு
சந்தித்தல் சிவணல் அந்தித்தல்
இயைப்பு ஒன்றல் எய்தல் கூடல்
புல்லல் அமைதல் எனப்புகன் றனரே.

2361. **கலத்தல்**

கலத்தல் பொருந்தல் கலாவல் கலவல்
சலத்தல் தோய்தல் சார்தல் சிவணல்
விளாவல் துழாவல் விரவுதல் புணர்தல்
அளாவல் படிதல் வளாவல் ஆமே.

2362. **கலப்பு**

கலப்பு இணைவு விரவு சங்கரணம் களவம்
உலப்பில் கலம்பகம் கலவை விழைவு என்றுறுமே.

2363. **புணருதல்**

புணருதல் கலத்தல் புணர்ச்சி கிரீடை
அணவுதல் சங்கம் அன்புறு சங்கமம்
இரதம் மிதுனம் இயோகம் மைதுனம்
சுரதம் கலவி தோய்தல் சங்கீர்தம்

ஆடல் சய்யோகம் அணைதல் விழைச்சு
கூடல் விழைவு கூட்டம் புல்லல் பிணைவு
ஆமற னிற்பெண் ணலந்திளைத்தல்
இணைவு மணத்தல் இன்பந் துய்த்தலே.

2364. **புலவி**

புணர்விற் பிணங்கல் புலவி ஊடல்.

2365. **ஒட்டல்**

ஒட்டல் உடன்பாடு உடன்படல் நேர்தல்.

2366. **புசித்தல்**

....புசித்தல் நுகர்தல் ஆம்.

2367. **நுகர்வு**

....நுகர்வு நுகர்ச்சி.

2368. **ஐம்பொறி நுகர்ச்சி**

ஐம்பொறி நுகர்ச்சி துப்புரவு துவ்வுஆம்.

2369. **அகன்று நீங்காமை**

அகன்று நீங்காமை ஆறுமை தண்டாமை
புகன்றவிவ் விரண்டோ டாளுபமும் புணர்ப்பும் ஆம்.

2370. **கூடிநிற்றல்**

கூடிநிற்றல் இசை ஒருங்கு உடங்கு இசைப்பு ஆகும்.

2371. **ஒற்றுமை**

ஒற்றுமை குறிக்கோள் ஒருவந்தம் தோட்டிமை
ஒருமை என்ப உணர்ந்திசி னோரே.

2372. **வேற்றுமை**

வேற்றுமை விகாரம் வேறுபாடு அந்தரம்
வீற்று விகடம் பங்கம் விள்ளல்
மாற்றம் விரோதம் பேதம் விபரீதம் பின்னம்
விருபம் விகிர்தம் விகற்பம் என்ப.

2373. பெற்றிடுதல்

பெற்றிடுதல் அடைதல் பெறுதல் பெறல் பயத்தல்.

2374. பிரிதல்

பிரிதல் விரகம் பிரி பிரிவு உணர்வு
பரிவுறு தகறல் பகல் நீப்பு வல்லி
நீங்கல் அகலல் நீத்தல் தணத்தல்
தாங்கரு வியோகம் ஆமெனத் தகுமே.

2375. காம நோய்

காமநோய் விரகம் விகாரம் மதனம்
ஏமநோய் மோகம் இரவுறு துயரே.

2376. கூடல்

கூடல் பொருந்தல் குவிதல் மணத்தல்.

2377. தளர்ச்சி

........தளர்ச்சி சோர்வு ஆமே.

2378. எளிமை

........ம உடைப்பு எளிமையே.

2379. நாம்பல்

நாம்பல் புலர்தல் நைதல் வெம்புதல்
தேம்பல் என்ப மேம்படு புலவர்.

2380. மெலிவு

மெலிவு அற்றம் சிக்கம் மெய்யெழில் வாடல்
நலிவு புன்கண் நைவு பழங்கண்ணே.

2381. இளைத்தல்

இளைத்தல் ஞொள்கல் எய்த்தல் கிரிசித்தல்
களைத்தல் சிக்கல் கவினழிதல் சிங்கல்
தேம்பல் தகைதல் தேய்தல் பழங்கண்
நாம்பல் நைதல் நலிதல்என் றுமே.

2382. **வருந்தல்**

வருந்தல் அகைத்தல் பருவரல்துகைத்தல் அவிதல்
உயங்கல் ஆகுலித்தல் அலமரல் ஒறுத்தல் மிறைத்தல்
அலைதல் பனித்தல் அழுங்குதல் அனுங்கல் கவலல்
உலைதல் அவலித்தல் ஓவல்என் றோதுப.

2383. **வருத்தம்**

வருத்தம் ஆகுலம் வயாவு வேதனை பரி
உருத்தடர் மிகை மிறை உலைப்பு அணங்கு அநுகம்
கசிவு கொல் அவலம் கவற்சி தாவு அயர்வு
நொசி நோய் ஏவுஆய்வு உயவுஎன நுவல்வர்.

2384. **அழுங்கல்**

........அழுங்கல் புல்லெனல்.

2385. **முடியிடுதல்**

முடியிடுதல் முடிதல் முடியல் முடிப்பே.

2386. **அவிழ்தல், அவிழ்த்தல்**

அவிழ்தல் விரிதல் அவிழ்த்தல் விரித்தலே.

2387. **கழன்று விடல்**

கழன்று விடல் விலகல் கழிதல் சோர்தல்
கழலல் உரிதல் கழறல் என்றுமே.

2388. **கழலச்செய்தல்**

கழலச்செய்தல் கழற்றல் என்ப.

2389. **கலங்கல்**

கலங்கல் கலுழல் கதுவுதல் குழம்பலே.

2390. **கலக்கம்**

கலக்கம் கதனம் கலதை துருக்கம்
மலக்கம் துரிதம் மதன் வெறி பிரமம்.
குழப்பம் கவனம் எனக்குறித்தனரே.

2391. கலக்கல்

கலக்கல் குழப்பல் எனக்கழ றப்படும்.

2392. துன்பம்

துன்பம் துயரம் துயர் துரால் துரிதம்
புன்கண் உறுகண் பழங்கண் இடுக்கண்
வேதனை துக்கம் வெறுப்பு வெய்துறல்
யாதனை உறுவல் இடும்பை கையாறு.
இடர் அல்லகண்டம் இட்டளம் வாதை
படர் பையுள் நோ நோய் பாசறை நடலை
ஏதம் அரித்தை இரக்கம் பீழை
கேதம் சிறுமை கிலேசம் கைதவம்
கலக்கம் மம்மர் கம்பலை சிந்தை
அலக்கண் சிலுகு சூர் அலந்தலை அலந்தை
எவ்வம் தாபம் இன்னு இன்னல்
கவ்வை கோட்டாலை கவலை வீரை
அல்லல் பீடை அரந்தை அழுங்கல்
செல்லல் விழுமம் சிறுமை மிகைபிணி
பனி துனி தொய்யல் பரிவு துரிசு என
நனிபெரி துணர்ந்தோர் நவின்றதொல் பெயரே.

2393. மயங்குதல், மயக்குவித்தல்

மயங்குதல் மயங்கல் மயக்குவித்தல் மயக்கலே.

2394. மயக்கம்

மயக்கம் கழுமல் மாழாத்தல் மாழ்கல்
உயக்கும் உன்மத்தம் உன்மாதம் களன்
மத்தம் மோகம் மைந்து விப்பிரமம்
பித்தம் ஈரற்பித்து பிராந்தி
இருள் உணராமை இளமை மறல்களி
மருள் வெருள் களவு மான்றல் பிரமை
அயர்வு மலைவு மறலி அனந்தர்
மயர்வு மயல்மால் மையல்என் றுமே.

2395. மூர்ச்சிதம், அயாவுயிர்த்தல்

அயர்வழிந்து கிடக்கை மூர்ச்சிதம் ஆமிவ்
வயர்வற வருத்தந்தீர்தல் அயாவுயிர்த்தலே.

2396. செயலின்மை

செயலின்மை கையறல் கையறை என்ன
இயலு மென்ப இன்சொற் புலவர்.

2397, தீர்ந்திடல்

தீர்ந்திடல் நீங்கல் தீர்தல் நிவாரணம்
மோசனம் விமோசனம் மோக்கம் விடுதலே.

2398 மிகுதல்

மிகுதல் மிகல் பொதிர்தல் மிகப்படல் வீக்கம் பூரித்தலே.

2399 அறிதல்

அறிதல் தெருளல் அறிகை தெளிவு உணர்தல்
தெளிதல் என்ப தெருண்டிசினோரே.

2400. துறத்தல்

துறத்தல் நீத்தல் நீப்பு துறவுசார்
பறுத்தல் விரத்தி நிவிர்த்தி ஆகுமே.

2401. அருவருத்தல்

அருவருத்தல் பயிர்ப்பு அருவருப்புகுற்சிதம் அருவரல்ஆமே.

2402. ஒழிதல்

ஒழிதல் ஓய்தல் ஓவல் என்ருெல்லும்.

2403. ஒழுக்கம்

ஒழுக்கம் ஆசாரம் ஊறிலா முறைமை
வழுக்கில் கையாறு வாகை முறை செயல்
சரித்திரம் சரிதம் சரிதை சாரித்திரம்
......பத்தி நன்னடை இயல்பு
.......நன்னிலை எனப்படுமே.

2404. நல்லொழுக்கம்

நல்லொழுக்கம் சீலம் ஞானம் விருத்தியே.

2405. ஒழியா ஒழுக்கம்

ஒழியா ஒழுக்கம் கைதூவாமை
ஒழுக்கம் என்றிதற்கு ஒல்லும் பெயரே.

2406. ஒழுக்கமின்மை

ஒழுக்க மின்மை கையறல் கையறையே.

2407. நோற்றல், நோலாமை

நோற்றல் தவஞ்செயல் நோலாமை நோனுமை ஆம்.

2408. முடிதல்

முடிதல் தீர்தல் முற்றுதல் மூவுதலே.

2409. முடிக்குதல்

முடிக்குதல் முடிகுதல் முடித்தல் ஆகும்.

2410. நோயுறல்

நோயுறல் அழுங்கல் நோய்தல் என்ப.

2411. நோய்

நோய்மடி புன்கண் நோ நிழல் நீழல்
பாயடைவே பிணி பைங்கூழ் பையுள்
மடங்கல் அருப்பம் மாரி காண்டகம்
முடங்கல் அழுங்கல் முடங்கு அணங்கு அவலம்
சிறுமை குத்து ஆமயம் சிதலை குந்தம்
உறுகண் சூர் துனி உரோகம் நடுங்கல்
வாதை படர்என வைத்தநான் கேழொடு
வேதை வியாதி வேதனை என்ப.

2412. தின்வு

தின்வு கண்டூயம் கண்டூதி சொறியே.

2413. **வெப்பு நோய்**

வெப்புநோய் வெந்நோய் வெதுப்பு எனப்படுமே.

2414. **குட்டநோய்**

குட்டநோய் தொழுநோய் குறைநோய் என்ப.

2415. **தீரா நோய்**

தீராநோய் எவ்வம் எனச்செப்புவரே.

2416. **கொல்லாது வருத்தும் நோய்**

கொல்லாது வருத்துநோய் கும்பியாதனையே.

2417. **சாதல்**

சாதல் இறத்தல் தபுதல் இல்லென்றல்
வீதல் அலன்றல் விடல் வீடல் பொன்றல்
மாய்தல் முடிதல் மாளுதல் ஒழிதல்
ஓய்தல் கழிதல் உலத்தல் மடிதல்
முஞ்சல் அருகல் மூசுதல் தவறல்
துஞ்சல் மரித்தல் துவன்றல் எனப்படுமே.

2418. **சாவு**

சாவு மாய்வு சமாதி நெடுந்துயில்
வீவு விளிவு வீ அனிமாலினம்
மரணம் நாசம் மாரகம் யோகம்
சரமம் முடிவு பஞ்சதம் இலயம் அந்தம்
இறுதி நிதனம் இறப்புலப்பிவற்றொடு
அறுதி என்றும் அறையப்படுமே.

2419. **இழந்திடல்**

இழந்திடல் இழவு இழப்பு இழத்தல் என்ப.

2420. **அழுதல்**

அழுதல் விம்மல் அரற்றல் உரோதனம்
கலுழ்தல் ஏங்கல் கலுழ்ச்சி அழுங்கல் கண்
பொசிதல் இரங்கல் பொருமல் கலங்கல்.
கசிதல் என்று கழறப்படுமே.

2421. **நீரரும்பல்**

நீரரும்பல் பொசிதல் என நிகழ்த்தப்படுமே.

2422. **கதறல்**

கதறல் அலறல் கத்துதல் கூப்பிடலே.

2423. **சுடுதல்**

சுடுதல் தகனம் சுடல் சுட்டல் என்ப.

2424. **துணிவு**

துணிவு தேற்றம் தேறல் தெளிவு எனச் சொல்லுப.

2425 **கருமம் முடிக்குந் துணிவு**

கரும முடிக்குந் துணிவு கடைப்பிடி

ஓர்ப்பு குறிக்கோள் தேற்றம்என் றெல்லும்.

ஒன்பதாவது செயல்பற்றிய பெயர்த் தொகுதி
முற்றியது.

அபிதான மணிமாலை

சொல்லகராதி

அஃகுல்லி 182
அஃபோதம் 92
அக்கசாலையர் 49
அக்கம் 66,212
அக்கரம் 232
அக்கன் 82
அக்காரடலை 180
அக்காரம் 183
அக்கி 66
அக்கு 69,78,174
அக்குரன் 31
அக்குரோணி 40
அக்கேனம் 233
அகக்காழ் 115
அகக்காழ்மரம் 114
அகங்கை 63
அகசு 22
அகடு 62,143
அகணி 152, 154
அகத்தி மரம் 111
அகத்தியன் 28
அகப்படல் 240
அகப்படுத்தல் 259
அகப்பா 158
அகப்பு 226
அகப்பை 210
அகம் 59,142,161
அகமம் 115
அகரம் 156
அகரு 104
அகல் 61,219
அகல்வடிவு 61
அகல்வோர் 50
அகலம் 62
அகலல் 272
அகலிடம் 142
அகலியம் 115
அகலுள் 143,155,156
அகவயிரம் 115
அகவல் 91, 229, 258
அகவிதழ் 118
அகழ் 159
அகழ்தல் 248
அகழி 159
அகளங்கன் 4
அகற்றல் 252
அகறல் 227, 231, 272
அகன்மணி 174
அகன்றில் 95
அகன்று நீங்காமை 271
அகாதம் 151
அகாதர் 47
அகாரம் 161
அகாரி 1
அகி 89.173
அகிகேதனன் 33
அகிதர் 38
அகில் 104
அகில சாட்சி 14
அகிலம் 141
அகைத்தல் 250,263,264,273
அங்கசன் 6
அங்கணம் 152,162,166
அங்கணன் 1
அங்கதம் 89,197
அங்கம் 59,61,62,69,218
அங்கமலவாவி 150
அங்கர்கோமான் 34
அங்கவடி 195
அங்கனை 52
அங்காடி 160
அங்காந்திடல் 241
அங்காரகம் 176
அங்காரகன் 12, 15
அங்கி 12, 18, 216
அங்கிதம் 71
அங்கிதாள் 19
அங்கியாடி 2

அங்கிரி 61
அங்கு 142
அங்குசம் 194
அங்குயம் 194
அங்குரம் 115
அங்குரித்தல் 248
அங்குலி 63
அங்குழைக்கீரை 180
அங்கை 63
அங்கைவிரித்துக்கொட்டல் 231
அங்கோலம் 110
அங்ஙனம் 142
அச்சம் 111
அச்சமுள்ளோன் 48
அச்சு 203, 232
அச்சுதம் 177
அச்சுதன் 1
அச்சுவத்தம் 113
அச்சுவம் 75
அச்சுவன் 56
அச்சுவினி 18
அசடர் 47
அசதி 58
அசம் 79, 133
அசலம் 142, 143, 257
அசலை 141
அசவல் 98
அசறு 152
அசனம் 105, 179
அசனி 25, 188
அசி 66, 189, 190
அசுணமா 92
அசுபம் 224
அசும்பு 150
அசும்பு நிலம் 153
அசுரர் 10
அசுரர் மந்திரி 16
அசுர நாள் 20
அசுவகதி 76
அசுவதி 18
அசுழம் 82
அசைத்தல் 251, 256
அசைதல் 229, 245, 256, 267
அசையாநிலை 257
அசையாமை 257
அசைவின்மை 257
அசைவு 256
அசோகம் 106
அசோகன் 3
அஞ்சல் 260
அஞ்சலிகை 94
அஞ்சம் 90
அஞ்சனக்கோல் 193
அஞ்சனி 110
அஞ்சிதம் 224
அஞ்சுருவாணி 203
அஞ்ஞூறுகுடியுளவூர் 157
அஞ்ஞை 46
அஞர் 46
அஞல் 99
அஞலம் 99
அட்டமூர்த்தி 2
அட்டல் 242
அட்டி 104
அட்டில் 165
அட்டு 184
அட்டை 100
அடக்கம் 269
அடகு 180
அடங்கல் 269
அடர்த்தல் 259
அடர்தல் 269
அடர்பு 270
அடல் 242, 259
அடலை 178
அடவி 166, 167
அடி 61, 170

அடிக்குடில் 166
அடிகள் 28, 53
அடிசில் 179
அடிச்சேரி 166
அடித்தல் 264
அடிநிலை 197
அடிமாயவிரிதல் 251
அடிமை 38
அடுக்கல் 143
அடுக்களை 165
அடுக்குதல் 243
அடுகளம் 167
அடுத்தல் 240
அடுதல் 242
அடுப்பு 18, 165
அடை 117, 170
அடைகுறடு 213
அடைகல் 213
அடைத்தல் 240
அடைதல் 240, 272
அடைந்தோர் 37
அடைமழை 25
அடையலர் 38
அண்டகை 182
அண்டங்காக்கை 94
அண்டசம் 84, 85, 89, 96
100, 101
அண்டம் 11, 62, 96
அண்டயோனி 14
அண்டர் 9, 38, 43
அண்டர்ப்பகைவர் 10
அண்டிகம் 83
அண்ணம் 65
அண்ணல் 1, 4, 26, 30, 43
52, 54, 240
அண்மை 171
அணங்கிலர் 38
அணங்கு 10, 52, 230,
273, 276
அணம் 65
அணரி 65
அணல் 64, 65
அணவு 143
அணவுதல் 240, 270
அணி 39, 138, 186, 195
அணிகம் 202
அணிகலத்தொடக்குவடிவு 198
அணிகலப்பெட்டி 219
அணிகலம்வைக்கும்செப்பு 219
அணிகலன் 195
அணியல் 138
அணில் 85
அணு 59
அணுகல் 240
அணை 148, 152
அணைதல் 240, 248, 271
அணுக்கம் 115
அனுக்கம் 104
அத்தகோளர் 48
அத்தநாள் 22
அத்தநீர் 183
அத்தம் 19, 63, 167
170, 172, 201
அத்தவாளம் 217
அத்தன் 1, 28, 53
அத்தி 69, 73, 114, 147
அத்தியயனம் 247
அத்திரம் 187, 189
அத்திரி 75, 82,
144, 214
அத்தினி 56, 74
அத்து 199
அத்தை 53
அதகம் 128
அதட்டம் 90

அதட்டல்	266
அதம்	114, 150, 226
அதர்	153, 169, 178,
அதர்கொளல்	261
அதர்கோள்	261
அதரம்	66
அதரித்திரன்	34
அதருண்	180
அதவு	114
அதழ்	118
அதள்	70
அதிகரித்தல்	261
அதிகாரம்	261
அதிர்த்தல்	266
அதிகம்	39, 123, 240
அதிதிமைந்தர்	10
அதிதியர்	31
அதிபன்	32
அதிதிநாள்	19
அதிபதி	26
அதீதர்	9, 28
அதுக்கல்	244, 264
அதுலிதம்	257
அதோகதி	140
அதோமுகம்	147
அந்தக்கரணம்	60
அந்தகர்	50
அந்தகன்	7, 58
அந்தகன் மைந்தன்	34
அந்தகாரம்	22
அந்தகாரி	1
ஆந்தணர்	26, 28
அந்தணர்மனை	161
அந்தணன்	2, 3, 16
அந்தத்தம்	233
அந்தப்புரம்	162
அந்தம்	277
அந்தரம்	11, 22, 253, 271
அந்தராளம்	141
அந்தராளன்	46
அந்தரி	7, 9
அந்தளம்	191
அந்தளிகம்	202
அந்தன்	16, 58
அந்தி	160
அந்தித்தல்	270
அந்திநாள்	23
அந்திமான்	31
அந்தில்	142
அந்திவண்ணன்	1
அந்துகம்	194, 198
அநகன்	1
அநந்தை	141
அநாதி	1
அநிலநாள்	20
அநீகம்	40
அநீகம்பத்து	40
அநீதர்	47
அநுகம்	273
அநுதாபம்	266
அநுலோமன்	45
அப்பவருக்கம்	182
அப்பன்	53
அப்பிரம்	24
அப்பிரமேயன்	1
அப்பு	13, 147
அபஞ்சரம்	213,
அபயம்	224
அபயர்	38
அபயன்	33
அபரிமிதம்	253
அபவருக்கம்	139,
அபவாரணம்	61, 223
அபாங்கம்	67
அபாமார்க்கம்	125
அபாரம்	253

அபிவதனம் 224
அபூபம் 182
அம் 13
அம்பகம் 60, 66
அம்பணத்தி 9
அம்பணம் 13, 100. 130, 212
அம்பர் 142
அம்பரம் 11, 141, 147, 191, 215
அம்பலம் 164
அம்பாலிகை 9
அம்பி 211, 220
அம்பிகை 7, 9
அம்பிகைதனயன் 5
அம்பிகை மணாளன் 2
அம்பிறகு 188
அம்பின்கட்டு 187
அம்பின்குப்பி 188
அம்பின்கூடு 188
அம்பின்தலை 188
அம்பு 13, 112, 129, 187
அம்புத்தொகுதி 188
அம்புதம் 13, 25
அம்புதி 147
அம்புயம் 136
அம்புயன் 3
அம்புயாதனை 7
அம்புலி 15
அம்போசம் 136
அம்போதி 11, 147
அம்போருகம் 136
அம்மம் 63
அம்மனை 53, 219
அம்மான் 53, 54
அம்மானை 219
அம்மி 212
அம்மியம் 184, 204
அம்மை 53, 57, 225
அமங்கலி 58
அமணர் 29
அமர் 260
அமர்க்களம் 167
அமர்த்தல் 259
அமரர்மாதர் 10
அமரர் 9
அமரர்சேனாபதி 5
அமரருணவு 181
அமரர் 38
அமராவதி 5
அமராவதியோன் 4
அமரி 9, 182
அமருலகம் 140
அமலன் 1
அமலை 7, 179
அமளி 162, 218
அமாத்தியர் 35
அமானம் 253
அமித்திரர் 38
அமிதம் 253
அமிர்தம் 181
அமிர்து 181
அமிழ்தம் 181
அமிழ்து 181, 183
அமுக்கல் 269
அமுங்கல் 269
அமுதக்கதிரோன் 15
அமுதம் 13, 140, 181, 182
அமுதமைத்தல் 242
அமுதர் 9, 42
அமுதவல்லி 120
அமுது 179, 182, 183
அமுது செய்தல் 243
அமை 129
அமைச்சர் 35
அமைச்சன் 16

